


ஓ. பெரோவ்ஸ்கயா

குழந்தைகளும் குட்டிகளும்





ஒ. பெரோவ்ஸ்கயா

குழந்தைகளும் குட்டிகளும்

ஓவியர்கள்: வ. வத்தாகினும் இ.கோகினும்
தயாரிப்பு: ல.தக்மானவ்
மொழிபெயர்ப்பாளர்: ருக்மணி

О. Перовская
Ребята и зверята
На тамильском языке

விலை: ரூ. 4-00

П $\frac{70803-558}{014(01)-76}$ 639—76

பொருளடக்கம்



எனது அருமை தாய் தந்தையரின்
மங்காத நினைவுக்கு அஞ்சலியாய்
இந்தப் பிள்ளைப் பருவ மனப்பதிவுகளை
அர்ப்பணிக்கின்றேன்.
—ஓல்கா பெரோவ்ஸ்கயா

தியான்காவும் தோம்ச்சிக்கும்

மத்திய ஆசியாவில் இரண்டு பெரிய ஆறுகளுக்கு இடையில் அமைந்து செழிப்பாய்ப் பூத்துக் குலுங்கும் மேட்டுப் பெருவெளி ஒன்று இருக்கிறது. கசாஹ் மொழியில் அதற்கு ஜெதீ-சூ—அதாவது ஏழு ஆறு என்று பெயர்.

ஏழு ஆற்றில் மலைகளும் காடுகளும் பசுமையான பள்ளத் தாக்குகளும் கனித் தோட்டங்களும் ஏராளம். இங்கு ஒரு நகரம் பெரும் பெரும் ஆப்பிள் தோட்டங்களுக்குப் பெயர் பெற்றதாகும். இந்த நகரம்தான் அல்மா-அத்தா—அதாவது ''ஆப்பிளின் தந்தை.''

''ஆப்பிளின் தந்தை'' இன்று செல்வச் செழிப்பு மிக்க கசாஹ் குடியரசின் தலைநகர் ஆகிவிட்டது; மாபெரும் கலாசார,

தொழில் துறை மையமாய்த் திகழ்கிறது. துர்க்சீப்* ரயில் பாதை இதை சோவியத் நாட்டின் முக்கியமான தொழில் நகரங்கள் யாவற்றுடனும் இணைக்கின்றது. நெடுந்தொலைவி லுள்ள மாஸ்கோவிலிருந்து இரயில் வண்டிகள் எழிலார்ந்த அல்மா-அத்தா ரயில் நிலையத்திற்குக் காலம் தவறாமல் முறைப்படி வந்து சேர்ந்தன.

பற்பல பேரவைகள், கல்லூரிகள், நாடகமன்றங்கள், திரைப்படக் கூடங்கள் ஆகியவற்றின் உயரமான மாளிகைகள் பனி மூடிய மலை முகடுகள் போல் கதிரவன் ஒளியில் பளிச்சிட, மலைகள் நகரத்திற்கு மேல் கம்பீரமாய் நெடிதுயர்ந்து நிற்கின்றன.

விசாலமான தெருக்களிலும் சாலைகளிலும் டிராம் வண்டிகளும் லாரிகளும் டிராலிபஸ்களும் முடிவில்லா வரிசையிலான மோட்டார் வண்டிகளும் ஓடுகின்றன. வெயிலால் பழுப்பேறிய உல்லாசப் பிரயாணிக் குழுவினர் பளிச்சிடும் வண்ண ஆடைகள் அணிந்து, நகரச் சுற்றுபுறப் பூங்காக்களையும், மலை வாச ஆரோக்கிய இல்லங்களையும், ஓய்வு விடுதிகளையும் பார்வையிடுவதற்காக உல்லாச பஸ்களில் புறப்படுகிறார்கள்.

எனது பிள்ளைப் பருவ நாட்களில் தூங்கி வழியும் ஒதுக்குப்புற நகராய் இருந்த அல்மா-அத்தா இன்று இப்படி அடியோடு மாறி விட்டது.

நான் சிறு பிள்ளையாய் இருந்த காலத்தில் அல்மா-அத்தாவிலிருந்து 600 கிலோமீட்டர் சென்றால்தான் இரயில் பாதையை வந்தடைய முடியும். அன்று இந்நகரில் வசித்தவர்களின் எண்ணிக்கை சொற்பம்தான். ஆண்டில் அரிதாய் என்றாவது ஒரு நாள் தெருவிலே மோட்டார் வண்டி செல்லும்

---

* மத்திய ஆசியாவிற்கும் சைபீரியாவுக்கும் இடையிலுள்ள இருப்புப் பாதை. — (மொ-ர்.)

போது எல்லோரும் வேலைகளை அப்படியே போட்டு விட்டு அந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காக ஓட்டமாய் ஓடி வருவார்கள்.

அந்தக் காலத்தில் எல்லா வீடுகளும் ஒற்றைத் தள வீடுகளாகவே இருந்தன. மரக் கிளைகளில் முளைத்திருக்கும் சிறு காளான்களைப் போல் கண்ணுக்குப் புலப்படாமல் பதுங்கி இருந்தன.

அல்மா-அத்தாவில் ஒரு சிறு வீட்டில் நாங்கள் வசித்து வந்தோம். வீட்டைச் சுற்றியிருந்த பெரியத் தோட்டத்தில் ஆப்பிள் மரங்கள் நிறைய இருந்ததைக் கூறத் தேவையில்லை. இன்னும் முக்கியமாய் எங்களுடைய வளர்ப்புகளான வீட்டுப் பிராணிகளும் காட்டு உயிரினங்களுமான பலவும் எங்களுடன் சேர்ந்து இங்கு வளர்ந்து வந்தன.

அப்பா வேட்டைக்குப் போய் வரும்போது உயிருடன் குட்டிகளைப் பிடித்து வந்து எங்களிடம் தருவார். தீனி அளித்துக் கண்ணுங் கருத்துமாய் அவற்றை நாங்கள் வளர்த்து வந்தோம்.

துடிப்பான நரிக் குட்டியை ஒருவரும், கழுதைக குட்டியை இன்னொருவரும், வெள்ளெலியை எனது கடைசித் தங்கையுமாய் ஒவ்வொருவரும் ஒரு குட்டியை வளர்த்து வந்தோம்.

''உனக்கு ஒரு ஓநாய்க் குட்டி கொண்டு வருகிறேன்'' என்று அப்பா என்னிடம் சொன்னார், ஒரு நாள்.

''ஐயோ, ஓநாயா வேண்டாம்! பார்க்கவே பயமாய் இருக்குமே. ஓநாயை எப்படி நான் பழக்குவேன்? வேறு ஏதாவது கொண்டு வாருங்கள்.''

''மெய்யாகவேதான் சொல்கிறீர்களா, என்ன?'' என்று திடுக்கிட்டுக் கேட்டார் என் அம்மா. ''ஓநாய்க் குட்டி வேண்டாம். எல்லோரையும் கடிக்கும், நகத்தால் பிறாண்டும், எங்காவது ஓடி விடும்.''

''இப்படியா பயப்படுவாங்க? சின்னக் குட்டி என்ன செய்து விடும்? பழக்கினுல் ஓநாய் அருமையான பிராணியாகி விடும்.''

இப்படிப் பழக்கப்பட்ட ஓர் ஓநாயின் கதையை அப்பா எங்களுக்குக் கூறினுர்.

உயிர்த் தோழனுய் இருக்கும் நாயைப் போல் அந்த ஓநாய் அதன் எஜமானனிடம் அன்பு செலுத்திற்று. எங்கும் அவர் பின்னுல் சென்றது. பகைவர்களிடமிருந்து அவரைக் காப்பாற்றியது. பயணம் சென்றபோது அவருடைய குதிரைக்குக் காவலனுய் இருந்தது. அதனிடம் இருந்த ஒரே ஒரு குறை என்னவென்ருல் மதுபானத்தில் அதற்கு இருந்த மோகம்தான். ஒயின் மணம் மூக்கில் ஏறியதும் உடனே அது வீடெங்கும் முகர்ந்து கொண்டு ஒயின் புட்டியைக் கண்டு பிடிக்கும் வரை ஓயாமல் சுற்றிக் கொண்டிருக்கும். பிறகு புட்டியைத் தரையில் உருட்டித் தள்ளி உடைத்து, ஒயினை நக்க ஆரம்பித்து விடும்.

''ஓநாய் எல்லா ஒயினையும் குடித்தபின் தீம்கா பிரலோவைப் போல் கூச்சல் போடுமா, என்ன?'' என்று நாங்கள் கேட்டோம். ''தட்டுகளைப் போட்டு நொறுக்கி கலாட்டா செய்யுமா?''

''அது அம்மாதிரியெல்லாம் ஒரு நாளும் செய்ததில்லை. அடக்கவொடுக்கமாய் ஒரு மூலையில் படுத்துத் தூங்கிவிடும்.''

''அப்புறம் என்ன செய்யும்?''

''தூங்கி எழுந்ததும் எப்போதும் போல் சமர்த்தாய் இருக்கும், அயராது வேலை செய்யும்.''

''அதைக் கேட்கவில்லை. பிற்பாடு என்ன ஆயிற்று சொல்லுங்கள்.''

''பிற்பாடா? அதன் எஜமானன் வண்டியிலும் இரயிலிலுமாய் நெடுந் தொலைவு போக வேண்டியிருந்தது. புதிய வேலை இடத்தில் நிலைமை எப்படி இருக்கும், ஓநாயுடன் சென்ருல் அங்கே தன்னை வேலைக்கு எடுத்துக் கொள்ள சம்மதிப்பார்

களா என்பது அவருக்குத் தெரியவில்லை. ஆகவே ஓநாயை நண்பர்களிடம் விட்டுச் செல்வதென்று முடிவு செய்தார். ஆனால் ஓநாய்க்கு அவருடைய நண்பர்களுடன் இருக்க விருப்ப மில்லை. பிறகு அவர் அதை அழைத்துச் சென்று காட்டிலே விட்டு வந்தார். ஆனால் ஓநாய் வீட்டுக்கு வரும் பாதையைத் தெரிந்து கொண்டு, அதன் எஜமானன் வந்து சேருமுன்பே வீட்டை வந்தடைந்து விட்டது. முடிவில் வேறு வழியின்றி அதை அவர் மயங்கி உறங்கச் செய்யத் தீர்மானித்து அதற்கு மருந்து கொடுத்தார். ஓநாய் மயங்கி விழுந்து விட்டது. வருத்தம் நெஞ்சை அடைக்க அவர் வண்டியிலேறி ஊரை விட்டுச் சென்றார்... இரண்டு வண்டிச் சாவடிகளைக் கடந்து சென்றதும் அவர் தமது வண்டியின் பின்னால் ஓநாய் ஓடி வரக் கண்டார். அதற்குக் கொடுக்கப் பட்ட மருந்து குறை வாய் இருந்ததால் சீக்கிரமாகவே மயக்கம் தெளிந்து எஜ மானனைத் தேடிக் கொண்டு அது ஓடி வந்து விட்டது. பிறகு அந்த ஓநாய் ஏறத்தாழ ஆயிரம் கிலோமீட்டர் தொலைவுக்கு வண்டியில் அவருடன் சென்று இரயில் பாதையை அடைந் தது. அங்கிருந்து இரயிலிலும் பிறகு கப்பலிலுமாய் இருவரும் பயணம் செய்தனர். ஓநாயை அம்மனிதர் தமது வளர்ப்பு நாயாய் எல்லோரிடமும் கூறிக் கொண்டார். அந்த ஓநாய் மிகவும் நல்லபடியாய் நடந்து கொண்டது, எல்லோரும் அதை அவருடைய நாயென்றே நினைத்துக் கொண்டார்கள். தள் ளாத கிழப் பருவம் வரை அந்த ஓநாய் அம்மனிதருடன் வாழ்ந்து வந்தது, இருவரும் இணை பிரியவில்லை.''

''அருமையான கதை'' என்று நாங்கள் எல்லோரும் ஒரே குரலில் கூறினோம். ''ஓநாயைப் பற்றி இன்னும் ஒரு கதை சொல்லுங்களேன்'' என்று வேண்டினோம்.

''நான் கதை சொல்லி என்ன பயன்? உயிரோடு ஓநாய்க் குட்டி ஒன்று பிடித்து வந்து தருகிறேன், அதை நீங்கள் வளர்த்துப் பெரியதாக்குங்கள். பிறகு எனக்குப் பதில் நீங்களே சுவையான கதைகள் பலவும் சொல்லுவீர்கள்.''

அது முதலாய் நாள்தோறும் அப்பாவை நான் நச்சரித்து வந்தேன்:

''என்னுடைய ஓநாய்க் குட்டி எங்கே? எனக்குக் கொண்டு வந்து தருவதாய்ச் சொல்லியிருந்தீர்களே, எங்கே அது?''

பிறகு ஒரு நாள் காலையில் நான் விழித்தெழும் முன்பு எனது படுக்கை அருகே நின்று யாரோ உரக்கக் கூறக் கேட்டேன்:

''எழுந்திரு! கொண்டு வந்து விட்டார்கள்!''

எதைக் கொண்டு வந்து விட்டார்கள் என்பது எனக்குப் புரிந்தது. படுக்கையிலிருந்து குதித்தெழுந்து, அவசரமாய் உடுத்திக் கொண்டு வெளியே ஓடினேன்.

''பட்டறைக்கு ஓடிச் சென்று பார்!'' என்று என் பின்னுலிருந்து அப்பா குரல் கொடுத்தார்.

வெளிமுற்றத்தில் ஒரு மூலையில் பட்டறை ஒன்று கவனிப்பாரற்று இருந்து வந்தது. துருப் பிடித்த இரும்பு, முறிந்து போன சறுக்கு வண்டிகள், ஓட்டைப் பாத்திரங்கள் போன்ற உடைசல்கள் யாவும் அதனுள் குவித்து வைக்கப் பட்டிருந்தன. பட்டறையின் கதவு மூடப்பட்டு பெரிய கல் ஒன்ருல் அழுத்தி வைக்கப்பட்டிருந்தது. சிறிதளவு கதவைத் திறந்து கொண்டு நான் உள்ளே நுழைந்தேன். பட்டறையினுள் இருட்டாயிருந்தது. வெயிலின் வெளிச்சத்திலிருந்து உள்ளே நுழைந்த எனக்குக் கண் தெரியவில்லை.

கொல்லுப் பட்டறை உலைக்கு அடியிலிருந்து திடுமென எதோ சலசலப்பது காதில் விழுந்தது. இருட்டில் நான்கு கண்கள் பச்சையாய்ப் பளிச்சிட்டன. அதிர்ச்சியுற்றுவிட்ட நான் பின்வாங்கினேன். ஓநாய்க் குட்டியைக் கண்டு இப்படி நான் பயப்படுவேன் என்று இதன்முன் நினைத்திருக்க மாட்டேன். ஆனுல்... நான்கு கண்கள் அல்லவா இருக்கின்றன இதற்கு!

''முட்டாள் பெண்ணே, இரண்டு குட்டிகள் இருக்கின்றன இங்கே!''

குட்டிகள் உறுமின. அவற்றிடமிருந்து வந்த சப்தத்தைக் கொண்டு பார்க்கையில் அவை உலேக்கடியில் மேலும் விலகிச் செல்வதாய்த் தெரிந்தது.

எந்த பிராணியையும் நம்முடன் நட்பு கொள்ளச் செய்ய வேண்டுமாளுல் தின்பதற்கு அதற்கு எதாவது கொண்டு வந்து கொடுப்பது ஒன்றேதான் வழி—இது நான் நன்கு அறிந்தது தான். உடனே நான் சமையலறைக்கு ஓடினேன். கிண்ணத்தில் பாலே ஊற்றி ரொட்டித் துண்டுகள் சிலவற்றை அதில் போட்டுப் பட்டறைக்குக் கொண்டு வந்தேன். வெளிச்சம் வருவதற்காகக் கதவை சற்றே ஒருக்கணித்து வைத்தேன். கிண்ணத்தைத் தரையில் வைத்து விட்டு இருட்டில் மறைந்து நின்றேன்.

குட்டிகள் நெடு நேரம் உணவுக்கருகே வர அஞ்சின. ஆளுல் குட்டிகளுக்கு நல்ல பசி, கிண்ணத்திலிருந்த உணவின் வாசனே மூக்கைத் துளேத்தது.

முடிவில் சாம்பல் நிறத்தில் சின்னஞ் சிறு முகம் ஒன்று துருத்திக் கொண்டு வெளியே வந்தது. உடனே இன்னென்றும் அதனுடன் சேர்ந்து கொண்டது. குட்டிகள் இரண்டும் மெல்ல வெளியே ஊர்ந்து வந்து சுற்றிலும் பார்வையிட்டன, பிறகு எச்சரிக்கையுடன் தவழ்ந்து கிண்ணத்துக்கு அருகே வந்தன.

இப்பொழுது அச்சத்தை மறந்து அவை பாதங்களே விரிய வைத்து நின்று கொண்டு ரொட்டித் துண்டுகளேக் கவ்வி எடுத்தன. அதிர்ந்தாடியவாறு முக்கித் திணறி ஒன்ருேடொன்று மோதிக் கொண்டன. ரொட்டியை விழுங்கிக் கொண்டு அதே போது உறுமவும் வேண்டியிருந்ததால் அவற்றுக்கு மூச்சுத் திணறியது. இரண்டும் கிண்ணத்திளுள் இருமிப் பாலேக் குமிழிடச் செய்தன.

என்னே அவை கவனிக்கவில்லே. அவசர அவசரமாய்ச் சாப்பிடுவதில் முனேந்திருந்தன. நுனிக் காலால் நடந்து நான் அவற்றை அணுகினேன்.

பார்ப்பதற்கு இரண்டும் நாய்க் குட்டிகள் மாதிரியே இருந்தன, புடைத்துப் பெருத்த வயிறுகளும் அகன்ற பாதங் களும் கொண்டிருந்தன. வித்தியாசம் என்னவென்ருல் இவற் றின் வால்கள் முடி அதிகமின்றி மெல்லியனவாய் இருந்தன, காதுகள் கூர்மையாய்க் குத்திட்டு நின்றன.

விரைவில் கிண்ணம் காலியாகி விட்டது. ஆனுல் குட்டி கள் கிண்ணத்தை விடவில்லை. ஒரு குட்டி நான்கு கால்களேயும் உள்ளே வைத்துக் கிண்ணத்தை நக்கித் துடைத்துக் கொண்டி ருந்தது. மற்றது தலையை உயர்த்திப் பார்த்துத் துணுக்குற்றுப் போய் என்னை உற்று நோக்கியது. அது குழப்பமடைந்து விட்டதைக் கண்ணுற்ற நான் புன்னகை புரிந்து கொண் டேன். அதைத் தட்டிக் கொடுக்கலாமென்று கையை நீட்டி னேன்.

லபக்!

நல்ல வேளே, வெடுக்கெனக் கையை இழுத்துக் கொண்டு விட்டேன். குட்டி பின்னுேக்கித் தாவி ஓடிற்று.

அட, துக்கிரி! சாண்கூட இல்லை, கை நீட்டித் தொடக் கூடாதென்று பாயுதே. மயிரிழையில் அல்லவா என் விரல் தப்பியது! அப்படி நான் என்ன செய்தேன்? ரொட்டியும் பாலும்தானே தந்தேன். சரி, இருக்கட்டும்!

வலிந்து சென்று அதற்குமேல் அந்தக் குட்டிகளிடம் நட்பு பாராட்ட நான் முயலவில்லை. உண்மையில் எனக்கு மனத்தாங்கலாய்த்தான் இருந்தது.

பட்டறையிலிருந்து நான் வெளியே வந்ததும் குழந்தை கள் எல்லோரும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''ஓநாய்களேப் பார்த்தாயா? எப்படி இருக்கின்றன அவை?''

''அருமையான ஓநாய்கள்'' என்று ஒரு போடு போட் டேன். ''இதற்குள் என்னிடம் அன்பாய்ப் பழக ஆரம்பித்து விட்டன. இனி இவை இரண்டுக்கும் என்ன பெயர் வைப்பது என்று ஆலோசிக்க வேண்டும்.''

அருகில் கிடந்த மரக்கட்டை மீது உட்கார்ந்து கொண்டு, நாங்கள் ஆலோசிக்க ஆரம்பித்தோம். குட்டிகளில் ஒன்று ஆண் என்றும் மற்றென்று பெண் என்றும் அப்பா கூறியிருந் தார். தோம்ச்சிக் என்றும் தியான்கா என்றும் அவற்றுக்குப் பெயர் சூட்டினோம்.

நண்பகலானதும் மீண்டும் உணவு எடுத்து வந்து: ''தோ, தோ'' என்று அவற்றைக் கூப்பிட்டேன்.

குட்டிகள் மெல்ல வெளியே வந்து உணவருந்த ஆரம் பித்தன. கதவை நான் விரியத் திறந்தேன். எங்களுடைய நாய்கள் பட்டறைக்குள் எட்டிப் பார்த்தன. அவைக் குட்டி களைத் தாக்குமோ என்று பயந்து, நான் அவற்றை விரட்டப் போனேன். குட்டிகளோ கால்களுக்கிடையில் வாலை ஒடுக்கிக் கொண்டு மகிழ்ச்சி பொங்க அந்த நாய்களிடம் ஓடின. நாய்களின் முகத்தை நக்க முயற்சித்தன. கீழே விழுந்து புரண்டு பாதங்களை மேலே தூக்கி உதைத்து நாய்க் குட்டி களைப் போலவே விளையாடின. நாய்களை அவை ஓநாய்களாய் நினைத்திருக்க வேண்டும், அதனால்தான் அப்படிக் குதூகலப் பட்டுக் கொண்டன.

நாய்கள் உறுமிக் கொண்டன. குட்டிகளைக் காட்டிலும் உணவுக் கிண்ணத்தில்தான் அவை அதிக நாட்டம் கொண்டி ருந்தன. கிண்ணத்தை முகர்ந்து பார்த்து விட்டு அதில் எஞ்சி இருந்ததை நக்கி முடித்ததும் வெளியே நடையைக் கட்டின.

நாய்களைக் கண்ட மகிழ்ச்சியில் இரண்டு குட்டிகளும் அச்சத்தையும் எச்சரிக்கை உணர்ச்சியையும் மறந்து அவற் றின் பின்னல் குதித்து ஓடின. பட்டறையிலிருந்து கொஞ்ச தூரம் ஓடிய பிற்பாடுதான் திடுமென பீதி கொண்டு அவைத் திரும்பிப் பார்த்தன. வெளிமுற்றம் அவற்றுக்குக் காட்டைப் போன்றதாய் இல்லை.

அங்கே ஒரு வண்டியைக் கண்டதும் தரையோடு தரையாய் ஒட்டிக் கொண்டு இரண்டு குட்டிகளும் உதடுகளை இறுக்கிக் கொண்டன. சிறிது நேரம் காத்திருந்து பார்த்தன.

ஆனால் வண்டி அசையவில்லை. அது குட்டிகளைத் தாக்க எத்தனிப் பதாய்த் தெரியவில்லை. குட்டிகளுக்கு இப்பொழுது கொஞ்சம் துணிச்சல் பிறந்தது.

இன்னும் நடுக்கம் மறையவில்லை என்றாலும் கழுத்தை நீட்டிக் கொண்டு வெளிமுற்றத்தின் மையத்துக்கு வந்தன.

நாய்கள் முன்பே குட்டிகளை விட்டு விட்டு வாயில் முகப் புக்குச் சென்று விட்டன. குட்டிகள் பரிதாபமாய் ஊளையிட் டன. ஆனால் நாய்களுக்குத் திரும்பி வரும் உத்தேசம் இல்லை. குட்டிகள் திரும்பவும் ஓடத் தொடங்கின.

துரதிர்ஷ்டவசமாய் அவை கிடங்கைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. எங்கள் நாய் லியூத்னியாவும் புதிதாய்ப் பிறந்த அதன் குட்டிகளும் அந்தக் கிடங்கில்தான் இருந்து வந்தன. ஓநாய்க் குட்டிகள் தன்னுடைய குட்டிகளைத் தாக்க வருவதாய் நினைத்துக் கொண்டு லியூத்னியா அவற்றின் மீது பாய்ந்தது. பிடரியைக் கவ்வி தோம்ச்சிக்கைத் தூக்கி ஆத் திரமாய் ஒரு குலுக்கு குலுக்கிற்று.

ஓநாய்க் குட்டியைக் காப்பாற்றுவதற்காக ஓடினோம்.


லியூத்னியா தன் பிடியிலிருந்து தோம்ச்சிக்கை விட்டு விட்டது. பிறகு இரண்டு ஓநாய்க் குட்டிகளும் ஓட்டமாய்ப் பட்டறைக்கு ஓடி வந்து உலைக்கடியில் பதுங்கிக் கொண்டன.

பாவம் தோம்ச்சிக்! முதல் தரம் வெளியே சுற்றக் கிளம்பியதுமே அதற்கு இப்படியொரு துன்பம் நேர்ந்து விட்டது!

பட்டறையைச் சுற்றி நெஞ்சு குறுகுறுக்க நாங்கள் நின்று கொண்டு உலைக்கடியில் குனிந்து பார்த்தோம், சுவை யான தின்பண்டங்களைக் குட்டிகளிடம் எறிந்து அருமையாய் அவற்றை அழைத்தோம்.

நாங்கள் கொடுத்ததை மறுக்காமல் வாங்கித் தின்று விட்டு வெளியே வராமலே அவை கோபமாய் உறுமின.

என்னதான் மனம் புழுங்கினாலும் உலைக்கடியில் எவ்வளவு நேரம்தான் அவை பதுங்கியிருக்க முடியும். தியான்காதான்



முதலில் தலையை வெளியே நீட்டிற்று. ஊர்ந்து வெளியே வந்து சற்று நேரம் உட்கார்ந்திருந்தது, பிறகு மீண்டும் உலைக் கடியில் சென்றது.

இதன்பின் தோம்ச்சிக் வெளியே வந்தது. அதற்குக் காதில் இரத்தமாய் இருந்தது, தலையில் முடிகள் கலைந்திருந் தன, கண்ணுக்கடியில் சிராய்த்து இருந்தது. திரும்பத் தலை யைக் குலுக்கிக் காயமுற்றக் காதைத் தரைப் பக்கமாய்ச் சாய்த்து ஆட்டிற்று.

இரண்டு குட்டிகளுமாய்ச் சேர்ந்து பட்டறையின் வாயிலருகே அமர்ந்து சோகத்துடன் வெளிமுற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன.

மறு நாளும் இவ்விதமே கழிந்தது. மூன்றும் நாள் காலை நான் உணவளிக்க வந்தபோது அவை கதவருகே காத்துக் கொண்டு நின்றிருந்தன.

தியான்கா அதன் சகோதரனைவிட துணிச்சல் வாய்ந்த தாய் இருக்கக் கண்டோம். நாங்கள் அழைத்ததும் அதுதான் முதலில் வரும். சாப்பாட்டுக் கிண்ணத்தைக் கண்டதும் ஆவலுடன் உதட்டை நக்கிக் கொள்ளும்.

தியான்கா என்னைப் பின்தொடர்ந்து வெளிமுற்றத்திற்கு வந்தது. தன்னை அறியாமலே என் பின்னால் வாயில் முகப்பின் படிகளில் ஏறி மேலே வந்தது. தோம்ச்சிக் கீழேயே தங்கி விட்டது.

வாயில் முகப்பில் எல்லோரும் தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர். புன்னகை புரிந்து தியான்காவை யாவரும் வரவேற்றனர், சுவையான பலவும் தந்து உபசரித்தனர். வாய்க்கினிய பண்டங்களை உண்டபின் மனநிறைவோடு அது கீழே இறங்கி தன் சகோதரனிடம் சென்றது.

பயந்து பின்தங்கிவிட்ட தோம்ச்சிக் தியான்காவின் முகவாயை முகர்ந்து பார்த்தது. சுவையான உணவு அருந்தி விட்டு வந்திருக்கிறது என்று தெரியவே உதட்டை நக்கிய வாறு மீண்டும் அது தியான்காவை முகர்ந்தது. தியான்கா பூரிப்புற்று அப்படியே நின்றது. அதன் கண்கள் பாசி மணிகளைப் போல் மின்னின. அதன் வயிறு நிறைந்து பருத்திருந்தது. அதன் வால் அடங்க மறுத்து குத்திட்டு எழும்பிற்று. ''பயப்படாமல் இருப்பதன் பயனைப் பார்!'' என்று சொல்லிக் காட்டுவது போல் இருந்தது தியான்கா நின்றிருந்த அந்த நிலை.

பிறகு இரண்டுமாய்ச் சேர்ந்து சுற்றிலும் பார்வையிடப் புறப்பட்டன. முன்பு போல் இப்போது அவை அவ்வளவாய் பயப்படவில்லை. வெளிமுற்றத்தில் அங்கு மிங்குமாய் நடந்தன. வீட்டைச் சுற்றிச் சென்று முடிவில் அவை தோட்டத்தை அடைந்தன.

நான் ஓசையின்றி அவற்றைப் பின்தொடர்ந்தேன். தோட்டத்தைக் கண்டதும் அவற்றுக்குக் காட்டின் நினைவு வந்திருக்க வேண்டும். புதுத் தெம்பு பெற்று முன்னிலும் கொஞ்சம் உயரமாய் வளர்ந்து விட்டது போல் கம்பீரமாய்த் தோன்றின. அச்சமின்றி புதரை நோக்கிப் பாய்ந்து ஓடின. பிறகு வெளியே ஓடி வந்து சிறிது நேரம் விளையாடியபின் திரும்பவும் மரங்களிடையே மறைந்தன. ஒவ்வொரு மரத்தையும் புதரையும் முகர்ந்து சென்றன. விளையாடிக் களைப்புற்றதும் அடர்த்தியான செர்ரிச் செடிகளுக்கு இடையே படுத்துக் கண்ணுறங்கின. அவற்றை அப்படியே விட்டு விட்டு நான் வீட்டுக்குத் திரும்பினேன். பிற்பாடு அவற்றுக்கு நான் மதிய உணவு எடுத்துச் சென்றேன். ஆனால் அவை அங்கே இல்லை. சுற்றிலும் உற்று நோக்கியவாறு திரும்பத் திரும்பக் கூப்பிட்டுப் பார்த்தேன். அவை வரவில்லை.

புல் தரையில் கிண்ணத்தை வைத்து விட்டு அருகில் அமர்ந்து குச்சியால் சாப்பாட்டைக் கிளறிக் கொண்டிருந்தேன்.

அவை எங்கே போயிருக்க முடியும்?

எனக்குக் கவலையாயிருந்தது. திடுமென எனக்குப் பக்கத்தில் புதர்களிடையே இரண்டு முகங்கள் தெரியக் கண்டேன். வெகு நேரத்திற்கு முன்பே அவை அங்கு வந்து நான் செய்ததையெல்லாம் கவனித்துக் கொண்டு இருந்திருக்க வேண்டும். பக்கத்தில் கண்ணெதிரே இருக்கும் தம்மைக் கண்டுகொள்ள முடியாதவள், இவள் குருடியாகவே இருப்பாள் என்றுதான் அவை நினைத்திருக்கும்.

பருத்துக் குண்டாய் இருந்தாலும் இரண்டு குட்டிகளும் வண்ணத்துப் பூச்சியைக் காட்டிலும் ஓசையற்றனவாய் அல்லவா அமர்ந்திருந்தன. அவற்றை எப்படி நான் கண்டுகொள்ள முடியும்?

அவை உணவு அருந்திய போது நான் தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு புல் தரையில் படுத்திருந்தேன்.

தோட்டத்தில் இருந்ததால் அவற்றுக்கு உண்டான கலகலப்பு தான் காரணமோ, அல்லது நான் அவற்றுக்குப் பழக்கப்பட்ட வளாகி விட்டதுதான் காரணமோ தெரியவில்லை. அவை அச்சமின்றி என்னுடன் நயமற்ற முறையில் நடந்து கொண்டன. ஒரு குட்டி நேரே என் முகத்திலே மூச்சு விட்டு முகர்ந்து பார்த்தது, இன்னொன்று எனது ஆடையையும் சடையையும் கவ்வி இழுத்தது. தியான்கா என்னுடைய மிதியடியைத் திருடி, புதர்களுக்கு இடையே அதை இழுத்துச் சென்றது. தோம்ச்சிக் அந்த மிதியடியை அதனிடமிருந்து பிடுங்குவதற்காக ஓடிற்று. குட்டிகளிடமிருந்து அவற்றின் புதிய விளையாட்டுச் சாமானை முடிவில் நான் திருப்பி வாங்கி என் காலில் மாட்டிக் கொண்டபோது அதன் நிலை பார்க்கப் பரிதாபமாய் இருந்தது.

பகல் முழுதும் குட்டிகள் தோட்டத்தில் இருந்தன, பிறகு இரவையும் அங்கேயே கழித்தன.

இப்படியே சில நாட்கள் கழிந்தன. குட்டிகள் சுதந்திரமாய்த் தம் விருப்பம் போல் ஓடியாடின. என்னுடைய கவலை எல்லாம் அவற்றுக்கு வயிறு நிறைய உணவு கொடுக்க வேண்டுமே என்பதுதான்; இல்லையேல் தாமே தமக்கு உணவு தேடிக் கொள்ளலாமென்று அவை வேட்டையாட அல்லவா கிளம்பிவிடும்?

தினமும் விடியற்காலம் காலை ஐந்து மணிக்கெல்லாம் நான் அவற்றுக்கு முதல் வேளை உணவு அளித்து வந்தேன். அந்நேரத்தில் யாருடைய தூக்கத்தையும் கலைக்க விரும்பாத நான் முந்திய நாள் மாலையிலேயே உணவைத் தயாரித்து என் கட்டிலுக்கருகே வைத்துக் கொண்டு விடுவேன். விடியற்காலையில் எழுந்து சன்னல் வழியாய்த் தோட்டத்திற்குள் இறங்கி உணவை எடுத்துச் சென்று குட்டிகளுக்குக் கொடுப்பேன். அவை சாப்பிட்டு முடித்ததும் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு சன்னல் வழியாய் ஏறி அறைக்குச் சென்று மீண்டும் படுத்து உறங்கி விடுவேன்.



குட்டிகள் என்னுடன் சன்னல் வரை வந்து விட்டுத் திரும்பிச் செல்லும். என்ருவது நான் அதிக நேரம் தூங்கி விட்டால் அவை சன்னலுக்கு எதிரே வந்து பின்னங்கால் களில் நின்று தலையை உயர்த்திக் கொண்டு ஊளையிடும்.

என் கட்டில் சன்னல் ஓரமாய் இருந்தது. நான் வெளியே எட்டிப் பார்ப்பேன். நான் விழித்து எழுந்து விட்டதைக் கண்டதும் அவை ஆனந்தமாய்க் குதிக்க ஆரம்பித்து விடும்.

விரைவில் அவை நன்ருய்ப் பழக்கப்பட்டு விட்டன. எனது நேசத்துக்கும் பாசத்துக்கும் உரியனவாய் இருந்து வந்தன. சில மணி நேரம் அவற்றை விட்டுப் பிரிந்திருக்க நேருமாயின் எனக்கு இருப்பு கொள்ளாமற் போய்விடும்.

நெடு நேரம் அவற்றுடன் நான் விளையாடி வந்தேன். நாங்கள் புல்தரையில் உருண்டு புரண்டோம், தோட்டத்தில் ஓடி விளையாடினேம். படிக்கலாமென்று நான் தோட்டத்திற்குச் சென்று அமர்ந்ததும் நான் இருப்பதை உடனே தெரிந்து கொண்டு அவை ஓடி வந்து என் முன்ஞல் உட்கார்ந்து

கொள்ளும். சற்று நேரம் காத்திருந்து பார்க்கும், பிறகு என்னைத் தொல்லை செய்ய ஆரம்பித்து விடும்.

ஒரு நாள் நான் படிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த தியான்கா அலுப்புற்றுப் பலமாய்க் கொட்டாவி விட்டுக் கொண்டு என் புத்தகத்தின் மீது உட்கார்ந்தது. நான் அதைக் கீழே தள்ளி உருட்டி விட்டேன், பின்னங்கால்களைப் பிடித்து அதைப் புல் தரையில் இழுத்தேன். இதற்கிடையில் தோம்ச்சிக் என் புத்தகத்தைக் கவ்வி இழுத்து அக்கு அக்காய் அதைக் கிழித்து ஆனந்தபட்டுக் கொண்டிருந்தது.

அந்தஓநாய்க் குட்டிகளிடம் வேடிக்கையான ஒரு பழக்கம் இருந்து வந்தது. சாப்பிட்டதும் அவற்றுக்கு வயிறு உப்பிப் பெருத்துப் போகும். அவை கீழே படுத்துப் புல்லில் வயிற்றைத் தேய்த்துக் கொண்டு ஊர்ந்து செல்லும்.

இது ஓர் அதிசயம்தான். மருத்துவ முறைகளை அறியா தவையே என்றாலும் தேய்த்து உருவுதல் நல்ல சிகிச்சை யாகும் என்பதை அவை உணர்ந்திருந்தன.

குட்டிகளுடன் தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்த போது நான் ஆல்பகோரா பழம் பறித்துத் தின்ன விரும்பி னேன். பழங்கள் எனக்கு எட்டாத உயரத்தில் இருந்ததால் மரத்தில் ஏறிக் கிளையை உலுக்கினேன். பழுத்த பழங்கள் பொல பொலவென உதிர்ந்து தரையில் விழுந்தன. எனக்கு வேண்டிய அளவு பழங்கள் விழுந்தபின் கீழே இறங்கினேன். ஆனால் தரையில் ஒரு பழங்கூட இல்லை. நான் உலுக்கிய பழங்கள் எங்கே போயின? விந்தையாய் அல்லவா இருக்கிறது! மீண்டும் மரத்தில் ஏறிக் கிளையை உலுக்கினேன். கீழே இறங்கிப் பார்த்த போது தியான்காவும் தோம்ச்சிக்கும் பழங்களை விழுங்கிக் கொண்டிருந்தன!

அவற்றுக்குப் பழம் பிடிக்குமென்று இவ்வாறுதான் எனக்குத் தெரியவந்தது. எது இனிப்பாய் இருக்கும் என்பதும் அவற்றுக்குத் தெரிந்திருந்தது. எப்போதும் அவை நன்றாய்ப் பழுத்த பழங்களாகப் பொறுக்கித் தின்றன. அது முதலாய்

அடிக்கடி நான் ஆல்பகோரா, ஏப்பிரிக்காட்டு, ஆப்பிள் மரங்களின் கிளைகளை உலுக்கி அவற்றுக்குப் பழ விருந்து அளித்தேன்.

தோட்டத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கும் தியான்காவுக்கும் தோம்ச்சிக்குக்கும் தெரிந்திருந்தது. ஆனால் அவை வீட்டுக்குள் அபூர்வமாகத்தான் வருவது வழக்கம். மனித சகவாசம் அவற்றுக்குப் பிடிக்கவில்லை. என்னை மட்டும் தான் அவை விரும்பி ஏற்றுக்கொண்டு நேசித்து வந்தன. அவை ஓடி வந்து என்னை வரவேற்கும்; என்னிடம் ஒண்டிக்கொண்டு, தாவிப் பாய்ந்து பாதங்களை என் தோள்களில் வைத்து என் கைகளையும் முகத்தையும் நக்கும்.

என்னுடைய குரல் இந்த ஓநாய்க் குட்டிகளுக்கு நன்றாகத் தெரியும், ஏனையோரது குரல்களிலிருந்து என்னுடையதை அடையாளங் கண்டுகொண்டு விடும் என்று ஒருநாள் நான் பெருமையடித்துக் கொண்டேன்.

எல்லோரும் என்னைக் கேலி செய்தார்கள்:

''இதெல்லாம் உன்னுடைய கற்பனையே தவிர உண்மையல்ல. அவற்றால் உன் குரலை அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது. உணவருந்துவதற்காக உன்னிடம் அவை வருகின்றன. அவற்றுக்கு வயிறு பசிக்கையில் யார் உணவு எடுத்துச் சென்று கூப்பிட்டாலும் ஓடி வந்து விடும்.''

''இல்லை, இல்லை! வாருங்கள் சோதனை நடத்திப் பார்ப்போம்'' என்றேன் நான்.

இந்தச் சோதனையைப் பார்ப்பதற்கு எட்டுக் குழந்தைகள் வந்திருந்தார்கள், பெரியவர்களும் கூட கவர்ந்திழுக்கப் பட்டார்கள். எல்லோரும் தோட்டத்தின் வாயிலில் கூடி நின்றார்கள்.

''உணவுக் கிண்ணத்தை என்னிடம் கொடு'' என்று கேட்டாள் என் தங்கை.

கிண்ணத்தை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்குள் சென்று குட்டிகளை வருமாறு அழைத்தாள் அவள். எவ்

வளவோ அழைத்தும் பயனில்லை, குட்டி எதுவும் தலைகாட்ட வில்லை. வெட்கம் பொறுக்க மாட்டாதவளாய்த் திரும்பி வந்தாள் அவள்.

பிறகு இன்னொரு குழந்தை கிண்ணத்தை எடுத்துச சென்றது. அதன்பின் மூன்றாவது குழந்தை... ஒவ்வொருவராய் எல்லோரும் முயன்று பார்த்தார்கள். முடிவில் நான் கூறினேன்:

''எனக்குக் கிண்ணங்கூட வேண்டியதில்லை. எப்படியும் அவை என்னிடம் ஓடி வரும்.''

ஆனால் உண்மையைச் சொல்வதெனில் எனக்கு உதைப் பாய்த்தான் இருந்தது. அவை வராமல் இருந்து விட்டால் என்ன செய்வது?

''தியான்கா, தோம்ச்சிக்!'' என்று கூப்பிட்டேன். என் நெஞ்சு படபடத்துத் துடித்தது.

எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்க இரண்டு குட்டிகளும் என்னிடம் ஓடி வந்தன. நான் கூப்பிடுவதற்காகக் காத்துக் கொண்டு அருகாமையில்தான் அவை இருந்தன, என் குரல் கேட்டதும் உடனே என்னிடம் வந்து விட்டன.

''பார்த்தீர்களா! அவற்றால் என் குரலை அடையாளம் தெரிந்துகொள்ள முடியாது என்று சொன்னீர்களே!''

கோடை முடிவடைந்து வந்தது. ஓநாய்க் குட்டிகள் வளர்ந்து பெரிதாகி விட்டன. நாய்கள் அவற்றிடம் இப்பொழுது மரியாதையுடன் நடந்து கொண்டன. தியான்காவும் தோம்ச்சிக்கும் சிறிசுகளாய் இருக்கையில் நாய்கள் அவற்றைக் கண்ணெடுத்துப் பாராமல் அலட்சியமாய் இருந்தன. ஆனால் இப்போது நிலைமை மாறி விட்டது. நாய்கள் அடிக்கடி வந்து என் வளர்ப்புகளைப் பார்த்துச் சென்றன.

ஒரு நாள் தோட்டத்திற்கு வந்த நாய்கள் ஆனந்தமாய்க் கூச்சலிட்டு மரங்களைச் சுற்றி ஒன்றையொன்று விரட்டிக் கொண்டு ஓடின. மகிழ்ச்சி பொங்கத் தரையிலே விழுந்து

புரண்டு கும்மாளமடித்தன. காலைப் பொழுது கண் கூசும்படி பிரகாசமாயிருந்தது. தரை மிருதுவாய் இருந்தது. உதிர்ந்து கிடந்த இலைகளால் கவரப்பட்டு நாய்கள் அவற்றுக்குள் மூக்கைப் புதைத்துக் கொண்டன. குவியல்களாய்க் கிடந்த இலைகளைக் குதறி இறைத்தன. கணப்பொழுதுகூட அவற்றால் சும்மா இருக்க முடியவில்லை. யாரோ சாவி கொடுத்து அவற்றைக் கீழே விட்டு விட்டது போலவும் விசைப் பொறி அவற்றை இயங்கச் செய்தது போலவும் அவை நிற்காமல் குதித்தாடின. நாய்களின் ஆட்டத்தைக் கண்டு உற்சாகங் கொண்ட ஓநாய்க் குட்டிகள் தாமும் விளையாட ஆரம்பித்தன. தியான்கா பாதத்தால் தோம்ச்சிக்கை ஓங்கி அடித்து விட்டுப் பாய்ந்தோடிப் பதுங்கிக் கொண்டது. ''தோம்ச்சிக்! ஓடி வா நீ! ஓநாய்கள் எப்படி விளையாடுமென்று இவற்றுக்குக் காட்டுவோம்!'' என்று கூறும் பாவனையில் அது காத்திருந்தது.


பிறகு ஒரே அமர்க்களமாகி விட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் தியான்கா சக்ராயிடமிருந்து ஓட்டமாய் ஓடிற்று. தோம்ச்சிக்கின் வாலைக் கவ்வி இழுத்தது லியூத்னியா. தோம்ச்சிக் வெடுக்கெனத் திரும்பி லியூத்னியாவைக் கீழேத் தள்ளிற்று. ஆனால் லியூத்னியா குறைப்பட்டுக் கொள்ளவில்லை, அது தாவியெழுந்து உடலை குலுக்கிக் கொண்டது, பிறகு முன்னிலும் உற்சாகமாய் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

அது முதல் நாள்தோறும் நாய்கள் தோட்டத்திற்கு வர ஆரம்பித்தன. சில சமயம் தியான்காவும் தோம்ச்சிக்கும் அவற்றுடன் விளையாடி விட்டு அவற்றைப் பின்தொடர்ந்து தோட்டத்திலிருந்து வெளிமுற்றத்துக்குள் வரும். நாய்களும் ஓநாய்களும் நெருங்கிய நண்பர்களாகி விட்டன.

இம்மாதிரியான நட்பு அரிதினும் அரிது. ஆயினும் ஓநாய் ஒன்று நாயைத் தன் சகாவாய் ஏற்றுக் கொள்ளுமாயின், அந்த நட்பு என்றென்றும் நீடிக்கும்படி உறுதி வாய்ந்ததாய் இருக்கும்.

வடக்கே யாக்கூத் இனத்தவர் ஒருவரின் நாய் என்ன செய்தது தெரியுமா?

குளிர் காலத்தில் அந்த யாக்கூத் தமது பனிமான் மந்தையுடன் ஓரிடத்தில் முகாமிட்டிருந்தார். பல மைல் தொலைவுக்கு வீடோ நாயோ இல்லாத இடம் அது. மந்தையைக் காவல் புரிவதற்கு அவரிடம் 'லாய்கா' இனத்தைச் சேர்ந்த நாய் ஒன்று இருந்தது. கருவாட்டைக் கவ்விக் கொண்டு அந்த நாய் காட்டுக்கு ஓடிக் கொண்டிருந்ததை அந்த யாக்கூத் கவனித்தார். நாயைப் பின்தொடர்ந்து சென்றார். ஆனால் அவரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒவ்வொரு நாளும் அந்த நாய் கருவாட்டை எடுத்துச் சென்றது. ''மீனைத் தின்னாமல் எங்கே எடுத்துச் செல்கிறது?'' என்று அவர் ஆச்சரியப் பட்டுக் கொண்டார். எதிர்பாராதவிதமாய் அந்த நாய் வசந்தத்தில் குட்டி போட்டதைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்தார். பனிமான் மேய்ப்பாளரான யாக்கூத்தின் வீட்டில் நாய் குட்டி போடுவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி. நல்ல நாயாய் இருந்தால் வடக்குப் பிரதேசங்களில் அதற்குப் பிரதியாய் ஒரு பனிமானைப் பெற முடியும். அவருடைய நாய் ஈன்ற குட்டிகள் மெய்யாகவே அற்புதமானவை. அவை வலிவு மிக்கனவாய்ப் பருத்துத் தளதளவென்று இருந்தன. குட்டிகள் வியக்கத்தக்கவாறு விரைவாய் வளர்ந்து வந்தன. சிறிது காலத்திற்கெல்லாம் அந்த யாக்கூத் கோடைப் பருவ மேய்ச்சல் வெளிக்குப் புறப்படத் தயாரானார். தனது உடமைகளை மூட்டை கட்டிச் சறுக்கு வண்டியில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார். அவருடைய நாயும் அதன் குட்டிகளும் அவரைப் பின்தொடர்ந்து ஓடின. அவர்கள் காட்டைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. நடு வழியில் அந்த யாக்கூத் திடுமெனத் திரும்பிப் பார்த்த போது தன்னுடைய நாய்களுடன் கூட ஓர் ஓநாயும் சேர்ந்து வரக் கண்டார். உடனே துப்பாக்கியை எடுத்து ஓநாயை அவர் சுடப் போனார். ஆனால் அதே கணத்தில் அவருக்கு ஓர் எண்ணம் உதித்தது.



இந்த ஓநாய்தான் தனது நாய்க் குட்டிகளின் தந்தை என்பதையும், குளிர் காலம் பூராவும் இதற்குத்தான் தனது நாய் கருவாடு திருடிக் கொண்டு போய்க் கொடுத்தது என்பதையும் புரிந்து கொண்டார். உடனே அவர் துப்பாக்கியை வைத்து விட்டார். ஓநாய் அவர்களுடன் சேர்ந்து கோடை கால மேய்ச்சல் வெளிக்குச் சென்றது.

தியான்காவும் தோம்ச்சிக்கும் குளிர் காலத்திற்குள் அநேகமாய் முழு அளவிற்கு வளர்ந்து விட்டன. அவற்றின் முடிகள் கெட்டியாகவும் நீளமாகவும் இருந்தன; தாடையிலும் முடிகள் வளர்ந்து விட்டன. அவற்றின் வால் முடியடர்ந்து பொசபொசப்பாய் இருந்தது. பார்ப்பதற்கு இப்போது அவை பெரிய முரட்டு நாய்கள் மாதிரி இருந்தன.

வெண்பனி பெய்யத் தொடங்குவதற்கு முன்பே ஓநாய் கள் ஒரு குடைவினுள் தமக்கு உறைவிடம் அமைத்துக் கொண்டன. நாய்களும் சில சமயம் அங்கே புகுந்து கொண்டு ஓநாய்களுடன் சேர்ந்து உறங்கும், அந்த உறை விடம் அவ்வளவு பெரிதாய் இருந்தது.

நாய்களின் நட்புறவால் ஓநாய்கள் பாதிக்கப்பட்டன— நாய்கள் அவற்றுக்குக் கோழிகளைப் பிடித்துத் தின்பதற்குக் கற்றுக் கொடுத்தன. எங்கள் வீட்டில் இதைச் செய்ததும் தக்க தண்டனை கிடைக்கவே அவை வேலியைத் தாண்டிக் குதித்து பக்கத்து வீட்டுக் கோழிகளைப் பிடிக்க ஆரம்பித்தன. ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரர் செத்துப் போன வான்கோழி ஒன்றை எடுத்துக் கொண்டுஅப்பாவிடம்வந்தார். எங்களுடைய ஓநாய்க் குட்டிகள் தமது வான்கோழியைக் கொன்று விட்ட தென்று முறையிட்டு, அவருக்கு நாங்கள் பணம் தர வேண் டும் என்று கேட்டார்.

''நான் எச்சரிக்கை செய்கிறேன், என்னுடைய வீட்டின் பக்கம் திரும்பவும் இவற்றை நான் பார்க்க நேர்ந்தால், நீங்கள் வருத்தப்பட வேண்டியிருக்கும்'' என்று சொல்லி விட்டுச் சென்றார் அவர்.

அன்றைய தினமே தியான்காவுக்கும் தோம்ச்சிக்குக்கும் கழுத்தில் சங்கிலி மாட்டிக் கட்டிப் போட்டோம். விருப்பம் போல் சுற்றித் திரியும் சுதந்திர வாழ்க்கையை இப்போது அவை இழக்க வேண்டியதாயிற்று.

காலையில் ஒரு நாள் நாடோடி வாத்தியக்காரர் ஒருவர் எங்கள் வெளிமுற்றத்திற்கு வந்து நாட்டிய இசை வாசித் தார். திடுதிப்பென்று கிடங்குக்குப் பின்புறத்திலிருந்து கரகரப் பான விபரீதக் குரல் ஒன்று வாத்திய இசையுடன் சேர்ந்து ஒலிக்க ஆரம்பித்தது. பிறகு இரண்டாவது குரல் ஒன்றும் அதனுடன் சேர்ந்து கொண்டது. வாத்தியக்காரருடன் சேர்ந்து எங்கள் ஓநாய்களும் இசை பொழிந்தன. எங்கெங்கோ இருந்த நாய்கள் இதைக் கேட்டதும் ஓடி வந்து சேர்ந்தன.

அவையும் தலையை உயர்த்திக் கொண்டு எல்லா சுரங்களிலும் ஊளையிடத் தொடங்கின. இந்தக் கச்சேரியைக் கேட்டு வாத்தியக்காரர் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட விழுந்து விழுந்து சிரித்தார். அவருடைய இசையை யாரும் கேட்க முடியாமற் போகவே, வாத்தியக்காரர் என்ன வாசிக்கிறோம் என்று கவலைப்படாமல் காட்டுக் கூச்சல் எழுப்பிய கானக் குழுவோடு சேர்ந்து வாத்தியத்தை இயக்கிச் சென்றார்.

ஓநாய்கள் அடிக்கடி ஊளையிட்டன. சுதந்திரத்தை நேசிக்கும் பிராணிகளைக் கட்டிப் போட்டு வைத்தால் அவை வேறு என்ன செய்யும்? மாலை மங்கியதும் ஓநாய்கள் ஏக்கத்துடன் ஊளையிட ஆரம்பித்தன.

நாய்கள் ஓநாய்களைப் போல் ஊளையிடவும் ஓநாய்கள் நாய்களைப் போல் குரைக்கவும் கற்றுக்கொண்டு விட்டதைக் கண்டோம்.

முதலில் அப்பா இதை நம்பவில்லை. ஆனால் விரைவில் அவருக்கு விளங்க வைத்தேன். தியான்கா குரைத்துக் கொண்டிருந்த நேரத்தில் அப்பாவை அழைத்து வந்துக் காட்டினேன். அவர் வியப்படைந்து இது அதிசயத்திலும் அதிசயமாகும் என்றார்.

ஓநாய்களை மகிழ்விக்கும் பொருட்டு சங்கிலியைப் பிடித்து அவற்றை நகருக்கு அப்பால் வெளிகளில் உலாவ அழைத்துச் சென்றோம். அவகாசம் கிடைத்ததும் உடனே எல்லோருமாய்ப் புறப்பட்டுவிடுவோம். ஓநாய்கள் ஆர்வமாய் ஓடி வரும். ஆனால் இந்த நடைப் பயணங்களின் போது எங்களால் அவற்றுக்கு ஏற்ற துணையாய் இருக்க முடியவில்லை. விரைவில் நாங்கள் களைப்புற்று விடுவோம். அவை முழுச் சூடுப் பெற்று உற்சாகமாய் செல்ல முற்படும்போது நாங்கள் நிற்கக்கூட முடியாதவாறு ஓய்ந்து விடுவோம்.

சரியான உடற்பயிற்சி இல்லாததால் அவை அமைதியற்று, இருப்பு கொள்ள முடியாமல் சங்கிலியிலிருந்து கழற்றிக் கொண்டு ஓட முயன்று வந்தன. முடிவில் தம்மை

விடுவித்துக் கொள்ள தெரிந்து கொண்டு விட்டன. கொக்கியை எப்படியோ அழுத்திக் கழுத்துப் பட்டையிலிருந்து சங்கிலியை அவிழ்த்துவிடும். அவை அவிழ்த்துக் கொண்டதும் எல்லோரும் என்னிடம் ஓடி வருவார்கள். ஏனென்றால் என் சொல்லுக்கு மட்டுமே அவை கீழ்ப்படிந்து வந்தன.

அவ்வப்போது யாராவது என்னைக் கூப்பிட்டுச் சொல்வார்கள்:

''ஓநாய்ச் சோதரியே (எல்லோரும் என்னை இப்படித் தான் அழைப்பது வழக்கம்), இங்கே வா! உன்னுடைய செல்ல வளர்ப்புகளை இழுத்து வந்து கட்டு!''

புத்தாண்டு விழாவுக்கு முன்பு யாரோ கூச்சலிடக் கேட்டேன்:

''தோம்ச்சிக் அவிழ்த்துக் கொண்டு விட்டது. பக்கத்து வீட்டுக் கொல்லைக்கு ஓடியிருக்கிறது!''

கோட்டு, தொப்பி எதுவும் இல்லாமலே வெளியே முற்றத்துக்கு ஓடினேன். தோட்டத்தில் புகுந்து குறுக்கு வழியாய் விரைந்தேன். தோட்டத்தில் பாதைகள் இல்லை, முழங்கால் ஆழத்திற்கு வெண்பனி மூடியிருந்தது.

பக்கத்து வீட்டு வெளிமுற்றத்தில் தோம்ச்சிக் நிற்பதை வேலியின் வழியே பார்த்தேன். பக்கத்து வீட்டுக்காரர் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்து விட்டார்.

''இருங்கள், இதோ வந்து விட்டேன்'' என்று தொலைவிலிருந்தபடி நான் கூச்சலிட்டேன். ''அதைப் பிடித்துக் கட்டிப் போடுகிறேன்! வேண்டாம்! சுட வேண்டாம்...'' அதற்குமேல் எனக்குப் பேச்சு வரவில்லை. பக்கத்து வீட்டுக் காரர் துப்பாக்கியை உயர்த்திச் சுடக் கண்டேன். தோம்ச்சிக் உயிரற்றுத் தரையில் விழுந்தது.

அங்கே நான் வேகமாய் ஓடினேன். சங்கிலியைப் பக்கத்து வீட்டுக்காரர் மீது விட்டெறிந்து, அவருடைய கோட்டைப் பிடித்திழுத்துக் குலுக்கி:

‘‘ஐயோ! பாருங்கள் இங்கே... ஐயோ...’’ என்று திரும்பத் திரும்பக் கூவினேன்.

கூட்டமாய்ப் பலரும் கூடி விட்டார்கள். எல்லோருமாய்ச் சேர்ந்து இரைந்தார்கள்.

அப்படியே வெண்பனியில் உட்கார்ந்து, உயிரற்றுக் கிடந்த தோம்ச்சிக்கின் தலையைத் தூக்கி என் மடிமீது வைத்துக் கொண்டு கதறி அழுதேன். பிறகு எப்படி நான் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன், எப்படி தோம்ச்சிக்கை எடுத்து வந்தார்கள் என்பதெல்லாம் எனக்கு நினைவில் இல்லை.

அன்று மாலையே எனக்குக் கடும் காய்ச்சல் கண்டு விட்டது.

அடுத்த இரண்டு மாதங்கள் நான் படுத்த படுக்கையாகவே இருந்தேன்.

தியான்கா இப்போது தனந்தனியாகி விட்டது. தோம்ச்சிக்கும் இல்லை, நானும் நோயுற்றுப் படுத்திருந்தேன். அது துயருற்று வருந்திற்று. தோம்ச்சிக் இறந்து சில நாட்கள் வரை அது சாப்பிட மறுத்துவிட்டுப் பட்டினி கிடந்தது; ஊளையிட்டவாறு மேலும் கீழுமாய் நடந்து கொண்டிருந்தது.



அது இறந்து விடும் என்றே எல்லோரும் நினைத்தார்கள்.

நோய்ப் படுக்கையில் இருந்த எனக்கு ஜன்னி கண்டிருந்தது. எனக்கு நினைவு திரும்பிய போதெல்லாம், தியான்காவிடம் அன்பாய் இருக்கும்படியும், நேரம் தவறாமல் சாப்பாடு போட்டு அதைக் கவனித்துக் கொள்ளும்படியும் எல்லோரிடமும் கூறி வந்தேன்.

எனக்கு மருந்து அல்லது கஞ்சி எடுத்து வருவோரிடம்: ''தியான்காவுக்குச் சாப்பாடு போட்டீர்களா? அது தூங்குகிறதா?'' என்று விசாரித்துக் கொண்டிருந்தேன்.

''தியான்கா சமர்த்தாய் இருக்கிறது, வயிறு புடைக்க சாப்பிடுகிறது! தோம்ச்சிக் இப்பொழுது அதன் நினைவில் இல்லை'' என்று எனக்கு அவர்கள் பதிலளிப்பார்கள்.

நான் சிறிது நலமடைந்ததும் தியான்காவை என்னிடம் அழைத்து வரச் சொன்னேன். பெரிய பெண் ஓநாய் ஒன்று சங்கிலியை இழுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தது. முதலில் எனக்கு அதை அடையாளம் தெரியவில்லை. பார்ப்பதற்கு அது அச்சம் தருவதாய் இருந்தது. அதற்கும் என்னை அடையாளம் தெரியவில்லை. நான் பார்ப்பதற்கு அச்சம் தருகிறவளாய் இல்லை என்றாலும், முடி வெட்டப்பட்டுக் கிராப்புத் தலையுடன் இருந்தேன், ஒல்லியாய் இளைத்துப் போயிருந்தேன்.

தியான்கா யாவற்றையும் முகர்ந்து பார்த்தது. நான் அதைக் கூப்பிட்டேன்:

''தியான்கா! தியான்கா!''

என் குரலைத் தெரிந்து கொண்டு என்னிடம் ஓடோடி வந்தது. நான் அதைத் தடவிக் கொடுக்கையில் மகிழ்ச்சியுடன் கண்களை மூடிக் கொண்டு வாலை ஆட்டியவாறு நின்றது.

கொழுத்த பூனை ஒன்று என் கட்டிலில் உட்கார்ந்திருந்தது. அதற்குத் தியான்காவைப் பிடிக்கவில்லை. துடுக்கான நாய் என்பதாய் அது நினைத்துக் கொண்டது. நாயைக் கண்டதும் சண்டைக்குப் போவதே அதன் பழக்கம்.

சீறிக் கொண்டு தியான்காவின் முகத்தில் அது சுளீரென அறைந்தது! நான் பதைத்துப் போனேன்.

கோபத்தால் தியான்காவுக்கு முடிகள் சிலிர்த்து விட்டன. காண்போர் கலங்கும்படியான வாயைத் திறந்து கொண்டு அது...

''தியான்கா! வேண்டாம்! கண்ணு!''

நான் அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டேன். அது பூனையின் பிடரியைப் பிடித்துக் கட்டிலிலிருந்து அதைத் தூக்கிச் சென்று கீழே தரையில் விட்டு விட்டு என்னிடம் திரும்பிற்று.

வசந்தம் பிறந்ததும், நகரத்திலிருந்து பதினைந்து கிலோ மீட்டருக்கு அப்பால் காட்டிலிருந்த எங்களுடைய கோடைக் குடிசைக்கு நாங்கள் எல்லோரும் சென்று விடுவது வழக்கம். அந்தக் குடிசை ஓர் அருவிக்குப் பக்கத்தில் மலையில் அமைந்திருந்தது. புல் வெளிகளில் மலர்கள் மண்டியிருந்தன. மேல் மட்டங்களில் பனிமூடிய சிகரங்களுக்கு அருகே கசாஹியரின் கோடை கால முகாம்கள் இருந்தன. அவர்களது குழந்தைகள் எங்களுக்குச் சிறந்த நண்பர்களாய் இருந்தார்கள். கோடைக் குடிசை எங்கள் எல்லோருக்கும் மனதுக்கினிய இடமாகும். வசந்தம் ஆரம்பமானதும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் நாங்கள் அங்கே செல்வோம்.

முக்கியமாய் அந்த ஆண்டில் கோடைக் குடிசைக்குப் போவதற்காக ஆவலுடன் நான் காத்திருந்தேன். ஏனெனில் மலைகளில் தியான்காவைக் கட்டிப் போட வேண்டியிருக்காது என்று நினைத்தேன்.

ஆனால் நான் நினைத்தபடி நடைபெறவில்லை. அங்கே அருகாமையில் ஒரு குக்கிராமம் இருந்தது. அங்கு வசித்தவர்கள் ஓநாய் ஒன்று சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு பயந்தனர்.

ஒரு நாள் தியான்கா அவிழ்த்துக் கொண்டு கிராமத்துக்கு

ஓடிற்று. சினங் கொண்ட நாய் ஒன்று ஒரு வீட்டிலிருந்து ஓடி வந்து தியான்கா மீது சீறி விழுந்து தாக்கிற்று. அது துணிச்சலான நாய்தான். ஆனால் தியான்கா ஒரு கடி கடித்தது, மறு கணமே அந்த நாய் உயிரற்றதாகியது.

அந்த நாயின் வீட்டுக்காரர்கள் தடிகளுடனும் சாட்டைகளுடனும் வந்து தியான்காவை வளைத்துக் கொண்டனர். நிலைமை மோசமாகி விட்டதைக் கண்டு கொண்டு தியான்கா என் பின்னால் வந்து ஒளிந்து கொண்டது. ''இது பாதுகாப்பான இடம், உங்களால் என்னை ஒன்றும் செய்ய முடியாது!'' என்று கூறுவது போல் விஷமத்தனமாய் எனக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்தது.


மெய்தான் அதற்கு எந்தத் தீங்கும் நேரிட நான் அனுமதிக்க மாட்டேன். அவர்கள் கூச்சல் போட்டுத் திட்டி விட்டு என் பெற்றோர்களிடம் சென்று முறையிட்டார்கள்.

மாதங்கள் கழிந்து வந்தன. வாழ்நாள் முழுதும் தியான்கா சங்கிலியால் கட்டுண்டுதான் இருக்க வேண்டுமா? சுதந்திரமாய் அதைக் காட்டிலே விட்டு விடும்படி அப்பா என்னை வற்புறுத்தினார். ஆனால் நான் அதற்கு உடன்பட நெடு நாட்களாயின.

''உன்னைக் கட்டிப் போட்டு வைத்தால் உனக்கு எப்படி இருக்கும்?'' என்றார் என் அப்பா. சரி, முயற்சி செய்து பார்க்கலாம் என்று முடிவு செய்து கொண்டு நாள் முழுதும் நான் தியான்காவின் அருகே உட்கார்ந்து இருந்தேன். பிறகு ஒத்துக் கொள்வதாய் அப்பாவிடம் கூறினேன்.

ஒரு நாள் காலையில் அதற்கு வயிறு நிறைய சாப்பாடு போட்டேன். அப்பா குதிரைமீது ஏறிக் கொண்டு தியான்காவின் சங்கிலியைக் கையில் பிடித்துக் கொண்டார். பூரிப்புடன் தியான்கா அவர் பின்னால் ஓடிற்று.

அவர் அதைக் காட்டுக்குள் அழைத்துச் சென்று கழுத்துப் பட்டையைக் கழற்றினார். உடனே அது பாய்ந்தோடிச் சென்று மறைந்து போயிற்று.



''சரிதான், ஓநாய்க்கு எவ்வளவுதான் வயிருர உணவளித்து வளர்த்தாலும் அதன் நாட்டம் எப்போதும் காட்டிலேதான் இருக்கும்'' என்று அப்பா நினைத்துக் கொண்டார்.

சற்று நேரம் காத்திருந்து பார்த்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டார். அவர் வீடு வந்து சேர்வதற்குள் மாலையாகி விட்டது.

''தியான்கா போய் விட்டதா?''

''ஆமாம், உனக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்ற நினைவில்லாமலே போய்ச் சேர்ந்து விட்டது.''

''போகட்டும், நான் ஒன்றும் கவலைப் படவில்லை. எனக்கு மகிழ்ச்சிதான்'' என்றேன் நான். ஆனுல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டேன், எனது அருமை தியான்கா இவ்வளவு சுலபமாய் என்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டது குறித்து எனக்கு வருத்தமாய் இருந்தது.

சரியாக அதே கணத்தில் குளுமையாய் ஏதோ என்கையில் படுவதை உணர்ந்து, திரும்பிப் பார்த்தேன். தியான்கா

நின்று கொண்டிருந்தது! அப்பாவைப் பின்தொடர்ந்து அது வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டது.

இன்னெரு முறை அதை அனுப்ப முயற்சி செய்தோம். அப்பா அதைக் காட்டிற்குள் நெடுந்தொலைவு அழைத்துச் சென்றார். பிறகு எங்கள் குடிசைக்கு எதிர்த் திசையிலே சென்று மலைக் கணவாய் ஒன்றைக் கடந்தார்.

நான்கு நாட்கள் கழிந்தன. தியான்கா மீண்டும் திரும்பி வந்து சேர்ந்தது. அதற்கு நல்ல பசி, காய்ந்து களைத்துப் போயிருந்தது, உடல் முழுதும் சிராய்ப்புகளாய் இருந்தன. வழி தெரியாமல் எங்கெங்கோ அலைந்தபின் முடிவில் தானே வழியைக் கண்டுபிடித்து விட்டது.

வேறொரு நகருக்கு நாங்கள் குடிபெயர்ந்து செல்ல நேராதிருந்தால் என்ன ஆகியிருக்குமோ தெரியாது எனக்கு. எங்களுடைய வளர்ப்புகளை என்ன செய்வது என்ற பிரச்சினை எங்கள் முன்னால் எழுந்தது.

இயற்கையாகவே நான் தியான்காவைப் பற்றித்தான் அதிகமாய்க் கவலைப்பட்டு வந்தேன். ஓநாயின் எஜமானன் அதைத் தூங்க வைக்க முயன்றது பற்றி முன்பு அப்பா எங் களுக்குக் கதை கூறினாரே, அந்தக் கதை எந்நேரமும் என் நினைவில் எழுந்து கொண்டிருந்தது. எங்களுடன் அது எப்படி இருந்ததோ அதே போல் தொடர்ந்து அது ஆனந்தமாய் இருந்து வருவதற்கு ஏற்ற ஒரு புதிய வீட்டை அதற்கு ஏற்பாடு செய்வதற்கு நான் பல வழிகளிலும் முயன்று வந்தேன்.

சிறிதும் எதிர்பாராத விதமாய், நாங்கள் நினைத்ததைக் காட்டிலும் சிறந்த முறையில் இதற்கு ஏற்பாடாயிற்று.

முந்திய ஆறு மாதங்களில் எங்கள் நகரத்திலும் சுற்றுப் புறக் கிராமங்களிலும் சில திருட்டுகள் நடைபெற்றிருந்தன. திருடர்கள் குதிரைகளையும் பசுக்களையும் கடத்திச் சென்று விட்டனர், எங்கே கொண்டு போனார்கள் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. போலீஸ் நாய்கள் கொண்டு வரப்பட்

—ன. இவற்றுடன் துப்பறியும் அதிகாரி ஒருவரும் வந்து புலன் விசாரணை செய்தார்.

நானும் அப்பாவும் அந்த நாய்களைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். மரங்கள் ஏராளமாய் இருந்த ஒரு பெரிய இடத்தில் அவை இருந்து வந்தன. ஒவ்வொரு நாய்க்கும் தனியே ஒரு நாய்ப் பட்டி இருந்தது. அவற்றுக்கு நல்லபடி ஆகாரம் அளிக்கப்பட்டது. யாரும் அவற்றைத் துன்புறுத்த அனுமதிக்கப்படவில்லை.

இந்த நாய்கள் பார்ப்பதற்கு ஓநாய்களைப் போல இருந்ததால், திடுமென எனக்கு ஓர் எண்ணம் உதித்தது: தியான்காவையும் வைத்துக் கொள்ளும்படி இவர்களைக் கேட்டால் என்ன? அப்பாவிடம் எனது இந்த எண்ணத்தைச் சொன்னேன். அவர் இந்த நாய்களுடைய பொறுப்பாளரிடம் சென்று பேசினார்.

''பெண் ஓநாயா? வீட்டிலே வளர்ந்ததா?'' என்று அந்த மனிதர் பரபரப்புற்றுக் கேட்டார். ''என் வாழ்நாள் முழுதும் நான் கனவு கண்டு வந்துள்ளது ஆயிற்றே இது! உடனே அதை அழைத்து வாங்க! இம்மாதிரியான ஓர் ஓநாய் வேண்டுமென்றுதானே இத்தனை காலமாய் நான் காத்திருக்கிறேன்!'' என்றார் அவர்.

தியான்கா நாய்ப்பட்டிகளுக்குப் போய்ச் சேர்ந்தது. உல்ஃப் என்றழைக்கப்பட்ட நாயுடன் சேர்ந்து அதன் பட்டியில் வசிக்க ஆரம்பித்தது.

நகரை விட்டுக் கிளம்புமுன் நாள் தோறும் நான் அங்கே சென்று அதைப் பார்த்துவிட்டு வந்தேன். எப்போதும் என்னை அது ஆர்வத்தோடு வரவேற்றது. அதற்கு நல்ல உணவு கிடைத்தது, அங்கே அது களிப்புடன் இருந்து வந்தது என்பது தெரிந்தது. அது நல்லபடி கவனித்துக் கொள்ளப்படுகிறது என்பதை அறிந்து நான் மனப் புழுக்கமின்றி நகரை விட்டுக் கிளம்ப முடிந்தது.

எங்களுடைய புதிய வீட்டில் புதிதாய் நாங்கள் எவற்றையும் வளர்க்கவில்லை. பழைய வளர்ப்புகளை விட்டுப் பிரிந்திருந்தது எங்களுக்கு வருத்தமாகவே இருந்தது. தியான்காவைப் பற்றி முடிந்த அளவுக்கு அவ்வப்போது தெரிந்துகொள்ள நான் முயன்று வந்தேன். நாய்ப்பட்டிகளின் பொறுப்பாளர் இரண்டு மூன்று ஆண்டுகள் வரை அடிக்கடி எங்களுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். தியான்கா குட்டிகள் போட்டதாகவும், குட்டிகள் கழுக்கு மொழுக்கென்று நன்ருய் இருப்பதாகவும் எழுதினுர் அவர். இன்னும் முக்கியமாய் இவை சிறந்த போலீஸ் நாய்களாகி விட்டன என்று எங்களுக்கு அவர் அறிவித்தார்.

அதன்பின் நாய்ப்பட்டிகளைப் பற்றி எங்களுக்குத் தகவல் இல்லை. கசாஹ்ஸ்தான் பூராவும் இந்த நாய்ப்பட்டிகள் பெயரும் புகழும் பெற்று விட்டன என்பது பல ஆண்டுகளுக்குப் பிற்பாடுதான் எங்களுக்குத் தெரிய வந்தது. தாம் கண்டுபிடிக்க வேண்டிய குற்றவாளியை அவைத் தவருமல் கண்டுபிடித்து வந்தன. அவற்றிடமிருந்து யாராலும் தப்ப முடியவில்லை. திருடர்களிடையே இந்த நாய்கள் பெரும் பீதியை உண்டாக்கின. இதனுல் அல்மா-அத்தாவில் குற்றச் செயல்கள் அநேகமாய் இல்லாது ஒழிந்தன.

சில ஆண்டுகள் கழிந்தபின் நாங்கள் அல்மா-அத்தாவுக்குத் திரும்பி வந்தோம். வந்ததும் முதல் வேலையாய் நான் நாய்ப்பட்டிகளுக்குச் சென்றேன். தியான்காவும் உல்ஃபும் வயதாகி இறந்து விட்டதாக அங்கு வேலை செய்தவர் ஒருவர் கூறினுர்.

''குட்டிகள் எங்கே? அவற்றைப் பார்க்கலாமா?'' என்று கேட்டேன்.

''நாய்கள் எல்லாம் குதிரைப் பந்தய அரங்கிற்குச் சென்றிருக்கின்றன. அங்கே இன்று நாய்களது கண்காட்சியும் சேவை நாய்களின் போட்டியும் நடைபெறுகின்றன.''

பந்தய அரங்கிற்கு ஓடினேன். முக்கிய குதிரைப் பந்தய நாட்களில் இருப்பது போல் அங்கே ஒரே கூட்டமாய் இருந்தது.

யாவும் கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தன. புதிதாய்ப் பயிற்சி பெறத் தொடங்கிய இளம் நாய்கள் முதலில் அணி வகுத்துச் சென்றன. தாம் செய்ய வேண்டியவற்றை அவை திறம்படச் செய்தன. தடைகளின் மீது தாண்டிக் குதித்தும், ஏணிகளில் ஏறியும், மைதானத்தின் குறுக்கே அவை ஆயுத தளவாடப் பைகளைத் தூக்கிச் சென்றன. ஒளித்து வைக்கப்பட்டிருந்த பொருள்களை அவை கண்டு பிடித்து எடுத்தன; தமக்கு அளிக்கப்பட்ட ஆணைகளை நிறை வேற்றின.

அப்போது டிக்கட் விற்பனையாளர் திடுமென ஓடி வந்து யாரோ தம்மை மறித்துப் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்று விட்டதாய்க் கூச்சலிட்டார். கூட்டத்தினர் பரபரப் படைந்து விட்டார்கள். பலரும் தமது பணம் பத்திரமாய் இருக்கிறதா என்று தமது பைகளில் கையை விட்டுப் பார்த்துக் கொண்டார்கள்.

திருடர்களைப் பிடிப்பதற்காக ஒரு நாய் அவிழ்த்து விடப்பட்டது. அது டிக்கட் விற்பனை இடத்தை முகர்ந்து மோப்பம் பார்த்தது, பிறகு அரங்கினுள் பாய்ந்தோடி வந்தது. முதல் மூன்று வரிசைகளைக் கடந்து சென்றது. நான்காவது வரிசையில் நடு மையத்தில் சிறப்பாய் ஆடைகள் அணிந்த ஒரு பெண் அமர்ந்திருந்தார். அந்நாட்களில் மோஸ்தராயிருந்த பெரியத் தொப்பி அணிந்திருந்தார் அவர்.

நாய் அந்தப் பெண்ணிடம் ஓடி அவரை முகர்ந்து பார்த்தது. பிறகு பாதங்களை உயர்த்தி அந்தப் பெண்ணின் தோளில் வைத்தது. அந்தப் பெண் நாயைத் தன்னிட மிருந்து உதறித் தள்ள முயன்றார்.

''என்ன இது?'' என்று விநோதமான கீச்சுக் குரலில் அந்த பெண் கோபமாய்க் கூச்சலிட்டார். ''அநியாயமாய் இருக்கிறதே! நிர்வாகிகளிடம் நான் முறையிடுவேன்!'' என்ருர்.

''ஆமாம், முறைகேடான செயல்'' என்று அரங்கில் கூடி யிருந்தவர்கள் கூறினர். ''இந்தப் பெண்ணுக்குத் திருட்டுப் பட்டம் கட்டுகிறதே இந்த நாய்! ஆரம்பம் முதற்கொண்டே இந்தப் பெண் இங்கேயே அல்லவா அமர்ந்திருக்கிருர்!''

''நாய் தவறிப் போய் இவரிடம் வந்து விட்டது. பணியாளர்கள் எங்கே? ஏன் யாரும் வந்து நாயை இழுத்துச் செல்லவில்லை?''

''இம்மாதிரியான அசட்டு நாய் குற்றமற்றவர் மீது விழுந்து பிடுங்கக் கூடியதாயிற்றே!''

ஆனல் அந்த நாய் இந்தக் கூச்சல்களைப் புரிந்து கொள் ளாமல் தனது வேலையைச் செய்து கொண்டிருந்தது. அந்தப் பெண்ணின் புதுப் பாணித் தொப்பியைப் பற்களால் கடித்து வெடுக்கென அந்தப் பெண்ணின் முடிகளுடன் சேர்த்து இழுத்தது.

''ஐயோ, இந்த நாய் என்ன காரியம் செய்கிறது பாருங் கள்!'' என்று கத்தினர், எனக்கு அருகே நின்ற ஒரு பெண்.

''சகிக்கவில்லை, அநியாயம்!'' என்று இரைந்தார் இன்னொரு பெண்.

திடுதிப்பென அந்தப் பெண்ணின் பெரிய தொப்பிக்கும் நீளமான கூந்தலுக்கும் அடியிலிருந்து கிராப்புத் தலை வெளிப் படக் கண்டோம். உடனே எங்கள் கவனம் நாயிடம் திரும் பிற்று. அது அந்தத் தொப்பியையும் பொய் முடியையும் கிழித்து உதறிக் கொண்டிருந்தது. பிறகு அது கெட்டியாய்க் கட்டப்பட்ட ஒரு கட்டு நோட்டை வெளியே இழுத்தது. அந்த நோட்டுக் கட்டினை வாயில் கவ்விக் கொண்டு அது அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்தது.

இப்போது அந்தப் பெண் எல்லாருக்கும் முன்னிலையில் தனது ஆடையைத் தூக்கித் தலைக்கு மேல் உயர்த்தியதும், அவருடைய பணியாளர் உடுப்பும் முழங்கால் பூட்சுகளும் வெளியே தெரிந்தன.

''இது என்ன? பணியாளர்களில் ஒருவர் ஆயிற்றே இவர்!'' என்று வியந்து கூவினார் ஒருவர்.

யாவரும் கைகொட்டிச் சிரித்தார்கள். கூர்மதி கொண்ட அந்த நாயைத் தட்டிக் கொடுக்கப் பலரும் விரும்பினர். ஆனால் அந்தப் பணியாளர் சேவை நாய்களை யாரும் தட்டிக் கொடுக்க அனுமதிக்கப் படுவதில்லை என்றார்.

நிகழ்ச்சித் திட்டத்தில் மற்றும் சில அருஞ்செயல்கள் இடம் பெற்றிருந்தன. நாய்கள் தமது தேர்ந்த பயிற்சியையும் கூர்மதியையும் வீரத்தையும் அதிசய மோப்ப ஆற்றலையும் வெளிப்படுத்திக் காட்டின.


பிறகு நாய்களின் அணி வகுப்பு நடைபெற்றது.


முடிவில் சிறந்த நாய்கள் வரிசையாய்க் கொண்டு வரப் பட்டன. ஒவ்வொன்றின் பெயரும் அவை புரிந்த அருஞ் செயல்களும் அளிக்கப்பட்ட பரிசுகளும் அறிவிக்கப்பட்டன. ஒவ்வொன்றையும் வாழ்த்தி வாத்தியக் குழுவினர் எக்காள இசை முழங்கினர்.

''ஜானும் ஸ்பையும்!'' என்று வெற்றிக் குரலில் அறிவித்தார் நிகழ்ச்சித் தலைவர். ''உல்ஃப் என்ற நாய்க்கும் தியான்கா என்ற ஓநாய்க்கும் பிறந்தவை. மாஸ்கோவில் இரண்டும் முதன்மைப் பரிசும் தங்கப் பதக்கமும் பெற்று இங்கே திரும்பி வந்திருக்கின்றன. இந்த இரு நாய்களும் இன்று இங்கு நடைபெற்ற போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. காரணம் என்னவெனில், இவற்றுடன் போட்டியிடும் வல்லமை இங்குள்ள எந்த நாய்க்கும் இல்லை.''

எல்லாரும் கையொலி முழக்கம் செய்தார்கள். புகழ் மிக்க இரு நாய்களையும் நன்றாய்ப் பார்க்க விரும்பி எழுந்து நின்றார்கள், வாத்தியக் குழு மீண்டும் எக்காள முழக்கமிட்டு

வாழ்த்திற்று. எங்கள் முன்னால் கண்ணைக் கவரும் இருபெரும் ஓநாய்கள் நின்றிருந்தன. எங்களுடைய தியான்காவையும் தோம்ச்சிக்கையும் நினைத்தவாறு நான் இவற்றை வியந்து போற்றினேன்.





மீஷ்கா

காட்டின் எல்லையில் அமைந்த சிறு குடிசையில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தனர். கனத்த கற்களை உருட்டிக் கொண்டு மலையடிவாரத்தில் ஓடிய ஆறு பேரிரைச்சல் எழுப்பிற்று. இதற்கிடையில் கூச்சலிட்டுக் குதிரைகளை ஓட்டும் குரல்கள் திடுமென ஒலித்தன.

''ஏய்-ஏய்! கினெதோய்! ஏய்-ஏய்!''

பார வண்டி ஒன்று ஏற்றப் பாதையில் ஏறி வீட்டின் வெளிவாயில் அருகே வந்து நின்றது.

குதிரைகள் தலையைக் கவிழ்த்துக் கொண்டு பெருமூச்சு விட்டன.

அப்பா வீட்டைச் சுற்றி வந்து சாட்டைக் கம்பால் சன்னலில் தட்டினார்.

''இதோ வரேன்!'' என்று அறையிலிருந்து குரல் கொடுத்தார் அம்மா.

அம்மா உடுத்திக் கொண்டிருக்கையில் அப்பாவும் அவர் நண்பர் பெதோத் இவானவிச்சும் வண்டியில் கிடந்த ஏதோ ஒன்றை அவிழ்த்துக் கொண்டிருந்தார்கள். அதைத் தூக்கிக் கவனமாய்த் தரையில் வைத்து, கட்டுகளைப் பிரித்துக் கயிற்றை எடுத்தார்கள்.

வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்ட மகிழ்ச்சியில் கினெதோய் மூடியிருந்த வேலிக் கதவை மூக்கால் முட்டிக் கொண்டு நின்றது.

கதவு திறந்து கொள்ளவே வண்டி வெளிமுற்றத்துக்குள் வந்து கொட்டிலுக்கு முன்னால் நின்றது.

''திரும்பி வர ஏன் இத்தனை நாள்?'' என்று அம்மா வண்டியிலிருந்து மூட்டைகளை எடுப்பதற்கு உதவியவாறு கேட்டார். ''என்ன ஆயிற்றோ என்று எனக்குக் கவலையாயிருந்தது'' என்றார்.

''அப்படி நேர்ந்து விட்டது. எதிர்பாராத விதமாய் இரண்டு நாட்கள் இழுக்கடிக்கப் பட்டோம். ஆனால் இதோ என்ன கொண்டு வந்திருக்கிறோமென்று பாரேன்! சிறுமிகளுக்கு அருமையான பரிசு கொண்டு வந்திருக்கிறோம்.''

இருட்டில் பார்ப்பதற்குக் கன்றுக் குட்டி மாதிரி இருந்ததைச் சுட்டிக் காட்டினார் அவர்.

''அட கடவுளே! எங்கிருந்து கிடைத்தது? இத்தனை சிறு குட்டி எப்படி உயிர் தப்ப முடிந்தது? கொட்டிலுக்குள் கொண்டு வாருங்கள். அதற்கு வயிறு பசிக்கும், ஆகாரம் கொடுப்போம்.''

''வேண்டாம், இப்பொழுது அது ஒன்றும் சாப்பிடாது. பயணத்தால் ஓய்ந்து போய் இருக்கிறது, தூங்கட்டும். காலையில் பால் கொடுக்கலாம்.''

அப்பா அவர் கொண்டு வந்த பரிசை வைக்கோலின் மீது படுக்க வைத்துக் குதிரைக் கம்பளியால் போர்த்தினார்.

கொட்டிலின் கதவை அழுத்தி மூடி பெரிய கருங்கல்லை வைத்து இருத்தினர்.

''நீ என்ன செய்யப் பார்க்கிறாய்? முட்டாள்! விலகி வா!'' என்று எங்கள் பரட்டை நாய் மாய்லிக்கைப் பார்த்து அப்பா கத்தினர்.

மாய்லிக் தனது எசமானின் கவனத்தைத் தன்பால் ஈர்ப்பதற்காக நெடுநேரமாய் முயன்று கொண்டிருந்தது. மலையடிவாரத்திலிருந்து பேச்சுக் குரல் கேட்டதும், ஓடோடிச் சென்று அது வரவேற்றது. குதிரைகளின் முகங்களையும் எஜமானனின் பூட்சையும் நக்கிற்று. வாலைக் குழைத்துக் கொண்டு முற்றத்தில் அங்கும் இங்கும் ஓடிற்று. நேரங் கழித்து வந்த எஜமானனுக்குத் தனது மகிழ்ச்சியையும் அன்பையும் தெரிவிக்க தன்னால் இயன்றது அனைத்தையும் செய்து பார்த்தது. பிறகு அப்பா கருங்கல்லை உருட்டிக் கொட்டிலின் கதவின் மீது வைத்து இருத்தியபோது, மாய்லிக் முன்னங் கால் பாதங்களைக் கல்லின் மேல் வைத்து அதைப் பழைய இடத்துக்குத் திருப்பி உருட்ட முயன்றது.

''தலைகால் புரியவில்லை, அப்படி ஆனந்தப் படுகிறது!'' என்று அப்பா சிரித்துக் கொண்டார். ''கொட்டிலுக்குள் போக விரும்புகிறதோ என்னவோ. உள்ளே விட்டால் தவறிப் போய்க் குட்டியைக் கொன்று விட்டால், என்னுவது?''

''அது ஒன்றும் உள்ளே போக விரும்பவில்லை. உங்களுக்கு உதவி செய்து உங்களுடைய பாராட்டைப் பெறவே விரும்புகிறது. மாய்லிக், போதும், போய்ச் சேரு நீ! உன்னை யாரும் உதவி செய்யச் சொல்லவில்லை.''

சப்தத்தைக் கேட்டு சோன்யாவும் நானும் விழித்துக் கொண்டோம். தேநீர் தயாரிக்க தண்ணீர் கொண்டு வருவதற்காகப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு ஓடினோம்.

சற்று நேரத்துக்கெல்லாம் வாயில் முகப்பில் சமொவாரில் ஆவி உஸ்ஸிட்டது. அம்மா ஆப்பம் சுட்டுக் கொண்டிருந்தார். நாங்கள் மேஜையைச் சுற்றி அமர்ந்து தேநீர் அருந்து

கையில் அப்பா எங்களுக்கு அவர் கொண்டு வந்த ''பரிசைப்'' பற்றிக் கூறினர். காட்டில் வேட்டையாடிக் கொல்லப்பட்டுக் கிடந்த தாய் மானுக்குப் பக்கத்தில் தனியே நின்ற குட்டி அது.

''கண்மூடித்தனமான ஆட்கள்! விலங்குகள் குட்டி போடும் பருவமான வசந்தத்தில் யாரும் வேட்டையாடக் கூடாது என்பது தெரிந்ததுதான். ஆயினும் சுடக் கிளம்பி விடுகிறார்கள். தாய் மானைச் சுட்டு வீழ்த்திவிட்டுப் போய்விட்டார்கள். பாவம், குட்டி என்ன செய்யும்? உயிரற்ற தாயுடன் ஒண்டிக்கொண்டு நின்றிருந்தது. அதைக் கொல்ல எங்களுக்கு மனம் வரவில்லை. வீட்டுக்கு எடுத்து வருவதென முடிவு செய்தோம். இங்கே வீட்டில் குழந்தைகளுடன் இதுவும் வளரட்டும்'' என்றார் அப்பா.

அம்மா மகிழ்ச்சியுடன் உடன்பாடு தெரிவித்தார்.

இந்தச் சின்னஞ்சிறு ''பரிசைப்'' பார்த்ததுமே அம்மாவுக்கு அதன் மீது பற்றுதல் உண்டாகி விட்டது. இந்தக் குட்டிக்காக இப்போது அவர் யாவருக்கும் முதலாய் பரிந்து பேச முற்பட்டார்.

யூலியாவும் நத்தாஷாவும் விழித்துக் கொண்டனர். அப்பாவும் அம்மாவும் ஏதோ ''பரிசு'' என்று பேசியது காதில் விழுந்ததும், தூக்கக் கலக்கம் தெளியாத நிலையில் வாயில் முகப்பினுள் வந்து நின்றனர்.

''அம்மா அந்தப் பரிசு சாப்பிடக் கூடியதா?'' கரகரப்பான குரலில் கேட்டாள் நத்தாஷா.

''உயிருள்ளது அது, சாப்பிட முடியாது'' என்று பதிலளித்தாள் யூலியா.

''அம்மா, அது என்ன பரிசு? சொல்லேன்.''

''அம்மா, அந்த பரிசு எங்களுக்கா? நாங்கள் அதைப் பார்க்கலாமா? எங்கே அது?''

''பேசாமல் போய்ப் படுங்கள்! காலையில் பார்த்துக் கொள்ளலாம்'' என்று அம்மா அவர்களை விரட்டினர்.

அதற்குமேல் ஒன்றும் செய்வதற்கில்லை, காலை வரை இருவரும் காத்திருக்க வேண்டியதுதான்.

விடியற்காலையில் அம்மா விழித்து எழுந்து வந்து சோன்யாவையும் என்னையும் எழுப்பினர். மூவருமாய் வெளி முற்றத்துக்குச் சென்றோம்.

இரவில் தீனியில்லாமலே குதிரைகள் நின்றிருந்தன. களைப்பு அடங்கி இப்பொழுது அவை பசியுடன் இருந்தன. எங்களைப் பார்த்ததும் அவை இதமாய்க் கனைத்துக் கொண்டன.

சேணத்தைக் கழற்றி விட்டு அவற்றை ஆற்றுக்கு ஓட்டிச் சென்றோம். தண்ணீர் குடித்ததும் குதிரைகள் நேரே வெளிமுற்றத்திற்குத் திரும்பி தொட்டியிலிருந்த குளோவர் தழையை மென்று தின்ன ஆரம்பித்தன.

சோன்யா பால் கறந்து முடித்ததும், மேய்வதற்காகப் பசுவை வெளியே அனுப்பினுள். மலைச்சாரலில் அமைந்த புல்வெளியை நோக்கிச் சென்றது பசு.

அம்மா உள்ளே சென்ருர். கறந்த பாலிலிருந்து சிறு வாளியில் கொஞ்சம் எடுத்துக் கொண்டு எங்கள் தங்கைகள் இருவரையும் கூப்பிட்டார்:

''தூங்குமூஞ்சிகளே, சீக்கிரமாய் எழுந்து வாங்க! நமது சின்னஞ்சிறு விருந்தாளிக்கு உணவு அளிப்போம், வாங்க!''

யூலியா குதித்தெழுந்து உடுத்திக் கொண்டாள், செருப்பை மாட்டிக் கொண்டு அம்மா பின்னல் ஓடினுள்.

காலைக் குளிரால் அல்ல, உணர்ச்சிப் பரபரப்பால் அவள் வெடுவெடுத்து நடுங்கினுள்.

கொட்டிலின் கதவு விரியத் திறந்திருந்தது, கொஞ்சும் குரலில் சோன்யா குட்டியிடம் கூறினுள்:

''அட அசடே போதும், போதும்...''

அவளுக்கருகே வைக்கோலில் மான் குட்டி ஒன்று நின்று கொண்டு அவளுடைய விரலைச் சப்பிற்று.

பூரிப்பால் யூலியா திக்குமுக்காடினுள். குட்டிக்கு முன்னல்

உட்கார்ந்து கொண்டு அதன் கால்களையும் தலையையும் தட்டிக் கொடுத்தாள், அதன் கண்களினுள் உற்றுப் பார்த்து கேள்வி மேல் கேள்வி கேட்டுச் சென்றாள்:

''கால் ஏன் இதற்கு இப்படிக் குச்சியாய் இருக்கிறது? வயது எவ்வளவு இருக்கும்? இதற்கு அப்பா அம்மா இல்லையா? இங்கே எப்படி வந்தது, வண்டியிலா? என் கையை நக்கு கிறது பாருங்களேன்'' என்று ஆனந்தப்பட்டுக் கொண்டாள். ''பசிப்பதால்தானே நக்குகிறது'' என்றாள்.

அம்மா விரலை அதனிடம் சப்பக் கொடுத்து மெதுவாய் அதன் தலையை வாளிக்குள் கொண்டு வந்தார். மான் குட்டி உடனே புரிந்துகொண்டு அம்மாவின் விரலைப் பலமாய் சப்பி வாளியிலிருந்த பாலையும் சேர்த்து உறிஞ்சிற்று. ஆவலாய் அது பாலை வேகம் வேகமாய் குடித்தபோது மூக்கில் பால் ஏறியது, மூச்சுத் திணறியவாறு அது இருமிற்று. அதன் ஒவ்வொரு செயலையும் பார்த்துக் கொண்டிருந்த நாங்கள் எங்களுக்குள் குசுகுசுவென்று பேசிக் கொண்டோம்.

''கால்களை எப்படி அகலமாய் விரித்து வைத்திருக்கிறது பார். நொடித்துக் கீழே விழுந்து விடாமல் இருப்பதற்காக இப்படி வைத்திருக்கிறது.''

''கால்கள் நடுங்குவதைப் பார்த்தால் எந்த நிமிடமும் முறிந்துவிடும் போலல்லவா இருக்கிறது?''

''இல்லை, வயிற்றைப் பெரிதாக்கிக் கொள்வதற்காக அது கால்களை இப்படி விரித்து வைத்திருக்கிறது.''

''பால் குடிக்கும் கன்றைப் போல் வாளியை முட்டு வதைப் பாரேன்.''

''பால் தரும் பசு என்று நினைத்திருக்கிறது! முட்டாள் மான்குட்டி!''

நானும் யூலியாவும் விழுந்து விழுந்து சிரித்தோம். சோன்யா எங்களை உற்றுப் பார்த்து விட்டுக் கூறினாள்:

''எல்லாம் அறிந்தவர்களாய் நினைத்துக் கொள்ளாதீர் கள்! இது என்ன குட்டி என்றுகூடத் தெரியாது உங்களுக்கு.''

''ஏன் தெரியாது? இது மான் குட்டி.''

''நீங்கள்தான் மான் குட்டிகள்! இது ஓர் ஆசியக் கலைமான்—மரால் என்று பெயர்! எனக்குத் தெரியும், பிரேம் எழுதிய விலங்கு உலகம் என்னும் புத்தகத்தில் இதைப் பற்றி நான் நிறைய படித்திருக்கிறேன்.''

சோன்யா யாவும் தெரிந்தவள் என்று நாங்கள் வாயை மூடிக் கொண்டு, புதிய பக்திப் பரவசத்தோடு இந்த ''மராலைப்'' பார்த்துக் கொண்டிருந்தோம்.

அதன் கால்கள் மெலிந்து நீளமாய் இருந்தன, குளம்பு கள் கூர்மையாய் இருந்தன. மெல்லிய கழுத்தும், பருத்த குண்டுத் தலையும் கொண்டிருந்தது. அந்தத் தலையில் துடுப்பு போன்ற பெரும் காதுகள் இருந்தன, இவை ஓயாமல் ஆடித் துடித்தன. அதன் கண்கள் நாவப் பழம் போல் இருந்தன. அகன்ற நெற்றியும் சிறு மூக்கும் பெற்றிருந்தது. அதன் நாசிகள் புடைத்துப் படபடத்துக் கொண்டிருந்தன. பிறந்து எழுந்து நிற்கும் குதிரைக் குட்டியின் உயரம் இருந்தது அது.

பொசு பொசுப்பான அதன் விலாப்புறங்களில் வெள்ளைப் புள்ளிகள் இருந்தன. எனக்கு அதைத் தட்டிக் கொடுக்க வேண்டும் போல இருந்தது. அதன் வாலை வால் என்று சொல்வதற்கில்லை, சிமிழைப் போல் கறளையாய் ஒட்டிக் கொண்டிருந்தது. வெள்ளைக் கைக்குட்டையை வைத்து மூடினாற் போல் அதைச் சுற்றிலும் வெண்ணிறத் திட்டு காணப்பட்டது.

''இதற்கு பெயர் என்ன, அம்மா?''

''இதற்குப் பெயர் மீஷ்கா, மிகாய்லவ்கா என்ற கிராமத் துக்கருகே கிடைத்த குட்டி என்பதால் இந்தப் பெயர்'' என்று அமைத்தலாய்ச் சொன்னாள் சோன்யா. ''இரவில் நீங்கள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கையில் அதற்கு இந்தப் பெயரை வைத்தோம்.''

எல்லாம் அறிந்தவளைப் போல் பெருமையடித்துக் கொள் வதில் சோன்யாவுக்கு இருந்த விருப்பம் வியக்கத் தக்கது

தான். தானேதான் மீஷ்காவைக் கண்டெடுத்து வீட்டுக்குக் கொண்டு வந்தது மாதிரி மான் குட்டியைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவள் எங்களுக்குச் சொல்ல முற்பட்டாள்.

இதற்குள் மீஷ்கா பாலைக் குடித்து முடித்து விட்டது. வாளியைச் சாய்த்து ஒட்ட நக்கி விட்டு தனது கட்டை வாலை ஆட்டிக் கொண்டு வாளியை முட்டித் தள்ளிற்று.

வாளி முற்றத்தில் உருண்டோடவே மீஷ்காவும் அதன் பின்னால் ஓடிற்று. திரும்பத் திரும்ப தலையை வாளியினுள் விட்டு அதை முட்டித் தள்ளிற்று.

நன்றாய் முட்டினால் தாய் மானைப் போல் இந்த வாளியும் தொடர்ந்து பால் கொடுக்கும் என்று அது நினைத்துக் கொண்டது போலும்.

சிறியவள் நத்தாஷா வாயில்முகப்புக்கு வந்தாள். தூக்கத்திலிருந்து அப்போதுதான் எழுந்து வந்த அவள் சோர்வுடன் வெளிமுற்றத்தைப் பார்வையிட்டாள்.

மீஷ்கா இன்னமும் பாத்திரத்தினுள் தலையை விட்டு உருட்டிக் கொண்டுதானிருந்தது.

வெடுக்கென தலையை உயர்த்திக் கொண்டு நான்கு கால்களையும் தரையிலிருந்து உயர்த்தி பக்கவாட்டில் தாவிற்று. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு துள்ளித்துள்ளிக் குதித்து மாய்லிக்கிடம் சென்று தலையைக் குனிந்து கொண்டு பார்த்தது. உடனே எம்பித் தாவி நாற்புறமும் கால்களை உதைத்தவாறு குதித்தாடியது.

மாய்லிக் எழுந்து நின்று கொண்டு, நாட்டியமாடியக் குட்டியை வியப்பால் விரிந்த கண்களால் உற்று நோக்கியது, பலமாய் உறுமிற்று. வாணவெடி போல் மேல் நோக்கிப் பாய்ந்தது மீஷ்கா. நேரே அம்மாவிடம் பாய்ந்தோடி அவருக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, தலையை நீட்டி எச்சரிக்கையோடு மாய்லிக்கைப் பார்த்தது. பிறகு அது கீச்சிட்டு ஈக்-ஈக்-ஈக் என்று விநோதமாய் கத்திற்று.

அதன் நாசிகள் படபடத்தன. காதுகள் இரண்டும் குத்திட்டு நின்றன. பீதியுற்று அது பலமாய் மூச்சு விட்டது. அதன் விலாப்புறங்கள் விம்மி விம்மி எழுந்தன.

நத்தாஷா கூச்சலிட்டுச் சிரித்தாள், ஆனந்தம் பொறுக்கமாட்டாமல் துள்ளிக் குதித்தாள்.

''பூனை மாதிரியல்லவா கத்துகிறது... மாய்லிக் சரியான படி அதை மிரள வைத்து விட்டது!''

சமோவார் கொதிக்க ஆரம்பித்ததும் நாங்கள் எல்லோரும் வீட்டிற்குள் சென்றோம். மீஷ்காவும் வாயில் முகப்பின் படிகளில் ஏறி எங்கள் பின்னால் வந்தது. நாங்கள் தேநீர் அருந்திக் கொண்டிருந்த போது யாவற்றையும் முகர்ந்து பார்த்தவாறு அறையெங்கும் சுற்றி வந்தது. சன்னலுக்குள் தலையை விட்டு எட்டிப் பார்த்தது, கட்டிலுக்கு அடியிலும் பெஞ்சு மீதிருந்த ஜாடிகளிலும் மூக்கை நுழைத்து ஆராய்ந்தது. பிறகு இரண்டாவது அறையைப் பரிசீலிக்க முற்பட்டது. முடிவில் எல்லோருக்கும் வழி மறிக்கும்படி வாயிற்படியில் தனக்கு வசதியாய் இடம் தேடிக் கொண்டது, மண்டியிட்டுக் குனிந்து, அப்படியே படுத்துக் கொண்டு விட்டது.

அதன் அருகே காகிதத் துண்டு ஒன்று கிடந்தது. மீஷ்கா அதை உதடுகளால் பிடித்து எடுத்தது. காகிதம் சலசலத்துச் சப்தம் எழுப்ப அதை மென்று அசை போட ஆரம்பித்தது.

மான் குட்டி ஆவலாய்க் காகிதத்தை மெல்லுவதைக் கவனித்த நான்கு வயதான நத்தாஷா நாற்காலியிலிருந்து இறங்கி சிறிய ரொட்டித் துண்டு ஒன்றை எடுத்து அதிலிருந்து மிருதுவான பகுதியை பிய்த்தெடுக்க முற்பட்டாள். சோன்யா முழங்கையால் மெல்ல என் மீது இடித்தாள்... யூலியா செய்தியேட்டுக்குப் பின்னால் முகத்தை மறைத்துக் கொண்டு சிரிப்பு தாங்க மாட்டாமல் குலுங்கினாள்.

''நீ என்ன செய்கிறாய்?'' என்று அம்மா கேட்டார்.

''குட்டிக்குப் பசிக்கிறது. பாவம், காகிதத்தைத் தின்கிறது'' என்று இரக்கம் தொனிக்க பதிலளித்தாள் நத்தாஷா.

''அதெல்லாம் இல்லை, சும்மா அது காகிதத்தை மெல்லுகிறது. வயிறு நிறைய உணவளித்திருக்கிறோம், அதற்கு ஒன்றும் பசியில்லை.''

''இல்லை, காகிதத்தைத் தின்கிறது. பசிப்பதால்தான் தின்கிறது.''

அவள் மீஷ்காவுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு அதனிடம் ரொட்டிப் பொருக்கைக் கொடுத்தாள். அது காகிதத்தை விழுங்கி விட்டு ரொட்டிப் பொருக்கை வாங்கி அவசரமாய் மென்றது. மூன்று நாட்களாய் எதுவும் கிடைக்காமல் பட்டினி கிடந்தது போல் அப்படி பரபரத்துக் கொண்டு தின்றது அது.

நத்தாஷாவுக்குக் கொண்டாட்டமாயிருந்தது.

''சாப்பிடுவதைப் பாருங்கள்! பசி இல்லாமல் இப்படிச் சாப்பிடுமா?''

காலை உணவுக்குப் பிற்பாடு விளையாடுவதற்காக நாங்கள் புல்வெளிக்குச் சென்றோம். ஆனால் மீஷ்கா அம்மாவுடன் தங்கி விட்டது. நாள் பூராவும் அம்மா பின்னால் நிழல் போல் ஒட்டிக் கொண்டு கிடங்கிலிருந்து கொட்டிலுக்கும், கொட்டிலிலிருந்து வெளிமுற்றத்தில் மூலையிலிருந்த அடுப்புக்குமாய்ப் போய்க் கொண்டிருந்தது. அம்மா எங்களுக்கு மதிய உணவு தயாரிக்கையில் காதை ஆட்டிக் கொண்டு அது அமைதியாய் அம்மா காலடியில் படுத்திருந்தது.

வெளிமுற்றத்தில் தனியே இருக்க மீஷ்கா விரும்பவில்லை. அங்கே அதற்கு அச்சமாகவும் தனிமையாகவும் இருந்தது. அம்மா பின்னால் வெளிமுற்றத்தைக் கடக்க நேர்ந்த போது ஒவ்வொரு தரமும் அது மாய்லிக்கைச் சந்திக்க வேண்டியிருந்தது. காலையில் நடைபெற்ற சச்சரவைத் தான்

மறந்து விடவில்லே என்று மாய்லிக்குக் காட்ட விரும்பியது போல், அது அந்த நாயைப் பார்த்துத் தலேயை உலுக்கிப் பலமாய்க் குளம்பால் தரையைத் தட்டிற்று.

மாய்லிக் பலமாய் உறுமி ஒவ்வொரு தரமும் அதற்குப் பதிலளித்தது.

மதியத்திற்குள் மீஷ்காவிற்கு திரும்பவும் வயிறு பசிக்க ஆரம்பித்து விட்டது. ''பால் எங்கே?'' என்று கேட்பது போல் அது வழியை மறித்துக் கொண்டு அம்மாவை முட்டிக் கொண்டு நின்றது.

அம்மாவை அது தன் தாய் மானென்றும், தனக்குப் பால் தருவது அம்மாவின் கடமையென்றும் நினைப்பதாய்த் தெரிந்தது.

சிரித்துக் கொண்டு அம்மா அதை ஒதுங்கிச் செல்லும்படி தள்ளியவாறு அதற்கு உணவு தயார் செய்தார்கள். அம்மா பாலே வாளியில் ஊற்றிக் கீழே வைத்ததும், என்ன செய்ய வேண்டுமென்று மீஷ்காவுக்குத் தெரிந்திருந்தது. இப்பொழுது அம்மா அதன் வாயில் விரலே வைத்து அதற்குச் சொல்லித் தர வேண்டியிருக்கவில்லே. வாளியில் அது தானுகவே தலேயை விட்டுப் பாலேக் குடிக்க ஆரம்பித்தது. ஆனுல் அவசரம் பொறுக்க மாட்டாமல் துடித்துக் கொண்டு குடிக்கையில் வாளியை உருட்டித் தள்ளி விட்டது, பால் தரையில் ஓடிற்று.

''அட சனியனே! அவசரமாய் வேலே செய்து இதற்கு வேண்டியதைத் தந்தால் வாளியை உருட்டித் தள்ளி விட்டதே'' என்று அம்மா கடிந்து கொண்டார்.

ஆனுல் எவ்வளவுதான் கடிந்து கொண்டாலும் மறுபடியும் அம்மா அதற்குப் பால் தரத்தான் வேண்டியிருந்தது. அது மீண்டும் முட்ட வந்ததால் அம்மா ஒன்றும் செய்வதற்கில்லே, திரும்பவும் வாளியில் பால் ஊற்றி வைத்தார்.

ஆரம்பத்தில் சில நாட்களுக்கு மீஷ்கா எந்நேரமும் அம்மா பின்னுலேயே சுற்றிக் கொண்டும் பிறகு உண்பதும் உறங்குவதுமாய் இருந்து வந்தது.

அதன் அன்புக்குப் பாத்திரமாவதற்காக நாங்கள் எவ்வளவோ முயன்றும் குழந்தைகளாகிய எங்களை அது கண்டு கொள்ளாமலே இருந்து வந்தது.

நாங்கள் அதற்கு அளித்த ஆப்பிள், ரொட்டி, இன்ன பிற தின்பண்டங்களை மட்டும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டது. ஆனுல் பெரிதாய் எங்களுக்குத் தயவு காட்டுவது மாதிரி அலட்சிய பாவனையோடுதான் ஒவ்வொரு தரமும் இவற்றை எங்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளும்.

இரண்டு மாதங்கள் கழிந்தன. இதற்குள் மீஷ்காவுக்கு நாங்கள் பழக்கமானவர்களாகி விட்டோம், புதிய சூழ்நிலையும் அதற்குப் பழக்கப்பட்டு விட்டது. முன்பு போல் அது நாய்களைக் கண்டு அஞ்சவில்லை. வீட்டிலிருந்து வெளியே நெடுந் தொலைவு சென்று சுற்ற ஆரம்பித்தது.

முதுகிலும் விலாப் புறங்களிலும் இருந்த வெள்ளைப் புள்ளிகள் மறையலாயின. அதன் முடிகள் உதிர ஆரம்பித்தன. குட்டி மான்களுக்கும் ஏனைய வன விலங்குக் குட்டிகளுக்கும் ஆரம்பத்தில் இம்மாதிரிதான் வெள்ளைப் புள்ளிகள் இருக்கும், பிறகு இவை மறைந்து விடும். மான் குட்டியின் தலையில் பிற்பாடு கொம்புகள் வளர வேண்டிய இடத்தில் இப்போது இரு சிறு முட்டுகள் தோன்றின.

அம்மா அதற்கு வயிறு நிறைய உணவளித்து வந்தார். மீஷ்கா கொழு கொழுவென்ருகி விட்டது. விரைவாய் வளர்ந்து வந்தது அது. ஒவ்வொரு தரமும் ஒரு சட்டி பால் குடிக்க முற்பட்டது. அம்மாவுக்குக் கவலை அதிகரிக்கலாயிற்று.

''எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தினமும் மூன்று தரம் இதற்குப் பால் தர வேண்டியிருக்கிறது, ஒவ்வொரு தரமும் இது குடிக்கும் பால் இப்படி அதிகமாகி வந்தால் குழந்தைகளுக்குப் பாலுக்கு என்ன செய்வது?''

ஆகவே மீஷ்காவின் பாலில் சிறிது சிறிதாய் அம்மா தண்ணீரைச் சேர்க்க வேண்டியதாயிற்று. முதலில் ஒரு

கிண்ணம் தண்ணீர் சேர்க்கப் பட்டது, நாளடைவில் அதிக மாகி முடிவில் ஒரு வாளித் தண்ணீரில் இரண்டு மூன்று கிண்ணம் பால் சேர்ப்பது வழக்கமாகியது.

மீஷ்கா இதைப் பொருட் படுத்தியதாய்த் தெரிய வில்லை. எப்போதும் போல் அது மகிழ்ச்சியோடுதான் குடித்து வந்தது. பிறகு ஒரு நாள் திடுமென அதற்கு ஏதோ நேர்ந்து விட்டது. வழக்கம் போல் அளிக்கப்பட்ட தண்ணீர்ப் பாலை முகர்ந்து விட்டு கனைத்துக் கொண்டு வாளியை உதைத்துத் தள்ளிற்று. அன்று முதல் அது பாலைச் சீண்டவே இல்லை, கலப்பற்ற சுத்தமான பாலையுங்கூட மறுத்து விட்டது.

அதன் பிள்ளைப் பிராயம் முடிவுற்று விட்டது. மீஷ்கா வுக்கு இப்போது வேறு விதமான உணவுத் தேவைப்பட்டது. பசுவுக்கு வைக்கப்பட்ட தவிட்டைத் தின்றது, குதிரைகளுக்கு ஓட்ஸ் தீனி தரப்பட்ட போது அதுவும் அவற்றுடன் சேர்ந்து கொண்டு தின்ன முயன்றது.

குதிரைகளிடம் செல்ல மீஷ்காவுக்குப் பயமாயிருக்கும். குதிரைகள் தமது தீனித் தொட்டிக்குள் மீஷ்கா தலையை விட முயன்றதும் பொறுக்கமாட்டாமல் அடிக்கடி அதைக் கடித்து விடும்.

ஆனால் பசுவை அது துச்சமாய் மதித்தது. பசுவுக்கு அம்மா தீனி கொண்டு வந்து வைத்து விட்டு வீட்டுக்குள் சென்றதும், எங்கிருந்தோ மீஷ்கா ஓடி வந்து பசுவை விரட்டி விட்டு அதன் தீனியைத் தின்னத் தொடங்கும். பாவம், புரி யோன்கா, ஒதுங்கி நின்று ஏக்கத்துடன் பார்த்துக் கொண் டிருக்கும்.

''திருட்டுப் பயலே, என்ன வேலை இது?'' இந்தப் பகற் கொள்ளையைப் பெரியவர்கள் யாராவது பார்க்க நேரும் போது கூச்சலிடுவார்கள்.

எதிர்பாராத இந்தக் கூச்சலைக் கேட்டதும் மீஷ்கா துள்ளிப் பாய்ந்து துடுக்காய்க் குதித்து விட்டு வேலியைத் தாவிக் கொண்டு குன்றுகளைப் பார்க்க ஓடி விடும்.


மீஷ்கா எந்நேரமும் எதையாவது தின்று கொண்டுதான் இருக்கும். துண்டு சிகரெட்டுகள் என்ருல் அதற்கு உயிர் தான்.

வனவியல் அலுவலகத்தின் சன்னல்களுக்கு அடியில் திரிந்து அங்கே கிடக்கும் துண்டு சிகரெட்டுகளைப் பொறுக்கித் தின்னும். சிகரெட்டுத் தாளுடன் புகையிலையையும் சேர்த்துச் சுவையாய் மென்று கொண்டு நிற்கும்.

மீஷ்காவுக்கு அலுக்கவே அலுக்காது, ஓடியாடி எதாவது குறும்பு செய்து கொண்டுதான் இருக்கும். வெளிமுற்றத்தில் அமைதியாய் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருக்கையில், திடுமெனத் தலையைத் தூக்கிப் பார்க்கும், காதுகளைச் சடக் கென உயர்த்தும்—அவ்வளவுதான்! விர்ரென வீட்டைச் சுற்றிப் பறந்தோடி, சாலை வழியே ஆற்றுக்கும், அங்கிருந்து திரும்பிப் பாறைகளையும் மரக் கட்டையையும் தாவிப் பின்னங் கால்களை உயரத் தூக்கி உதைத்துக் கொண்டு குன்றுக்கும் பாய்ந்து ஓடும்.

அம்மா ஒரு நாள் கொடியில் துணிகளைக் காயப் போட்டு விட்டுச் சென்ருர். இதைக் கவனித்த மீஷ்கா பெரிய விரிப் பாய் ஒன்றைப் பார்த்து அதன் மூலையைக் கடித்து மெல்ல ஆரம்பித்தது. சற்று நேரம் மென்று கொண்டு நின்றிருந்த பின் வழக்கமாய் நாங்கள் விளையாடும் தோப்புக்குச் செல்வ தெனத் தீர்மானித்தது.

கொடியிலிருந்து துணியை இழுத்துத் தலையை ஒரு ஆட்டு ஆட்டித் துணியைத் தோளில் போட்டுக் கொண்டது. துணியின் ஒரு மூலை தரையிலே புரண்டு வர வீட்டிலிருந்து வெளியே வெற்றி நடை போட்டது. நல்ல வேளையாய் அந் நேரத்தில் அதைப் பார்த்தவர் துணியை அதனிடமிருந்துப் பிடுங்கிஞர். ஆனுலும் துணி ஏற்கெனவே வீணுகி விட்டது. அதில் ஒரு பெரும் பகுதி சன்னமாய் அரிக்கப்பட்டிருந்தது, கைப் பட்டதும் கிழிந்து கையுடன் வந்தது.



கண்ணில் பட்டதை எல்லாம் இப்படிக் கடித்து மெல் லும் அதன் பழக்கம் சிறிதும் விரும்பத்தக்கதாய் இல்லை, எங்களுக்குப் பெரும் சேதம் விளைவிப்பதாய் இருந்தது. எங்கள் திரைச் சீலை, மேசை விரிப்பு, கைக்குட்டை ஆகிய யாவும் மீஷ்காவின் கவனத்திலிருந்து தப்ப முடியவில்லை என்பதற்கான அறிகுறிகளைத் தாங்கியிருந்தன. யூலியாவின் சிறந்த ஆடையிலுங்கூட நடுமையத்தில் மீஷ்கா மென்று பெரிய ஓட்டை போட்டுவிட்டது.

அன்று வடிக்கப்பட்ட கண்ணீருக்கு அளவே இருக்காது!

அப்பா ஒரு நாள் துணி அலமாரியின் சாவி எங்கே என்று தேடினார்.

வழக்கமாய் மாட்டித் தொங்க விடப்படும் கொக்கியில் காணப்படவில்லை அது. நாங்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து

தேட ஆரம்பித்தோம். வீட்டிலும் வெளிமுற்றத்திலுமாய் நாள் பூராவும் தேடியும் அது கிடைக்கவில்லை. பூட்டை உடைக்க எங்களுக்கு மனம் வரவில்லை. அது அருமையான இங்கிலாந்துப் பூட்டு, மெல்லிய வாரில் கோக்கப்பட்ட சிறிய சாவியுடன் கூடியது.

''சாவியை எடுத்தது யார்? வீட்டில் ஒரு ஒழுங்குமுறை இல்லையே!'' என்று கோபமாய் இரைந்தார் அப்பா.

சாவி இனி கிடைக்குமென்ற நம்பிக்கையை நாங்கள் இழந்தபின், மீஷ்காவினுடைய வாயில் ஒரு ஓரத்தில் தோல் துண்டு ஒன்று தொங்குவது அம்மாவின் கண்ணில் பட்டது.

அவர் மீஷ்காவிடம் சென்று அந்தத் தோலின் ஒரு நுனியைப் பிடித்திழுத்தார். அது அலமாரிச் சாவியின் வார் என்பது தெரிந்தது. மீஷ்கா பாதி வாரை மென்று தின்றதோடு, சாவியையும் விழுங்கி விட்டது.

''அசட்டுப் பிறவி! சகிக்க முடியவில்லை!'' என்று அப்பா கடிந்து கொண்டார்.

சீரணிக்க முடியாதவற்றைத் தின்கிறதே, இதற்குத் தீங்குதான் ஏற்படுமென்று நாங்கள் நினைத்தோம். ஆனால் சாவியை மீஷ்கா இனிய தின்பண்டமாய் நினைத்தது போலும். தொடர்ந்து இது இம்மாதிரியான விபரீத பண்டங்களைத் தின்று வந்தது.

ஒரு சமயம் கொட்டிலுக்கு அருகே நாங்கள் குதிரைச் சேணத்துக்குச் சாயம் பூசிக் கொண்டிருந்தோம். யாருக்கும் தெரியாமல் மீஷ்கா சேணக் கச்சுவாரை எடுத்துச் சென்று விட்டது.

நீளமான வெள்ளை நாடாவை அது மென்று கொண்டு நிற்பதைக் கவனித்த அப்பா நாடாவின் நுனியைப் பிடித்து இழுத்தார். ஒரு கஜம் நீளமுள்ள வார் மீஷ்காவின் வாயிலிருந்து வெளியே வந்தது, வாரின் நடுவில் இரும்பு வளையம் ஒன்று இருந்தது.

கெட்டியான கறுப்பு வார் துணி போல் மிருதுவாகி, வெண்பனி போல் வெள்ளையாகி விடும்படி மீஷ்கா அதை அப்படி மென்று வைத்திருந்தது. வாரிலிருந்த இரும்பு வளையத்தைப் பற்றி அது கவலைப் பட்டதாய்த் தெரியவில்லை.

இவ்விதம் கோடை கழிந்து சென்றது. பிறகு இலையுதிர் காலமும், குளிர்காலமும் வந்து போயின. மீஷ்காவின் இரண்டாவது வசந்தப் பருவம் நெருங்கிக் கொண்டிருந்தது. இப்பொழுது ஒன்பது மாதக் கன்றாய் இருந்த அது ஒரு வயதான பசுங் கன்றைக் காட்டிலும் உயரமாயிருந்தது. வலிமை வாய்ந்ததாய் அதி வேகமாய் ஓட வல்லதாய் இருந்தது. தோப்புகளில் சுற்றித் திரியவும் மரக் கிளைகளிலிருந்து பசுந்தளிர்களை மென்று தின்னவும் விரும்பிற்று. அதனால்தான் போலும் அதன் தலை எப்போதும் கம்பீரமாய் உயர்ந்து நிமிர்ந்திருந்தது. தலை குனிந்து தரையிலிருந்து புல் தின்னும் பழக்கம் அதற்கில்லை.

அதன் கொம்புகள் முளைத்து வெளிவர முற்பட்டன. ஆரம்பத்தில் அவை வீங்கிப் புடைத்து மிருதுவாகவும் வெதுவெதுப்பாகவும் இருந்தன. பொச பொசப்பான பூஞ்சினால் மூடப்பட்டுக் கனிந்த பீச் பழம் போல் தோன்றின.

மீஷ்கா முதுகுப் புறத்தைக் கதிரவன் பக்கம் திருப்பிக் கொண்டு நிற்கையில் அதன் கொம்புகளில் சிவப்பாய் இரத்தம் செல்வது தெரிந்தது. கொம்புகள் மிருதுவாய் இருந்த போது மீஷ்கா அடக்கமாய், சாதுவாய் இருந்தது. அடிக்கடி எங்களிடம் வந்து இதமாய்த் தலையை எங்கள் மீது உரசி கொம்புகளைத் தடவிக் கொடுக்கும்படி கேட்கும். கொம்புகள் வெதுவெதுப்பாய் பூம்பிஞ்சுகள் போல் இருந்தன. கவனக்குறைவாய் அவற்றைச் சற்று பலமாய் அழுத்திவிட்டோமானால் உடனே அது அதிர்ச்சியுற்றுத் துடித்து எங்களை உதைக்க முற்பட்டது.

இதற்குள் நாங்கள் அதற்கு மிகவும் நெருங்கியவர்களாகி விட்டோம், ஓயாமல் அதனுடன் விளையாடிக் கொண்டு

இருந்தோம். காட்டுக்கு அல்லது மலைகளுக்கு நாங்கள் செல்கையில் மீஷ்காவும் எங்களுடன் வரும்.

நாங்கள் நான்கு பேரும், எங்கள் நண்பர்களாகிய பக்கத்துக் கிராமத்துக் கசாஹ் பையன்களும், ஐந்தாறு நாய்களும், யாவருக்கும் நடுவில் மீஷ்காவுமாய்ச் செல்வோம்— வேடிக்கையான காட்சியாய் இருக்கும். தனித்திருக்க மீஷ்கா எப்போதுமே விரும்பியதில்லை, இப்போது அது எல்லாரிடத்தும் முன்னிலும் அதிக பாசமுடையதாகியது.

ஒரு சமயம் யூலியா மீஷ்காவுக்கு வெறுப்பூட்டி விட்டு, அதனிடம் பயப்படுவதாய்ப் பாசாங்கு காட்டி விலகி ஓடினாள். மீஷ்கா அவளைத் துரத்திக் கொண்டு ஓடிற்று. யூலியா கொக்கரித்துச் சிரித்துக் கொண்டு வாயில்முகப்புப் படிகளில் ஏறி ஓடிச் சென்று அங்கிருந்து திரும்பி நின்று அதைப் பார்த்து நாக்கை நீட்டிக் கோப்பு காட்டினாள். உடனே மீஷ்கா தலையை உயர்த்தி அவளைப் பார்த்து அதுவும் நாக்கைக் காட்டிற்று; அதோடு நிற்காமல் மூக்கைச் சுளித்துக் கொண்டு பழிப்பு காட்டி ஊதிற்று: 'ஊ-ஊ-ஊ!' வியப்பால் நாங்கள் திகைப்புற்றுப் போனோம்!

ஓ, மீஷ்கா!

உடனே நாங்கள் எல்லோரும் மீஷ்காவைக் கேலி செய்து விட்டுக் கொக்கரித்தவாறு வாயில்முகப்புக்குள் ஓடி ஒளிந்து கொள்ள ஆரம்பித்தோம். இந்த விளையாட்டை மீஷ்கா புரிந்து கொண்டு விட்டது. வாயில்முகப்பிலிருந்து விலகிச் சென்று காத்துக் கொண்டு நிற்கும். பிறகு நாங்கள் கீழே இறங்கி கைகளை விரித்து அதை அழைத்தவாறு அதனிடம் சென்றதும் உடனே அது தாக்குதல் தொடுத்து வாயில் முகப்புக்குள் எங்களைத் துரத்தி அடிக்கும். களிப்புற்றுக் கூச்சலிட்டவாறு நாங்கள் படிகளில் ஏறி ஓடிச் சென்று திரும்பிப் பார்க்கும் போது மீஷ்கா தலையைத் தூக்கி வாயின் ஒரு பக்கத்தில் நாக்கை நீட்டிக் கோப்புக் காட்டியவாறு ஊதும். வேடிக்கையான காட்சியாய் இருக்கும், எங்களுக்குச் சிரிப்புத்

தாங்க முடியாது. மான் எங்களைத் துரத்திக் கொண்டுவர தப்பி ஓடிச் செல்வதும் சுவையான விளையாட்டாய் இருக்கும்.

மீஷ்காவின் கொம்புகள் வளர்ந்து கெட்டியாகும் வரை நாங்கள் இவ்வாறு விளையாடி வந்தோம். எங்களை விரட்டிய டிக்க மீஷ்காவுக்கு ஏன் கற்றுத் தந்தோம் என்று இப்போது நாங்கள் வருந்த வேண்டியிருந்தது.

அதன் கொம்புகள் கெட்டியானதும், அவற்றை மூடி யிருந்த பூஞ்சு காய்ந்து போய்ப் பாளம் பாளமாய் வெடித்துத் தோலுடன் சேர்ந்து உரிய ஆரம்பித்தது. அடிமரங்களில் கொம்புகளைத் தேய்த்து மீஷ்கா அவற்றின் மீதிருந்த ''கம் பளித்'' தோலைச் சீக்கிரமாய் உரித்து அகற்றி விட முயன் றது. முடிவில் தோல் அறவே அகன்றுவிட்டது. மீஷ்காவின் தலையில் முதன் முறையாய் வளர்ந்த இந்தக் கொம்புகள் பெரிதாய் இல்லை, கிளைகளின்றி இருந்தன.

அடுத்த ஆண்டில் மீஷ்கா இந்த முதலாவது ஜதையை இழந்தது, இவற்றின் இடத்தில் இரு கிளைகளைக் கொண்ட இரண்டாவது ஜதை வளர்ந்தது. கலைமான் முழுக் காளைப் பருவத்தை அடையும் வரை இவ்வாறுதான் அதன் கொம்பு களிலுள்ள கிளைகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிச் செல் கின்றன. கொம்புகளிலுள்ள கிளைகளைக் கொண்டுதான் வேடர்கள் கலைமானுடைய வயதைக் கணக்கிடுகிறுர்கள்.

பளபளப்பான, கூர்மையான கிளைக் கொம்புகளைப் பெற்றுக் கொண்டதும் மீஷ்காவுக்கு கர்வம் தலைக்கு ஏறிவிட் டது. எழில் வாய்ந்த கம்பீரமான தன் தலையை நிமிர்த்திக் கொண்டு ஆடம்பரமாய் அது வீட்டைச் சுற்றி நடை போட ஆரம்பித்தது.

இப்படி ஒரு நாள் வெளிமுற்றத்தில் நடை போட்டுக் கொண்டிருக்கையில் மாய்லிக்கின் சாப்பாட்டுக் கிண்ணத்தை இடறித் தள்ளிவிட்டது.

''காலுக்கு அடியில் இருப்பதைக் குனிந்து பார்க்க முடியாது! மெத்தப் பெரியவர்கள் நாம்!'' என்று கோபமாய்க் கூறினாள் யூலியா.

தனது சாப்பாடு பாழாகிவிட்டதைக் கண்டு கடுப்புற்ற மாய்லிக் பற்கள் வெளியே தெரிய உறுமிற்று.

இதன் விளைவு எதிர்பாராததாய் இருந்தது.

மீஷ்கா பயந்து போய் வழக்கம் போல் பின்வாங்கிவிடுவதற்குப் பதில் கொம்புகளை தாழ்த்திக் கொண்டு மாய்லிக்கின் மீது பாய்ந்து அதைக் கொட்டில் சுவரில் தள்ளிற்று. பிறகு பின்னால் நகர்ந்து குளம்புகளால் அதை நையப் புடைத்தது.

மாய்லிக் ஊளையிட்டுக் கத்திற்று.

யூலியாவின் கூக்குரலைக் கேட்டுச் சுற்றிலுமிருந்தவர்கள் ஓடி வந்து மீஷ்காவை விரட்டியடித்தார்கள்.

அன்று முதல் மீஷ்கா என்றதுமே நாய்கள் மிரண்டு நடுங்கின. வசந்தத்தில் மீஷ்கா தனது கொம்புகளை இழக்கும் வரை அவை தமது உள்ளக் கொதிப்பை வெளிக்காட்டாமல் வைத்திருந்து விட்டு அதன் பிறகு அதன் மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டன.

ஒரு நாள் மதிய உணவின் முடிவில் தர்பூசனிப் பழம் தின்றோம். மீஷ்காவுக்கும் தரலாமென்று நத்தாஷா ஒரு கீற்றை எடுத்துக் கொண்டு வெளியே சென்றாள்.

திடுமென அலறலும் கூப்பாடும் கேட்டன.

நாங்கள் எல்லோரும் வெளியே ஓடினோம். வெளிமுற்றத்தின் நடுவில் நத்தாஷா மண்டியிட்டுக் கொண்டு தொண்டை கிழிய கதறிக் கொண்டிருந்தாள். அந்த எமகார மானாகிய மீஷ்கா தனது கூர்மையான குளம்புகளால் அவள் முதுகில் மொத்திக் கொண்டு நின்றது. அவள் கையிலிருந்து அது முட்டித் தள்ளியிருந்த தர்பூசனிக் கீற்று அங்கே மண்ணில் கிடந்தது.

மாய்லிக்குக்கு மீஷ்காவிடமிருந்த பயம் திடுமென அப்போது மறைந்து விட்டது. அது மானின் பின்னங்கால்

மீது விழுந்து பிடுங்கிற்று. நத்தாஷாவைக் காப்பாற்ற அதற்குள் நாங்கள் எல்வோரும் ஓடி வந்து விட்டோம்.

தங்கைக்கு உதவ சோன்யா வந்துவிட்டதைக் கண்டதும் மீஷ்கா துள்ளிப் பாய்ந்து விலகியோடிற்று, குனிந்து ஒரு தாவு தாவி வேலியைத் தாண்டிக் குதித்துக் குன்றுகளை நோக்கி ஓடிவிட்டது.

நாங்கள் நத்தாஷாவை ஒருவாறு சமாதானப் படுத்தியதும் அவள் என்ன நடந்ததென்று சொன்னாள். தவறு நேர்ந்து விட்டது, மீஷ்கா அவளுடைய எண்ணத்தைத் தவருய்ப் புரிந்து கொண்டு விட்டது என்பது தெரியலாயிற்று.

முன்பு மீஷ்காவுடன் நாங்கள் ஆடிய விளையாட்டில், அதன் மூக்குக்கு அடியில் விரல்களை ஆட்டி அதற்கு வெறுப் பூட்டுவது வழக்கம். நத்தாஷா இப்பொழுது அதனிடம் ஓடிச் சென்று தர்பூசணிக் கீற்றைத் தர முயன்றபோது அவள் தன்னிடம் விரலை ஆட்டிக் காட்டுவதாய் மீஷ்கா நினைத்துக் கொண்டதால் அதற்குக் கோபம் வந்து விட்டது!

''வெட்கம்! மானிடம் போய் அதற்கு வெறுப்பூட்டினுல், அது தாக்காமல் என்ன செய்யுமாம்?'' என்ருர் அப்பா எங்களிடம்; ''அதற்குக் கொம்புகள் வளர்ந்து கெட்டியாகட்டும், உங்களுக்குச் சரியானபடி பாடம் கற்பிக்கும்'' என்ருர்.

அன்று இரவு மீஷ்கா நெடு நேரம் கழித்தே வீட்டுக்குத் திரும்பிற்று. அப்பா உடனே அதைக் கொட்டகைக்குள் அடைத்துவிட்டார். சில நாட்களுக்கு அதை அங்கே அடைத்து வைத்து அதற்குத் தண்டனை அளித்தார். தினமும் காலையில் மீஷ்கா கொட்டிலின் சன்னலுக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டு வருத்தமாய்ப் பெருமூச்செறிந்தது. துள்ளிக் குதித்து ஓடும் பிராணி அது. சண்டையுங்கூட போட விரும்பக் கூடியது. இப்போது தண்டிக்கப்பட்டு கொட்டிலில் அடைக்கப் பட்டிருந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அது பொறுமையிழந்து

கோபமாய்க் கொட்டிலினுள் சுற்றிச் சுற்றி நடந்து கொண் டிருந்தது.

''சோன்யா! மீஷ்காவுக்குப் பசியாய் இருக்கும். தின் பதற்கு அதற்கு எதாவது கொண்டு போய்த் தருகிறேன்'' என்றேன் நான்.

''அதற்கு ஒன்றும் பசி இல்லை. சற்று முன்புதான் அதற்கு நான் ஓட்ஸ் கொடுத்தேன்.''

ஆனல் எனக்கு அது பசியால் வாடுவதாய்த் தோன்றி யது.

வைக்கோல் பரணியில் ஏறி அதற்குக் கொஞ்சம் வைக் கோல் எடுத்துப் போடுவதென்று தீர்மானித்தேன்.

ஆகவே மேலே ஏறினேன். ஒரு கை அளவு வைக்கோல் எடுத்துக் கொண்டு பரணியில் ஓட்டை எங்கே இருக்கிறது, அதன் வழியே கீழே கொட்டிலுக்குள் வைக்கோலைப் போடலா மென்று தேட ஆரம்பித்தேன்.

வைக்கோல் பரணியில் ஓட்டையைத் தேடிக் கொண்டு அங்குமிங்கும் சென்ற நான் திடுமென ஒரு பெரிய ஓட்டை வழியே கொட்டிலுக்குள் விழுந்து விட்டேன். வைக்கோலும் கையுமாய் நேரே மீஷ்காவுக்கு எதிரே வந்து தரையில் கிடந்தேன்!

வஞ்சம் தீர்த்துக் கொள்ள மீஷ்காவுக்குச் சரியானசந் தர்ப்பம் கிட்டிற்று! பின்னங் கால்களில் நின்று கொண்டு முன்னங் கால்களால் என் தலையில் மொத்திற்று, எனக்கு மண்டை பிளந்து விடும் போலாகி விட்டது. நல்ல வேளையாய் சோன்யா ஒரு சாட்டைக் கம்புடன் ஓடி வந்து பலமாய் அதை அடித்தாள். அதன் பிறகே அது ஓய்ந்து நின்றது.

இதன் பின் பல நாட்கள் வரை நான் மீஷ்காவிடம் முறைப்பாகவே இருந்து வந்தேன். சில தினங்களுக்குப் பிற் பாடு கொட்டிலிலிருந்து மீஷ்கா விடுதலை செய்யப்பட்டது. ஆனல் அது தான் செய்த குற்றத்துக்காக வருந்தியதாய்த் தெரியவில்லை, முன்னிலும் மோசமாய் நடந்து கொண்டது.

அருகாமையில் ஒரு மலையில் சிறு குடிசை ஒன்று இருந்தது. அதில் ஒரு கிழவர் தன்னந்தனியே வசித்து வந்தார். அவரது குடிசைக்குப் பக்கத்தில் தோட்டத்தில் அவர் தேனீ வளர்த்து வந்தார். தேன் சேகரிப்பதற்காக தேனீக்கள் நெடுந் தொலைவு போகாதிருக்கும் பொருட்டு அருகாமையில் புல் வெளி முழுதும் அவர் காட்டு மலர் செடிகள் வளர்த்திருந் தார்.

மீஷ்கா வெளியே சுற்றித் திரிந்த போது இந்தக் குடிசையைத் தெரிந்து கொண்டுவிட்டது. இப்போது அது இந்தக் கிழவர் வீட்டுக்குப் போய் வருவதென முடிவு செய்தது.

கிழவர் ஒரு நாள் பெஞ்சின் மீது அமர்ந்து அமைதியாய்க் கூடை பின்னிக் கொண்டிருந்தார். அப்போது கண்ணாடி உடையும் சப்தம் கேட்டது. சன்னல் வழியே முதலில் மீஷ்காவின் கொம்புகளும் பிறகு அதன் தலையும் குடிசைக்குள் வரக் கண்டார் கிழவர்.

''இது என்ன தோற்றம்?! ஆண்டவனே, ஆண்டவனே!'' என்று கிழவர் அவசரமாய் முணுமுணுத்தார். மீஷ்கா காதுகளைச் சொடுக்கிக் கொண்டது. ஆனால் அதற்கு அங்கிருந்து மறையும் உத்தேசம் இல்லை.

கிழவர் கதவுக்கு வெளியே எட்டிப் பார்த்தார். மீஷ்காவின் எழில் உருவைக் கண்டு அவர் மயங்கிப் போனார்.

''முரட்டு மானாய் இருக்கிறதே, இதைப் பழக்கிச் சாதுவாக்கினேனாயின் மெய்யாகவே நான் ஒரு புனித ஆத்மா தான்'' என்று அவர் தமது சன்னல் கண்ணாடியை நினைத்தவாறு தம்முள் கூறிக் கொண்டார். ''எனது புனிதத் திருப்படங்களில் இருக்கும் விலங்குகளைப் போல் எழில் மிக்கதாய் இருக்கிறதே இது'' என்று வியந்து கொண்டார்.

ஒரு ரொட்டித் துண்டை எடுத்து வந்து வைத்துக் கொண்டு மீஷ்காவைக் கூப்பிட்டார்:

''தம்பி, தம்பி! இங்கே வா!''

மீஷ்கா சன்னலிலிருந்து தலையை எடுத்துக் கொண்டு

கிழவரிடம் வந்தது. ரொட்டித் துண்டை முகர்ந்து பார்த்து விட்டு மகிழ்ச்சியுடன் அதைத் தின்றது.

பிறகு கிழவர் ஒரு பிடி உப்பை மீஷ்காவுக்காகப் பெஞ்சின்மீது வைத்தார்.

உப்பின் சுவை மீஷ்காவுக்கு நன்முய்த் தெரிந்திருந்தது! உப்பு அதற்கு மிக்கப் பிடித்தமானது, மட்டற்ற மகிழ்ச்சியோடு அதை நக்க ஆரம்பித்தது. அதன் வாயில் ஊறிய எச்சில் பெஞ்சின் மேல் வழிந்து திட்டாய் நின்றது.

உப்பை அது நக்கித் தீர்த்ததும் பெஞ்சு இப்போது தான் சுரண்டித் தேய்க்கப்பட்டது போல் அப்படிச் சுத்தமாகிவிட்டது.

இவ்வாறுதான் இருவரும் பரிச்சயம் பெறலாயினர்.

கிழவருக்குப் பரம திருப்தி. அவர் பெருமைப் பட்டுக் கொண்டார். காட்டு விலங்குகளுங்கூட தமது நற்பண்பினை உணர்ந்து கொண்டு ஆட்டுக் குட்டியைப் போல் சாதுவாய்த் தம்மிடம் நடந்து கொள்கின்றன, தம்மை விட்டகல மனமில்லாதனவாகி விடுகின்றன என்முல், தாம் எவ்வளவு நல்லவராய் அன்பு உள்ளம். கொண்டவராய் இருக்க வேண்டுமென நினைத்துக் கொண்டார்.

மீஷ்கா அந்தக் குடிசையையும் வெளிமுற்றத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு உயரமில்லாக் கிடங்கறையின் கூரைத் தளத்தின் மீது படுத்து உறங்கிற்று. எப்போதுமே அது இப்படித்தான் சிறிதும் வசதியில்லாத இடங்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு படுத்துறங்கும்.

மகிழ்ச்சியடைந்த கிழவர் மீண்டும் கூடை முடைய முற்பட்டார்.

பகற் பொழுதில் மீஷ்கா காட்டுக்குச் சென்று விட்டது. இரவானதும் தனது புதிய நண்பரின் குடிசைக்குத் திரும்பி வந்தது. தொடர்ந்து பத்து நாட்களுக்கு இவ்விதம் நடைபெற்று வந்தது. எப்போதாவது இரண்டொரு மணி நேரத்

துக்கு அது எங்களிடம் வந்து தலைக்காட்டிவிட்டு மறுபடியும் மறைந்துவிடும்.

வீட்டுக்குத் திரும்பாமலே பல நாட்களுக்கு வெளியே சுற்றித் திரிவது மீஷ்காவின் பழக்கமாகிவிட்டது எங்களுக்குத் தெரியுமாதலால் நாங்கள் அது வராதது குறித்துக் கவலைப் படவில்லை.

தேனீ வளர்ப்பாளராகிய கிழவர் இன்னமும் மீஷ்கா விடம் அன்பாகவே இருந்து வந்தார். ஆயினும் தாம் பழக்கிச் சாதுவாக்கியிருந்ததாக அவர் நினைத்திருந்த அந்தக் கலைமான் தமது குடிசைக்குத் திரும்பாமலே காட்டோடு போயிருந் தால் கிழவருக்கு அப்படி ஒன்றும் ஏமாற்றமாய் இருந்திருக் காது.

கிழவரின் இந்த மனமாற்றம் புரிந்து கொள்ளக் கூடியது தான். கிழவர் மேஜை விரிப்பாய் உபயோகித்து வந்த துணி யையும், அவருடைய கோட்டில் ஒரு பகுதியையும் அவரு டைய இடுப்பு வாரையும் மீஷ்கா மென்று வீணாக்கி விட்டது. அவர் வளர்த்திருந்த மலர்ச் செடிகளை மிதித்துத் துவைத்து விட்டது. இவை போதாதென்று வேலியைத் தாண்டிக் குதித்து, தேன்கூடுகள் இருந்த அடைப்புக்குள் அங்குமிங்கும் பாய்ந்தோடி கூடுகளில் ஒன்று பாக்கியில்லாமல் யாவற்றை யும் கீழே தள்ளிவிட்டது. கிழவர் இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் பொறுமையாய் இருக்க முயன்றது மெய்தான். ஆயினும் அவருக்குக் கோபம் மேலும் மேலும் அதிகமாகி வந்தது.

குளிர் காலத்திற்கு வேண்டிய விறகைச் சேகரித்துக் கொண்டு வருவதற்காக ஒரு நாள் வெளியே சென்றிருந்தார் கிழவர். அவருடைய குடிசை நடுக் காட்டில் இருந்ததால் கதவைப் பூட்டாமலேதான் அவர் வெளியே செல்வது வழக் கம். இது மீஷ்காவுக்கு மிகவும் வசதியாய் இருந்தது.

கிழவர் மரங்களுக்குப் பின்னால் மறைந்ததும் குடிசை யைப் பார்வையிடுவதற்காக மீஷ்கா உள்ளே நுழைந்தது.

விவிலிய நிகழ்ச்சிகள் பற்றிய வண்ணச் சித்திரங்கள் சுவர்களை அலங்கரித்திருந்தன.

''தூயதிரு ஜார்ஜையும் வேதாளத்தையும்'' காட்டிய சித்திரத்தை மீஷ்கா உற்று நோக்கிற்று—தனக்கு பிடித்ததாகு மென நினைத்துக் கொண்டது. அதன் முனையை உதடுகளால் பிடித்து இழுத்து வேதாளத்தையும் தூயதிரு ஜார்ஜின் கால்களையும் மென்று தின்றது. பிறகு அதன் பார்வை ''பெரும் பிரளயம்'' என்னும் சித்திரத்துக்குத் திரும்பிற்று. அடங்காத ஆவலுடன் அது அந்தச் சித்திரத்திலிருந்து புனிதர்களையும் பாவிகளையும் மென்று தீர்த்தது. ''ஆதாமும் ஏவாளும் ஏதேன் பூங்காவனத்திலிருந்து துரத்தப்பட்டதைக்'' காட்டிய சித்திரத்தைச் சுவரிலிருந்து கிழித்துக் கீழே தள்ளியதோடு திருப்தியடைந்துவிட்டு அடுத்த படத்திடம் சென்றது. அந்நேரத்தில் தொலைவிலே வந்து கொண்டிருந்த கிழவர் பாட்டு பாடியது அதன் காதுக்கு எட்டிற்று.

அகப்பட்டதை மென்று தள்ளும் தனது பழக்கத்தைத் தனது வீட்டில் எப்படியோ அதே போல இங்கும் யாரும் மகிழ்ந்து போற்றப் போவதில்லை என்பது மீஷ்காவுக்குத் தெரிந்ததுதான். உடனே குடிசையிலிருந்து எப்படி வெளியே தப்பித்து ஓடுவதென்று அது சிந்திக்க முற்பட்டது. ஆனால் குடிசை மிகச் சிறியது, கூரையும் உயரமானதல்ல. மீஷ்கா வளர்ந்து ஏறத்தாழ குதிரையின் உயரமுடையதாகி விட்டது, அதன் கொம்புகளும் உயர்ந்து பெரிதாய் இருந்தன, குடிசைக் குள் திரும்புவதற்குக்கூட அதற்குப் போதிய இடமில்லை. பின்பக்கமாய் நகர்ந்து கதவுவழியே வெளியே ஓடுவதுதான் அதற்கிருந்த ஒரே வழி. ஆனால் அதற்குள் கிழவர் கதவின் முன்னால் வந்து விட்டார். தனது சுவர்ச் சித்திரங்கள் கிழிந்து கிடந்ததைக் கண்ணுற்ற அவர் யாவற்றையும் உடனே புரிந்து கொண்டு விட்டார்.

''ஏய், சைத்தானே! படுபாவி!'' என்று கிழவர் ஆத்திர மாய்க் கூச்சலிட்டார். கனத்தத் தடியை எடுத்து சமய

மரபில்லாத அந்த மூர்க்க மானின் முதுகில் மொத்தினர். மீஷ்கா கடுப்புடன் குடிசையை விட்டு ஓடிச் சென்றது.

சில நாட்களுக்குப் பிற்பாடு அது அங்குமிங்கும் சுற்றிய வாறு திரும்பவும் குடிசையின் அருகே வந்தது. கிழவர் தோட்டத்துக்குள் தேன்கூடுகளிடையே வேலே செய்து கொண் டிருந்தார், மான் வந்ததை அவர் கவனிக்கவில்லை. ஒரு தேன் கூட்டின் மீது கவிழ்ந்து கொண்டு கிழவர் வேலை செய்வதைப் பார்த்ததும் மீஷ்கா ஓசையின்றி அவர் முதுகருகே சென்றது, திரும்பி நின்று பின்னங் கால்களை உயர்த்திக் கிழவரை உதைத்தது. இனி கேட்கவா வேண்டும்? புனிதராய் இருப்ப வரும் பொறுமை இழப்பதற்கு இது போதாதா?

படுபாவியென்று ஏசிச் சாபமிட்டு மீஷ்காவை துரத்தி யடித்தார் கிழவர்.

கோடை முடிவுற்றது. மரங்களிலிருந்து இலைகள் உதிர்ந் தன, விடியற்காலையில் தரையை உறைபனி மூடியிருந்தது, குளிர்காலம் நெருங்கி வந்துவிட்டது.

குளிர்காலம் ஆரம்பமானதும் மலைக் கிராமத்தில் வாழ்க் கை அஸ்தமித்து விட்டதாய்த் தோன்றியது. பெரும் பகுதி நேரம் எல்லோரும் வீட்டுக்குள் அடைந்திருந்தனர். சில சமயம் பல நாட்களுக்கு வெளியே ஆட்களைப் பார்க்க முடி யாமற் போய் விடும்.

பிறகு வெண் பனி பெய்யத் தொடங்கிற்று.

மீஷ்கா மிகுந்த உற்சாகத்துடன் இதை வரவேற்றது. வெண்பனியில் அதிவிநோத நாட்டியம் ஆடிற்று, பிறகு துள்ளிக் குதித்தோடி தணிவான மரக்கிளைகளைக் கவ்விப் பிடித்து உலுக்கி திரள் திரளாய் வெண்பனியைத் தன் முதுகின் மீது விழச் செய்தது. தரையில் விழுந்த வெண்பனியை மிதித்துத் துவைத்தது. முடிவில் விருவிருப்புற்றுப் படபடத்துப் போய் வெண்பனியை வாய் நிறையக் கவ்வியெடுத்துத் தின்ன முற்பட்டது.

குளிர் காலத்துக்காக உடல் முழுதும் எவ்வளவு அடர்த்தியாக முடி வளர்ந்து வந்ததென்பதை இப்போதுதான் நாங்கள் கவனித்தோம். முக்கியமாய் அதன் கழுத்தில் அழகான கம்பளிக் காலர் அணிந்தது போல் முடிகள் நீளமாகவும் அடர்ந்ததாகவும் வளர்ந்து விட்டன. விலாப்புறத்திலும் அடிவயிற்றிலும் நீண்ட முடிகள் வரம்பிட்டிருந்தன. ஆனால் கால்கள் கோடையில் எப்படி இருந்தனவோ அதேபோல் முடிகளின்றி மெல்லியனவாய் கடைந்து வடிக்கப் பட்டனவாய் இருந்தன.

பனிமானுக்கும் கலைமானுக்கும் உள்ள வேறுபாடு இதில்தான் காணக் கிடக்கிறது. பனிமானுடைய கால்கள் சற்றுத் தடித்துக் குட்டையாய் இருக்கும், குளம்புகளை ஒட்டினாற் போல் முடிகள் வளையமிட்டுக் குளிர்காலக் கம்பளிப் பூட்சுகளைப் போல் பம்பையாய் இருக்கும். ஆனால் கலைமானோ எல்லாப் பருவங்களிலும் உயர்குதிகளைக் கொண்ட மிதியடிகளில் நடப்பதாய்த் தோன்றும்.



இன்னலின்றி குளிர் காலம் முழுவதையும் மீஷ்கா சமாளித்து விட்டது. அடிக்கடி வெளிமுற்றத்தை விட்டு வெளியேறி காட்டிலும் மலைகளிலும் சுற்றித் திரிந்தது, அல்லது காலியாய் இருந்த கோடைக் குடிலுக்குச் செல்லும் சாலையிலே சென்றது. ஆனால் தினமும் அது அந்திப் பொழுதில் வீட்டுக்குத் திரும்பி வந்து விடும். குன்றின் பாறை விளிம்புக்கு அடியில் அமைந்த பட்டறையின் கூரைத் தளத்தில் அது படுத்துறங்கிற்று.

சில நேரங்களில் மீஷ்கா பக்கத்துக் கிராமத்துக்குப் புறப்பட்டுச் செல்லும். எப்பொழுதும் கூட்டமாய் நாய்கள் குரைத்துக் கொண்டு விரட்டி வர ஓடோடித் திரும்பி வந்து சேரும்.



வீட்டை இரண்டொரு தரம் சுற்றி ஓடிவிட்டு வாயில் முகப்புக்கு முன்னால் வந்து நின்று கொம்புகளைத் தாழ்த்திக் கொண்டு அது போருக்கு ஆயத்தமாகி விடும். நாய்கள் கூச்சலிட்டுக் கொண்டு பின்வாங்க வேண்டியதாகிவிடும். துணிவுடன் பிடிவாதமாய் எதிர்த்து நிற்கும் இரண்டொரு நாய்களை மீஷ்கா காலால் உதைத்தோ கொம்புகளால் முட்டித் தள்ளியோ விரட்டியடிக்கும்.

வசந்த பருவம் நெருங்கி வெண்பனி உருக ஆரம்பித்ததும் மீஷ்கா சோகக் கோலம் பூண்டதாகிப் பெரும்பகுதி நேரத்தைக் காட்டில் கழித்து வந்தது.

பிப்ரவரி மாதத்தில் அது முடிகளை இழக்க ஆரம்பித்தது. அழகான அதன் பழுப்பு முடிகள் சடை பிடித்துப் போய்க் கொத்துக் கொத்தாய் உதிர்ந்து விழுந்தன. கொம்புகளையும் அது இழந்து விட்டது, அதன் முகம் வாட்டமுற்று ஏக்கமும் தவிப்பும் மிக்கதாகிவிட்டது.

சிற்றோடைகள் சலசலத்து ஓடத் தொடங்கின. வெயில் பிரகாசித்த இடங்களில் வெண்பனிமலர்களும் நீல மலர்களும் பளிச்சிட்டன. பிறகு வெளிகளும் மரங்களும் பச்சை மேனி பெறலாயின. நாங்கள் எல்லோரும் வீட்டை விட்டுக் கிளம்பி வெளியே சுற்றினோம். மலைகளிடையே எங்களுடைய பாட்டுகளும் கூச்சல்களும் ஒலித்தன. குதூகல நடைபயணங்களுக்குரிய காலம் மீண்டும் ஆரம்பமாயிற்று.

மீஷ்கா அமைதியிழந்து கலங்கிற்று, எடை குறைந்து போய் சோகமே உருவெடுத்தாற் போலாகி விட்டது. வசந்தம் முடிவுற்று கோடை ஆரம்பமானதும் அதன் முன் தலையில் முட்டுகள் திரும்பவும் புடைத்துப் பெருக்க முற்பட்டன. புதிதாக முளைத்த கொம்புகளிலிருந்து இரத்தத்தை உறிஞ்சுவதற்காக வந்து மொய்த்த ஈக்களின் தொந்தரவு தாங்காமல் மீஷ்கா துன்புற்றது. கொட்டிலினுள் இருண்ட மூலையில் அது வேதனைப் பட்டுக் கொண்டு நாட்கணக்காய்ப் படுத்துக் கிடந்தது. மாலையில் மட்டும்தான் எழுந்து பக்கத்துத் தோப்பில்

இலைகளையும் தளிர்களையும் கொறித்து விட்டு வருவதற்காக வெளியே சென்றது.

மீஷ்காவின் இந்த நிலையைப் பார்க்கையில் அம்மாவுக்குப் பரிதாபமாய் இருக்கும். ஈக்கள் மொய்க்காமல் தடுப்பதற்காக மீஷ்காவின் குருத்துக் கொம்புகளில் அம்மா மருந்து தடவிப் பார்த்தார். ஆனால் மருந்தினால் கொம்புகளில் எரிச்சல்தான் அதிகமாயிற்று.

மீஷ்காவை உற்சாகப்படுத்துவதற்காக அம்மா அடிக்கடி அதற்குச் சுவையான தின்பண்டங்கள் பலவும் கொடுத்தார். இதற்காக மீஷ்கா அவருக்கு நன்றி தெரிவித்தது, வேறு யாரையும் விட அம்மாவையே அது அதிகமாய் நேசித்தது. அம்மாவின் சொல்லுக்குக் கட்டுப் பட்டு நடந்தது, நாயைப் போல் அம்மாவின் பின்னால் சென்று கொண்டிருந்தது.

வாயில் முகப்பில் அம்மா தைத்துக் கொண்டோ, பின்னிக் கொண்டோ உட்கார்ந்திருக்கும்போது மீஷ்காவும் ஆசையாய் அவர் காலடியில் படுத்திருக்கும். அடிக்கடி அது தனது துயரம் தோய்ந்த முகத்தை அம்மாவின் தோள் மீது வைத்துக் கொண்டு நிற்கும், அம்மா மெதுவாய்த் தடவிக் கொடுக்கையில், அது மனங்குளிர்ந்து கண்களை மூடிக் கொள்ளும். மீஷ்கா எதாவது குறும்பு செய்து மாட்டிக் கொள்ளும் போது யாவருக்கும் முதலாய் எப்போதும் அம்மாதான் அதற்காகப் பரிந்து பேச முன்வந்துவிடுவார்.

கோடையில் வேட்டையாடுவதற்கு மலைகளுக்கு வருவோர் யாராவது மீஷ்காவைக் காட்டிலே திரியும் கலைமானைய் நினைத்து அதைச் சுட்டு விடுவாரென அம்மாவுக்குப் பயமாயிருந்தது. எனவே அவர் அதன் கழுத்தில் கட்டுவதற்காகத் தோல் வார் ஒன்று தயாரித்தார், அதில் சிவப்பிலும் நீலத்திலுமான இரண்டு பெரிய குஞ்சங்களைத் தொங்க விட்டார்.

பளபளப்பான அந்தக் குஞ்சங்களைத் தொலைவிலிருந்தே பார்க்க முடிந்ததென்றாலும், மீஷ்காவை அவை விபத்திலிருந்து காப்பாற்ற முடியவில்லை.

இந்த விபத்தின் விபரங்கள் வருமாறு.

தலை நகரிலிருந்து வந்ததாய்ச் சொல்லப்பட்ட இயற்கை விஞ்ஞான ஆய்வாளர் ஒருவர் எங்களிடமிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் கூடாரம் அமைத்துக் கொண்டார்.

பகற் பொழுதில் அவர் மலைகளிடையே சுற்றி புகைப் படங்கள் பிடித்தார், கூழாங்கற்களும் புற் பூண்டுகளும் சேகரித்தார்.

அந்தியில் கூடாரத்திற்குத் திரும்பி வந்து இரவு உணவு தயாரித்தார், தாம் சேகரித்தவற்றை ஆராய்ந்து பார்த்து விட்டு, சிறு டப்பாக்களில் அவற்றைப் பத்திரமாய் வைத்தார்.

அவர் இல்லாத நேரத்தில் மீஷ்கா இந்த கூடாரத்தின் பக்கம் போயிருந்தது. முதலில் அது கூடாரத்தைக் கீழே தள்ளி விட முயன்றது. ஆனால் துண்டுக் காகிதங்களும் துண்டு சிகரெட்டுகளும் கிடப்பதைக் கண்டதும் அவற்றை அது தின்று விட்டு, கூடாரம் இருப்பதும் நல்லதுதான், திரும்பவும் இங்கு வந்து செல்லலாமென முடிவு செய்தது.

மறு நாள் அந்திப் பொழுதில் தனது இருண்ட கொட்டிலை விட்டு வெளியே வந்த மீஷ்கா நேரே கூடாரத்திற்குப் புறப்பட்டது. கூடாரத்தின் வாயில் திறந்திருந்தது. மீஷ்கா ஆவலோடு உள்ளே எட்டிப் பார்த்தது.

ஆனால் அதன் கெட்ட காலம், இயற்கை விஞ்ஞான ஆய்வாளர் உள்ளே இருந்தார்.

அட தெய்வமே! துணிச்சல் வாய்ந்த அந்த ஆய்வாளருக்கு ஏற்பட்ட கதிகலக்கத்தில் அவர் மீஷ்காவின் கழுத்துப் பட்டியில் சிவப்பிலும் நீலத்திலும் குஞ்சங்கள் தொங்கியதைக் கவனிக்கத் தவறிவிட்டார்; காட்டிலே வாழும் கலைமான் எதுவும் மனிதர்களுக்கு அருகே இப்படி வந்து நிற்குமா என்பது பற்றியும் அவர் சிந்திக்கவில்லை. அவசரமாய்த் துப்பாக்கியை எடுத்து மீஷ்காவைப் பார்த்துச் சுட்டுவிட்டார்.

மீஷ்கா சுருண்டு விழுந்தது.

அவ்வழியே போய்க் கொண்டிருந்த வனக் காவலர் ஒருவர் துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டதும் உதவுவதற்காக ஓடி வந்தார்.

மீஷ்கா தரையிலே கிடந்து துடிப்பதையும், அந்த விஞ் ஞான ஆய்வாளர் மானின் கழுத்துப் பட்டியிலிருந்த குஞ்சங் களைப் பரிசீலித்து விட்டுத் திகைப்புற்றுக் குழம்பிய நிலையில் நிற்பதையும் கண்டார் அவர். காவலாளி நேரே எங்கள் வீட்டுக்கு ஓடினார்.

''சீக்கிரம்! விபத்து நேர்ந்து விட்டது. மீஷ்காவைக் கொன்று விட்டார்கள்!'' என்று கூவிக் கொண்டு எங்கள் வெளிமுற்றத்துக்குள் ஓடி வந்தார்.

அப்பாவுக்கு வந்த ஆத்திரத்தில் கினெதோயின் கடி வாள வாரைக் கவணையிலிருந்து இழுத்து அறுத்துக் கொண்டு துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு கூடாரத்துக்குப் புறப்பட் டார். ஆத்திரத்தில் ஆலோசிக்காமல் அவர் எதையாவது செய்து விடுவாரோ என்று பயந்து அம்மாவும் புறப்பட்டு அவர் பின்னால் ஓடினார்.

அந்த விஞ்ஞான ஆய்வாளரைப் பற்றிய தமது அபிப் பிராயத்தை அப்பா அவரிடம் சொல்லிக் கொண்டிருக்கையில் அம்மா அங்கே போய்ச் சேர்ந்தார். ஆய்வாளர் பதைத்துப் போய் முகம் செக்கச் சிவந்து விட தம்மை மன்னிக்க வேண்டு மென்று சொல்லி எதோ முனகிக் கொண்டு நின்றார்.

''பட்டணத்து ஆட்கள் மூளையை அங்கேயே மூட்டை கட்டி வைத்துவிட்டா இங்கே வருகிறார்கள்? பழக்கப்படாத காட்டு மான் கூடாரத்துக்குள் வந்து எட்டிப் பார்க்காதென் பது தெரியாதா என்ன? இயற்கை விஞ்ஞான ஆய்வாளராமே ஆய்வாளர்!''

நல்ல வேளையாய், குறி பார்த்துச் சுடுவதில் அந்த ஆய்வாளர் அவ்வளவு அபாரத் திறமைசாலியாய் இருந்தார். மானின் நெற்றியைப் பார்த்து அவர் சுட்ட குண்டு அதன் தலையையும் விட்டுப் பிசகி கொம்பிலே போய் பாய்ந்தது.

கொம்புகளின் கிளைகளில் ஒன்று முறிந்து இப்பொழுது தோலுடன் பிய்ந்து தொங்கிக் கொண்டிருந்தது.

அப்பா சட்டைக் கையை மடக்கி விட்டுக் கொண்டு அறுவை சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்.

ஆய்வாளர் தமது முதல் உதவிப் பையைக் கொண்டு வந்தார், பிறகு ஓடிச் சென்று ஒரு வாளி தண்ணீர் கொண்டு வந்தார், தமது குற்றத்துக்கு மன்னிப்பு தேடிக் கொள்ள வேண்டுமென்று எல்லா விதத்திலும் அவர் உதவி புரிந்தார்.

முறிந்த கிளையை மட்டுமின்றி கொம்பில் ஒரு பகுதியையும் அவர்கள் துண்டித்து எடுத்தார்கள். மீஷ்கா உயிர் போகிற மாதிரி கத்திற்று. நான்கு மீட்டருக்கு அப்பாலிருந்த மரத்தில் படும்படி இரத்தம் அவ்வளவு பலமாய் பீறிட்டது.

அறுவை வேலை முடிவுற்றது, கிருமி நாசினி மருந்தை அப்பா அந்த காயத்தில் ஊற்றினார். மீஷ்கா களைத்துப் போய்த் தலையைத் தரையிலே சாய்த்து, நினைவிழந்த நிலையில் கிடந்தது.

அதன் மேல் கித்தானைப் போர்த்தினார்கள், இரவு பூராவும் முனகிக் கொண்டு அங்கேயே படுத்திருந்தது.

மறுநாள் காலையில் தடுமாறிக் கொண்டு எழுந்து நின்றது. அப்பா அதைத் தாங்கிப் பிடித்துச் செல்ல தள்ளாடி நடந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தது.

அந்த ஆண்டில் அதன் கொம்புகள் விநோதமாய் இருந்தன. ஒரு கொம்புதான் முழுதாய் இருந்தது, மற்றொன்றில் பாதி இல்லை.

இனி எந்நாளும் அதன் கொம்புகளில் ஒன்று இப்படித்தான் மூளியாய் இருக்குமென்று நாங்கள் நினைத்தோம். ஆனால் நாங்கள் நினைத்தது சரியல்ல.

அடுத்த வசந்தத்தில் மீஷ்காவின் இந்த ஒழுங்கில்லாக் கொம்புகள் விழுந்து விட்டன. ஜுலை மாதத்துக்குள் பல கிளைகளைக் கொண்ட நேர்த்தியான புதிய ஜதை ஒன்று முளைத்தது.

இப்பொழுது மீஷ்காவுக்கு ஐந்து வயதாகி விட்டது. அந்த கோடையில் அதன் அட்டகாசம் மிதமிஞ்சி விட்டது. கோடைக் குடில்களைச் சுற்றியமைந்த கனித்தோட்டங்களில் பழங்கள் பழுத்ததும் மீஷ்கா தினமும் தவறாமல் இந்தத் தோட்டங்களுக்குச் சென்று வர ஆரம்பித்தது.

நகரத்திற்கு செல்லும் சாலையில் நெடுந்தொலைவுக்குச் சென்று தனக்குப் பிடித்த இடமாய்ப் பார்த்து வேலியின் மீது தாவி தோட்டத்துள் குதித்து பற்களால் மரக்கிளையைப் பிடித்துக் குலுக்கும். பொல பொலவென ஆப்பிள்கள் உதிர்ந்து விழும். மீஷ்கா இரண்டு மூன்று பழங்களைத் தின்று விட்டு அடுத்த மரத்துக்குச் செல்லும். அது தின்றதைக் காட்டிலும் வீணாக்கியதுதான் அதிகம்.

தோட்டங்களின் சொந்தக்காரர்கள் இன்னும் சரியாய்ப் பழுக்காத ஆப்பிள்கள் தமது மரங்களுக்கு அடியில் மிதி பட்டுக் கிடப்பதைக் காலையில் பார்ப்பார்கள், அவர்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரும்.

இந்த மான் எங்களுடையது என்பது விரைவில் அவர் களுக்குத் தெரிய வந்ததும் நேரே எங்கள் வீட்டுக்கு வந்து முறையிட ஆரம்பித்தார்கள்.

''நான் என்ன செய்ய முடியும்? நீங்களேதான் மானை உள்ளே விடாமல் விரட்டியடிக்க வேண்டும்!'' என்று சொல் வதைத் தவிர அப்பாவுக்கு வேறு வழி ஒன்றும் இருக்காது.

மீஷ்காவை அவர் அடைத்து வைத்துத் தண்டித்துப் பார்த்தார். ஆனால் மீஷ்கா சுதந்திரமாய் அலைய விரும்பும் விலங்கு, அடைத்து வைத்ததும் அதற்குக் கோபம்தான் வந்தது.

இந்தத் தோட்டங்களை அப்பா ''போர்முனை'' என்று வேடிக்கையாய்க் குறிப்பிடுவது வழக்கம். இந்தப் ''போர் முனை''யிலிருந்து எந்நேரமும் நாங்கள் புதிய சம்பவங்களை எதிர் பார்த்தவாறு இருந்தோம்.

மீஷ்காவின் அட்டகாசங்களைப் பற்றிய செய்திகள் ஓயாமல் வந்து கொண்டுதான் இருந்தன: புதிதாய்க் குடி

வந்திருந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளிடம் நேற்று அது சண்டை போட்டது; யார் வீட்டிலோ கொடியில் காய்ந்து கொண்டிருந்த ஆடையை இன்று அது கீழே இழுத்து மென்று கந்தலாக்கிவிட்டது; யாருடைய நிலவறையின் தளத்தின் மீதோ நேற்று முன் தினம் அது ஆடிக் குதித்தபோது உள்ளே விழுந்தோ அங்கிருந்த பால் ஜாடிகளைக் கவிழ்த்துவிட்டது.

''என்ன செய்வது? சரியான பிசாசாய் இருக்கிறது!'' என்று அம்மாவும் அப்பாவும் குறைப்பட்டுக் கொண்டார்கள்.

முடிவில் யாரிடமோ செம்மையாய் உதைபட்டப் பிறகு தான் மீஷ்கா அடங்கிற்று, வீட்டை விட்டு அதிக தொலைவு செல்லாமல் இருந்தது.

நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். ஆனால் இந்த அமைதி நிலைமை அதிக நாட்கள் நீடிக்கவில்லை.

ஒரு நாள் குதிரை நுகத்தடி வளைவை கொம்புகளில் மாட்டிக் கொண்டு வந்து நின்றது மீஷ்கா. எங்கோ அது வண்டிக்கு அருகே இதைக் கண்ணுற்று அதை முட்டித் தள்ளி யிருக்க வேண்டும். உதறித் தள்ள முடியாமல் கொம்பில் அது சிக்கிக் கொண்டதும் மீஷ்கா பயந்து போய் வீட்டுக்கு ஓடிவந்துவிட்டது.

இந்த விசித்திரத் தலை அலங்காரத்துடன் அது ஓடி வந்ததைக் கண்ட நாங்கள் பலக்கச் சிரித்து விட்டோம். நுகத்தடியை அதன் கொம்புகளிலிருந்து கழற்றியெடுத் தோம். அப்பா இது பற்றிய ஓர் அறிவிப்பை வெளியே தொங்க விட்டார். ஆனால் நுகத்தடியின் சொந்தக்காரர் வந்து சேராததால், அது எங்கள் வீட்டுச் சாமான்களில் ஒன்றாகியது, ''மீஷ்காவின் நுகத்தடி'' என்றே எப்போதும் நாங்கள் அதைக் குறிப்பிட்டு வந்தோம்.

இதன் பின் சில வாரங்கள் கழித்து அடுத்த சம்பவம் நடந்தேறியது. தேனீ வளர்த்த கிழவராகிய தனது பழைய நண்பரின் குடிசைக்குப் போயிருந்தது மீஷ்கா. அவருடைய

ஆட்டுத் தோல் கோட்டைக் கொம்புகளில் மாட்டிக் கொண்டு திரும்பி வந்தது.

நாங்கள் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தோம். தலைக்கு மேல் பந்தலிட்டிருந்த பெரிய கோட்டுடன் மீஷ்கா சாலையிலே அமத்தலாய் வருவதைக் கண்டோம். அதன் பின்னால் கோபக் கூச்சலிட்டுக் கொண்டும் சபித்துக் கொண்டும் வந்தார் அந்தக் கிழவர்.

வெளி முற்றத்தில் நாங்கள் மீஷ்காவை தடுத்து நிறுத்தி அதனிடமிருந்து கோட்டை எடுத்துக் கிழவரிடம் திருப்பித் தந்தோம். அடங்கா வெறுப்புடன் கிழவர் மீஷ்காவை முறைத்துப் பார்த்தார், செத்து ஒழிந்து போயேன் என்று அதனிடம் சொன்னார். ஆனால் மீஷ்காவுக்கு அம்மாதிரியான எண்ணம் எதுவும் இல்லை. மீஷ்காவுடன் சேர்ந்து வளர்ந்தவர்கள் நாங்கள். ஆகவே அதனிடம் நாங்கள் பயப்படவில்லை. வசந்தத்தில் அது கொம்புகளை இழந்து ஏலாததாகியதும் நாங்கள் பரிதாபப் படுவோம், செல்லம் கொடுப்போம், அதன் காவலர்களாய் இருப்போம்.

அதனால்தான் மீஷ்கா தனக்குப் புதிய கொம்புகள் வளர்ந்ததும் தனது பலத்தை எங்களிடம் காட்ட முயன்ற போது நாங்கள் பயந்து ஓடாமல் உறுதியான குரலில்:

''முட்டாளே, போதும் நிறுத்து!'' என்று சொல்லி அதை அடக்குவோம்.

ஆனால் பழக்கமில்லாதவர்கள் அதைக் கண்டு அஞ்சினர், மிரண்டு போய் ஓடினர். மீஷ்கா அவர்களைத் துரத்திப் பிடித்துச் சரியானபடி கொடுக்கும்.

ஒரு நாள் கண்ணுக்கினிய உடைகள் உடுத்திய நகரத்து நங்கையரும் இளைஞர்களும் நடைப் பயணத்தை மேற்கொண்டு கூட்டமாய் மலைகளுக்கு வந்திருந்தார்கள். காட்டிலே அலைந்து திரிந்தார்கள். இவர்களைச் சேர்ந்த ஒரு நங்கையும் ஓர் இளைஞனும் ஒரு பெரிய பைன் மரத்துக்கடியில் தனியே அமர்ந்து குதூகலமாய் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அந்நங்கை திரும்பிப் பின்பக்கம் பார்த்தபோது தம்மை நோக்கி மீஷ்கா வருவதைக் கண்டாள்.

''ஐயோ! தொலைந்தோம்! நம்மைக் கொல்லப் போகிறது! நெருங்கிவிட்டது! என்ன செய்யலாம்? ஐயோ!'' என்று கூச்சலிட்டாள்.

மிரண்டு போய்க் கூக்குரலிட்டு அவள் ஓடிச் சென்று அருகில் ஒரு மரக் கிளையைத் தாவிப் பிடித்து பெரிய பேரிக் காயைப் போல் அதில் தொங்கினாள்.

அந்த இளைஞன் துணிந்து நின்று இளம் நங்கையைக் காப்பாற்றுவதென்று தீர்மானித்தான். தலையிலிருந்த தொப்பியை எடுத்து வீசி ஆட்டினான். மீஷ்கா பயந்து போய் திரும்பிச் சென்று விடுமென நினைத்தான் அவன்.

மீஷ்கா தலையை உயர்த்திக் கொண்டு நாக்கை நீட்டிக் காட்டி: '<u>ஊ-ஊ-ஊ</u>' என்று சீறிற்று.

அந்த இளம் வீரன் பைன் காய் ஒன்றை எடுத்து மானின் மீது எறிந்தான். ஆனால் மீஷ்கா அவனை நோக்கி மேலும் ஓர் அடி எடுத்து வைத்து நெருங்கியதும் அவன் பீதியுற்றுப் புற முதுகு காட்டி மலையை நோக்கி ஓட்டமாய் ஓடினான். இப்போது மீஷ்காவின் கவனம் அந்த இளம் நங்கையிடம் திரும்பிற்று. அதிர்ஷ்டமில்லாத அந்நங்கை தனது இளைஞன் தொலைவிலே அதிவேகமாய் மறைந்து சென்றதைக் கண்டு நடுங்கிப் போய் மரக் கிளையில் தனது பிடியைத் தளர விட்டாள். நேரே மீஷ்காவின் காலடியில் வந்து விழுந்தாள்.

மீஷ்கா அவளைச் சுற்றி வந்து தனது நூதன நாட்டியங்களில் ஒன்றை ஆடிற்று. இதன் முடிவில் அவளை மொத்தப் போன தருணத்தில் சோன்யா ஓடோடி வந்து அதை விரட்டியடித்து அந்நங்கையைக் காப்பாற்றினாள்.

கோடை பூராவும் சுவையற்ற நாள் ஒன்றுகூட இருக்கவில்லை. மீஷ்கா தனது சேஷ்டைகளுக்கு இடையே அவ்வப் போது நாய்களுடன் சண்டையிடும், மலைகளில் பாய்ந்தோடும், ஆற்றிலே இறங்கிக் குளிக்கும். ஆற்றின் நடுவில் நின்று

கொண்டு முன்னங்கால்களால் ஓங்கி அடித்து நீரைக் குழப்பி விடுவதுதான் மீஷ்காவின் குளிப்பு முறை.

எங்களுக்கு மிகவும் பிடித்த விளையாட்டுகளில் ஒன்று என்னவெனில், வாயில்முகப்பில் ஒரு வாளித் தண்ணீரை வைத்துக் கொண்டு ஒளிந்திருந்து, மீஷ்கா அப்பக்கம் செல்லும் போது பாய்ந்தோடி வந்து அதன் மேல் ஊற்றுவது தான்.

அப்போது அது ஆடும் நாட்டியத்தைப் பார்க்க வேண்டுமே!

அதற்கு ஆறுவது வயது நிரம்பியபின் ஒரு நாள் காலையில் வீட்டை விட்டு வெளியே சென்றது. இரண்டு மாதங்கள் வரை திரும்பி வரவில்லை. அம்மா நம்பிக்கை இழந்து, யாரோ அதைச் சுட்டுக் கொன்றிருக்க வேண்டுமென முடிவு செய்து கொண்டு வருந்தினர்.

அம்மா வருந்தியிருக்க வேண்டியதில்லை. ஒரு நாள் அப்பா காட்டில் தமது வேலைகளை முடித்துக் கொண்டு திரும்புகையில் வட்டமாய் பசுக்கள் நெரிசலாய் நிற்பதைக் கண்டார். மந்திரத்தால் கட்டுண்டது போல் நின்றுகொண்டிருந்த அவை இடையிடையே வியந்து கனைத்துக் கொண்டன. வட்டத்தின் மையத்தில் மீஷ்கா நாட்டியமாடிக் கொண்டு நின்றது. இத்தனைப் பசுக்களை ஒரே நேரத்தில் தன்னால் வயப்படுத்த முடிந்தது குறித்து மகிழ்ச்சி கொண்டு அது சுற்றிச் சுழன்றது, கொம்புகளைத் தணித்து மண்டியிட்டது, முன்னங்கால்களை உயர்த்தி ஆடிக் குதித்து நாற்புறமும் திரும்பிக் குனிந்து வணக்கம் தெரிவித்தது.


''போக்கிரிக் கழுதை!'' என்று சிரித்துக் கொண்டார் அப்பா. மீஷ்கா நலமுடன் மட்டுமின்றி உற்சாகமாகவும் இருப்பதைக் கண்டு அவர் களிப்புற்றார்.

அப்பாவின் குரலைக் கேட்டதும் மீஷ்கா திடுக்குற்றது. பசுக்களைத் தாவிக் குதித்து நேரே வீட்டுக்கு ஓடிற்று. அடுத்து சில நாட்களுக்கு மீஷ்கா என்றுமில்லாதபடி அவ்வளவு சாது

வாய் இருந்தது, எல்லோரிடத்தும் இனிமையாய் நடந்து கொண்டது. அம்மாவுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. எங்கள் இடத்துக்கு அருகே மரால் மான் மந்தை ஒன்று தென்பட்டதாய்க் கூறினர் அப்பா. இனி என்றென்றுக்கு மாய் மீஷ்கா நம்மை விட்டுச் சென்றுவிடக் கூடுமென எங்களை அவர் எச்சரித்தார்.

அம்மா அதை நம்பவில்லை. மீஷ்கா மான் மந்தையிடம் சென்று சுற்றித் திரிந்து விட்டுத் தவருமல் திரும்பி வந்து விடுமெனக் கூறினர் அவர். மீஷ்கா மந்தையிடம் சென்றது. பிறகு மந்தையோடு சேர்ந்து மலைக் கணவாயைத் தாண்டி அப்பால் போயிற்று, திரும்பி வரவேயில்லை. கலைமான் தனக் குரிய துணையை அடையும் பொருட்டு அனைத்து உலகையும் எதிர்த்துச் சமர் புரியத் தயாராய் இருக்கும் ஒரு வயதை இப்போது மீஷ்கா வந்தடைந்திருந்தது. வலிவும் வனப்பும் வாய்ந்த கலைமாளுகிய எங்களுடைய மீஷ்கா அதன் போட் டியாளர்களைத் தோற்கடித்து நிச்சயமாய் வெற்றி வாகை சூடுமெனக் கூறி நாங்கள் எங்கள் மனத்தைத் தேற்றிக் கொண்டோம். மான் மந்தையின் அதிபதியாய்த் திகழும் எங்களுடைய மீஷ்கா!

போய் வா, மீஷ்கா! நற்பேறு பெற்று நலமோடு வாழ்க நீ!





ஈஷ்காவும் மீல்க்காவும்

என் தங்கையும் நானும் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்தோம். வீட்டில் யாருமில்லை, வெளியே தோட்டத்தில் எல்லோரும் வேலை செய்து கொண்டிருந்தனர். பள்ளிக்கூடத்தில் எங்களுக்குக் கிடைத்த சிறப்புச் சான்றிதழ்களை எடுத்துக் கொண்டு நாங்கள் தோட்டத்துக்கு ஓடினோம்.

''பலே, பலே!'' என்று அம்மா மகிழ்ந்து கொண்டார். ''வாழ்த்துக்கள்! முதற் பரிசுகள் பெற்று வந்திருக்கிறீர்களே! இந்த வெற்றிக்காக உங்களுக்கு அன்பளிப்புகள் தர வேண்டும்.'' அப்பாவின் பக்கம் திரும்பி: ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்'' என்று கேட்டார்.

சோன்யா என் விலாவில் குத்தியவாறு என் காதுக்குள் சொன்னாள்:

''சொல்லு, நீ சொல்லு...''

நான் பரபரப்புற்று இருமினேன்.

''அன்பளிப்புகள் வேண்டாம் எங்களுக்கு'' என்று படபடத்துக்கொண்டு சொன்னேன்.

''ஏன் அப்படி?''

''அன்பளிப்பு வேண்டாம் என்று நாங்கள் சொல்ல வில்லை. தலைக்கு ஒரு ரூபிள் பணமாய்க் கொடுங்கள். இனி எப்போதும் நாங்கள் சிறப்புச் சான்றிதழ்கள் பெற்று வருவோம். பணம் சேர்த்து வருகிறோம், கழுதை ஒன்று வாங்க விரும்புகிறோம்.''

''பணம் சேர்க்கிறீர்களா? எப்போது ஆரம்பித்தீர்கள்? எவ்வளவு சேர்ந்திருக்கிறது?''

''கடந்த குளிர் காலத்தில் ஆரம்பித்தோம், ஒரு ரூபிள் ஐம்பத்தைந்து கொப்பேக் சேர்த்திருக்கிறோம்'' என்று நத்தாஷா பெருமையாய்ச் சொன்னாள். அவள் கறாரானவள், எங்கள் எல்லோரிலும் மிகவும் சிக்கனமானவள். அதனால் தான் நாங்கள் ஐந்தே வயதான அவளைப் பொருளாளராய்த் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்.

''சரியாக ஒரு ரூபிள் ஐம்பத்தைந்து கொப்பேக்! கொண்டு வந்து காட்டட்டுமா?''

''நீயுமா இதில் சேர்ந்திருக்கிறாய்? நீ பள்ளிக்கூடம் போக ஆரம்பிக்காதவள், மதிய உணவுக்காக காசு பெறாதவள் ஆயிற்றே.''

''வேலிக் கதவுக்கருகே நான் கண்டெடுத்த பதினைந்து கொப்பேக்கை எங்கள் உண்டியலில் போட்டு வைத்திருக்கிறேன்.''

மண்வெட்டியை அப்பா மண்ணில் பதித்து விட்டு சட்டைப் பைகளில் கையை விட்டுத் தேடினார்.

''வெற்றி பெறப் போகும் முயற்சியாய்த் தெரிகிறதே, நானும் இதில் பங்கு கொள்ள விரும்புகிறேன். என்னை கூட்டாளியாய்ச் சேர்த்துக் கொள்கிறீர்களா? இதோ இருக்கிறது ஐந்து ரூபிள்—என்னுடைய பங்கு. இனி உங்கள் சேமிப்பை எடுத்துக் கொண்டு சந்தைக்குப் புறப்படுங்கள்!''

''என்ன? இன்றே, இப்போதே போய் வாங்கலாமா?''

அரை மணி நேரத்திற்கெல்லாம் கொதிக்கும் மண்ணில்

கால்நடைச் சந்தையை நோக்கி வெறுங்காலில் போய்க் கொண்டிருந்தோம். சோன்யா முன்னிலையில் நடந்தாள். காசை அவள் எடுத்துச் சென்றாள். காசு கீழே விழாமலும், எதுவும் தொலைந்து போகாமலும் கையில் பத்திரமாய் வைத்துக் கொள்ள முயன்றாள் அவள். வைத்த கண் வாங்காமல் அவளுடைய கையையே பார்த்தவாறு நான் அவள் பக்கத்தில் நடந்தேன். எங்கள் பின்னால் எங்களுடைய தங்கைகள் யூலியாவும் நத்தாஷாவும் குதூகலமாய்ப் பேசிச் சிரித்துக் கொண்டு விரைந்து வந்தனர்.

இடையிடையே திடுமென நாங்கள் பீதியடைந்து சாலையின் நடுவில் நின்று விடுவோம். கெட்டியாய் மூடிய கையை சோன்யா திறப்பாள். அவள் கையில் நமத்துக் கசங்கிப் போய் இருந்த அந்தத் துண்டு காகிதம் மெய்யாகவே ஐந்து ரூபிள் நோட்டுதானா என்று பார்த்துக் கொள்வோம். அந்த நோட்டு பத்திரமாய் எங்களிடம்தான் இருந்தது, உயிருள்ள மெய்யான கழுதை அன்றைய தினமே எங்களுக்குக் கிடைத்து விடும்!''

சந்தை நெடுந் தொலைவில் இருந்தது, நகரைக் கடந்து நாங்கள் எதிர் கோடிக்குப் போக வேண்டியிருந்தது.

நிழல் படிந்து குளுமையாய் இருந்த தெருக்களையும் வெயிலில் தகதகத்த சதுக்கங்களையும் கடந்து சென்றோம். இந்தச் சதுக்கங்களில் பொறுக்க முடியாமல் மணல் நெருப்பாய்ச் சுட்டது. ஓட்டமாய் ஓடி இவற்றைத் தாண்டிச் சென்றோம். பிறகு வாய்க்கால்களின் கரையில் உட்கார்ந்து, எரியும் பாதங்களை நீரில் நனைத்துக் கொண்டோம்.

இம்மாதிரியான ஒரு சதுக்கத்தின் நடுவில்தான் கால்நடைச் சந்தை இருந்தது. தொலைவில் வரும்போது கால்நடைகளின் பலவிதமான குரல்களும் சாட்டைகளின் சொடுக்கலும் ஓட்டிச் செல்வோர் எழுப்பிய கூச்சல்களும் எங்கள் காதுக்கு எட்டின. திரளான பசுக்களும் குதிரைகளும் ஆடுகளும் அங்கு

மிங்கும் ஓட்டிச் செல்லப் பட்டன, அந்தச் சதுக்கமே உயிர்த் துடிப்பு கொண்டு பரபரப்பதாய்த் தோன்றியது.

இந்த அமளியில் எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கூட்டத்தால் நெரிக்கப்பட்டு என்ன செய்வதென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தோம்.

''அதோ பார்! பேத்தியா! பே-த்-தி-யா!'' என்று கூவினோம்.

''ஏன் தொண்டை கிழியக் கூவுகிறீர்கள்? இங்கே என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டு எங்கள் பக்கத்து வீட்டுப் பையன் எங்களிடம் வந்தான். தொப்பியை நெற்றியில் தணிவாய் இழுத்து விட்டுக் கொண்டு பெரிய ஆள் மாதிரி பாவனை செய்தான்.

நாங்கள் எதற்காகச் சந்தைக்கு வந்தோமென்று அவனுக்குத் தெரியும். வீட்டிலிருந்து வழி நெடுக அவன் எங்களைப் பின்தொடர்ந்துதான் வந்திருந்தான். ஒன்றும் தெரியாதவனைப் போல் பாசாங்கு செய்தான்.

''கழுதை வாங்கவா வந்திருக்கிறீர்கள்? விவரம் அறிந்த ஆள் இதற்கு அவசியமாகும். இல்லாவிட்டால் உங்களை நன்றாய் ஏமாற்றி விடுவார்கள்.''

''பேத்தியா, நீ கழுதைகளைப் பற்றி நன்றாய்த் தெரிந்தவன் இல்லையா? எங்களுக்கு நீ உதவி செய்ய வேண்டும்.''

இந்த வேண்டுகோளுக்காகத்தானே பேத்தியா காத்திருந்தான்.

''அதற்கு என்ன, உதவி செய்கிறேன். ஆனால் என்னிடம் சொல்லாமலே தனியே புறப்பட்டு வந்தீர்களே, செய்யலாமா அப்படி? உங்களை இங்கே மொட்டையடித்து அல்லவா அனுப்பியிருப்பார்கள்? நோய் பிடித்த கழுதையை உங்கள் தலையில் கட்டி யிருப்பார்களே.''

பேத்தியா கூறியதைக் கேட்டுக் கலங்கிப் போன நாங்கள் பணிந்து அவன் சொற்படி நடக்கத் தயாராகி விட்டோம்.

''பேத்தியா, நல்ல வேளை, சரியான நேரத்தில் நீ எங்கள் கண்ணில் பட்டாய். எப்போதுமே நீ தக்க தருணத்தில் எதிரே வந்து விடுகிறாய், ஆச்சரியமாய் இருக்கிறது...''

நாங்கள் எல்லோருமாய்ச் சந்தையில் சுற்றி அலைந்தோம்.

''இந்தக் கழுதை விற்பனைக்காகவா வந்திருக்கிறது?''

''ஆமாம்.''

''விலை எவ்வளவு? ''

''பத்து ரூபிள்.''

''மூன்று ரூபிள் தருகிறேன்.''

''நிற்காதே, போ! முட்டாள் பையன்!''

பேரம் பேசுவதில் பேத்தியா இணையற்றவனாய் இருந்தான். அவன் பேசியதைக் கேட்டு நாற்புறமிருந்தும் விற்பனையாளர்கள் அவனைச் சபித்தார்கள்.

''பேத்தியா, அங்கே பாரேன்! அதோ ஒரு பெரிய கறுப்புக் கழுதை இருக்கிறது பார்! அது மாதிரிதான் எங்களுக்கு வேண்டும்.''

''எவ்வளவு இது?''

''ஏழு ரூபிள்.''

''ஆறரை ரூபிளுக்குத் தருவதானால்....''

''இப்படி நீ குறுக்கே வந்து புகுந்தாயானால் என் வேலையைப் பார்க்க நான் போய் விடுவேன்! நீயே பார்த்து வாங்கிக் கொள்!'' என்று சோன்யாவைப் பார்த்துக் கத்தினான் பேத்தியா.

சோன்யா தன் தவறை உணர்ந்து நாக்கைக் கடித்துக் கொண்டாள். பேத்தியா மீண்டும் விலை பேச ஆரம்பித்தான்.

''இது போன்ற கழுதைக்கு அதிகம் போனால் நான்கு ரூபிள்தான் கொடுக்கலாம்.''

''சரி பணத்தைக் கொடு.''

சோன்யா தனது மூடிய கையைத் திறக்கப் போனாள்.

''இரு, இரு! சோன்யா! உன் பணத்தைத் தொலைத்துக் கட்ட நேரம் இருக்கிறது, அவசரப்படாதே! முதலில் சவாரி

செய்து பார்க்க வேண்டும். சல்லிக் காசுக்கு உதவாத கழுதையாய் இருந்தாலும் இருக்கும்.''

''மெய்தான், சவாரி செய்து பார்த்துதான் வாங்க வேண்டும். பேத்தியா, நீ ஏறிச் சவாரி செய்து பார்.''

நாங்கள் ஒதுங்கிச் சென்று கீழே உட்கார்ந்து கொண்டோம். பேத்தியா அந்தக் கழுதை மேல் அமர்ந்து அதை எங்களுக்கு முன்னுல் ஓட வைக்க முயன்ருன். அது நொண்டிக் கழுதை என்பது தெரிய வந்தது.

திரும்பவும் நாங்கள் சந்தையில் சுற்றித் தேடத் தொடங்கினேம். சாம்பல் நிறத்தில் ஒரு சிறு கழுதை திடுமென என் கண்ணில் பட்டது. தரையைத் தொடும் அளவுக்குப் பெரிதாய் இரு புறங்களிலும் தொங்கிய இரண்டு விறகுக் கட்டுகளைச் சுமந்து கொண்டு வருத்தத்துடன் நின்று கொண்டிருந்தது. அனேகமாய் வெளியே தெரியாமல் கழுதையை மறைத்திருந்த இந்த விறகுக் கட்டுகளுக்கு இடையிலிருந்து சாம்பல் நிறத்தில் சிறு தலை மட்டும் வெளியே துருத்திக் கொண்டிருந்தது. அந்தத் தலையில் பெரிய விழிகளும் வழ வழப்பாய் மிருதுவாய்ப் பூம்பட்டு போன்ற காதுகளும் தெரிந்தன.

''அதைப் பாரேன்! அருமையான கழுதை!'' என்று அதைச் சுட்டிக் காட்டியவாறு கூறிஞள் யூலியா.

''கூச்சப் படுகிறது! வாலைத் தொங்க விட்டுக் கொண்டு அசையாமல் நிற்பதைப் பாருங்களேன்'' என்று நத்தாஷா மகிழ்ச்சி பொங்கும் குரலில் சொன்னுள்.

''இவ்வளவு நல்ல கழுதையை யாரும் விற்கமாட்டார்கள்.''

''விற்ருலும் விற்கலாம், விசாரித்துப் பார்ப்போம்.''

நாங்கள் விசாரித்தோம். அந்தக் கழுதை விற்பனைக்காக வந்ததுதான் என்பது தெரிந்தது.

''என்ன விலை?''

''எட்டு ரூபிள்.''

விலையைக் குறைக்கும்படி ஐந்து குரல்கள் ஒருங்கே சேர்ந்து கழுதையின் சொந்தக்காரரை வேண்டின. அவரிடம் எப்படி நாங்கள் மன்றாடினோம், தெரியுமா? பேத்தியா அவருடன் வாதாடி முடிவாய் விலை சொல்வதாய்க் கூறி எத்தனையோ தரம் கையை நீட்டிக் காட்டினான். நத்தாஷா ஏக்கத்துடன் அவர் கண்களைப் பார்த்துக் கொண்டு நின்றாள். சோன்யா ஓயாமல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்:

''ஆறரை ரூபிள், சரிதானா? என்ன சொல்கிறீர்கள்?''

இறுதியில் கழுதையின் முதுகிலிருந்து கனமான இந்த இரு விறகுக் கட்டுகளும் இறக்கப்பட்டன, அதன் கழுத்தில் கட்டியிருந்த தாம்புக் கயிற்றின் நுனி எங்கள் வசம் ஒப் படைக்கப் பட்டது.

நாங்கள் திரும்பி வீட்டிற்குச் சென்ற போது தூரம் பாதியாய்க் குறைந்து விட்டதாய்த் தோன்றியது. எல்லோரு மாகச் சேர்ந்து ஏக காலத்தில் பேசினோம், காரணம் இல்லாமலே சிரித்துக் கொண்டோம்.

''வந்து சேர்ந்து விட்டோம்'' என்று கத்திக் கொண்டு ஓடிச் சென்று வீட்டின் வேலிக் கதவைத் திறந்தாள் சோன்யா. பேத்தியாதான் எல்லோருக்கும் முதலாய் உள்ளே சென்றான். யூலியாவும் நானும் தாம்புக் கயிற்றின் முனையைப் பிடித்துச் சென்றோம். நத்தாஷா கழுதையின் மீது சவாரி செய்தாள்.

நாய்கள் வாங்கி வந்திருந்தது எல்லோருக்கும் பிடித்த மானதாய் இருந்தது. ஆனால் நாங்கள் வாங்கிய கழுதை ஆணல்ல, பெண் என்பது தெரிய வந்தது.

''இன்னுங்கூட நல்லதுதானே இது. கழுதைக் குட்டிகள் அல்லவா கிடைக்கும்!''

அதற்கு ஈஷ்கா என்று பெயர் வைத்தோம். அது இளங் குட்டியாகவே இருந்தது, பிறந்து ஓர் ஆண்டுக்கு மேல்

ஆகியிருக்காது. இளங் கன்றின் உயரம்தான் இருந்தது. கசாஹ்ஸ்தான் கழுதைகள் சாதரணமாய் ஒரு மீட்டர் உயரத்திற்கு மேல் வளருவதில்லை.

கிறிஸ்த்மஸ் முதலாய் இதற்கென நத்தாஷா சேர்த்து வைத்திருந்த காய்ந்து இறுகிப்போன தின்பண்டங்களை மகிழ்ச்சியுடன் மென்று கொண்டு வாயில் முகப்பில் நின்றிருந்தது ஈஷ்கா. நாங்கள் எல்லோரும் சுற்றி நின்று பாராட்டி அதைத் தட்டிக் கொடுத்தோம்.

ஈஷ்கா சுண்டெலி போல் சாம்பல் நிறமுடையதாய் இருந்தது. அதன் வாலின் நுனி தூரிகை போல் இருந்தது. வால் நுனியிலிருந்து காதுகள் வரை முதுகின் முழு நீளத்துக்குக் கறுப்பாய் பட்டைக் கோடு ஒன்று ஓடிற்று. தோளுக்கு அருகே இந்தக் கோட்டின் குறுக்கே மற்றொரு பட்டைக் கோடு சென்றது. குட்டையான அதன் முரட்டுப் பிடரி முடிகளும் துடித்து ஆடும் நீளமான காதுகளும் கறுப்பாய் இருந்தன. ஆனால் அதன் வழ வழப்பான வயிறும் மூக்கும் உதடுகளும் வெண்மையாய் இருந்தன.

அதன் வாலிலும் பிடரியிலும் இருந்த முள் விதைகளை அகற்றினோம். அதன் உடம்பு பூராவும் தேய்த்துத் துடைத்துச் சுத்தம் செய்தோம்.

ஈஷ்கா இப்போது கண்ணைக் கவருவதாய் இருந்தது, முன்னிலும் இனிமை வாய்ந்ததாய்த் தோன்றியது. அதன் நெற்றியில் வளர்ந்திருந்த முடிகள் கண்கள் வரை வந்து தொங்கின. இதனால் ஈஷ்கா அதன் புருவங்களுக்கு அடியிலிருந்து எட்டிப் பார்ப்பது போல் நினைக்கத் தோன்றிற்று.

அதைத் தோட்டத்திற்கு அழைத்துப் போய் புல் அடர்த்தியாய் வளர்ந்திருந்த இடத்தில் மேய விட்டோம்.

உதட்டால் கொஞ்சம் புல்லைப் பிய்த்துக் கொறித்து விட்டு எங்களைப் பார்த்தது ஈஷ்கா. பிறகு உறுதியான முடிவுக்கு வந்தது போல் பின்கொல்லையை நோக்கி நடந்தது.

அதன் காலடிக்கு இசைவாய் அதன் தலை மேலே எழுந்தும் கீழே தணிந்தும் ஆடிக் கொண்டிருந்தது. குப்பைக் குழி இருந்த பின்கொல்லையில் முட் செடிகளும் புதர்களும் மண்டி யிருந்தன. எங்களுக்குத் திகைப்பாய் இருந்தது, ஈஷ்காவைப் பின்தொடர்ந்து சென்றோம். அவசரமாய் அங்கே போகிறதே, பின்கொல்லையில் அதற்கு என்ன இருக்கிறது? ஈஷ்கா அங்கே முட்கள் நிறைந்த ஒரு பெரிய இலையைப் பறித்துத்தின்ன ஆரம்பித்தது.

''ஓ, பிடுங்குங்கள் அதை! சீக்கிரம்!'' என்று நத்தாஷா கூச்சலிட்டாள். ''பாவம், ஈஷ்கா! முட்கள் அதன் வயிற்றுக் குள் போய் குத்தப் போகின்றன.''

அந்த இலையை ஈஷ்காவிடமிருந்து பிடுங்கப் பார்த் தோம். ஆனால் ஈஷ்காவுக்குக் கோபம் தான் உண்டாயிற்று. காதுகளைத் தணித்து மண்டையோடு சேர்த்து அழுத்திக் கொண்டு அது எங்களைப் பார்த்துத் தலையை ஆட்டிற்று.

''இருங்கள், இதோ வருகிறேன்!'' என்று கத்தியவாறு சோன்யா, இது பற்றிக் கேட்பதற்காக அப்பாவைத் தேடிக் கொண்டு ஓடினாள். விஷச் செடிகளைத் தின்று ஈஷ்கா தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளவா விரும்பிற்று என்று தெரிந்து கொள்வதற்காக ஓடினாள் அவள்.

எங்களை விலக்கித் தள்ளி விட்டு அவள் சொன்னாள்:

''ஈஷ்கா அதன் விருப்பம் போல் எதை வேண்டுமானு லும் தின்னட்டும், நாம் தடுக்க வேண்டாம். தனக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதை அது தின்னாது. கழுதைகள் வெப்ப மண்டல நாடுகளில் வசிப்பவை. அந்நாடுகளில் வெயிலின் கடுமை தாங்காமல் புற்கள் கருகி விடுகின்றன, ஆனால் முட் செடிகளும் பூண்டுகளும் நிறைய வளர்கின்றன. இந்த முட் செடிகளும் பூண்டுகளும் தீங்கிழைப்பவை அல்ல; இவை சாறு நிறைந்தவை, சுவையானவை. முட்களைப் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை, ஈஷ்காவுக்கு அவற்றால் எந்த அபாயமும் இல்லை.''

எல்லாம் தெரிந்த பெரிய கெட்டிக்காரி போல் பாவனை செய்துகொண்டு சோன்யா யாவற்றையும் விளக்கிக் கூறினாள். பின்கொல்லையில் குழந்தைகள் கூட்டமாய்க் கூடியிருந்தனர். எல்லோரும் வாயைப் பிளந்து கொண்டு அவளுடைய விளக்கத்தைக் கேட்டார்கள். ஆனால் நான் பொறுமை இழந்து குறுக்கிட்டு அவளிடம் கூறினேன்:

''சோன்யா, நீ அளவு மீறி பெருமையடித்துக் கொள்கிறாய்! இப்போது தான் போய்த் தெரிந்துகொண்டு வந்தாய், ஆனால் எல்லாம் தெரிந்து வைத்திருப்பவள் மாதிரி பேசுகிறாயே! வெப்ப மண்டல நாடுகளாமே... இது ஒன்றும் வெப்ப மண்டல நாடல்ல!''

கொதிப்புற்று விட்ட எனக்கு பின்கழுத்தில் வியர்த்து விட்டது. குப்பைக் குழியில் ஈக்களும் வண்டுகளும் மொய்த்துக் கொண்டிருந்தன. அங்கு குவிந்திருந்த சாம்பலின் மீது ஈஷ்கா விழுந்து புரண்டு தூசிப் படலத்தை எழுப்பிற்று.

நான் முனகியதைப் பொருட்படுத்தாமலே சோன்யா கழுதைகளைப் பற்றிய விஞ்ஞான வழிப்பட்ட தனது விளக்கத்தைத் தொடர்ந்து கூறிச் சென்றாள்.

அன்று இருட்டுவதற்குள் பலகைகளை வைத்துக் கட்டி ஈஷ்காவுக்கு ஒரு சிறு தொழுவத்தைத் தயார் செய்தோம். ஒரு கூடையைத் தீனித் தொட்டியாக்கிக் கொண்டோம். தரையில் வைக்கோலைப் பரப்பினோம். பிறகு ஈஷ்காவை உள்ளே அழைத்து வந்து அடைத்தோம். ஆனால் ஈஷ்காவுக்கு இந்த புதிய வசிப்பிடம் பிடிக்கவில்லை. இரவு யாவரும் தூங்கிக் கொண்டிருந்த போது அது கனைத்துக் கொண்டு பலகைகளுக்கிடையே இடுக்கில் தலையை நுழைத்தது. விரைவில் வெளிமுற்றத்துக்கு வந்து சேர்ந்தது.

கொட்டிலுக்கு அருகே குளோவர் தழை தின்று கொண்டிருந்த குதிரைகள் பலமாய்க் கனைத்தன. வெளிமுற்றத்தின் நடுவில் பசு நின்று கொண்டிருந்தது. உறங்கிக் கொண்டிருந்த

நாய்கள் பார்ப்பதற்கு மென்முடிப் பந்துகள் போலிருந்தன.

ஈஷ்கா இந்த நாய்களுக்கிடையே சென்று மூக்கால்முட்டி அவற்றை உசுப்பிற்று. நாய்கள் தூக்கத்தில் உறுமின. ஆனுல் ஈஷ்கா அவற்றை விடாமல் தொந்தரவு செய்யவே, எல்லா நாய்களும் எழுந்து நின்று கோபமாய் அதைப் பார்த்துக் குரைத்தன. காதுகளைத் தணித்து அழுத்திக் கொண்டு ஈஷ்கா பற்கள் வெளியே தெரிய கடுகடுத்துக் கொண்டு ''என்னை இன்னும் நீங்கள் சரியாய்த் தெரிந்து கொள்ளவில்லை! என்னிடம் கொஞ்சம் அடக்கமாய் நடந்து கொள்வது நல்லது!'' என்று கூறுவது போல் தலையை ஆட்டிற்று.

பிறகுதான் பசு நிற்பதைப் பார்த்தது ஈஷ்கா. பின் பக்கத்திலிருந்து அதை அணுகி அதன் காலைக் கடித்தது. பசு ஒரு உதை உதைத்துத் தலையைத் திருப்பிக் கொம்புகளைத் தாழ்த்தியது. உடனே ஈஷ்கா தான் ஒரு கொடிய விலங்கு என்பதைத் தெரியப் படுத்திற்று: அங்கமெல்லாம் சிலிர்க்க முறைத்துப் பார்த்தது, பற்கள் தெரியும்படி உதட்டை உயர்த்திக் கொண்டது. கடித்து மிரட்ட ஆரம்பித்தது. பாவம், அந்த வயதானப் பசு ஓட்டமாய் ஓடிற்று, ஈஷ்கா அதை விரட்டிச் சென்றது.

இதன்பின் ஈஷ்கா வாலைச் சொடுக்கியதுமே பசு ஓட்டமெடுத்துவிடும். ஈஷ்கா விரும்பியதும் இதுவேதான். ஈஷ்கா தற்காப்புச் சாதனங்கள் இல்லாத பிராணி. பற்களோ, நகங்களோ, கொம்புகளோ இல்லாதது. அதனுடைய சிறு குளம்புகளைப் பார்த்து யாரும் பயந்து விட மாட்டார்கள். ஈஷ்கா மட்டும் அவ்வளவு துணிவும் விடாமுயற்சியும் வாய்ந்ததாய் இருந்திராவிடில் ஏனைய பிராணிகள் அதை அடக்கிக் கீழ்ப்படுத்தியிருக்கும். ஆனுல் ஈஷ்கா எதற்கும் கீழ்படியாமல் சுயேச்சையாய் இருந்தது, எல்லாப் பிராணிகளும் அதனிடம் மரியாதையாய் நடந்து கொண்டன. சில பிராணிகள் அதைக் கண்டு அஞ்சவும் செய்தன, ஏனெனில் சாமர்த்தியமான



ஈஷ்கா மிகவும் மூர்க்கமான விலங்கு போல் நடந்து கொண்டது, துணிந்து தாக்குதல் தொடுத்துத் தன் பகைவர்களை மிரண்டு ஓட வைத்தது.

முதலாவது வாரத்தில் நாங்கள் ஈஷ்காவின் மீது சவாரி செய்யவில்லை. அது எங்களை நன்ருய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்று காத்திருந்தோம். ரொட்டியும் சர்க்கரையும் தந்து அதனிடம் அன்பு பாராட்டினேம். விரைவில் அது எங்கள் ஒவ்வொருவரையும் அடையாளம் தெரிந்து கொண்டது. அதற்கு யூலியாவையும் நத்தாஷாவையும்தான் அதிகமாய்ப் பிடித்திருந்தது. இவர்கள் இருவரும் எப்போதும் அதனுடன் இருந்து அதன் வாலில் முடிகளை வெட்டி ஒழுங்கு செய்தும், அதன் பிடரி முடிகளைக் கோதி விட்டும், குளம்புகளைத் தேய்த்து மெருகிட்டும் வந்தார்கள்.

ஒரு நாள் சோன்யாவும் நானும் குதிரையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தோம். கம்பத்தில் குதிரையைக் கட்டி விட்டு, வாய்க்காலிலிருந்து நீர் மொண்டு வந்து அதன் மேல் ஊற்றினேம், குதிரைக்கு இந்த நீராடல் பிடித்திருந்தது.

நாங்கள் நீர்த் தொட்டியை அதன் முதுகுக்கு மேல் தூக்கும் போது அது சந்தேகங் கொண்டு ஓரக் கண்ணுல் தொட்டியை உற்றுப் பார்க்கும். ஆனுல் நீர் அதன் விலாப்புறங்களில் வழிந்தோடுகையில் மகிழ்ச்சி கொண்டு கனைத்தவாறு குதிக்கும், நீரில் நடப்பதாய்க் கற்பனை செய்து தத்துபுத்தென அசைந்தாடும்.

குதிரையை நாங்கள் குளிப்பாட்டி முடித்த நேரத்தில் யூலியாவும் நத்தாஷாவும் ஈஷ்காவை இழுத்து வரக் கண்டோம். ஈஷ்காவைக் கம்பத்தில் கட்டிவிட்டு இருவருமாய் அதைக் குளிப்பாட்ட முற்பட்டனர்.

ஆனுல் ஈஷ்கா குளிக்க விரும்பவில்லை. அது திமிறிக் குதித்துக் கயிற்றை வெட்டி இழுத்தது. நீர் ஊற்றப்பட்ட ஒவ்வொரு தரமும் அது விஞேதமாய்க் குதித்து உதைத்தது.

சொட்டச் சொட்ட நனைந்து போன ஈஷ்கா இப்போது இறகுகள் யாவும் பிய்த்தெடுக்கப்பட்ட கோழிக் குஞ்சு போலிருந்தது: கழுத்து மெலிந்து, தலை குண்டாய்ப் பெருத்து, கால்கள் தீக்குச்சிகள் போலாகி விட்டன. வயிறு தர்பூசனிப் பழம் போல் ஊதில் பருத்திருந்தது.

தொட்டியை யூலியா உயர்த்தியதும் ஈஷ்கா கயிற்றை வெட்டி இழுத்து ஒரு குதி குதித்து நீர் தன்மேல் படாமல் விலகிக் கொண்டது.

''நத்தாஷா, அதை இங்கே இழுத்து வந்து நிறுத்தேன், வாய்க்காலிலிருந்து நீரை அதன் மேல் வாரியடிக்கிறேன்'' என்ருள் யூலியா.

ஒரு காலை எதிர் கரையில் வைத்துக் வாய்க்காலின் மீது நின்று கொண்டு தொட்டியில் நீரை மொண்டாள் யூலியா. இதற்குள் நத்தாஷா ஈஷ்காவைக் கம்பத்திலிருந்து அவிழ்த்து வாய்க்காலுக்கு இழுத்து வந்தாள். ஒரு கையில் அவள் பன்ரொட்டி வைத்திருந்தாள், மற்ருெரு கையில் தாம்புக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு நின்ருள்.

யூலியா தொட்டியிலிருந்த நீரை ஈஷ்கா மீது ஊற்றி விட்டு திரும்பவும் தொட்டியை நிரப்புவதற்காகக் கீழே குனிந்தாள்.

ஈஷ்கா சினங் கொண்டு திடுமென யூலியாவின் மீது பாய்ந்தது. யூலியா மிரண்டு போய்க் கூச்சலிட்டுத் தொட்டியை வாய்க்காலினுள் போட்டு விட்டாள். அவளும் வழுக்கிக் கொண்டு நேரே அந்தத் தொட்டிக்குள் போய் விழுந்தாள்!

தொட்டியுடன் சேர்ந்து யூலியாவும் வாய்க்காலில் மிதந்து நீரோட்டத்தின் திசையில் போய்க் கொண்டிருந் தாள். நாங்கள் பலக்கச் சிரித்து எழுப்பிய சப்தத்தைக் கேட்டு எங்கள் குதிரை எகிறிக் குதித்து ஓடிவிட்டது. பன்னைத் தின்று கொண்டு நின்ற நத்தாஷா புரை ஏறிப் போய்த் திணறினாள். ஈஷ்கா அவளிடம் எஞ்சியிருந்த பன் ரொட்டியைப் பிடுங்கிக் கொண்டு கொட்டிலை நோக்கி ஓட்ட மாய் ஓடிற்று.

உதவுவதற்காக ஓடிய போது கூட எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. புரையேறிச் சிக்கிக் கொண்ட பன் ரொட்டித் துண்டை வெளியே வரச் செய்வதற்காக நத்தா ஷாவின் முதுகில் நாங்கள் குத்திக் கொண்டிருக்கையில், பக்கத்து வீட்டுப் பையன்கள் வாய்க்காலில் தொட்டியோடு போய்க் கொண்டிருந்த யூலியாவைப் பிடித்துக் கரையேற் றினர். அவள் நனைந்து போயிருந்தாள், முழங்காலில் காயம் பட்டிருந்தது. ஆனால் கரையில் கால் வைத்த மறு கணமே அவள்:

''ஈஷ்கா எங்கே? முட்டாள்களே!'' என்று இரைந்தாள்.

இதற்கிடையில் ஈஷ்கா அதற்குப் பிடித்த குப்பைக் குழிச் சாம்பலில் விழுந்து ஆசை தீர புரண்டது. பிறகு எழுந்து நின்று உடம்பை உலுக்கிக் கொண்டது.

''வெப்ப மண்டல வாழ்க்கை கழுதைகளுக்குக் குளிக்கக்

கற்றுத் தருவதாய்த் தெரியவில்லையே'' என்று சோன்யா சிந்தனை மிக்கவளாய்க் கூறினாள்.

தோல் வார்களையும், ஒட்டுக்கம்பளித் துண்டுகளையும் கொண்டு நாங்கள் ஈஷ்காவுக்குக் கடிவாள வாரும், சேணமும் செய்தோம். யாவும் தயாரானதும், ஈஷ்காவுக்குச் சேண மிட்டு நாங்கள் அதன் மீது சவாரி செய்ய ஆரம்பித்தோம்.

அது நன்றாகவே ஓடிற்று. சிறு நடையும், ''நாய் நடையும்'' போட்டுச் சென்றது. குதிரை ஓட்டமும் நாலுகால் பாய்ச்சலும் அதற்குத் தெரிந்திருந்தது. ஆனால் அதற்குக் குணக்கேடு ஏற்படுமாயின், அல்லது சவாரி செய்கிறவரை அதற்குப் பிடிக்கவில்லையானால் சகிக்கவே முடியாதபடி எலும்பு அதிரும்படியான குதி நடை போட்டு ஓடும். இதை நாங்கள் ''தக்கடா-பிக்கடா'' நடை என்று அழைத்தோம்.

நாங்கள் சவாரி செய்ய ஆரம்பித்துச் சிறிது காலத்துக்கெல்லாம் கடிவாளத்தையும் சேணத்தையும் கொட்டிலில் மாட்டித் தொங்க விட்டோம். பிறகு அவற்றை அங்கிருந்து நாங்கள் எடுக்கவேயில்லை. ஏனெனில் நாங்கள் இப்பொழுது சிறு கம்பு அல்லது கையைக் கொண்டே வழி நடத்தி அதை ஓட்டிச் சென்றோம். அதன் கழுத்தின் வலப்புறத்தில் தட்டியதும் அது இடப்புறமும், இடப்புறத்தில் தட்டியதும் வலப்புறமும் திரும்பிச் சென்றது. அதை நிற்கச் செய்ய விரும்பிய போது, அதன் காதுகளுக்கு இடையிலிருந்த முடிகளைப் பிடித்து மெல்ல இழுத்தோம். அதன் விலாப்புற முடிகளை இழுத்தால் முழு வேகத்தில் ஓட வேண்டுமென்று அர்த்தம்.

யூலியாவும் நத்தாஷாவும் அதன் மீது நன்றாய்ச் சவாரி செய்தனர், இருவருக்கும் இந்தச் சவாரி பிடித்திருந்தது. ஆனால் சோன்யாவுக்கும் எனக்கும் அதிர்ஷ்டமில்லை. ஈஷ்கா எங்களுடைய ஆணைகளுக்குக் கீழ்படிய விரும்புவதில்லை, பின்னங்கால்களை உயர்த்தி உதைத்துக் கொள்ளும். எப்போதும் அது ''தக்கடா-பிக்கடா'' நடை போட்டுதான் எங்களைச்

சுமந்து சென்றது. வயிறு கலங்கிப் போய் எங்களுக்குத் தமட்ட ஆரம்பித்து விடும்.

காணுமற் போன வான்கோழிக் குஞ்சுகளைத் தேடிப் பிடிப்பதற்காக ஒரு நாள் என்னை அனுப்பினார்கள்.

''ஈஷ்காவின் முதுகில் நீ சரியான இடத்தில் உட்காருவதில்லை'' என்ருள் யூலியா. ''கழுத்திலிருந்து விலகிப் பின்பக்கம் தள்ளி உட்கார வேண்டும்'' என்று சொல்லி ஈஷ்காவின் பின்முதுகைத் தட்டிக் காட்டினுள் அவள்.

அவள் சொல்லியபடி உட்கார்ந்து கொண்டு சவாரி செய்தேன். ஆனுல் நான் அனேகமாய் ஈஷ்காவின் வாலுக்கு மேல் இருக்கக் கண்டேன். என் கையிலிருந்த கம்பு சிறியது. அதைக் கொண்டு என்னுல் ஈஷ்காவின் கழுத்தைத் தொட முடியவில்லை. ஆகவே ஈஷ்கா அதன் விருப்பம் போல் நடை போட்டுச் செல்ல முற்பட்டது, அந்த நேரத்தில் முழு வேகப் பாய்ச்சலையே அது விரும்பியதாய்த் தெரிந்தது.


இப்படி நாங்கள் பாய்ந்தோடிக் கொண்டிருக்கையில் நான் பையப் பைய முன்னேக்கி நகர்ந்து செல்ல முயன்றேன். திடுமென ஈஷ்கா ஓட்டத்தை நிறுத்தித் தலையைக் குனிந்தது. அவ்வளவுதான்! நான் முன்னுல் தூக்கியெறியப்பட்டுக் குப்புற விழுந்தேன்.

ஈஷ்கா திரும்பி வீட்டை நோக்கிச் சாலையின் நடுவில் பாய்ந்தோடிற்று, பெருமையாய்த் தலையை உயர்த்தி இடப் பக்கமாகவும் பிறகு வலப்பக்கமாகவும் திருப்பிக் கொண்டு வெற்றி முழக்கமிட்டுக் கத்திற்று: 'இயீ-ஹா! இயீ-ஹா! இயீ-ஹா!' மெச்சத்தக்க காரியம் புரிந்து விட்டதாய் நினைத்துக் கொண்டது அது!

சோன்யாவும் ஈஷ்கா மீது சவாரி செய்ய விருப்பமில்லாமல் தயங்குவாள்.

''முதுகின் வளைவு எங்கே இருக்கிறது இதற்கு?'' என்று கேட்டுச் சந்தேகம் கொண்டவளாய் ஈஷ்காவின் வளைவில்லாத நேர் முதுகை உற்று நோக்குவாள் சோன்யா. ''குதிரை

யாய் இருந்தால் அதன் முதுகின் வளை வில் உட்கார வேண்டு மென்று தெரியும். ஆனல் இந்த பிராணி யிடம் முதுகில் உட் காருவதாய் நினைத்து வாலின் மேல் உட் கார நேர்ந்துவிடும் போல் இருக்கிறதே'' என்று முறையிடுவாள்.



யூலியாவுக்கும் நத்தாஷாவுக்கும் இம்மாதிரி பிரச்சினை எதுவும் ஏற்படுவதில்லை. பகற் பொழுது முழுவதும் இரு வரும் ஈஷ்காவின் மீது ஏறிக் கொண்டு சுற்றித் திரிவார்கள். தனித்தனியாகவும் சவாரி செய்வார்கள், இரண்டு பேரு மாய்ச் சேர்ந்தும் சவாரி செய்வார்கள். சில நேரம் மூன்ரு வது சவாரியாய்ப் பக்கத்து வீட்டுக் குழந்தைகளில் ஒன்றை யும் ஏற்றிக் கொள்வார்கள்.

ஈஷ்காவுக்கு இவர்கள் இருவரும் மிகவும் பழக்கப் பட்ட வர்களாய் இருந்தனர். எந்நேரமும் நாய் போல் அது இவர் கள் பின்னல் சுற்றிக் கொண்டிருந்தது. சொந்தத்தில் ஒரு போக்குவரத்துச் சாதனம் தயாராய்ப் பக்கத்தில் நிற்பது வசதியாகவே இருந்தது.

வெளிமுற்றத்தை நாங்கள் ஒரு நாள் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தோம். அப்போது சோன்யாவிடம் ஏதோ சொல்வதற்காக அவளிடம் சென்ற நான், துடப் பத்தை சுமார் முப்பதடித் தொலைவில் வெளிவாயிலருகே போட்டு விட்டுப் போனேன்.

நத்தாஷா என் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். பெரிய காரியமாய் அவள் ஈஷ்காவின் மீது ஏறி வெளிமுற்றத்

தின் குறுக்கே சவாரி செய்து அந்தத் துடப்பத்தை எடுத்து வந்து என்னிடம் தந்தாள்.

அம்மா இதைப் பார்த்து விட்டு வயிறு குலுங்கச் சிரித்தார்.

''சரிதான், சரிதான்! இம்மாதிரியே போகுமானுல் நடக்கிற பழக்கத்தையே சீக்கிரம் நீங்கள் மறந்து விடுவீர்கள்!'' என்ருர் அவர்.

ஈஷ்காவினுல் எங்கள் வாழ்வில் பல மாறுதல்கள் உண்டாயின.

அது வருவதற்கு முன்பெல்லாம் கடைக்கோ சந்தைக்கோ யாரையாவது அனுப்ப வேண்டுமென்று அம்மா விரும்பிய போது அக்கம் பக்கத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். அம்மா திரும்பத் திரும்ப எங்களைக் கூப்பிட வேண்டியிருக்கும்.

''யூலியா, நீ தங்கமானவள்! அம்மாவிடம் உனக்குதான் ஆசை அதிகம்!''

''அது சரிதான், அம்மா!'' என்பாள் அருமை மகள். ''ஆனுல் நீ என்னைச் சந்தைக்கு அனுப்பாதே! நீ எனக்கு மிட்டாய் தருவதாயிருந்தால் கடைக்கு வேண்டுமானுல் போய் வருகிறேன்.''

ஆனுல் இப்போது எல்லாம் அடியோடு மாறிவிட்டது.

''அம்மா, சந்தையிலே உனக்கு வாங்க வேண்டியது ஒன்றும் இல்லையா? நிச்சயம்தானு?''

''அம்மா, கடைக்குப் போய் உனக்குச் சாமான்கள் வாங்கி வருகிருேம். என்ன வேண்டும் சொல்லு'' என்று நாள்தோறும் திரும்பத் திரும்ப நாங்கள் கேட்பது வழக்கமாகி விட்டது.

சர்க்கரையும் நூலும் வாங்குவதற்காக நகரிலுள்ள கடைக்கு யூலியா புறப்பட்டால் நத்தாஷா அவளை வழியனுப்பி வைப்பதற்காக வேலிக் கதவு வரை சென்று, அவள் காதுக்குள் சொல்வாள்:

''மறந்து விடாதே நீ!''

பிறகு சிற்றுருவங் கொண்ட சாம்பல் நிற ஈஷ்கா நகரத்தின் குறுக்கே துரித நடை போட்டுச் செல்லும். அதற்கு மேல் யூலியாவின் சிறிய சிவப்புக் குல்லாய் மேலும் கீழுமாய் ஆடிக் குதித்துச் செல்லும்.

யூலியா திரும்பி வந்ததும் அவள் நூல் வாங்கி வர மறந்து விட்டாள் என்பது அம்மாவுக்குத் தெரிய வரும். ஆனால் வேடிக்கை என்னவென்றால் தலையில் குல்லாயை மாட்டிக் கொண்டு கடைக்குப் போவதற்குத் தயாராய் நத்தாஷா வந்து நிற்பாள்.

மீண்டும் சாம்பல் நிறச் சிறு கழுதை ஒன்று நகரத் தெருக்களில் நடை போட்டுச் செல்லும், அதற்கு மேல் சிறிய சிவப்புக் குல்லாய் ஆடிக் குதித்து செல்லும்.

முன்னிலும் சிறப்பாய் நாங்கள் விளையாடுவதற்கு ஈஷ்கா துணை புரிந்தது. எடுத்துக்காட்டாய், எங்களுடைய விளையாட்டு இந்தியாவைப் பற்றியதாய் இருக்கையில், ஈஷ்காவை நாங்கள் இறகுகளையும் கண்ணைப் பறிக்கும் வண்ணத் துணிகளையும் பளபளப்பான காகிதங்களையும் கொண்டு அலங்கரிப்போம். அதன் முதுகில் சிறிய கம்பளத்தை விரித்து. அதற்கு மேல் ஒரு திண்டையும் வைத்து, நத்தாஷாவை அந்தத் திண்டின் மீது உட்கார வைப்போம்.

இவ்விதம் ஈஷ்கா யானையாகி விடும், நத்தாஷா ஒரு மகாராஜாவாகி விடுவாள்.

சிறைக்கூடத்திலிருந்து கைதி தப்பி ஓடுவதாய் விளையாடுகையில், உண்மை நடப்புக்குப் பொருத்தமான முறையில் ஈஷ்கா மீது ஏறிக் கொண்டு கைதியை பாய்ந்தோடச் செய்ய முடிந்தது.

முன்பு நாங்கள் ஆய்வுப் பயணங்கள் மேற்கொண்ட போது எங்கள் நிலை பரிதாபமாய் இருக்கும், ஏனெனில் கம்புகளைக் குதிரைகளாய்ப் பாவனை செய்து கொண்டு நாங்கள் அவற்றில் சவாரி செய்ய வேண்டியிருந்தது. இப்போது

யாவும் மாறிவிட்டன: கூடாரம், உணவுப் பொருள்கள், உருளைக் கிழங்கை வேக வைப்பதற்கு வேண்டிய சட்டி ஆகிய யாவற்றையும் ஈஷ்காவின் மீது ஏற்றிக் கொண்டு புறப் பட்டுச் சென்றோம்.

குழுவின் தலைவர் முன்னால் வழிக்காட்டிச் செல்ல சுமைக் குதிரைகள் (ஈஷ்காதான் எங்களது சுமைக் குதிரை களின் ஏகபிரதிநிதி) பின்னால் வரிசையாய் வரும், இவற்றுக் கும் பின்னால் பயணக் குழுவினர் போவார்கள்.

ஆப்பிளும் குடைக் காளான்களும் சேகரிப்பதற்காக மலைகளுக்கு நாங்கள் பயணம் போய் வருவோம். மற்றும் பல விதமான பயணங்களையும் மேற்கொள்வோம்.

நாங்கள் குதிரைப் பந்தயங்களும் நடத்துவது வழக்கம். சோன்யாவோ நானோ எங்கள் குதிரை கினெதோயின் மீது ஏறிக் கொண்டு ஈஷ்காவுக்குச் சவால் விடுவோம். நெடுந் தூரப் பந்தயங்களல்ல இவை, கூப்பிடுந் தூரத்துக்கு மேல் இருக்க மாட்டா.

நாங்கள் நகரின் எல்லைப் புறத்தில் வசித்தோம். எங்கள் வீட்டுத் தோட்டத்துக்கு அப்பால் புல்வெளி இருந்தது. அது தான் எங்களது பந்தய மைதானம்.

அடிக்கடி ஈஷ்காதான் இறுதிக் கோட்டுக்கு முதலில் வந்து சேரும். தந்திரத்தின் மூலம் அது வெற்றி வாகை பெற்று விடும்.

குதிரையையும் ஈஷ்காவையும் துவக்கக் கோட்டில் நிற்கச் செய்வோம்.

''ஒன்று! இரண்டு! மூன்று!''


குதிரை நேரே முன்னால் பாய்ந்தோடும். ஆனால் ஈஷ்கா வாலைக் காலுக்கு இடுக்கில் வைத்துக் கொண்டு வாலின் நுனியிலுள்ள தூரிகையைச் சுழற்றியவாறு பெருமுயற்சி செய்து கினெதோயின் கழுத்துக்கடியில் புகுந்து கொள்ளப் பார்க்கும். அதனுடைய இந்த முயற்சி ஈடேறுமாயின்

ஈஷ்காவுக்கு வெற்றி உறுதியாகிவிடும். ஏனெனில் கினெதோய் ஓட முடியாமல் வேகத்தைக் குறைத்துக் கொண்டு, தன்னைத் தடுத்துத் தொல்லை செய்யும் பிராணியைக் கடிக்க முயலும். ஆனால் ஈஷ்கா பின்னங்கால்களை உயர்த்தி உதைத்து விட்டு ஓடும்.

கொட்டிலின் கோடியில் கிடந்த ஓட்டை உடைசல்களி டையே வண்டியின் முன்சக்கர அச்சு ஒன்று இருப்பதை நாங்கள் ஒரு நாள் கண்டோம். இரண்டு சக்கரங்களும் ஏர் காலும் ஒழுங்காகவே இருந்தன. அவசியமான பிற பகுதி களையும் நாங்கள் சேகரித்துக் கொண்டோம். பெரியவர்க ளது உதவியோடு இவற்றிலிருந்து நாங்கள் இருசக்கரவண்டி ஒன்றைத் தயார் செய்தோம்.

ஈஷ்காவை வண்டியில் பூட்டினோம். அதற்கு வியப்பாய் இருந்தது. தனக்குப் பின்னால் இருப்பது என்னவென்று பார்ப்ப தற்காக ஓயாமல் அது தலையைத் திருப்பிக்கொண்டிருந்தது. ஆனால் அது உதைக்கவில்லை, எவ்வித ஆட்சேபமும் தெரிவிக்க வில்லை. இருந்தாலும் லகான் அதற்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. போய்க் கொண்டிருக்கையில் திடுமென குணம் கெட்டு அழிச்சாட்டியம் செய்ய ஆரம்பித்தது. நாங்கள் வலப்பக்க லகானை இழுத்ததும் தலையை ஆட்டிக் கொண்டு இடப்பக்கம் திரும்பிற்று அது. ஆகவே நாங்கள் லகானை விட்டொழித்து விட்டு முன்பு போலவே கம்பால் தட்டி அதை ஓட்டிச் செல்ல வேண்டியதாயிற்று.

ஒரு நாள் சந்தைக்குப் புறப்பட்ட நாங்கள் வண்டியில் போவதென்று முடிவு செய்தோம். ஈஷ்காவை வண்டியில் பூட்டினோம், ஓட்டிச் செல்வதற்காக யூலியா அதன் முதுகில் ஏறிக் கொண்டாள். நத்தாஷாவும் நானும் வண்டியினுள் உட்கார்ந்து கொண்டோம். சாலை குன்றிலிருந்து கீழே சென்ற தால் ஈஷ்கா சிரமமின்றி ஓடிற்று. சக்கரங்கள் வேகமாய்ச் சுழன்றன. மெய்யான வண்டியைப் போலவே எங்கள் வண்டி யும் புழுதியை எழுப்பிக் கொண்டு ஓடிற்று.



சந்தையை அடைந்ததும் வரிசையாய்க் கடை விரித்திருந்தோருக்கு இடையே வண்டியை ஓட்டிச் சென்று தர்பூசனியும் முலாம் பழமும் வாங்க ஆரம்பித்தோம். ஒரு பெரிய தர்பூசனி எங்கள் கண்ணைக் கவரவே விற்பனையாளரிடம் நாங்கள் விலை பேசிக்கொண்டு நின்றோம். பேரப் பேச்சின் மும்முரத்தில் ஈஷ்காவைப் பற்றி நாங்கள் அறவே மறந்து விட்டோம். திடுமென நான் திரும்பிப் பார்த்த போது ஈஷ்கா பழக் கூடைக்குள் தலையைக் கவிழ்த்துக் கொண்டு கொடிமுந்திரிப் பழத்தை குலை குலையாய்த் தீர்த்துக் கட்டிக் கொண்டிருக்கக் கண்டேன். முழங்கையால் யூலியாவை இடித்து அவளிடம் காட்டினேன். திடுக்கிட்டுக் கத்தியவாறு அவள் கையிலிருந்த கம்பால் ஈஷ்காவை ஓங்கி அடித்தாள்.

ஈஷ்கா துள்ளிக் குதித்து ஓடிற்று, ஓடும் போது நத்தாஷாவை இடித்துத் தள்ளிற்று. அவளுடைய கையிலிருந்த தர்பூசனிப் பழம் தரையிலே விழுந்து உடைந்து போயிற்று.

உடனே விற்பனையாளர்கள் ஓடி வந்து கூச்சலிட்டார்கள்:

''தர்பூசனி, கொடிமுந்திரி இரண்டுக்குமுரிய காசைக் கொடுக்கா விடில் விட மாட்டோம்!''

வீட்டிலிருந்து நாங்கள் கொண்டு வந்திருந்த பணத்துக்குக் கிட்டத்தட்ட சமமான ஒரு தொகையை குறிப்பிட்டார்கள் அவர்கள்.

''நாங்கள் வேண்டுமென்று செய்ததல்லவே இது.''

''வேண்டுமென்றேதான் செய்தீர்கள். காசை எடுங்கள்!''

என்ன செய்வது? காசைக் கொடுத்தோம்.

நாங்கள் வீட்டுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தோம், யாரும் வாய் திறக்கவில்லை, எங்களுக்கு வருத்தமாயிருந்தது. இனி ஒரு போதும் எங்களைச் சந்தைக்கு அனுப்ப மாட்டார்கள் என்று பயந்தோம். போதாக் குறைக்கு ஈஷ்கா வேறு அழிச்சாட்டியம் செய்தது. வண்டியை இழுக்க முடியாமல் திணறுவதாய்ப் பாசாங்கு காட்டிற்று. ஏர்காலுக்கிடையில் திமிறி முண்டிற்று, தலையைக் கவிழ்த்துக் கொண்டது, காதுகள் ஒன்றையொன்று தொடும்படி உயர்த்தி ஆட்டிற்று. சுமை தாங்க முடியவில்லை என்பதே அதன் இந்த செயல்களின் உட்பொருள். நான் வண்டியிலிருந்து கீழே இறங்கி ஈஷ்காவின் பக்கத்தில் நடந்தேன். அப்போதும் ஈஷ்கா காதுகளை நெளித்து உயர்த்திக் கொண்டிருந்தது.

அதை ஏமாற்றிப் பார்ப்பதென முடிவு செய்தோம். சந்தடியின்றி ஏனையோரும் வண்டியிலிருந்து இறங்கி நடந்தார்கள். அப்போதும் சுமை மட்டு மீறியதாய் இருப்பது போல் ஈஷ்கா முண்டிக் கொண்டிருந்தது.

நாங்கள் பொறுமையிழந்து விட்டோம்.

''போதும் நிறுத்து! காலி வண்டியைக் கூடவா இழுக்க முடியவில்லை உன்னால்? வீட்டுக்குப் போனதும் எங்களுக்குச்

சரியானபடி கிடைக்கப் போகிறது, யாவற்றுக்கும் நீதான் காரணம்.... வாருங்கள், எல்லோரும் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு இழுக்கச் சொல்வோம்!''

நாங்கள் யாவரும் ஏறி உட்கார்ந்ததும், ஈஷ்கா நடையை நிறுத்திக் கொண்டு அசையாமல் நின்றது.

''என்ன இது? மெய்யாகவே சுமை அதிகமாய் இருக்குமோ?''

நாங்கள் இறங்கிச் சென்று ஈஷ்காவின் தலைப் பக்கத்துக்கு வந்தோம். ஈஷ்கா தரையை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றது. அதன் குளம்புக்கு அருகே மண்ணில் ஏதோ பளபளத்தது. நாங்கள் குனிந்து பார்த்தோம்—ஐந்து -ரூபிள் பொற்காசு ஒன்று கிடக்கக் கண்டோம்.

''ஈஷ்கா, வாழ்க நீ!'' என்று களிப்புற்றுக் கூவினோம்.

உடனே சந்தைக்குத் திரும்பி வாங்க வேண்டியவை யாவற்றையும் வாங்கிக் கொண்டு, ஈஷ்காவுக்கு வாய் நிறைய தின்பண்டம் வாங்கித் தந்தோம். பிறகு வீட்டுக்குப் புறப்பட்டோம். ஈஷ்கா குதூகலமாய் ஓடிற்று, வழி நெடுக நாங்கள் பாட்டுகள் பாடினோம்.

குளிர் காலத்தில் ஈஷ்காவைச் சறுக்கு வண்டியில் பூட்டி ஓட்டினோம். வசந்தம் பிறந்ததும் நாங்கள் சறுக்கு வண்டியிலும் போக முடியவில்லை, சக்கர வண்டியிலும் போக முடியவில்லை, ஈஷ்கா மீதுங்கூட செல்ல முடியவில்லை. ஏனெனில் ஈஷ்காவின் முழங்கால் ஆழத்துக்கு எங்கும் சேறும் சகதியுமாய் இருந்தது.

அடுத்த இரு மாதங்களுக்கு ஈஷ்காவுக்கு வேலை ஏதும் இல்லை. ஆயினும் ஒரு நாள் கூட அதற்குச் சுவையற்றதாய்க் கழியவில்லை. அருகாமையில் இருந்த செங்கற் தொழிற்சாலையில் கழுதைகள் பலவும் இருந்தன. ஈஷ்கா அவற்றுடன் பரிச்சியம் பெற்று நாள் தவறாமல் அவற்றிடம் சென்று வந்தது.

தரை காய்ந்ததும் நாங்கள் மீண்டும் வெளியே சென்று சுற்ற ஆரம்பித்தோம். ஈஷ்காவும் எங்களுடன் வந்தது. ஆனால் ஒரு நாள் அப்பா கூறினார்:

''ஈஷ்காவிடம் இனி அதிகமாய் வேலை வாங்காதீர்கள். சீக்கிரத்தில் அது நமக்குக் கழுதைக் குட்டி ஒன்று தரப் போகிறது.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம், அது குட்டி போடப் போகிறது.''

நத்தாஷா யூலியாவின் பக்கம் திரும்பினாள்.

''நீ என்னை ஈஷ்காவின் மீது சவாரி செய்ய விடமாட்டேன்கிறாய். அதனால் ஈஷ்கா எனக்கென தனியே ஒரு கழுதையைத் தரப் போகிறது. ஈஷ்காவையும் விட அது நன்றாய் இருக்கும், பாரேன்! நான் மனம் புழுங்கியதை அது கவனிக்கவில்லையென்றா நினைக்கிறாய்?''

ஈஷ்கா நன்றாய் கவனித்துதான் வைத்திருந்ததென நாங்கள் ஒத்துக் கொண்டோம்.

''பாருங்களேன், தெரியும்! எனது கழுதை கண்ணைக் கவருவதாய் இருக்கப் போகிறது!'' என்றாள் நத்தாஷா. ''நீங்கள் யாரும் அதன் மீது சவாரி செய்ய நான் அனுமதிக்கப் போவதில்லை, அந்த நினைப்பே வேண்டாம்!''

அன்று முதலாய் ஈஷ்காவை அவள் கண்ணுங் கருத்துமாய் கவனித்து வந்தாள். நேரத்தில் அதற்குத் தீனி போட்டாள், யாரும் அதைத் தொல்லை செய்யாதபடி பார்த்துக் கொண்டாள். யாராவது ஈஷ்கா மீது எங்காவது வேலையாய்ப் போய் வர வேண்டி வருமானால், உடனே அவள் வேண்டாமென வாதாடுவாள்:

''ஈஷ்கா மீதுதானா போய் வர வேண்டும்? நடந்து போய் வர முடியாதா? அது கண்களை மூடிக் கொண்டு நிற்கிறது, பார்! அதற்கு உடம்பு சரியாய் இல்லையோ, என்னமோ.''

ஆரம்பத்தில் நாங்கள் நாள்தோறும் குட்டி அன்றே பிறந்து விடுமென எதிர்பார்த்தோம். காலையில் விழித்தெ

ழுந்ததும் நத்தாஷா ஈஷ்காவிடம் ஓடுவாள். பார்த்துவிட்டு அவள் திரும்பியதும்:

''என்ன ஆயிற்று?'' என்று நாங்கள் அவளை விசாரிப் போம்.

''ஒன்றும் இல்லை. எப்படியும் நாளைக்குள் குட்டி போட்டு விடுமென்று நினைக்கிறேன்.''

கோடை கழிந்து இலையுதிர் காலமும் கழிந்து கொண்டி ருந்தது. பிறகு வெண்பனி பெய்தது. சோன்யாவுக்கும் எனக் கும் பள்ளிக்கூடம் திறந்து பல நாட்களாகி விட்டன. அப்படி யும் குட்டி பிறந்தாகவில்லை.

இதன் பிறகுதான் நத்தாஷாவிற்குச் சந்தேகம் ஏற்பட லாயிற்று.

''ஒரு வேளை ஈஷ்கா இதுபற்றி மறந்து போயிருக் குமோ? அல்லது அதற்கு எதாவது வருத்தம் இருக் குமோ? குட்டி கிடைக்குமென அப்பா சொல்லி ஓராண்டு ஆகப் போகிறது, ஒன்றையும் காணுமே.''

இது பற்றி ஈஷ்காவிடம் பேசிப் பார்க்க முயன்றாள் அவள். ஆனால் பலன் இல்லை. முடிவில் அவள் ஈஷ்காவிடம் செல்வதை நிறுத்திக் கொண்டாள்.

வசந்தம் ஆரம்பமானதும் ஈஷ்காவுக்கு வயிறு மிகப் பெரிதாகியது. பசுவிடமும், நாய்களிடமும் சென்று குறும்பு செய்வதை நிறுத்திக் கொண்டது. எச்சரிக்கையுடன் மெள்ள நடந்தது. பெரும் பகுதிநேரத்தை வெயிலில் கழித்து வந்தது. தோட்டத்தில் காய்ந்த இடமாய்ப் பார்த்து அங்கே வெயில் படும்படி நின்று கொண்டிருந்தது.

ஒரு ஞாயிறன்று அப்பா எங்களிடம் சொல்லிக் கொண் டிருந்தார்:

''இனி நீங்கள் ஈஷ்காவிடம் அடிக்கடி போய் பார்த்து விட்டு வர வேண்டும். குட்டி பிறக்கப் போகும் நேரம் நெருங்கி விட்டது.''

அவர் இதைச் சொல்லி வாயை மூடியிருக்கமாட்டார், அதற்குள் அறைக்குள் யூலியா ஓடி வந்து கூச்சலிட்டாள்: ''சீக்கிரம்! தோட்டத்திலே வந்து பாருங்கள்!''

நாங்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடினேம். தோட்டத்தில் கோடையில் வெள்ளரிக் கொடி படரும் இடத்தில் அழகான கறுப்பு நிறக் கழுதைக் குட்டி ஒன்று படுத்திருக்கக் கண்டோம். ஈஷ்கா அதை எழுந்து நிற்கச் செய்வதற்காக மூக்கால் தள்ளி விட்டுக் கொண்டிருந்தது. உதவி செய்வதற்காக அப்பா அதனிடம் சென்ருர். ஆனல் ஈஷ்கா சீற்றங் கொண்டு கத்தியவாறு பாய்ந்து அவரை விரட்டிற்று. தரையில் படுத்திருந்த குட்டி அசைவற்றுக் கிடந்ததை அப்போது தான் நாங்கள் கவனித்தோம்.

அப்பா திகைப்புற்றவராய்த் தோன்றினர். அவர் ஒரு கம்பை எடுத்து ஈஷ்காவை விரட்டி விட்டு குட்டியிடம் சென்று குனிந்து பார்த்தார். குட்டி செத்துப் போய்விட்டதென்பது தெரிந்தது. அப்பா அதைத் தூக்கிச் சென்ருர்.

பிறந்த போது குட்டி நலமுடன் நன்ருய்த்தான் இருந்தது, ஆனல் ஈஷ்காவுக்கு அது தலைச்சன் குட்டி. அனுபவம் இல்லாத ஈஷ்கா தவறிழைத்துக் குட்டியைச் சாகடித்துவிட்டது. பயந்து போனதாலோ, கவனக் குறைவினலோ ஈஷ்கா இதைச் செய்திருக்கலாம். பல விலங்குகள் முதல் தரம் குட்டி போடுகையில் இப்படி நேர்வதுண்டு என்பது பிற்பாடு எங்களுக்குத் தெரிய வந்தது.

மௌனமாய் நாங்கள் அப்பா பின்னல் புல்வெளியை நோக்கிச் சென்ருேம். ஈஷ்காவும் எங்களுடன் வர விரும்பிற்று, ஆனல் நாங்கள் அதை வர விடவில்லை.

குட்டியைப் புதைத்து விட்டு நாங்கள் வீட்டுக்குத் திரும்பினேம். அப்போதுதான் நத்தாஷா எங்களிடையேஇல்லை என்பதைக் கண்டோம். அவள் எங்களுடன் புல்வெளிக்கு வரவில்லை. குட்டியை ஈஷ்கா சாகடித்துவிட்டது தெரிந்ததும் அவள் எங்கோ மறைந்துவிட்டாள்.

நாங்கள் அவளைத் தேட முற்பட்டோம். இருட்டாயிருந்த குதிரை லாயத்துள் சென்று பார்த்த போது அங்கே ஒரு மூலையில் தீனித் தொட்டிக்கு அருகே உட்கார்ந்து அவள் அழுது கொண்டிருந்தது தெரிந்தது. ஈஷ்கா அவளுக்குப் பக்கத்தில் நின்று, அவள் முகத்திலே வழிந்த கண்ணீரை நக்கிக் கொண்டிருந்தது.

''என்னிடம் வராதே, போ!'' என்று அதைத் தன்னிடமிருந்து தள்ளிவிட்டவாறு விம்மினாள். ''முட்டாள்! பித்துக்குளிப் பிராணி! குட்டியை சாகடித்து விட்டது!'' என்று கூறி விக்கி விக்கி அழுதாள்.

மேலும் ஓராண்டு கழிந்தது. நாங்கள் வசித்து வந்த நகர வீட்டின் சொந்தக்காரர் அதை விற்றுவிடவே, மலை உயரத்தில் வனத்திலிருந்த எங்களுடைய அருமையான குடிசைக்கு நாங்கள் குடி மாறிச் சென்றோம். அங்கே எங்களுக்கு அருகே வேறு வீடுகள் இல்லை, கசாஹ் ஆடு மேய்ப்பாளர்களது கூடாரங்கள் மட்டுமே இருந்தன. குருவிகள் போல் சுதந்திரமாய் நாங்கள் திரிந்து பறந்து கொண்டிருந்தோம். குதிரைகள், பசு, ஈஷ்கா எல்லோருக்கும் இந்த மாறுதல் களிப்பூட்டிற்று. பகற்பொழுதில் அவை மலைகளிடையே புல்வெளிகளில் மேய்ந்தன, அருவிகளின் தெளிவான தூய நீரைக் குடித்தன.

ஈஷ்கா மீது நாங்கள் இப்போது சவாரி செய்வதில்லை. அது மீண்டும் குட்டி போடும் நிலையில் இருந்தது.

எங்கள் குடிசையிலிருந்து அரை மைல் தொலைவில் மலை உயரத்தில் அமைந்த கஸாஹ் மேய்ப்பாளர்களது முகாம் வழியே ஒரு நாள் நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். ஈஷ்காவும் எங்களுடன் வந்தது. ஒற்றைக் கண் கொண்ட வயது முதிர்ந்த மேய்ப்பாளர் யாக்கூப் எங்களைக் கூப்பிட்டார், ஈஷ்காவைப் பார்த்து விட்டு புன்சிரிப்பு சிரித்தபடிச் சொன்னார்.

''சீக்கிரம் குட்டி போடப் போகிறது.''

''எத்தனை நாளில் போடும்?''

''யாருக்குத் தெரியும்? இன்று போடலாம், நாளைக்கும் போடலாம்.''

''யாக்கூப் நீங்கள் உதவி செய்யுங்களேன். குட்டி எப்போது பிறக்கும் என்று தெரியாமல் நாங்கள் தவற விட்டு விடுவோம். போன தடவை குட்டியை இது சாகடித்து விட்டது.''

''மூன்று ரூபிள் கொடு, நான் பார்த்துக் கொள்கிறேன்.''

நாங்கள் சோகமாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

''மூன்று ரூபிள் இல்லை எங்களிடம்'' என்று சொல்லி அங்கிருந்து நாங்கள் புறப்பட்டோம்.

''பெண்களே, இருங்க! வாங்க இப்படி! சரி, நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் யாருக்கும் தெரியாமல் எனக்கு சர்க்கரை, தேயிலை, புகையிலை இப்படி எல்லாவற்றி லும் கொஞ்சம் கொண்டு வந்து என்னிடம் தர வேண்டும்.''

நாங்கள் மட்டிலா மகிழ்ச்சி அடைந்து யாக்கூபை மன மார வாழ்த்தினோம். வீட்டுக்குத் திரும்பியதும் எல்லாவற்றி லும் கொஞ்சம் எடுத்துச் சேகரிக்கத் தொடங்கினோம்.

ஈஷ்காவை யாக்கூப் தனது கூடாரத்துக்கு அருகே கட்டினார். ஒட்டுக்கம்பளி விரிப்பை எடுத்து வந்து வெயிலில் ஒரு பாறையின் மீது போட்டு அதன்மீது படுத்துக் கொண் டார். நாங்கள் எடுத்து வந்த சன்மானங்களை ஏற்றுக் கொண் டார். ஈஷ்கா அன்று இரவும் குட்டி போடவில்லை, அடுத்த நாள் இரவும் குட்டி போடவில்லை. யாக்கூப் பகற்பொழுதில் ஈஷ்காவுக்கு அருகில் வெயிலில் படுத்துக் கொள்வார். நாங் கள் அவரிடம் சென்று எங்களுடைய சன்மானங்களைக் குவிப் போம். இரவில் ஈஷ்காவை தமது கூடாரத்தினுள் அழைத்துச் சென்று விடுவார்.

அந்த இரண்டு நாட்களும் விழா நாட்கள். வீட்டில் அம்மா தயாரித்துத் தந்த பணியாரத்தில் ஒன்று கூட நாங்

கள் சாப்பிடவில்லை. எங்களுக்குக் கிடைத்தவை யாவற்றை யும் அப்படியே எடுத்து வந்து யாக்கூபிடம் கொடுத்தோம். எங்களிடமிருந்த எல்லாப் பொக்கிஷங்களையும் விரைவில் நாங்கள் கூடாரத்துக்கு அருகிலிருந்த அந்த பெரிய வெண் ணிறப் பாறைக்குக் கொண்டு வந்து சேர்த்தோம்.

''என்ன இது?'' என்று யாக்கூப் செலுலாயிடு பொம் மையை எடுத்துப் பார்த்து விட்டுக் கேட்டார். ''இது வேண் டாம், இன்னும் தேயிலை கொண்டு வந்து கொடுங்கள்.''

தேயிலை, சர்க்கரை, அப்பாவின் புகையிலை இவற்றில் அவ்வப்போது கொஞ்சம் எடுத்துச் செல்வதில் சிரமமில்லை, இந்தக் காரியத்தை நன்ருகவே செய்து வந்தோம். ஆனுல் யாக்கூப் சட்டையும் கால்சட்டையும் கேட்டபோது எங் களுக்குத் திண்டாட்டமாகி விட்டது. வீடு முழுதும் தேடியும் எதுவும் கிடைக்கவில்லை.

''அம்மா வேண்டாத சட்டையும், கால்சட்டையும் நம்மிடம் இல்லையா?''

''உங்களுக்கு எதற்காக அவை?''

''எங்களுக்கு வேண்டும்.''

''எதற்காக என்று சொல்லுங்கள், தேடிப் பார்க் கிறேன்.''

எங்களுக்கு இடையிலான ஏற்பாட்டைப் பற்றி வீட்டில் யாரிடமும் சொல்வதில்லை என்று யாக்கூபுக்கு நாங்கள் வாக் களித்திருந்தோம். ஆகவே வாயை மூடிக் கொண்டு சும்மா யிருந்தோம்.

ஆனுல் அப்பா தனியே அறையில் இருக்கும் நேரமாய்ப் பார்த்து அவரிடம் கேட்டோம்:

''உங்கள் வீட்டுக் குழந்தைகள் கேட்கிருேம், வீணுமற் போன சட்டையும் கால்சட்டையும் ஒன்று கூடவா இல்லாமற் போய் விட்டது?''

''வீணுமற் போன சட்டையும் கால்சட்டையும் எதற் காகவாம்?''

''எங்களுக்குத் தேவைப் படுகிறது.''

அப்பா அவருடைய பயணப் பைக்குள் தேடிப் பார்த்து இரண்டு சட்டைகளை எடுத்து வந்தார்.

''எங்கள் வீட்டுக் குழந்தைகளே! கால்சட்டை கிடைக்கவில்லை.''

நாங்கள் இரண்டு சட்டைகளையும் எடுத்துக் கொண்டு யாக்கூபின் கூடாரத்திற்கு ஓடினோம். வெளியே வெயிலில் தான் படுத்திருந்தார் யாக்கூப். அவருக்கு அருகே நின்ற ஈஷ்காவின் பக்கத்தில் சாம்பல் நிறத்தில் சின்னஞ்சிறு குட்டி ஒன்று காணப்பட்டது.

அதன் கால்கள் இன்னும் நிலைகொள்ளாமல், அது தள்ளாடிற்று, ஆயினும் அதற்குள் ஓடி விளையாடவும் உதைக்கவும் முயன்று கொண்டிருந்தது. ஈஷ்கா குட்டியை விட்டு கண்ணை எடுக்கவேயில்லை. அதை நக்கிக் கொடுத்தது, அதற்குப் பால் கொடுத்தது, விழிப்புடன் அதைப் பாதுகாத்தது.

''பெண் குட்டி'' என்று யாக்கூப் அறிவித்தார்.

''அற்புதமாய் இருக்கிறது! இதற்கு என்ன பெயர் வைக்கலாம்? இதையும் ஈஷ்கா என்று அழைக்க முடியாதே.''

''மீலச்கா, மீல்க்கா!* எனது அருமைக் கழுதைக் குட்டி! பொசபொசவெனக் கோழிக் குஞ்சு போல் இருக்கிறாய் நீ!'' என்று நத்தாஷா ஆனந்தமாய்க் கூவியவாறு அருமையாய் அந்தக் குட்டியின் காலைத் தடவிக் கொடுத்தாள்.

''மீலச்கா, மீல்க்கா!'' என்று எல்லோருமாய்ச் சேர்ந்து கூவினோம். ஈஷ்காவின் கழுத்தில் யாக்கூப் ஒரு கயிற்றைக் கட்டி அதை எங்கள் வீட்டை நோக்கி அழைத்துச் செல்ல, புதிதாய்ப் பிறந்த கழுதைக் குட்டி தலையை ஆட்டித் தள்ளாடிக் கொண்டு தாய்க் கழுதையின் பின்னால் நடந்தது.

''யாக்கூப், நன்றி உனக்கு!'' என்று மகிழ்ந்து அம்மா ஒரு ரூபிளை எடுத்து வந்து யாக்கூபிடம் தந்தார்.

---

* மீலச்கா, மீல்க்கா—கண்ணே (ருஷ்ய மொழி). — [மொ-ர்.]

அப்பா தமது சட்டைகள் எங்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஊகித்துக் கொண்டார். உள்ளே சென்று எங்கெங்கோ தேடி ஒரு கால்சட்டையை எடுத்து வந்து யாக்கூபிடம் கொடுத்தார்.

மீல்க்காவை நாங்கள் எங்களுக்குக் கிடைத்த பொம்மையாகக் கருதி அதனுடன் விளையாடி வந்தோம். உண்மையில் அது விளையாட்டு பொம்மை போன்றதாகவே இருந்தது. அப்படியே ஈஷ்காவின் பிரதியாய் விளங்கிற்று, உருவத்தில் மட்டும் நம்பமுடியாதபடி மிகச் சிறியதாய் இருந்தது. மறு நாள் காலையிலேயே அது துள்ளிக் குதித்தோட ஆரம்பித்தது. சின்னஞ் சிறு தலையை ஆட்டி நாய்கள் மீது இடித்தது. நாய்கள் அதைப் பார்த்து உறுமியதும் கோபமாய் பின்னங்கால்களை உயர்த்தி உதைக்க முற்பட்டது.

மீல்க்கா வயிறு நிறைய பால் குடித்து விட்டு வெயிலில் குதித்தோடிக் கொண்டிருந்தது. இதுவரை காத்திருந்த நாங்கள் அதைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் ஓடினோம்.

குட்டி எங்கே என்று ஈஷ்கா சுற்றிலும் பார்த்து விட்டு உரக்கக் கத்திற்று. பிறகு பாய்ந்தோடிச் சென்று ஒவ்வொரு சன்னலினுள்ளும் பார்த்தவாறு வீட்டை சுற்றி வந்தது. இதற்கிடையில் மீல்க்கா அறைக்குள் ஒவ்வொரு இடமாய்ச் சென்று பார்வையிட்டது. தனது பிஞ்சு மூக்கால் எங்கள் கைகளைத் தடவிற்று, காதுகளை நெளித்து ஆட்டிற்று, படுக்கைகளையும், நாற்காலிகளையும், எங்களது விளையாட்டுச் சாமான்களையும் உற்று நோக்கி ஆராய்ந்தது.

திடுமென ஈஷ்கா சன்னலுக்குள் தலையை நுழைத்து உள்ளே எட்டிப் பார்த்தது. அறைக்குள் வருவதற்கு முயற்சி செய்தபோது அது கத்திய கத்தல் சோகப் புலம்பலாய் ஒலித்தது.

''ஈஷ்காவும் உள்ளே வரட்டும்'' என்று கூறி, சோன்யா எழுந்து சென்று கதவைத் திறந்து கொண்டு அதைக் கூப்பிட்டாள்.

இதற்குள் நாங்கள் ஒரு புதிய வேடிக்கைக்குத் தயார் செய்தோம். மீல்க்காவுக்குப் பாவாடை கட்டி, முன்னங்கால்களை ஒரு சட்டையின் கைகளினுள் நுழைத்தோம், தலையில் ஒரு கைக்குட்டையைக் கட்டினோம்.

''பாப்பாவைப் பாரேன்!''

மீல்க்காவைப் பார்க்க வேண்டுமே! அப்படியே குரங்குக் குட்டி மாதிரி இருந்தது.

வாயில் முகப்பில் ஈஷ்கா ஏறிவரும் குளம்பொலி கேட்டது. படபடத்துக் கொண்டு அது அறைக்குள் புகுந்து சுற்றிலும் பார்த்தது. என் மடி மீதிருந்த மீல்க்காவின் கோலத்தைக் கண்டதும் கீச்சிட்டுக் கத்திற்று.

''ஐயோ! குழந்தைக்கு இவர்கள் செய்திருக்கும் காரியத்தைப் பாரேன்! அடுக்குமா இது?'' என்ற ஆத்திரக் கூச்சல் அதன் கத்தலில் ஒலித்தது.

மீல்க்காவை நான் கீழே விட்டேன். தத்திக் கொண்டு அது தன் தாயிடம் ஓடிற்று. பாவாடையில் அதன் கால்கள் சிக்கிக் கொண்டன. ஈஷ்கா அதன் ஆடைகளைக் கவ்வி இழுத்தது. பரபரப்பால் அதன் அங்கமெல்லாம் ஆடிற்று; அது பெருமூச்செறிந்து கொண்டது; ''ஐயோ! ஐயோ!'' என்று முனகுவது போலிருந்தது.

மீல்க்காவின் ஆடைகளைக் கழற்ற ஈஷ்காவுக்கு நாங்கள் உதவினோம். பிறகு அது மீல்க்காவை அறையிலிருந்து வெளியே அழைத்துச் சென்றது.

''இது என்ன பிராணி? தெரியவில்லையே! கழுதைக் குட்டியா இது? எனக்குச் சந்தேகமாய் அல்லவா இருக்கிறது?'' என்று வீட்டில் மில்க்காவின் மீது இடறிக் கொள்ளும் போது அம்மா கூறுவார். ''தன்னை நாய்க் குட்டி என்று நினைக்கிறது இது? எந்நேரமும் காலுக்கடியில் வந்து நிற்கிறதே!''

மீல்க்கா தன்னை நாய்க்குட்டியாய் நினைத்துக் கொண்டதா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் பெரும் பகுதி நேரத்தை எங்களுடன் வீட்டிலோ, வீட்டிற்கு அருகிலோ, மலைகளிலோதான் கழித்து வந்தது. ஏனைய பிராணிகளோடு அது விளையாடுவதில்லை. நாங்கள் அதற்கு செல்லம் கொடுத்து விட்டோம். ஆகவே சவாரிக்குரிய வயதை அடைந்ததும் அது அடங்காப் பிடாரியாய் நடந்து கொண்டது.

அது புத்தி கூர்மை வாய்ந்ததாகவே இருந்தது, எளிய ஆணைகளை உடனுக்குடன் புரிந்து கொண்டது. ஆனால் சில நேரங்களில் அது எந்த ஆணைக்கும் கீழ்ப்படிய மறுத்து அட்டகாசம் புரிந்தது.

''இப்பொழுதே நீ கண்டிப்புடன் இருந்து அதைக் கட்டுப்படுத்த வேண்டும்'' என்று நத்தாஷாவிடம் யூலியா கூறி வந்தாள். ''இல்லையேல் பிற்பாடு நீ திண்டாட வேண்டி வரும்.''

ஆனால் நத்தாஷா கண்டிப்பானவள் அல்ல. மீல்க்கா இதை நன்ருய்த் தெரிந்து வைத்திருந்தது. தனது சின்ன எஜமானியிடம் சர்க்கரைக் கட்டியோ, சுவையான தின்பண்டமோ பைக்குள் தயாராய் இருக்கும், எப்படியும் அதைப் பெற்றுக் கொண்டு விட முடியும் என்பது அதற்குத் தெரிந்ததுதான். ஆகவே நத்தாஷாவின் அச்சுறுத்தலுக்கும் தண்டனைக்கும் அது அதிகம் பயப்படுவதில்லை.

ஈஷ்காவைக் காட்டிலும் மீல்க்கா வேகமாகவும் சிறப்பாகவும் ஓடிற்று, ஆனால் அது ஆயிரம் சேஷ்டைகளும் குதர்க்கங்களும் தெரிந்து வைத்திருந்தது. நாங்கள் ஓயாமல் அதன் முதுகிலிருந்து வழுக்கி விழுந்து கொண்டிருந்தோம். எல்லோரும் ஈஷ்காவின் மீதுதான் சவாரி செய்ய விரும்பினோம். ஆண்டுக்கு ஆண்டு அது மேலும் மேலும் பணிவு மிக்கதாகி வந்தது. நத்தாஷா மட்டும்தான் மீல்க்கா மீது சவாரி செய்து வந்தாள். அடிக்கடி அவளுக்குக் காயம் படும், தடவிக்

கொண்டிருப்பாள். ஆனால் இதைப் பற்றி அதிகம் பேச விரும்பமாட்டாள்.

''நானே விரும்பி வேண்டுமென்றே விழுந்திருக்கலாம்; அது பாய்ந்து ஓடும்போது நான் குதித்துப் பார்க்க விரும்பி யிருக்கலாம்'' என்று எங்களிடம் வாதாடுவாள்.

இப்போது எங்களிடம் இரண்டு கழுதைகள் இருந்த தால் பகல் முழுதும் மலைகளிலும் காட்டிலும் பயணம் போய் வந்தோம். எங்களைக் காணுமே, எங்கே போனும் என்று யாராவது கேட்டார்களானுல், அப்பா உடனே வாயில்முகப் புக்கு வந்து நின்று தொலைநோக்கியை வைத்துக் கொண்டு மலைகளைப் பார்வையிடுவார். மலை உயரத்திலோ சரிவிலோ ஆடுகளைப் போல் இரு கழுதைகள் ஏறிச் செல்வதையும், அவற்றினிடையே வண்ண ஆடைகள் பளிச்சிடுவதையும் காண்பார்.

''அதோ போகிருர்கள், எமகாரப் பசங்கள்! எந்த உயரத்திற்கு ஏறியிருக்கிருர்கள்! எலும்பை முறித்துக் கொண்டு வந்து சேர்வார்கள்! கழுதைகளை இனி இவர்களி டம் விட்டு வைக்கக் கூடாது!'' என்று கடிந்து கொள்வார்.

''இலையுதிர் காலத்தில் இந்த கழுதைகளை நாம் விற்ருக வேண்டும்'' என்று ஒரு நாள் அப்பா எங்களிடம் கூறிஞர்.

''ஏன்?''

''வீட்டில் குதிரைகளுக்கும் பசுவுக்கும் வேண்டிய உலர் புல்தான் இருக்கிறது. குளிர் காலத்தில் நீங்கள் படிப்பிலே கவனம் செலுத்த வேண்டும், கழுதைகளில் அல்ல'' என்ருர்.

''வீட்டிலிருக்கும் உலர்புல் எங்களுக்கு வேண்டியதில்லை. ஈஷ்காவுக்கும் மீல்க்காவுக்கும் வேண்டியதை நாங்களே அறுத்துச் சேகரித்து வைத்துக் கொள்வோம்.''

''எப்படி அறுத்துச் சேகரிக்கப் போகிறீர்களென்று பார்க்கலாம்.''

''செய்து காட்டுகிருேம், பாருங்கள்.''

குளிர் காலத்துக்கு உலர்புல் சேகரித்து வைக்கும் வேலையில் நாங்கள் முழு மூச்சுடன் இறங்கினோம், ஈஷ்காவை யும் மீல்க்காவையும் ஆபத்திலிருந்து பாதுகாக்கும் பிரச்சினை யாய் இதை நாங்கள் கருதினோம்.

தினமும் பொழுது விடிந்ததும் நாங்கள் மலைகளுக்குப் புறப்பட்டுச் சென்றோம். பகல் முழுதும் புல்லைப் பிடுங்கி பெரிய சாக்குப் பைகளில் அடைத்து வண்டியிலேற்றி வீட்டுக்கு எடுத்து வந்து கிடங்கின் கூரை மேல் காயப் போட் டோம். எங்களுக்கு கைகளில் பெரிய கொப்புளங்கள் தோன்றி விட்டன. புல்லைப் பிடுங்குவது கடினமாகிவிட்டது. துருப் பிடித்த அறுப்பு அரிவாள் ஒன்றை சோன்யா தேடியெடுத் தாள். யாருக்கும் தெரியாமல் அதைத் தீட்டிக் கருக்காக்கு வதற்கு நாங்கள் பல தந்திரங்கள் செய்ய வேண்டியிருந்தது.

வழக்கம்போல் அதிகாலையிலே தின் பண்டங்களை எடுத்துக் கொண்டு மலைகளுக்குப் புறப்பட்டோம். சோன்யா பெண் குதிரை மாஷ்காவிலும், நான் கினெதோயிலும் சவாரி செய்தோம். யூலியாவும் நத்தாஷாவும் கழுதைகளின் மீது வந்தனர்.

நாங்கள் மேய்ச்சல் வெளியை அடைந்ததும் குதிரை களுக்குக் கால் பிணைப்பு பேரட்டு மேய விட்டுவிட்டு வேலை யைத் தொடங்கினோம். சோன்யா அறுப்பு அரிவாளைச் சாதுர்ய மாய் ஒரு வீசு வீசினாள். கையளவு புல்லையும் அதோடு சேர்த்துத் தனது செருப்பின் அடித் தோலையும் சீவித் தள்ளினாள்.

அவளுடைய செருப்பை நாங்கள் பரிதாபத்துடன் பரி சீலித்துக் கொண்டிருக்கையில், யூலியா அறுப்பு அரிவாளை எடுத்துச் சென்று புல் அறுத்தாள். அவள் திறம்பட வேலை செய்வதாய் எங்களுக்குத் தோன்றியது.

''வெளுத்து வாங்குகிறாளே!'' என்று வியந்து கொண் டோம்.

திடுமெனக் கூவியவாறு அரிவாளை அவள் தூக்கி எறிந் தாள். அவள் கையில் இரத்தம் வழிந்தது.

குடி தண்ணீர் புட்டியை எடுத்து என் கைக்குட்டையை நீரில் நனைத்து காயத்தின் மேல் வைத்து அழுத்தினேன். இரத்தக் கசிவு சிறுகச் சிறுக நின்று போயிற்று.

''காயம் ஆறும் வரை உன்னால் வேலை செய்ய முடியாது. நீ புல்வெளியின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு உருளைக் கிழங்கை வேக வை. வீடும் உன் பார்வையில் இருக்கும், யாராவது நம்மைக் கூப்பிட்டால் உடனே தெரியும். நேற்று அப்பா கூப்பிட்டது நம் காதில் விழவில்லை, அவர் கோபித்துக் கொண்டார்.''

''சரி, நீ நெருப்பை மூட்டி எரிய விடு, நான் குச்சிகளை எடுத்து வந்து போடுகிறேன்.''

தோப்பின் ஓரத்தில் நாங்கள் அடுப்பு அமைத்து எரிய வைத்தோம். தண்ணீர்ச் சட்டியை அதன் மேல் வைத்து விட்டுப் புல் பிடுங்குவதற்காக வெளியினுள் சென்றோம். அறுப்பு அரிவாளில் ஏதோ குறை இருப்பதாய்ச் சொல்லி அதை நாங்கள் தூர வைத்து விட்டோம். மதிய உணவு அருந்துவதற்காக தோப்புக்குத் திரும்பிய போது ஒரு சாக்குக்கு வேண்டிய புல்லைத்தான் நாங்கள் சேர்க்க முடிந்தது. உருளைக்கிழங்கு வெந்திருந்தது; ஆனால் ஆறிப் போய்விட்டது.

''நல்லது தான், இந்த வெயிலில் சூடான கிழங்கைத் தின்னவா முடியும்?''

மரங்களுக்கு அடியில் விரிப்பைப் போட்டு அதில் படுத்துக் கொண்டோம். யூலியா சாப்பாட்டை எடுத்து வந்தாள். எங்கும் அமைதி நிலவிற்று. ஏனோ தெரியவில்லை, மலைகளில் நண்பகலில் எப்போதும் அமைதியாய் இருக்கிறது. காற்றிலே அமிழ்தத்தின் மணம் கமழ்ந்தது, சில பறவைகள் பாட்டிசைத்தன, அங்குமிங்கும் குச்சிகள் முறிந்து விழும் ஓசை காதுக்கு எட்டிற்று. கீழே ஆறு சலசலத்தது. வீட்டில் என்ன நடைபெறுகிறதென்று பார்ப்பதற்காக யூலியா தோப்பின் முனைக்குச் சென்றாள்.

''வீட்டிற்கு யாரோ வருகிருர்கள், அவர்களை வரவேற்க எல்லோரும் வெளியே வந்து நிற்கிருர்கள்'' என்று அங்கிருந்து அவள் எங்களுக்குக் குரல் கொடுத்தாள்.

நாங்களும் அவளிடம் ஓடினேம். விளையாட்டு வீடு போல் சிறிதாய்க் கீழே தெரிந்தது எங்கள் குடிசை. வாயில் முகப்புக்கு அருகே சிலர் குதிரைகளில் வந்திறங்கினர்கள். எறும்பு போன்ற உருவங்கள் அங்குமிங்கும் விரைந்து கொண்டிருந்தன.

''சீக்கிரம் புறப்படுங்கள், வீட்டுக்குப் போவோம்'' என்றுன் சோன்யா. ''காட்டிலிருந்து விலங்குக் குட்டி எதா வது கொண்டு வந்திருக்கிருர்களோ, என்னமோ, போய்ப் பார்ப்போம்.''

நான் குதிரை மீது ஏறிப் புறப்படுவதற்குள் சோன்யா மலைச் சரிவில் வளைந்து நெளிந்து போய்க் கொண்டிருந்தாள். அடுத்தபடி ஈஷ்கா மீது புறப்பட்ட யூலியா அதன் கழுத் துக்கு மீண்டும் மீண்டும் வழுக்கிச் சென்று ஈஷ்காவின் தாடையில் மொத்தி அதை திரும்பச் செய்தாள்.

சீக்கிரமாய்ப் போக வேண்டுமென்று நான் குதிரையைச் சரிவிலே நேரே கீழ் நோக்கி ஓட்டிச் சென்றேன். இதனுல் இயல்பாகவே சரிந்து குதிரையின் காதுக்கு வந்து விட்டேன். குதிரை தலையைக் கவிழ்த்து மெதுவாய் ஆட்டிற்று, நான் அதன் காலுக்கருகே போய் விழுந்தேன்.

விழுந்த அதிர்ச்சி நீங்கியதும் என் சகோதரிகள் எனக்கு நேர்ந்ததைக் கவனித்திருப்பார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். சோன்யாவும் யூலியாவும் திரும்பிப் பார்க் காமலே சரிவிலே போய்க் கொண்டிருந்தார்கள். நத்தாஷா இன்னமும் புல்வெளியில் மீல்க்காவுக்கு அருகே நின்று சவா ரிக்குத் தயார் செய்து கொண்டிருந்தாள். எனக்கு நேர்ந் ததை அவள் கவனித்திருந்தாள், நான் திருதிருவென்று விழிப் பதைப் பார்த்ததும் அவளுக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை.

பிறகு அவள் மீல்க்காவை அவிழ்த்து அதன் மீது ஏறிக்

கொண்டாள். அவளுடைய ஆணைகளைப் பொருட்படுத்தாமலே அது ஈஷ்காவை எட்டிப் பிடிப்பதற்காக நேரே கீழ் நோக்கிப் பாய்ந்தோடிற்று.

என்னைத் தாண்டி நத்தாஷா அவளது மீல்க்காவில் விர்ரெனப் பறந்த போது அவள் முகத்தில் சிரிப்பு மறைந்து திகில் குடி கொண்டிருக்கக் கண்டேன். உயிரோடு மலையடிவாரத்துக்குப் போய் சேர வேண்டுமே என்று கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு மீல்க்காவின் முதுகோடு முதுகாய் ஒட்டிக் கொள்ள முயன்றாள் அவள். மீல்க்கா பரபரப்புற்றுப் பறந்தோடிற்று. ஈஷ்காவையும் கினெதோவையும் தாண்டிச் சென்றது. மலையடிவாரத்தை அடைந்ததும் திடுமெனத் திரும்பி தலையைக் கவிழ்த்துக் கொண்டு பின்னங்கால்களை உயர்த்தி உதைத்தது.

சிறுமியின் சிவப்புச் சட்டையும் வெறுங்கால்கள் இரண்டும் காற்றிலே விநோதமாய்த் துடித்தாடிவிட்டு மறையக் கண்டோம்.

நத்தாஷா கர்ணமடித்து மலையடிவாரத்தில் உருண்டு சென்று ஒரு புதருக்குள் மறைந்தாள். மீல்க்கா தொடர்ந்து ஆவேசமாய் உதைத்துக் கொண்டே வீட்டை நோக்கிப் பாய்ந்தோடிற்று.

நாங்கள் விரைந்தோடிச் சென்று பார்த்தபோது நத்தாஷா ஒரு பாறைக்குப் பக்கத்தில் கலங்கிய நிலையில் உட்கார்ந்திருந்தாள். தூசியும் மண்ணுமாயிருந்த அவள் முகத்தில் இரு கீறுகள் தெரிந்தன. கண்ணீரை ஏற்கெனவே அவள் துடைத்துக் கொண்டு விட்டாள். அவள் அழுதது எங்களுக்குத் தெரியாதென்று நினைத்து மனதைத் தேற்றிக் கொண்டாள்.

நாங்களும் தெரிந்ததாய்க் காட்டிக் கொள்ளவில்லை.

''நத்தாஷா, நீ தைரியசாலிதான்! அழுது கொண்டிருப்பாய் என்றல்லவா நாங்கள் ஓடோடி வந்தோம்'' என்றாள் சோன்யா.

''கழுதையில் சவாரி செய்தாலே இப்படித்தான்! வழுக்கி வழுக்கி விழ வேண்டியதுதான்!'' என்று நத்தாஷா முணுமுணுத்துக் கொண்டாள்.

''செல்லம் கொடுத்து மீல்க்காவை நீ கெடுக்கிறுய் என்று சொல்லி வந்தேன், நீ கேட்கவில்லே'' என்று யூலியா அமத்தலாய்க் கூறிஞள். ''இந்த ஈஷ்காவும்தான் சொன்ன படி கேட்பதில்லே, இருந்தாலும்... இதிலிருந்து விழுகிற போதும் எப்படி வலிக்கிறது தெரியுமா?'' என்று உண்மையை மறைக்காமல் சொல்லி முடித்தாள்.

''குதிரையிலிருந்து விழுகிறேம், அது நமக்குப் பெரி தாய்த் தெரிவதில்லே'' என்றேன் நான். ''சிறு புடைப்புக்கு மேல் ஒன்றும் ஆவதில்லே, எழுந்து விடுகிறேம். ஆனல் கழுதையில் மட்டும் ஏன் இப்படி...''

''ஏனென்றல் குதிரை உயரமாய் இருக்கிறது. அதிலிருந்து விழும்போது காற்று தாங்கிப் பிடித்துத் தடுக்கிறது. ஆனல் கழுதையிலிருந்து விழும்போது தரைக்கும் உடலுக்கும் போதிய தூரம் இல்லே.''

''இந்த விளக்கம் சரியானதாய்த் தெரியவில்லே. இது உண்மையானல் நாற்காலியிலிருந்து விழுவதை விட கூரை யிலிருந்து விழுவது நல்லதாக அல்லவா இருக்க வேண்டும்?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லே'' என்று சொல்லி நத்தா ஷா சிரமப்பட்டு எழுந்து நின்றள். சரியானபடி பாறையில் மோதி அவளுக்கு அடிபட்டுவிட்டதென்பது எங்களுக்குப் புலப்பட்டது. ''அதெல்லாம் ஒன்றும் இல்லே'' என்று திரும் பவும் சொல்லிக் கொண்டாள்.

அவள் கூற விரும்பியதைச் சொல்லாமலே நொண்டிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

ஆனல் அவள் என்ன சொல்ல விரும்பிஞள் என்பது எங்களுக்குப் புரிந்தது: ''இருந்தாலும் இந்த மீல்க்கா நன்றி கெட்ட பிராணி!''

கைகள் கொப்புளித்துப் போனதால் ''புல் அறுக்கும்'' வேலையை நாங்கள் ஒத்திப் போட வேண்டியதாயிற்று. உலர்ந்த புல்லைக் கட்டு கட்டி அடுக்கிப் போர் போட்டோம்.

குளிர்காலத்தில் கழுதைகளுக்கு வேண்டிய உலர்புல் நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது. ஒரு பெரிய போர் உயர்ந் தெழுந்து விட்டது, இன்னொரு பாதிப் போர் காய்ந்து கொண்டிருந்தது.

கைக் கொப்புளங்கள் யாவற்றையும் பாழாக்கி வந்தன! பொழுது சிறப்பாய் இருந்தது, ஆயினும் எங்களால் ஒன்றும் செய்வதற்கில்லை, நாட்கள் வீணாகி வந்தன.

செப்டம்பர் நடுப் பகுதி. பகற்பொழுதில் சூடு குறைந்து வந்தது, இரவில் குளிர் அதிகரித்துச் சென்றது.

மலைகளின் பனி ஆற்றிலிருந்து குளிர் காற்று வீசிற்று. ஆயினும் வெயிலின் சூடு மறைந்து விடவில்லை. பகற் பொழுது பிரமாதமாகவே இருந்தது.

காட்டில் ஏற்கெனவே இலையுதிர் காலம் ஆரம்பித்து விட்டது. அசோக மரங்களும் ஹாத்தார்ன் புதர்களும் செந் தணல் போல் தகதகத்தன. பீச் மரங்கள் மஞ்சள் உடை தரித்து நின்றன, ஹாப் கொடிகள் குலை குலையாய்க் காய்த்துத் தொங்கின.

சில நாட்களாய் நாங்கள் பொழுது போகாமல் உட்கார்ந் திருப்பதைப் பெற்றோர்கள் கண்ணுற்றனர்.

''நீங்கள் மலைகளுக்குச் சென்று குளிர் காலத்துக்கு வேண்டிய ஹாப் காய்கள் பறித்து வாங்களேன்'' என்று அம்மா எங்களிடம் சொன்னார். ''நாளைக்குக் காலையில் கிளம் புங்கள். பணியாரம் செய்து தருகிறேன், எடுத்துக் கொண்டு புறப்படுங்கள்'' என்றார்.

அதிகாலையில் நாங்கள் புறப்பட்டோம். ஆற்றின் தலைப் புற பகுதியில் ஹாப் கொடிகள் நிறைய இருந்தன. அப்படியே ஆற்றில் மீனும் பிடிக்கலாமென்று பட்டாம் பூச்சி வலைகளைக் கையில் எடுத்து சென்றோம்.

''எங்காவது விழுந்து காயப்படுத்திக் கொண்டு வந்து சேராதீர்கள்'' என்று வழக்கம் போல் பெற்றோர்கள் எங்களை எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தார்கள்.

பாதை செங்குத்தாய் உயர்ந்து சென்றது, பாறைகள் மிகுந்திருந்தன. கழுதைகளின் குளம்புகள் கல்லில் பட்டு ஓசை எழுப்பின. பாறையிலிருந்து பாறைக்குத் தாவி பாட்டு பாடிக் கொண்டு சென்றோம்.

எங்கள் அதிர்ஷ்டம் நாங்கள் சென்ற வழியில் ஹாப் கொடிகள் ஏராளமாய் மண்டியிருந்த சிறந்த தோப்பு ஒன்று இருந்தது. நீளமான கயிற்றைக் கட்டி ஈஷ்காவை மேயவிட்டோம். கொடிகள் அடர்த்தியாய் படர்ந்திருந்த மரங்களில் ஏறி காய்களைப் பறிக்கத் தொடங்கினோம்.

''இங்கே கொடி எவ்வளவு அடர்த்தியாய் இருக்கிறது பாரேன்! காய்கள் கணக்கின்றி இருக்கின்றன.''

''இங்கும் தான்! இப்படி வந்து பார், தெரியும்!''

''அதோ பாருங்கள்! ஒரு மணி நேரத்தில் ஒரு சாக்கை நிரப்பி கொண்டு விடலாம்!''

ஆரம்பத்தில் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு பேச்சு அடங்கி விட்டது, கருமமே கண்ணாய் வேலை செய்தோம். கொடிகளிலிருந்து கடுமையான நெடி மூக்கில் ஏறிற்று. எனக்குக் கை மரத்து வருவதாய் நினைத்தேன். பெரிய திண்டு ஒன்றை யாரோ என் தலை மீது வைத்து விட்டது போல் இருந்தது. பறிப்பதை நிறுத்தி விட்டுச் சுற்றிலும் பார்த்தேன். எனக்கு இடப்புறத்திலும் வலப்புறத்திலும் என் சகோதரிகள் மரக் கிளைகளிலே ஆடியசைந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் கைகள் ஓய்ந்து விட்டதாய் நினைத்தேன்.

இது பற்றி அவர்களிடம் கேட்க நான் வாயெடுத்த நேரத்தில், யூலியா அமர்ந்திருந்த கிளை வெடுக்கென மேல் நோக்கிப் பாய்ந்தது.

''யூலியா கீழே புதர்களில் விழுந்து விட்டாள்!'' என்று எனது சோர்வினை உதறித் தள்ளி விட்டுப் பலக்கக் கத்தினேன்.

நாங்கள் அவசரமாய் கீழே இறங்கி, யூலியா விழுந்த இடத்துக்கு ஓடினோம். அவள் தரையிலே கிடந்தாள். மயக்கக் கலக்கம் கொண்டவளாய்த் தோன்றினாள்.

''யூலியா! யூலியா! விழித்துக் கொள்! எழுந்திரு!'' என்று கத்தியவாறு அவளை ஆட்டிக் குலுக்கினோம்.

அவள் முக்கி முனகிக் கொண்டு எழுந்து நின்றாள், புதர்களிலிருந்து நாங்கள் அவளை வெளியே அழைத்து வந்தோம்.

''ஆற்றங்கரைக்குப் போகலாம், இனி இங்கு இருக்க வேண்டாம்!''

நாங்கள் தோப்பிலிருந்து வெளியே சென்று வெளியின் குறுக்கே ஓட ஆற்றங்கரையை அடைந்தோம். ஆற்றில் இறங்கி நீரை அள்ளி முகத்தில் அடித்துக் கொண்டோம்.

''வாங்க, எல்லோருமாய் நீந்தலாம்!''

''நீந்தி விட்டு மீன் பிடித்துச் சமைத்துச் சாப்பிடுவோம். அதற்கு மேல் இந்தக் கேடுகெட்ட ஹாப் காய்களைப் பறித்து மூட்டைகட்டலாம்.''

''என்னை அவை மயங்கி விழச் செய்து விட்டன'' என்று கூறி யூலியா ஆடைகளை அவிழ்த்து எறிந்து விட்டு நீருக்குள் குதித்தாள்.

நாங்கள் நீந்தினோம், குளிரால் பற்கள் அடித்துப் படபடக்கும் வரை விளையாடினோம். பிறகு கற்களில் வழுக்கிப் பாதங்களைச் சிராய்த்துக் கொண்டு அங்குமிங்கும் சென்று எங்கள் வலைகளை அமுத்தி மீன் பிடித்தோம். ஐந்து சிறு மீன்கள் கிடைத்தன.

கரையில் நெருப்பு மூட்டி மீன்களை அவித்து வெங்காயமும் உருளைக் கிழங்கும் சேர்த்துக் கறியாக்கினோம். பிறகு அவசர அவசரமாய்க் கரண்டிகளை நேரே சட்டியில் விட்டு எடுத்து வாய் நிறையப் போட்டுக் கொண்டோம். சாப்பிட்டுக்

கொண்டே சுவையான விஞ்ஞான விவாதத்தில் இறங்கினோம். விவாதப் பொருள் இதுதான்: ஈஷ்கா வாயைப் பிளந்து கொண்டு கத்தும்போது, வாலை அது விறைப்பாய் நீட்டிக் கொள்வதன் காரணம் என்ன?

''வாலை கீழே அழுத்தினோமானால், கத்துவதை அது நிறுத்திக் கொண்டு விடும், தெரியுமா?''

''வாலை அழுத்தினால் அதற்குக் காற்று குறைந்து விடுகிறது போலும்.''

''மீல்க்காவுக்கும் இப்படித்தான் ஆகுமா, என்ன?''

அப்போது ஒரு பயங்கரக் கத்தல் கேட்டது. நாங்கள் துள்ளியெழுந்து காது கொடுத்துக் கேட்டோம்—ஈஷ்காவின் கத்தல் அது.

''ஏதோ நேர்ந்து விட்டது! ஓடி வாருங்கள்!''

மீல்க்கா மலையில் எங்களுக்கு மேலே உயரத்தில் திரிந்து கொண்டு இருந்தது. ஆனால் ஈஷ்கா கட்டிப் போடப்பட்டிருந்தது. மீல்க்காவிடம் போக வேண்டுமென்று நினைத்து அது கத்தி விட்டுப் புறப்பட்டது. ஆனால் கயிற்றில் கால் சிக்கிக் கீழே விழுந்து மலைச் சரிவிலே உருண்டு சென்றது. கயிறு அதன் கழுத்தில் சுருக்காய் இறுகி நெரித்தது.

நாங்கள் மேலே ஏறி ஓடி அதனிடம் சென்ற போது ஒரு குழியில் தொங்கி மூச்சுத் திணறிப் போய் அது செத்துக் கொண்டிருந்தது. வாயில் நுரை வழிந்தது, நாக்கு வெளியே தொங்கிற்று. ஆவேசமாய் கால்களை உதைத்துக் கொண்டிருந்தது. நாங்கள் கழுத்தில் கயிற்று முடிச்சைத் தளர்த்த பலவாறாகவும் முயன்று பார்த்தோம், ஆனால் சுருக்கு மேலும் இறுகியதே ஒழிய தளரவில்லை.

''ஐயோ, என்ன செய்யலாம்? சுருக்கு இறுகிச் செல்கிறதே!''

ஈஷ்காவின் தலையை சோன்யா தாங்கிப் பிடித்துக் கொண்டாள். யூலியாவும் நானும் கயிற்றை அவிழ்ப்

பதற்காகத் துடித்துக் கொண்டு முயற்சி செய்தோம், ஆனால் முடியவில்லை. ஈஷ்கா எங்கள் கரங்களில் செத்துக் கொண்டிருந்தது.

பிறகு திடுமென நத்தாஷா கத்தினாள்:

''இதோ, கத்தி இருக்கிறது! என்னிடம் கத்தி இருக்கிறது!''

ஆற்றங் கரையில் அவள் வெங்காயம் நறுக்கிக் கொண்டிருந்தாள். கத்தியுடன் இங்கு ஓடி வந்தாள்.

ஈஷ்கா சுருக்கிலே தொங்கியதைப் பார்த்து நாங்கள் கதி கலங்கி விட்டதால், அவள் கையில் கத்தி இருந்ததைக் கவனிக்கவில்லை.

''கத்தியைக் கொடு! சீக்கிரம்! கயிற்றைப் பிடித்துக் கொள்!''

நடுங்கும் கைகளால் அந்த முரட்டுக் கயிற்றைக் கத்தியால் அவசரமாய் அறுக்க முயன்றோம். கத்தி கறுக்காய் இல்லை, வெட்டித் துண்டாடுவதற்கு பதில் அது அறுத்துக் கொண்டிருந்தது.

''அழுத்தி நறுக்கு! அழுத்து!''

கத்தி கிறீச்சிட்டுக் கயிற்றை அறுத்துச் சென்றது. யூலியாவும் நத்தாஷாவும் கவிழ்ந்து கொண்டு அதன் அசைவை உற்று நோக்கினர்.

முடிவில் கயிறு அறுந்தது, சுருக்கு தளர்ந்தது. ஈஷ்காவின் தலை புல் தரையிலே சாய்ந்தது, ஈஷ்கா ஆழமாய் மூச்சை இழுத்தது.


அது அசைவின்றி அப்படியே சில நிமிடங்கள் கிடந்தது. பிறகு தலையை ஆட்டிக் கொண்டு குதித்தெழுந்தது. உடனே சுற்றிலும் திரும்பி மீல்க்காவைத் தேடிற்று.


'இயீ-ஹா! இயீ-ஹா!' அடித் தொண்டையால் ஈஷ்கா கத்திற்று, அதன் வால் விறைப்பாய் நீண்டிருந்தது.

'இயீ-ஹா! இயீ-ஹா!' மீல்க்கா பதிலளித்தது.

ஹாப் கொடி தலையிலே மகுடமிட்டிருக்க, குறும்பின் அவதாரமாய் மலைச் சரிவில் உயரமான ஓர் இடத்திலிருந்து அது எட்டிப் பார்த்தது.

'இயீ-ஹா! இயீ-ஹா!' மலைப் பள்ளத்தாக்கு ஆனந்த மாய் எதிரொலித்தது.





வாஸ்கா

வேட்டைக்காரர்கள் திரும்பி வந்தபோது நாங்கள் வீட்டிற்குப் பின்னுல் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தோம். வாயில் முகப்பிலிருந்து கூச்சல் கேட்டது:

''சீக்கிரம்! ஓடி வாங்க! என்ன கொண்டு வந்திருக்கிருர்கள், பாருங்கள்!''

நாங்கள் ஓடி வந்து பார்த்தோம்.

வண்டிகள் வெளிமுற்றத்துக்குள் வந்தன. அவற்றில் விலங்குத் தோல்களும் ஆட்டுக் கொம்புகளும் காட்டுப் பன்றிகளின் உடல்களும் இருந்தன. கடைசி வண்டியின் பக்கத்தில் அப்பா நடந்து வந்து கொண்டிருந்தார். வண்டிக்காரர் இருக்கையின் அருகே முழித்துச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு குனிந்து உட்கார்ந்திருந்தது ஒரு புலிக் குட்டி. ஆம், புலிக் குட்டியேதான். அது களைத்துப் போயிருந்தது, மேலெல்லாம் புழுதி படிந்திருந்தது. வண்டி வெளிமுற்றத்தின் குறுக்கே தடதடத்து ஓடிய போது புலிக் குட்டி தன் நகங்களை வண்டிக் கூண்டில் அழுத்திப் பதித்துக் கொண்டது. வாயில்

முகப்பில் காத்திருந்தோருக்குப் பக்கத்தில் வந்து நின்றது வண்டி. இவர்களைப் பார்த்ததும் புலிக் குட்டி பயந்து போய் பின்னால் நகர்ந்து கலக்கத்துடன் அப்பாவை உற்று நோக்கிற்று.

''வாஸ்கா, வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டோம்'' என்று அப்பா அதனிடம் சொன்னார்.

குட்டியைத் தூக்கிக் கொண்டு அவர் வாயில் முகப்புக்குள் வந்தார்.

வீட்டுக்குள் வந்தது புலிக் குட்டி ஆயிற்றே! எங்களுக்கும் கலக்கமாய்த்தான் இருந்தது.

''அங்கே வேண்டாம்! அது என் பொம்மைகள் இருக்கும் இடம்'' என்று கத்தினாள் எங்களில் மிகவும் சிறியவளான நத்தாஷா.

''புலிகள் பொம்மைகளைத் தின்பதில்லை'' என்றாள் யூலியா.

எதோ ஆலோசித்து விட்டு அவள் மேலும் கூறினாள்:

''அதற்கு வயிறு நிறையும்படி பார்த்துக் கொள்ள வேண்டும், இல்லையேல் கடிக்க ஆரம்பித்து விடும்.''

''ஆம், அது புலி, பூனையல்ல!''

''கண்ணைப் பாரேன், கோலிக் குண்டு மாதிரி இருக்கிறது!... வாலைப் பார்த்தாயா நீ? எவ்வளவு பெரிது! தரையிலே புரளுகிறதே!''

''அதெல்லாம் இல்லை! எப்போதும் நீ இப்படித்தான், ஒன்றை இரண்டாக்கிச் சொல்லுவாய்.''

''சரி வா, போய்ப் பார்ப்போம்!''

நாங்கள் அடித்து மோதிக் கொண்டு படிகளில் ஏறி ஓடினோம். புலிக் குட்டி அங்கும் இங்கும் நடை போட்டு ஒவ்வொன்றையும் கவனமாய் முகர்ந்து பார்த்துக் கொண்டிருந்தது. ஆடிக் குலுங்கியவாறு வண்டியில் நெடுந்தொலைவு வந்திருந்த அதற்கு தலை சுற்றியது போலும் காலுக்கடியில் தரை அசைந்தாடுவதாய் நினைத்ததோ, என்னவோ? குடி

மயக்கம் கொண்டது போல அது தள்ளாடிற்று. பிறகு திடுமென உட்கார்ந்து கண்ணை மூடிக் கொண்டது. ஆனால் சற்று தெளிவடைந்ததும் உடனே எழுந்து யாவற்றையும் முகர ஆரம்பித்தது. கட்டாயம் செய்தாக வேண்டிய ஒரு வேலை என்பது போல் அப்படி அது ஒவ்வொன்றாய் முகர்ந்து பார்த்துச் சென்றது.

கைப்பிடிக் கிராதிக் கம்பியின் மேல் போடப்பட்டிருந்த பஞ்சடைத்த கோட்டின் கை கீழே தொங்கிக் கொண்டிருந்தது. வாஸ்கா பாதத்தால் தட்டி அதைக் கீழே இழுத்தது. சோன்யா உடனே சிரித்தாள். புலிக் குட்டி தலையை உயர்த்தி அவளை உற்றுப் பார்த்தது.

இப்பொழுது நாங்கள் அதை நன்றாய்ப் பார்த்துப் பரிசீலித்தோம். அது ஆறு மாதமான சென்ட் பர்னார்டு நாய்க் குட்டியின் உயரமுடையதாய் இருந்தது. தலை பருத்துப் பெருத்திருந்தது. உருண்டையான பச்சைக் கண்களும் குட்டைக் காதுகளும் பெற்றிருந்தது. அதன் முன்னங்கால்கள் கனத்து வலு மிக்கனவாகவும், பின்னங்கால்கள் மிக மெல்லியனவாகவும் இருந்தன. மெலிந்து எலும்பாய் இருந்த உடலும் நீளமாய் இருந்த வாலும் கொண்டிருந்தது.

''பச்சிளம் குட்டியாய் இருக்கிறது'' என்றாள் நத்தாஷா.

மெய்தான், அது சின்னஞ் சிறியதுதான். பாங்கற்றதாக, மிகச் சிறியதாக, தன்னந்தனியே விடப்பட்டதாய் இருந்தது. அப்பாவின் காலில் ஒண்டிக் கொண்டதைப் பார்த்த போது, ''இந்த இடத்துக்குப் புதியவன், சிறியவன், யாரும் எனக்குத் தீங்கிழைக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று அது அப்பாவிடம் சொல்வது போலிருந்தது.

அப்பா குதிரைகளை வண்டியிலிருந்து அவிழ்த்து, சாமான்களை எடுத்து வைத்து விட்டு, முகம் கழுவிக் கொண்டிருக்கையில் நாங்கள் குட்டியை வீட்டிற்குள் தூக்கிக் கொண்டு போய் மிகவும் மதிப்பிற்குரிய இடமான சோபாவில் அமரச் செய்தோம்.

அதனிடம் தனிச் சிறப்பானது எதாவது இருக்குமா என்று அதை ஆராய்ந்தோம். சிறு கிண்ணத்தில் பாலை ஊற்றி அதற்குத் தந்தோம். பாலைக் குடித்து விட்டு அது சோபாவில் படுத்துக் கொண்டது, கண்களைச் சுளித்துக் கொண்டு விளக்கைப் பார்த்தது. களைப்பாய் இருந்தபோதிலும், அது தூங்கவில்லை. காதை ஓயாமல் ஆட்டிக் கொண்டிருந்தது.

இரவு சாப்பாடு எடுத்து வந்து வைக்கப்பட்டதும் அப்பா அறைக்குள் வந்தார். புலிக் குட்டி தலையை உயர்த்தி அவர் பக்கமாய்ச் சாய்த்து மன நிறைவுடன் உறுமிற்று.

''கேட்டீர்களா? ஆனந்தமாய்ச் சிரித்துக் கொள்கிறது'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூவினாள் நத்தாஷா.

அப்பா அதைத் தடவிக் கொடுத்தார். கால்களை நீட்டி அது சோபாவில் படுத்துக் கொண்டது, அப்படியே தூங்கி விட்டது. நாங்கள் நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

நாங்கள் சாப்பிட்ட போது அப்பா எங்களுக்கு அதைப் பற்றிய முழுக் கதையையும் சொன்னார். எங்கள் நகரத்திலிருந்து சுமார் நானூறு கிலோமீட்டர் தூரத்தில், பல்ஹாஷ் என்றோர் ஏரியின் அருகே நாணற் புதரில் இந்தக் குட்டி பிடிக்கப்பட்டது. அப்பாவின் நண்பரான கசாஹ் வேட்டைக்காரர் ஒருவர் இரு புலிகளின் பாதச் சுவடுகளைப் பின்தொடர்ந்து சென்று அந்தப் புலிகளின் உறைவிடத்தைக் கண்டுபிடித்தார். அந்தப் பகுதியில் புலிகள் இருந்ததில்லை. இவ்விரு புலிகளும் பாரசீகத்திலிருந்து அங்கு வந்திருந்தன. அப்பாவுக்கு இந்தச் செய்தியை தெரிவித்து விட்டு அவர் இவற்றைக் கண்காணித்து வந்தார். அவை அங்கு வேட்டையாட வந்தவையல்ல, பெண்புலி குட்டி போடும் நிலையில் இருந்ததால் இரண்டும் மறைவான இடத்தைத் தேடி அங்கே வந்திருந்தன என்பதை அவர் கண்டு கொண்டார்.

சில நாட்களுக்குப் பிறகு பெண்புலி எங்கோ மறைந்து விட்டது. ஆண்புலியும் கணவாயைக் கடந்து அப்பால் சென்றது திரும்பி வரவே இல்லை.

அப்பா வந்து சேர வேண்டிய நாள் நெருங்கி விட்ட தால் அந்த வேட்டைக்காரர் பெண்புலியைத் தேடிப் பல தரம் அப்பகுதியின் குறுக்கே போய் வந்து விட்டார். பிறகு ஒரு நாள் புலியின் அடிச்சுவடுகள் மணலில் புதிதாய்ப் பதிந் திருக்கக் கண்டார். அந்த சுவடுகள் ஆற்றை நோக்கிச் சென்றன.

கசாஹ் வேட்டைக்காரர் புதருக்கிடையே மறைந்து கொண்டு கரையோரத்தில் வளர்ந்திருந்த நாணல்களை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்தார். ஆற்றுக்கு அக்கரையில் பெண்புலி செல்வதைப் பார்த்தார். பளுவான ஏதோ ஒன்றை அது வாயில் கவ்விக் கொண்டு புதர்களுக் கிடையே போய்க் கொண்டிருந்தது. திடுமென அது வாயி லிருந்ததைக் கீழே போட்டு விட்டு ஆற்றில் நீந்தி இக்கரைக்கு வந்து வேட்டைக்காரரைக் கடந்து சென்றது. என்ன நடந் திருக்க வேண்டுமென்று வேட்டைக்காரர் ஊகித்துக் கொண்டு விட்டார். அவர் தமது குதிரை மீது ஏறினர், பெண்புலியை விரட்டிச் செல்வதற்கு பதில், ஆற்றுக்கு அக்கரையில் அந்தப் புலி வாயில் கவ்விச் சென்று பிறகு கீழே போட்டு விட்டு வந்ததே அந்த இடத்துக்கு விரைந்தார்.

அவர் எதிர்பார்த்தது சரியாகவே இருந்தது. அங்கே நாணல் அடர்ந்திருந்த இடத்தில் மிகச் சிறிய இரு புலிக் குட்டிகள் ஒன்றையொன்று அணைத்துக் கொண்டு பதுங்கி யிருந்தன.

வேட்டைக்காரர் அவற்றை எடுத்து இரு பைகளில் போட்டுக் கொண்டு குதிரை மீதேறினர். குட்டிகள் கீச் சிட்டுக் கத்தி முண்டிக் கொண்டு வெளி வர முயன்றன. ஆனல் வேட்டைக்காரர் முழங்காலால் அவற்றை அழுத்திக் கொண்டு குதிரையை விரட்டி ஓட்டினர்.

தனக்கு ஏற்படக் கூடிய ஆபத்தை உணர்ந்திருந்த கசாஹ் வேட்டைக்காரர் வேகமாய் குதிரையை ஓட்டிச் சென்றார். பெண் புலி அவரை விரட்டிக் கொண்டு வந்தால், அவருடைய களைத்துப் போன கிழக் குதிரையை அது எளிதில் எட்டிப் பிடித்து, குதிரையையும் புலிக் குட்டி கவர்பவரையும் கொன்று விடுமென்று அவருக்குத் தெரியும். அவரிடமிருந்த துருப்பிடித்த துப்பாக்கி அவருக்கு உதவியாய் இருக்காது: அதன் அடிக் கட்டை தளர்ந்து பிரிந்து வந்து விட்டது, கந்தல் துணியால் துப்பாக்கிக் குழாயுடன் கட்டப் பட்டிருந்தது.

அந்த வேட்டைக்காரர் அஞ்சா நெஞ்சம் கொண்டவர் தான்—கிழக் குதிரையும் உதவாத துப்பாக்கியும் தவிர



தமக்குப் பாதுகாப்பு வேறு இல்லை என்றாலும் துணிந்து புலிக் குட்டிகளைத் தாய்ப் புலியிடமிருந்து கவர்ந்து கொண்டு ஓடினார்.

தாய்ப் புலியின் சீற்றத்திலிருந்து தப்புவதற்கான வழி குறித்து ஆலோசித்தவாறு அவர் ஒரு குக்கிராமத்தை வந்தடைந்தார். நல்ல வேளையாய் அந்நேரத்தில் அப்பாவும் ஏனைய வேட்டைக்காரர்களும் அந்த கிராமத்துக்கு வந்து சேர்ந்திருந்தார்கள்.

அப்பா தமது நண்பர் எவ்வளவு பெரிய ஆபத்தைத் துணிவுடன் சமாளித்தார் என்பதைக் கண்டதும், தமது சிறந்த துப்பாக்கியை அவருக்கு அன்பளிப்பாய்த் தந்தார். கசாஹ் வேட்டைக்காரர் மனம் குளிர்ந்து போய், தமது புலிக் குட்டிகளில் ஒன்றை அப்பாவிடம் கொடுத்தார்.

அந்தத் தொலை தூரக் கிராமத்திலிருந்து எங்கள் வீட்டுக்கு வந்து சேர்வதற்குள் வாஸ்கா படாத பாடு பட வேண்டியதாகி விட்டது. ஒட்டகப் பயணக்குழு ஒன்றுடன் சேர்ந்து அவர்கள் ஏறத்தாழ பாதித் தொலைவைக் கடக்க வேண்டி



யிருந்தது. பாவம் வாஸ்கா, ஒட்டகத்தின் ஆட்டமும் அசைவும் அதை வதைபடச் செய்தன. இதனுல் அப்பா சில நேரங்களில் ஒட்டகத்திலிருந்து கீழே இறங்கி வாஸ்காவைக் கையில் தூக்கிக் கொண்டு நடந்தார்.

இவர்களது நட்பு இவ்வாறுதான் ஆரம்பமாயிற்று.

''வாஸ்காவுக்கு இந்தப் பயணம் மெய்யாகவே சகிக்க முடியாத துன்பமாய் இருந்தது'' என்று கூறி முடித்தார் அப்பா. ''ஒரு தரம் நான் பயந்தே விட்டேன். அவ்வளவு தான், வாஸ்கா இனி உயிர் பிழைக்காது என்றே நினைக்க வேண்டியிருந்தது. தரையிலே அது படுத்துக் கிடந்தது, விழிகள் மேல் நோக்கிச் செருகிக் கொண்டன, கால்கள் நடுங்கித் துடித்தன. முடிவு நெருங்கி விட்டதாய்த் தோன்றி யது. ஆனுல் எப்படியோ அதற்கு மூச்சு திரும்பிற்று, பிழைத்து எழுந்து விட்டது.

''இதற்காக நாங்கள் என்ன பாடு பட்டோம்? பிழைத்து எழாமல் இருந்திருக்குமா இது?'' என்று இடை மறித்தார் அப்பாவுடன் வந்திருந்த வேட்டைக்காரர்களில் ஒருவர். ''இந்தப் புலிக் குட்டிக்காக வேண்டி, நாங்கள் மீனவர் கிராமத்தில் ஒரு முழு வாரம் அல்லவா தங்க வேண்டியதா யிற்று? துருக்கி சுல்தானுய்க் கருதி அல்லவா இதற்குப் பணிவிடை புரிந்தோம்'' என்முர் அவர்.

நாங்கள் எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தோம்.

''ஏன் தூங்கப் போகாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று அம்மா உரக்கக் கேட்டார். ''தெய்வமே, மணி பன்னி ரண்டு ஆகி விட்டதே! இந்த நிமிடமே போய்ப் படுக்கையில் படுத்துறங்க வேண்டும்!'' என்று எங்களை அங்கிருந்து கிளப் பிஞர்.

அறையை விட்டு வெளியேறும் முன்பு ஒவ்வொருவராய் நாங்கள் வாஸ்காவின் வாலைத் தடவிக் கொடுத்து விட்டுச் சென்ருேம். அது தன் வாலை சோபாவின் திண்டின் மீது கம்பீரமாக போட்டுக் கொண்டு படுத்திருந்தது.

இதற்கிடையில் அப்பாவும் அம்மாவும் இரவில் வாஸ்காவை எங்கே தூங்க வைப்பது என்று ஆலோசனை செய்தார்கள். அப்பொழுது அம்மாவுக்கு வாஸ்காவைத் தெரியாததால், அதைக் கட்டாமல் வீட்டில் விட்டு வைக்க அம்மா விரும்பவில்லை. ஆனால் அப்பா அது பூனைக் குட்டி போல் சாதுவாய் இருக்கக் கூடியது, அதைப் பார்த்துப் பயப்படுவது அசட்டுத்தனமாகும் என்றார். அது படுத்திருந்தபடி அப்படியே விட்டுவைத்துக் கதவை இழுத்து மூடிவிடலாமென நினைத்தனர்.

அவ்வாறே செய்தார்கள். சோபாவிலே வாஸ்கா படுத்துறங்க, அவர்கள் விளக்கை அணைத்து விட்டு அறைக் கதவைப் பூட்டினார்கள்.

அவர்கள் கதவைப் பூட்டியதும் வாஸ்கா விழித்துக் கொண்டு தலையை உயர்த்திச் சுற்றிலும் பார்த்தது. இருட்டாய் நிசப்தமாய் இருப்பதையும், தான் தனியே இருப்பதையும் கண்டது அது.

உடனே அந்த ''கொடும் புலி'' சோபாவிலிருந்து குதித்து அறையைச் சுற்றிலும் பாய்ந்தோடிற்று, சாமான்கள் மீது மோதிக் கொண்டது, மிரண்டு போய்க் கத்திற்று.

சற்று நேரம் கத்தி விட்டு அடங்கி விடும் என்று அப்பா நினைத்தார். ஆனால் வாஸ்கா அடங்கவில்லை. ஆரம்பத்தில் அதன் கத்தல் சீற்றங் கொண்டதாய் இருந்தது. பிறகு அது பரிதாபமாய்ப் புலம்பும் ஊளையாக மாறிச் சென்றது. வேறு வழியின்றி அப்பா கதவைத் திறந்தார். அப்பாவைப் பார்த்ததும் வாஸ்கா அச்சம் நீங்கி ஆனந்தமாய் ஓடி வந்து அவருடைய பாதத்தை நக்க ஆரம்பித்தது. முடிவில் அப்பாவும் அம்மாவும் அதைத் தமது படுக்கை அறைக்கு அழைத்துச் சென்று, நீளமான மெல்லிய சங்கிலியை அதன் கழுத்தில் கட்டி, தையல் இயந்திர மேசைக்கு அடியில் ஒரு கம்பளியின் மீது அதைப் படுக்க வைத்தார்கள். அங்கே அதற்கு அடக்கமாய் இருந்தது, நிம்மதியாய்ப் படுத்துக் கொண்டது.

அம்மா முடி வாரிக் கொண்டு அப்பாவுடன் பேசிக் கொண்டிருந்தபோது வாஸ்கா அமைதியாய்ப் படுத்திருந்தது. ஆனால் அப்பா அறையை விட்டு வெளியே சென்றதும் உடனே அது குதித்தெழுந்து அமைதியற்று முனகத் தொடங்கிற்று. அப்பா திரும்பி வந்து தட்டிக் கொடுத்த பிறகு தான் அதற்கு அமைதி திரும்பிற்று. முடிவில் எல்லோரும் நிம்மதியாகத் தூங்கினோம்.

மறு நாள் காலையில் நாங்கள் விழித்தெழுந்ததும் நத்தாஷா பரபரப்புற்றவளாய் எங்களைக் கேட்டாள்:

''புலிக் குட்டி வாஸ்கா வந்திருப்பது மெய்தானா? அல்லது வெறுங் கனவா?''

இரவு முழுதும் அவள் புலிக் குட்டி பற்றி கனவு கண்டிருந்தாள். இப்போது எது கனது, எது நனவு என்று அவளுக்குக் குழப்பமாயிருந்தது.

''கனவல்ல, மெய்யாகவே புலிக் குட்டி வந்திருக்கிறது'' என்று சோன்யா பதிலளித்தாள். நாங்கள் எல்லோரும் சாப்பாட்டு அறைக்குச் சென்று அந்தப் புலிக் குட்டி அங்கே இருக்கிறதா என்று பார்த்தோம்.

அறை காலியாய் இருந்தது. அம்மாவின் அறைக்கு ஓடினோம். அம்மா மேசைக்கு அடியில் பார்க்கச் சொல்லிக் கையைக் காட்டினார். வாஸ்கா அங்கே உட்கார்ந்து கொண்டு வினோதமான கண்களால் எங்களை விழித்துப் பார்த்தது.

சங்கிலியை அவிழ்த்து வாஸ்காவை இழுத்துக் கொண்டு கூச்சலிட்டுச் சிரித்தவாறு தோட்டத்திற்கு ஓடினோம்.

தோட்டத்தில் நாங்கள் ஓடி விளையாடினோம். எங்களுடைய நாய்களுக்கு வாஸ்காவை அறிமுகம் செய்தோம். எப்போதும் நாங்கள் நாய்களையும் சேர்த்துக் கொண்டுதான் விளையாடுவது வழக்கம்.

வாஸ்கா நாய்களிடம் பணிவுடன் நடந்து கொண்டது. ஆயினும் அது எத்தகையது என்று நாய்கள் கண்டு கொண்டு

விட்டதாய்த் தெரிந்தது. காலுக்கிடுக்கில் வாலை மடக்கிக் கொண்டு அவை விலகி ஓடின.

வயது முதிர்ந்த எங்கள் வேட்டை நாய் சக்ராய் வெயிலில் படுத்திருந்தது. வாஸ்கா மெதுவாகச் சென்று அதன் தலையை முகர்ந்து பார்த்தது. சக்ராய் உடலை நெளித்துக் கொண்டு சாவதானமாக எழுந்தது. ஆனால் கண்ணெடுத்து வாஸ்காவை ஒரு தரம் பார்த்ததுமே அவசரமாய் ஓடி விட்டது.

புலியின் வாடை அடித்ததுமே வேட்டை நாய்களுக்கு நடுக்கம் உண்டாயிற்று. ஆனால் கலப்பினத்து நாயான மாய்லிக் வேட்டை வாடைகளை அறியாதது. அது வாஸ்காவைத் தாண்டிக் குதித்துத் தரையில் கவிழ்ந்து கொண்டு, பாதத்தால் அதை ஒரு தட்டு தட்டிற்று. வாலைக் குழைத்துக் கொண்டு உரக்கக் குரைத்து அதை விளையாட வருமாறு அழைத்தது.

வாஸ்கா மிடுக்காய் உற்று நோக்கிற்று, பிறகு மாய்லிக்கின் பின்னால் நடந்து சென்றது.

வீட்டை நாங்கள் சுத்தம் செய்தோம், காலையில் எங்களுக்குள்ள வேலைகளை முடித்தோம். பிறகு நாங்கள் தேநீர் அருந்திவிட்டுப் பிற்பாடு வாஸ்காவுக்கு உணவளிக்கலாமென்று உட்கார்ந்தோம்.

ஆனால் வாஸ்கா அதற்குச் சம்மதிக்கவில்லை. சோபா மீது அது தாவிற்று, பலமாய் மூச்சை இழுத்து முகர்ந்தது, கமகமக்கும் வாசனை மேசையிலிருந்துதான் வீசுகிறதென முடிவு செய்து கொண்டது. உடனே ஒரே பாய்ச்சலில் எங்களில் ஒருவரது மடி மீது தாவி மேசையிலிருந்த கிண்ணிகளையும் தட்டுகளையும் சேர்த்து தனக்கு முன்னால் குவித்துக் கொண்டு கோபமாய் உறுமிற்று.

நாங்கள் பயந்து போய்த் துள்ளி எழுந்தோம். அப்பா கையை உயர்த்தி அதைப் பார்த்துக் கத்தினார்:

''போ, உன் இடத்துக்கு! எங்கே என் இடுப்பு வார்?''

ஆனல் இந்த மிரட்டல் எல்லாம் பலிக்கவில்லே. வாஸ்கா மேலும் பலமாய் உறுமிற்று. குழந்தைகளாகிய நாங்கள் எல்லோரும் இதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டோம். வாஸ்கா பலே ஆள்தான், யாருக்கும் அஞ்சவில்லே, தன் மானம் மிக்கதாய் இருக்கிறது என்று நாங்கள் நினைத்தோம். போனல் போகிறது, அதற்கு முதலில் உணவு அளித்து விடலாம், விட்டுக் கொடுத்து விடுவோம் என்று அப்பாவிடம் நாங்கள் மன்றுடினேம். ஆனல் ஒரு தரம் விட்டுக் கொடுத்தால் பிற்பாடு அதைச் சமாளிக்க முடியாமற் போய் விடும் என்று அப்பாவும் அம்மாவும் பயப்பட்டார்கள். வாஸ்காவின் பிடரியைப் பிடித்துத் தூக்கி அப்பா அதை சன்னலுக்கு வெளியே எறிந்தார்.

வெளிக் கதவை நாங்கள் இழுத்து மூடினேம்.

வாஸ்கா கதவைத் தள்ளித் தடதடக்கச் செய்து உறுமிற்று. ஆரம்பத்தில் மெல்ல ஒலித்த அதன் உறுமல் மேலும் மேலும் மூர்க்கமாகிச் சென்றது.

கூப்பாடும் தடதடப்பும் சகிக்க முடியாமற் போகவே நாங்கள் அதற்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. கதவைத் திறந்து அதை உள்ளே விட்டோம்.

வாஸ்கா அறைக்குள் பாய்ந்தோடி வந்தது. அம்மா அதற்குத் தந்த வட்டிலேப் பிடித்து இழுத்துத் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அதிலிருந்த பச்சை முட்டையை ஆவலாய்ச் சாப்பிட்டது. பிறகு வட்டிலில் ஊற்றப்பட்டப் பாலேயும் குடித்து விட்டு நாக்கால் உதடுகளேத் துடைத்தவாறு சோபா மீது ஏறிப் படுத்துக் கொண்டது. வயிறு நிரம்பியதும் இப்போது அதனல் ஏனேயோர் சாப்பிடுவதை அமைதியாய்ப் பார்த்துக் கொண்டிருக்க முடிந்தது.

அது முதலாய் நாங்கள் வாஸ்காவுக்கு முதலில் உணவு கொடுத்து விட்டு, அதன் பிறகு நாங்கள் சாப்பிட உட்கார்வது வழக்கமாயிற்று.



சிறு குட்டியே என்ருலும் அது பூனையல்ல, புலி என்பதையும், அதன் இயல்புகளை நாங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இவ்வாறு வாஸ்கா புலப்படுத்திக் காட்டிற்று.

சில நாட்கள் கழிந்தன. வாஸ்கா எப்போதுமே எங்களுடன்தான் வசித்து வருவது போல் நினைக்கும்படி எங்களுக்கு அது பழக்கப்பட்டதாகி விட்டது.

இனிமையிலும் இனிமையாய் நடந்து கொண்டது அது! யாரையும் தொல்லை செய்வதில்லை, காலுக்கு அடியில் வந்து நிற்பதில்லை, யார் பாதையிலும் குறுக்கிடுவதில்லை. பகலில் அது தோட்டத்தில் விளையாடிற்று, வெளிமுற்றத்துக்கும் கொட்டிலுக்கும் மூலைமுடுக்குகளுக்கும் சென்று சுற்றி வந்தது. களைத்துப் போனதும் சாப்பாட்டு அறைக்கு வந்து சோபாவில் படுத்துக் கொண்டு தூங்கிற்று.

நாங்கள் அதற்கு வயிருர உணவு அளித்தோம். பசி வந்ததும் அதற்குக் குணம் கெட்டுவிடும் என்பது எங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு வேளையும் சாப்பிட வேண்டிய

நேரத்தை அது நன்ருய்த் தெரிந்து வைத்திருந்தது. நேரம் சிறிதும் தவருமல் ஓடி வந்து விடும். அதன் வட்டிலில் முட்டையை உடைத்துக் கொட்டுவோம், அதற்குள் அது தோட்டத்திலிருந்து பாய்ந்தோடி வந்து நிற்கும்.

''வெட்கம், நத்தாஷா! வாஸ்கா கூட நேரத்தைத் தெரிந்து கொண்டு விடுகிறது, உன்ஞல் கற்றுக்கொள்ள முடிய வில்லையே'' என்று நாங்கள் அவளைக் கேலி செய்வது வழக்கம்.

காலையிலும் மாலையிலும் சாப்பிட்ட முட்டையையும் பாலையும் தவிர, வீட்டில் எங்களுடைய அதே மதிய உணவை யும் வாஸ்கா சாப்பிட்டு வந்தது.

சூப்பும் இறைச்சி மாப்பசை உருண்டையும் இது சாப் பிடுவதைப் பார்க்க வேண்டும், வேடிக்கையாயிருக்கும்! முத லில் உருண்டைகளை எல்லாம் துழாவி எடுத்து வட்டிலுக்குப் பக்கத்தில் தரையில் வரிசையாக வைத்து விட்டு சூப்பை நாக்கால் நக்கிக் குடிக்கும், பிறகு இறுதிச் சுவை உண்டியாய் இறைச்சி மாப்பசை உருண்டையை ஒவ்வொன்ருய்த் தின்னும்.

சாப்பிடும் போது வாஸ்கா மூர்க்கம் வாய்ந்ததாகிவிடும். தரையில் படுத்துக் கொண்டு பாதங்களை இரு பக்கத்திலும் வைத்து வட்டிலை அழுத்திப் பிடித்துக் கொள்ளும். அப்போது யாரும் அதனருகே போகக் கூடாது. ஒரு நாள் என் தங்கை அதன் வட்டிலைத் தள்ளி வைப்பதற்காக அதனிடம் சென் ருள். அவ்வளவுதான், சீற்றங் கொண்டு வட்டிலுக்குள் அது உறுமிய போது அதற்குப் புரையேறிவிட்டது, அதே நேரத் தில் அது தனது கனத்த பாதத்தால் அவளுக்குச் சரியானபடி ஓர் அடி கொடுத்து நகத்தால் பிருண்டி விட்டது.

எங்களை விட நாய்கள் அதிக கவனமாய் இருந்தன, வாஸ்கா உணவு அருந்துகையில் அவை அதனருகே செல்வதே இல்லை. வாஸ்கா எங்கள் வீட்டுக்கு வந்த மறுநாள் காலை யிலிருந்தே அதனுடன் விளையாடி வந்த மாய்லிக் மட்டும் தான் துணிந்து அதன் வட்டிலுக்குள் குனிந்து முகர்ந்து பார்த் தது. வாஸ்கா உறுமிற்றே அன்றி அதை விரட்டியடிக்கவில்லை.

வாஸ்கா உணவு அருந்துகையிலோ, அல்லது யாராவது அதன் வயிற்றைத் தட்டுகையிலோ, வாலைத் தொடுகையிலோ தான் அது சீற்றங் கொண்டு வாய்க்கு எட்டும் தொலைவில் இருப்பவர் எவரையும் உடனே விழுந்து பிடுங்கி விடும். வயிற்றையும் வாலையும் அது புனிதமானவையாய், யாரும் தொடக்கூடாதனவாய்க் கருதி வந்தது.

ஒரு நாள் வெளி முற்றத்திலிருந்து யாரோ எங்களைக் கூப்பிட்டது காதில் விழுந்தது. உடனே நாங்கள் சன்னல் வழியே எட்டிப் பார்த்தோம். வாஸ்காவும் முன்பாதங்களை சன்னலின் அடிக்கட்டையில் வைத்துக் கொண்டு எம்பி வெளியே பார்த்தது. இந்த அமளியில் சோன்யா அதன் வாலை மிதித்து விட்டாள். வாஸ்கா வெடுக்கெனத் திரும்பி அவள் காலைக் கடித்தது. இரத்தம் வழியவே சோன்யா பீதியடைந்து விட்டாள். ஆனால் அதனுடைய புனித வாலிலிருந்து சோன்யா காலை எடுத்ததும் வாஸ்காவின் கோபம் மறைந்து விட்டது. மன்னிப்பு கேட்பது போல், இரத்தம் வழிந்த சோன்யாவின் காலை அது நக்க ஆரம்பித்தது.

இரத்த வாடை மூக்கில் ஏறியதும் புலிகள் வெறி கொண்டு விடும் என்று நினைப்பீர்கள். ஆனால் வாஸ்காவை நீங்கள் அப்போது பார்த்திருந்தால் அப்படி நினைக்க மாட்டீர்கள்: வாஸ்கா வெறி கொண்டுவிடவில்லை, அதற்கு நேர் மாருய் நடந்து கொண்டது. பிறத்தியார் காலைக் கடிப்பது எவ்வளவு கொடுமையான செயல் என்பதை உணர்ந்து கொண்டு விட்டாற் போல் அது சோன்யாவின் காயத்தை மிகவும் சாந்தமாய் நக்கிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் வாஸ்கா வெளிமுற்றத்தில் சுற்றிக் கொண்டிருக்கையில் அங்கிருந்த துடப்பத்தை அது கண்ணுற்றது. பதுங்கியவாறு அதனிடம் சென்று ஒரு பாய்ச்சல் பாய்ந்து அதைக் கவ்விக் கொண்டு தோட்டத்திற்குப் பாய்ந்தோடிற்று. அதை அது ஆட்டிக் குலுக்கித் தரையிலே இழுத்துச்

சென்றது. சற்று நேரம் கழித்து அது திரும்பி வந்தபோது அதன் வாயில் ஒட்டிக் கொண்டிருந்த இரண்டு மூன்று குச்சி களே அந்த துடப்பத்தில் எஞ்சிற்று.

நாங்கள் அதைப் பார்த்துச் சிரித்து கலாட்டா செய் தோம். அதோடு இந்த நிகழ்ச்சியை மறந்து விட்டோம். ஆனல் இரண்டு நாட்களுக்கு எல்லாம் இன்னொரு துடப்பத் தையும், அதன் பிறகு மூன்ருவது ஒன்றையும் வாஸ்கா கடித்துக் குதறித் தூளாக்கிற்று. துடப்பத்தை நாசமாக்கு வது இப்படி அதற்கு ஒரு கெட்ட பழக்கமாகி வந்தது. துடப்பம் வாஸ்காவின் கண்ணில் பட்டு விட்டால் போதும், உடனே அதன் மீது பாய்ந்து அதைப் பிய்த்துத் தூளாக்கி விட்டுதான் அப்பால் செல்லும். அப்போது அதன் முகபாவம் மிகவும் கொடூரமாகிவிடும். வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று வெறி கொண்டு விட்டது போலிருக்கும்.

ஆம், உண்மையில் அது வஞ்சம்தான் தீர்த்துக் கொண் டது.

எங்கள் வீட்டுக்கு வந்து சேர்வதற்கான நெடுந் தூரப் பயணத்தின் போது அப்பா அவரது நண்பர் ஒருவர் வீட்டில் தங்கிஞர். அந்த நண்பர் ஒரு வேட்டைக்காரர், அவருடைய மனேவி மிகவும் கண்டிப்பானவர். நடைவழியில் விரிக்கப்பட் டிருந்த அப்பழுக்கற்ற கம்பளங்களின் மீது வாஸ்கா தனது அழுக்குப் பாதங்களே வைத்து சுவடு பதித்த போதெல்லாம் அவருடைய மனேவி துடப்பத்தை எடுத்து அதை அடிப்பது வழக்கம். அப்போது தான் வாஸ்காவுக்கு உலகிலுள்ள எல் லாத் துடப்பங்கள் மீதும் அடங்காத வெறுப்பு பிறந்து விட்டது.

ஆடவரின் பூட்சையும் பெண்டிரின் அரைப் பாவாடை யையும் வாஸ்கா வேறுபடுத்திப் பார்க்கத் தெரிந்து கொண்டது அப்போதுதான். கோபங்கொண்டு துடப்பத்தை எடுத்துக் கொண்டு விரட்டிய அந்த அன்னே அரைப் பாவாடை கட்டியவர் என்பதுதான் வாஸ்காவுக்குத் தெரிந்திருந்தது.

அவரிடமிருந்து தப்புவதற்காக வாஸ்கா பூட்சு போட்டிருந்தவர்களிடம் ஓடிப் பதுங்கிக் கொண்டது. பூட்சுப் போட்டிருந்தவர்கள் அப்பாவும் அவரது நண்பரும்தான். எப்போதும் இவர்கள் அதற்கு ஆதரவாக இருந்து அவ்வன்னையிடமிருந்து அதைக் காப்பாற்றியவர்கள். அது முதலாய் வாஸ்கா பூட்சுகளிடம் தனிப் பற்றுதல் காட்டிற்று, ஆனால் அரைப் பாவாடைகளிடம் அதன் இணக்கமின்மையை விட்டொழிப்பது அதற்குக் கடினமாயிருந்தது.

வாஸ்காவுக்கு உணவு அளித்ததும் அதனிடம் அதிக நேரம் செலவிட்டதும் அம்மாதான். ஏனைய எல்லாப் பெண்களைக் காட்டிலும் அம்மாவை அதற்குப் பிடித்திருந்தது என்பது நன்றாய்த் தெரிந்தது. ஆயினும் அம்மாவினுடைய அரைப் பாவாடை அதற்குச் சகிக்க முடியாததாகவே இருந்தது. இந்தப் பாவாடைகளில் பலவற்றை அது கடித்து வைத்திருந்தது.

வாஸ்காவுக்குக் கூர்மையான மோப்ப உணர்வு இருந்தது. நறுமணப் பொருள், மலர்கள் இவற்றின் வாசனையை வாஸ்காவுக்குப் பிடிக்காது. தோட்டத்தில் மலரின் மணம் அதன் மூக்கில் ஏறுமாயின் உடனே அது மூக்கைச் சுளித்துக் கொண்டு நெடு நேரம் தும்மிக் கொண்டிருக்கும். சாசெஜ் வாசனையைத் தொலைவிலிருந்தே தெரிந்து கொண்டுவிடும், உலகில் இதுதான் மிகச் சிறந்த வாசனை என்பதாய் அதற்கு நினைப்பு.

சாசெஜின் வாசனை சிறிது அடித்தாலும் போதும், அது பரபரப்படைந்து சோகமாய் முனக ஆரம்பித்து விடும்: ''எங்கே என் சாசெஜ்? கொடுங்கள் என்னிடம்!'' என்று அது வீம்பு செய்யும் குழந்தை போல ஊளையிடும்.

ஒரு நாள் இரவு சாப்பாட்டின் போது நாங்கள் சாசெஜ் சாப்பிட்டோம். வாஸ்கா ஏற்கெனவே தனக்குரிய இரவு சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டுப் பக்கத்து அறையில் இருந்

தது. இப்போது அது பாய்ந்தோடி வந்து நேரே மேசை மீது ஏறிவிட்டது.

''வேண்டாம் இது!'' என்று அதட்டினுர் அப்பா; ''நீ முன்பே சாப்பிட்டு விட்டாய்! போய்ப் படு நீ!'' என்று சொல்லி அவர் வாஸ்காவைப் பிடித்துத் தூக்கி சோபாவில் போட்டார். பிறகு சாசெஜை எடுத்து அலமாரியில் மேல் தட்டில் வைத்தார்.

ஆனுல் வாஸ்கா பரபரப்புற்று விட்டது. அப்பா சொன்னது எதுவும் அதன் காதில் விழவில்லே. முன் பாதங்களே மேஜை மீது வைத்து எம்பிப் பார்த்தது. சாசெஜ் அங்கே இல்லாதது தெரிந்ததும் மூக்கை உயர்த்திக் கொண்டு துடி துடித்து அறையினுள் சுற்றி ஓடிற்று. முடிவில் அதற்கொரு ஆலோசனே தோன்றியது. சன்னல் அடிக் கட்டையில் தாவி அங்கிருந்து முகர்ந்து பார்த்தது. பிறகு அலமாரியிடம் ஓடி அதன் மீது மோதி மேலே ஏற முயன்றது, மேலும் மேலும் அது சீற்றமடைந்து வந்தது.

''அந்த உயரத்துக்கு அதனுல் தாவவா முடியும்? சற்று நேரம் முயன்று பார்த்து விட்டு அடங்கி விடும்.''

வாஸ்கா மேலும் மேலும் வெறி கொண்டு ஆடிற்று, அலமாரியின் மூலேயைப் பிருண்டிற்று, பற்களால் கடித்தது, அதன் மீது பாய்ந்து மேலே ஏற முயன்றது, ஒவ்வொரு தரமும் உருளேக்கிழங்கு மூட்டை போல் கீழே சரிந்து விழுந்தது.

முடிவில் ஆத்திரம் தாங்க முடியாமல் மீண்டும் மேசையின் மேல் ஏறி அங்கிருந்து அலமாரி மீது தாவப் போயிற்று.

அது கீழே விழுந்து விடுமென்று அஞ்சினேம்.

''ஒரு துண்டு கொடுப்போம், படாதபாடு படுகிறதே'' என்று நாங்கள் முடிவு செய்தோம்.

சாசெஜில் அப்பா ஒரு துண்டை நறுக்கி: ''இந்தா, பிடி!'' என்று மேலே எறிந்தார்.

வாஸ்கா இன்னமும் மேஜையின் மேல்தான் நின்றிருந்தது. வாயை விரியத் திறந்தது, சாசெஜ் துண்டு நேரே

அதன் வாயினுள் விழுந்து அதே கணத்தில் மறைந்து போயிற்று. வாஸ்கா அங்கேயே நின்று கொண்டு எங்களை உற்றுப் பார்த்தது. ''இது என்ன ஏமாற்று வேலை? எங்கே அந்த சாசெஜ்? சீக்கிரம் எடுங்கள் அதை!'' என்று கூறுவது போலிருந்தது அது பார்த்த பார்வை.

இருண்டு போய் அலுப்பூட்டுவதாய் இருந்த ஒரு ஞாயிற்றுக் கிழமை என் நினைவுக்கு வருகிறது. நாள் முழுதும் மழை பெய்தது, குளிர் காற்று வீசிற்று, என்ன செய்வதென்று புரியாமல் நாங்கள் அறை அறையாய்ச் சுற்றி வந்தோம், எல்லோருக்கும் குளிராய் இருந்தது.

''நெருப்பு மூட்டி சோளப் பொரி செய்வோம்'' என்றாள் சோன்யா.

எல்லோரும் குதூகலமாய் இந்த ஆலோசனையை வரவேற்றோம். உடனே களேபரமாகிவிட்டது, மும்முரமாய் வேலை ஆரம்பித்தோம். ஓடிச் சென்று விறகுக் கட்டையைச் சிப்பிகளாய்ப் பிளந்தோம். நானும் என் தங்கையும் சோளக் கதிர்ச் சரங்கள் இருந்த பரணியின் மீது ஏறினோம்.

சிப்பிகளைக் கொண்டு வந்து அடுப்பைப் பற்ற வைத்தோம். திண்டில் தலையை வைத்து வாஸ்கா படுத்திருந்த சோபாவுக்கு எதிரே இருந்தது அடுப்பு.

தீக்குச்சி பற்றி எரிந்ததையும், சிப்பிகளில் தீ மூண்டு சடசடத்ததையும் வாஸ்கா உன்னிப்பாய் கவனித்தது. காதுகள் விறைத்து நிமிர அது வியப்புற்று எழுந்து உட்கார்ந்து கொண்டது: அடே! விந்தையாய் இருக்கிறதே!

நாங்கள் பரபரப்பாய் பேசிக் கொண்டிருந்தோம், வாஸ்கா சோபாவிலிருந்து இறங்கிச் சென்றதைக் கவனிக்கவில்லை.

திடுமென உரக்க சப்தம் கேட்டது: 'ஊ-ஊ!'

அடுப்புக்கு முன்னால் வாஸ்கா இருக்கக் கண்டோம். அடுப்பினுள் அது தலையை விட்டுப் பார்த்து விட்டு மிரண்டு

போய் மூச்சை வெளியே விட்டு ஊதவே, தீ உயர்ந்தெழுந்தது. பாவம், வாஸ்கா கதிகலங்கிப் போய் விட்டது.

நல்ல வேளை அப்பா அறையினுள் இருந்தார். ஓடிச் சென்று வாலைப் பிடித்து இழுத்து வாஸ்காவை அடுப்படியிலிருந்து விலகச் செய்தார்.

வாஸ்காவின் மீசையும் புருவங்களும் தீய்ந்து விட்டன, அதன் முகவாயில் சாம்பல் படிந்திருந்தது. சோபாவின் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டு எங்களை அது உற்று நோக்கிற்று. அதைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது, எக்கணமும் அது கண்ணீர் விட்டுக் கதற ஆரம்பித்து விடும் போலிருந்தது.

அடுப்பை இவ்வாறுதான் வாஸ்கா ஆராய்ந்து அறிந்து கொண்டது!

''சீக்கிரம் ஓடி வாங்க!'' என்று யூலியா கூப்பிட்டாள், அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

நாங்கள் வாயில் முகப்புக்கு ஓடினோம்:

''என்ன அது?''

கையால் வாயைப் பொத்திக் கொண்டு யூலியா எங்களைச் சப்தம் செய்ய வேண்டாமென விரலைக் காட்டி எச்சரிக்கை செய்தாள்:

''உஸ்! அதோ பாருங்கள், வாஸ்கா என்ன செய்கிறது பாருங்கள்!''

வாயில் முகப்பில் உச்சிப் படியில் நான்கு வயதான எங்கள் பக்கத்து வீட்டுச் சிறுவன் பாவ்லிக் உட்கார்ந்திருந்தான். அவன் செறுமிக் கொண்டு அழாக் குரலில் ஏதோ சொல்லியவாறு வாஸ்காவைக் கையால் தன்னிடமிருந்து விலக்கித் தள்ள முயன்றான். ஆனால் வாஸ்கா எதையும் பொருட்படுத்தவில்லை. அது பின்னங்கால்களில் நின்று, முன்னங்கால்களை பாவ்லிக்கின் தோளில் வைத்துக் கொண்டு அவனுக்கு ''முடி ஒப்பனை'' செய்து கொண்டிருந்தது. இந்த

வேலே வாஸ்காவுக்கு பூரிப்பூட்டுவதாய்த் தெரிந்தது, மனம் மகிழ்ந்து கனேத்துக் கொண்டு அது வேலே செய்தது.

பாவ்லிக்கின் தலேயை பிடரியிலிருந்து தொடங்கி நெற்றி வரை அது நக்கி விட்டுக் கொண்டிருந்தது. சிறுவனின் முடிகள் வாஸ்காவின் எச்சிலில் நனேந்து பிசுபிசுப்பாய் ஒட்டிக் கொண்டு பிரஷ் போல் விறைப்பாய் நின்றன. சிறுவனின் முடி ஒப்பனே சிறப்பாக அமைந்து விட்டதாய் வாஸ்கா நினேத்தது போலும், அதன் கண்கள் பூரிப்பால் பளபளத்தன.

''அதை விரட்டியடி! பாவ்லிக் எப்படித் துன்புறுகிருன், பார்!''

''முடி ஒப்பனேயாளன் என்று நினேத்துக் கொண்டிருக்கிறது? தலே வேருெருவருடையதாய் இருக்கும் வரை அதற்கென்ன கவலே?''

''முதலில் அது தனது வயிற்றையும் பாதத்தையும் நக்கிச் சுத்தமாக்கிக் கொள்ளட்டும். செய்வதைச் சரியாக வாவது செய்யக் கூடாதா? எதிர்த் திசையில் நக்கிக் கொண்டு நிற்கிறதே!''

சோன்யா உள்ளே ஓடிச் சென்று சாசெஜ் துண்டு ஒன்றை எடுத்து வந்தாள். அதன் வாசனே வாஸ்காவின் மூக்கில் ஏறியதும் அதை வாயில் முகப்புக்கு அப்பால் தூக்கியெறிந்தாள்.

வாஸ்கா சாசெஜ் துண்டை எடுக்க ஓடிற்று, நாங்கள் பாவ்லிக்கைக் காப்பாற்றிளேம்.

பிறகு யூலியா ஒரு பெரிய கோப்பையிலிருந்து தண்ணீரை ஊற்றிளுள், நான் பாவ்லிக்கின் பிசுபிசுப்பான முடிகளேத் தேய்த்துக் கழுவினேன். நத்தாஷா ஜாம் பணியாரம் கொண்டு வந்து கொடுத்து அவனேச் சமாதானப் படுத்திளுள். பாவ்லிக் அதைத் தின்று கொண்டே தனக்கு என்ன நேர்ந்ததென்பதை விவரமாய்ச் சொன்ஞன்:

''நான் விளேயாடிக் கொண்டிருந்தேன், அது என்னிடம்

வந்தது. முன்னங்கால் பாதங்களை என் மீது இங்கே வைத்தது'' என்று தனது தோளைத் தொட்டுக் காட்டினான்.

''பிறகு என் தலையை முகர்ந்து பார்த்து விட்டு, என் முடிகளில் எச்சிலைத் துப்பிற்று. அதை நான் தள்ளியவாறு: 'வாஸ்கா, போய்விடு நீ! நான் உன்னுடன் விளையாட விரும்ப வில்லை' என்றேன். ஆனால் அது.... என்னைப் பார்த்துச் சி-சி-சிரித்தது....''

வாஸ்கா தனக்கு முடி ஒப்பனை செய்தது நினைவுக்கு வரவே அவன் திரும்பவும் செறும ஆரம்பித்தான்.

அவனைத் தேற்றுவதற்கு எங்களால் ஆனது அனைத்தும் செய்தோம். ஆனால் அவன் முடிகள் கொத்து கொத்தாய் எல்லாத் திசைகளிலும் குத்திட்டு நின்றன, ஜாம் ஒட்டி யிருந்த அவனது சின்னஞ் சிறு முகம் சிணுங்கிக் கோணியிருந் தது—எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

நாங்கள் சிரிப்பதைப் பார்த்ததும் பாவ்லிக் அழுகையை நிறுத்திக் கொண்டு எங்களுடன் சேர்ந்து சிரிக்க ஆரம்பித் தான். நாளா வட்டத்தில் பாவ்லிக் வாஸ்காவுடன் ''முடி ஒப்பனை'' விளையாடக் கற்றுக் கொண்டு விட்டான். இந்த ''முடி ஒப்பனை'' அடிக்கடி நடைபெற்றது, ஆனால் பாவ்லிக் முன்பு போல் அழவில்லை. அதற்கு பதில் இராகம் பாடிக் கொண்டு உட்கார்ந்திருப்பான், அல்லது வாஸ்காவுடன் அரு மையாய்ப் பேசிக் கொண்டிருப்பான். இருவரும் குதூகலப் பட்டுக் கொள்வார்கள்.

பெண்களாகிய எங்களுக்கு வாஸ்கா ''முடி ஒப்பனை'' செய்ய முயன்று பார்த்தது, ஆனால் முடியவில்லை. எங்கள் கூந்தலை எப்போதும் நாங்கள் கெட்டியாய்ச் சடை பின்னி ரிப்பன்களால் கட்டியிருந்தோம். அதோடு தலையை நக்கும் அளவுக்கு வாஸ்காவை நாங்கள் எங்கள் தலையருகே வர விடுவதில்லை.

சில நேரம் அப்பா வாஸ்காவிடம் ''முடி ஒப்பனை'' செய்து கொள்வார். அடிக்கடி அப்பாவும் வாஸ்காவும் தோட்

டத்திற்குச் சென்று அங்கே விளையாடுவார்கள், மற்போர் புரிவார்கள். முன் பாதங்களால் அப்பாவின் பூட்சைப் பிடித்துக் கொண்டு அவர் பின்னால், செல்வது வாஸ்காவுக்கு மிகவும் பிடித்த ஒரு விளையாட்டு. ஒரு நிமிடங் கூட அது சும்மா விடாது, ஓயாமல் அப்பாவைத் தொல்லை செய்யும். படிப்பதற்காக அப்பா தோட்டத்திற்குச் சென்றால், வாஸ்கா அவர் வருவதைத் தெரிந்து கொண்டு அவர் கண்ணில் படாமல் பின்தொடர்ந்து சென்று புதர்களில் ஒளிந்து கொள்ளும். அப்பா உட்கார்ந்து புத்தகத்தைத் திறந்ததும், வாஸ்கா ஒரு பெரும் பாய்ச்சல் பாய்ந்து காற்றிலே தாவி வந்து அவர் கையிலிருக்கும் புத்தகத்தைத் தட்டி விடும். பிறகு பற்களால் அதைக் கவ்வி விநோதமாய்க் குதித்துக் கொண்டு வீட்டை நோக்கி ஓடும்.

வாஸ்கா எங்களுக்குத் தொல்லை புரிந்ததோடு சில சமயம் உதவியுங்கூட புரிந்தது உண்டு.

ஊர், ஊராய்ச் சுற்றிச் சென்று பொருள்கள் விற்பனை செய்யும் ஒரு விற்பனையாளர் ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு வந்து, அப்பாவிடம் தம் வசமிருந்த பொருள்களைக் காட்டி அவற்றை வாங்கும்படி வற்புறுத்தினார். மடக்குக் கட்டில், முழங்கால் பூட்சுகளை கழற்ற உதவும் கருவி, மலைப் பயணத்துக் கென அமைந்த தனிவகைப் பயணப் பை போன்ற யாவற்றையும் அவர் காட்டினார்.

அப்பா அன்று ஓர் அறிக்கை தயாரித்து முடிக்க வேண்டியிருந்தது, நேரம் போதாமல் அவசரப்பட்டுக் கொண்டிருந்தார். நச்சரித்துக் கொண்டிருந்த அந்த விற்பனையாளரிடமிருந்து எப்படி தப்புவதென்று புரியாமல் அவர் தவித்தார். அந்த நேரத்தில் வாஸ்கா அப்பாவின் அறைக்குள் பாய்ந்தோடி வந்தது. வீடு பூராவும் அப்பாவைத் தேடிக் கொண்டு ஓடிய அது முடிவில் அவர் இருந்த இடத்தைக் கண்டு கொண்டு அவரிடம் ஓடி வந்தது.

வாஸ்காவைப் பார்த்ததும் விற்பனையாளரின் முகம் வெளுத்துப் போயிற்று, வாய் குழறியபடி கேட்டார் அவர்:

''இது என்ன?''

''இது ஒரு வகைப் பூனை. புலி என்று பெயர்'' என்று அப்பா அமைதியாய் பதிலளித்தார்.

''அப்படியா?.. சரி நான் போய் வருகிறேன்... வணக்கம்...''

அவசரமாய்த் தமது அரிய பொருள்களை அள்ளிக் கொண்டு அந்த விற்பனையாளர் போய்ச் சேர்ந்தார்.

''வாஸ்கா, வாழ்க நீ! தக்க தருணத்தில் வந்து உதவினாய்!'' என்று அப்பா மகிழ்ந்து கொண்டார்.

அப்பா ஒரு வாரம் காட்டுக்குச் சென்றிருந்த போது வாஸ்கா ஏக்கமுற்று துன்புற்றது.

இருப்பு கொள்ளாமல் வீட்டில் சுற்றிக் கொண்டிருந்தது. சமயலறைக்குள் எட்டிப் பார்த்தது, எங்கள் எல்லோரையும் முகர்ந்து பார்த்தது, காதுகளை விறைத்து நிற்கச் செய்தது.

ஏழாம் நாளன்று அந்திப் பொழுதில் நாங்கள் இரவுக்காக வாஸ்காவை மேசைக் காலில் கட்டியிருந்த போது வெளிமுற்றத்தில் பேச்சுக் குரல் கேட்டது. அப்பா திரும்பி வந்து விட்டார். அப்பாவை வரவேற்க வாஸ்கா மேசையையும் சேர்த்து இழுத்துக் கொண்டு அறையின் குறுக்கே விரைந்தது. அறை வாயிற்படியில் மேசை சிக்கிக் கொண்டது. அப்பா நேரே வாஸ்காவிடம் ஓடிவந்தார்.

புலிக் குட்டியின் குதூகலத்தைப் பார்க்க வேண்டுமே! அப்பாவின் பூட்சுகளைப் பாதங்களால் கட்டியணைத்துக் கொண்டு அவற்றை நக்கிற்று, சிரித்துக் கொள்வது போல் கனைத்துக் கொண்டது.

''டாம் மாமாவின் குடிசை''—யார் எங்களுக்கு இந்த புத்தகத்தைக் கொடுத்ததென்று எனக்கு நினைவில்லை. சில

நாட்களுக்கு நாங்கள் எங்களுடைய விளையாட்டுகளையெல்லாம் மறந்து விட்டோம். பொழுது விடிந்ததும் எல்லோருமாய் அதைப் படிப்பதற்காகத் தோட்டத்துக்குப் போய் விடுவோம். சோன்யாவும் நானுமாய் மாறி மாறி அதை உரக்கப் படிப்போம்.

என் தங்கைகளும் பக்கத்து வீடுகளைச் சேர்ந்த பையன்களும் வாயைப் பிளந்து கொண்டு எங்கள் முன்ஞல் புல் தரையில் அரை வட்டமாய் உட்கார்ந்து கொண்டு கேட்பார்கள். டாம் மாமாவின் மறைவைச் சித்திரிக்கும் பகுதியே இப்புத்தகத்தின் மிகவும் சோகமான பகுதி. நாங்கள் இப்பகுதிக்கு வந்ததும் படிப்பவரும் கேட்பவருமாய்ச் சேர்ந்து கண்ணீர் வடிக்கும்படி நேரும்.

அப்போது யூலியாவின் தோள் மீது யாரோ சாய்ந்து கொண்டு பெருமூச்செறியும் சப்தம் கேட்டது. கன்னங்களில் கண்ணீர் தாரையாய் ஓட யூலியாவுக்கு எதிர்ப்பக்கத்தில் அமர்ந்திருந்த நத்தாஷா திடுமென வாய்விட்டுச் சிரித்தாள்.

நான் திகைத்துப் போனேன்: துயரம் தாங்காமல் பித்து பிடித்துவிட்டதா, இப்படிச் சிரிக்கிருளே?

ஆஞல் அவள் வயிறு குலுங்க சிரித்தவாறு யூலியாவைச் சுட்டிக் காட்டிஞள்.

பிறகுதான் நாங்கள் யூலியாவின் தோளில் வாஸ்கா தலையைச் சாய்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்ததைக் கவனித்தோம். டாம் மாமாவுக்காக தானும் வருந்துவது போல் அது கண்களைக் கெட்டியாய் மூடிக் கொண்டு சோகப் பெருமூச்சு விடக் கண்டோம். அன்று எங்கள் படிப்பு அதோடு முடிவுற்றது, ஏனெனில் நாங்கள் எல்லோரும் சிரிப்பு தாங்க மாட்டாமல் புல் தரையில் விழுந்து புரண்டோம்.

வாஸ்கா எங்கள் குடும்ப உறுப்பினஞகி இப்போது ஒரு மாதத்துக்கு மேலாகியது. அது பெரிதும் வளர்ந்து வலுவும் தன்னம்பிக்கையும் மிக்கதாகியது. இன்னமும் அது நேர்த்தி

அதிகமில்லாததாகவே இருந்ததென்றும், சில நேரங்களில், முக்கியமாய் பதுங்கிப் பாயும்போது அது விரைவும் நயமும் மிக்கதாய் விளங்கிற்று.

வாஸ்காவின் தோல் வெல்வெட் போல பளபளப்பாகவும் வழவழப்பாகவும் இருந்தது. செம்பொன் மேனியுடன் கரிய பட்டைகள் கொண்டதாய் இருந்தது. இந்த கரிய பட்டைகள் அதன் சாம்பல் நிற வயிறு வரை சென்றன.

வனப்பும் செழுமையும் வாய்ந்து கண்ணுக்கு இனியதாய்த் திகழ்ந்தது.

நாள் முழுதும் அது தன் பாதங்களையும் வயிற்றையும் நக்கிச் சுத்தமாக்கிக் கொண்டது, தன்னை மேலும் கவர்ச்சி மிக்கதாக்கிக் கொண்டது. அத்தருணங்களில் அது வியக்கத் தக்க அளவுக்கு பூனையைப் போன்றதாய் இருக்கும்.

வீட்டுக்குள் ஒரு நாளும் அது அசுத்தம் செய்ததில்லை. ஆயினும் ஒரேயொரு தரம் அசம்பாவிதம் நேர்ந்துவிட்டது, அதற்கு நாங்களேதான் காரணம், அதை அவிழ்த்து விட மறந்து விட்டோம். முடிவில் எங்களுக்கு நினைவு வந்து அதனிடம் சென்ற போது, வாஸ்கா குழம்பிப் போய் சங்கடப் பட்டுக் கொண்டது, மூக்கைச் சுளித்தவாறு சிடுசிடுத்துச் சீறிற்று.

நாங்கள் அதை அவிழ்த்து விட்டதும் தோட்டத்துக்குள் பறந்தோடிற்று.

என்றையும் விட மிகவும் கவனமாய் அன்று அது குளித்து விட்டு வந்தது.

குளித்து விட்டு வருவது அதற்கு தனிப் பெரும் ஒரு நிகழ்ச்சியாகும்.

தோட்டத்தில் அதற்காக ஒரு வட்டக் குழி ஒன்று வெட்டப்பட்டிருந்தது. ஒரு மீட்டர் ஆழமும் ஒரு மீட்டர் விட்டமும் கொண்டது அது. அருகாமையில் ஓடிய ஒரு வாய்க்காலிலிருந்து அதனுள் சுத்தமான நீர் வந்து நிரம்பும்.

அம்மா ஒரு பிரஷும் சோப்பும் கொண்டு வருவார்.

அப்பா ஒரு வாளியை எடுத்து வருவார். முடிவில், திரளான குழந்தைகளால் சூழப் பெற்று வாஸ்கா அங்கே வந்து சேரும்.

குளிப்பதெனில் வாஸ்காவுக்குக் கொண்டாட்டம் தான், இதில் அது சிறிதும் பூனையைப் போன்றதாயில்லை.

முதலில் அப்பா நீரை மொண்டு அதன் மீது ஊற்றுவார். பிறகு பச்சை நிற சோப்பு அதன் மேல் தேய்க்கப்படும். பிறகு தானாகவே அது குழிக்குள் இறங்கிப் பின்னங்கால்களில் நிற்க, அப்பா அதன் முன்னங்கால் பாதங்களைப் பிடித்துக் கொள்வார். பிரஷ்ஷால் நன்றாய்த் தேய்த்து சுத்தம் செய்யப் பட்டதும் நீரை மேலே ஊற்றிக் கழுவுவார்கள். வாஸ்கா ஆனந்தமாய்க் கனைத்துக் கொண்டு ஆடம்பரமாய்க் குழிக்குள் நின்றிருக்கும். குளித்து முடிந்ததும் அது குழியிலிருந்து வெளியே ஏறி உடம்பை உலுக்கிக் கொள்ளும். பிறகு புல் தரையில் உருண்டு புரண்டு விட்டு வெயிலில் தாவிக் குதித்து விளையாடும்.

வாஸ்காவினால் எங்களுக்குச் சிரமமும் தொல்லையும் ஏற்பட்டது மெய்தான், ஆனால் அது மெய்யாகவே கண்ணைக் கவரும்படி எழில் மிக்கதாய் வளர்ந்து வந்தது.

மனிதர்களிடம் அதற்குக் கொஞ்சங் கூட பயமில்லை. எல்லோருடைய கவனத்தையும் கவர வேண்டுமென்றுதான் எப்போதும் முயற்சி செய்தது.

அதைக் கவனியாது நாங்கள் எங்களுடைய வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால், பொறுக்க மாட்டாமல் அது வேதனைப் படும். யாரும் அதைத் தட்டிக் கொடுக்கவில்லை, அதன் காதுகளைத் தடவவில்லை, அதனுடன் பேசவில்லை என்றால் அது மனம் ஒப்பாமல் குறைப்பட்டுக் கொள்ளும்.

சில சமயம் நாங்கள் வேண்டுமென்றே அதன் பொறுமையைச் சோதனை செய்வது பழக்கம்.

எடுத்துக் காட்டாய், நாங்கள் வட்டமாய்த் தரையில் உட்கார்ந்து கொண்டு பேச ஆரம்பிப்போம்.

வாஸ்கா அங்கே வந்து எங்கள் பேச்சை உற்றுக் கேட்பது போல் நிற்கும். வழக்கம் போல் நாங்கள் அதனிடம் திரும்பி, ''வாஸ்கா, நீயும் வந்து விட்டாயா இங்கே?'' என்று விசாரிக்க வேண்டும் என்று காத்திருக்கும். இதன் பிறகு நாங்கள் அதைத் தட்டிக் கொடுத்தாக வேண்டும்.

ஆனல் நாங்கள் அதைக் கவனிக்காதது போல் பாசாங்கு செய்தோம். சற்று நேரம் எங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு நின்றிருந்த பின் அது எங்களில் ஒருவருடைய சடை ரிப்பனையோ, சட்டை நாடாவையோ பாதத்தால் தொடும்.

அப்போதும் நாங்கள், எதையும் கண்டு கொள்ளாமல், இவ்வுலகில் வாஸ்கா என்பதாய் ஒன்று இல்லாதது போல் தொடர்ந்து எங்களுக்குள் பேசிக் கொண்டிருப்போம்.

பிறகு அது எங்களுடன் சேர்ந்து வட்டத்தில் உட்கார்ந்து கொள்ளும். கண்களை விரியத் திறந்து கொண்டு கவனமாய் எங்கள் பேச்சைக் கேட்கும். இடையிடையே தன் விருப்பம் போல் தனக்குரிய முறையில் ''இம்'' போட்டுக் கொள்ளும்.

இவ்வளவு நேரமாகியும் நாங்கள் அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக அது குறைப்பட்டுக் கொள்வதாய் இதற்கு அர்த்தம்.

நாங்கள் சிரித்துக் கொண்டு (அதன் பக்கம் திரும்பாமலே) கூறிக் கொள்வோம்: ''அது எப்படி எல்லாம் முயற்சி செய்கிறது பாருங்கள்! யாரும் அதன் பெயரைக் குறிப்பிடாதீர்கள், இல்லையேல் அதைப் பற்றிதான் பேசுகிறேம் என்று தெரிந்து கொண்டு துயரம் நீங்கி உற்சாகமடைந்து விடும்.''

இம்மாதிரி நாங்கள் அதை நெடு நேரம் மனம் புழுங்கச் செய்வோம்.

அது உரையாடலில் கலந்து கொள்ளவும், எங்கள் கவனத்தைத் தன்பால் ஈர்க்கவும் பல வழிகளிலும் முயன்று பார்க்கும். ஒன்றும் பயனளிக்காததைக் கண்டு திடுமென பலமாய்க் கொட்டாவி விட்டு வாயை விரியத் திறக்கும்.

அதன் வாய் அற்புதமானது: செக்கச் சிவந்ததாய் சுற்றிலும் குஞ்சங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டது போல் இருந்தது. அதன் பற்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவை: கூர்மையாய், பெரிதாய், வெள்ளையாய் இருந்தன.

நாங்கள் செய்து கொண்ட உடன்பாட்டை மறந்து அதன் தொண்டைக்குள் உற்று நோக்குவோம், பற்களைப் பாராட்டுவோம்.

உடனே வாஸ்கா எங்கள் குழுவில் தானும் சேர்ந்து கொண்டு விட்டதாய் நினைத்துக் கொள்ளும். நாங்கள் எங்கள் கையால் அதன் வாயைத் திறந்து பார்க்க முயலுவோம், ஆனால் அது மனம் மகிழ்ந்து கொண்டு தலையைத் திருப்பிக் கொள்ளும்: ''எப்படியும் உங்கள் கவனத்தை என்பால் ஈர்ப்பதில் வெற்றி கண்டு விட்டேனே'' என்று கூறுவது போலிருக்கும் அதன் முகபாவம்.

எங்கள் புலிக்குட்டியைப் பார்ப்பதற்காக நகரம் பூராவிலிருந்தும், மற்றும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும், மலைகளிலிருந்தும் மக்கள் வந்து சென்றனர். வாயிலுக்கு வெளியே இருந்த மணியை அவர்கள் அடிப்பார்கள். கதவைத் திறப்பதற்காக நாங்கள் ஓடுவோம்.

''நீங்கள் ஒரு புலியைப் பழக்கி வைத்திருப்பதாய்க் கூறுகிறீர்களே, அதை நாங்கள் பார்க்கலாமா? அதைப் பார்ப்பதற்கு நாங்கள் காசு கொடுக்கத் தயாராயிருக்கிறோம்.''

இவர்களிடமிருந்து எல்லாம் காசு வாங்கிச் சேர்க்கலாமே என்று முதலில் நாங்கள் பரபரப்படைவது வழக்கம். ஒரு தரம் இரண்டு ரூபிள் வரை சேர்த்துக் கொண்டுவிட்டோம். இவர்களிடமிருந்து தலைக்கு ஐந்து கொப்பேக் வீதம் கட்டணம் வசூலித்தோம். ஆனால் அப்பா எங்களைக் கடிந்து கொண்டார், பணம் வசூலிக்கக் கூடாதென்று கண்டிப்பான முறையில் எங்களிடம் சொன்னார். வருகிறவர்கள் எல்லோரும் தொலைவில் நின்றுதான் பார்த்து விட்டுப் போக வேண்டும், வாஸ்காவை யாரும் தட்டிக் கொடுக்கக்கூடாது, அனுமதியின்றி

யாரும் தின்பதற்கு எதுவும் தரலாகாது என்று அவர் கூறினர்.

வயதானவர் பலரும் எங்களிடம் வந்து அனுமதி கேட்டதைக் கண்டு எங்களுக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

''நீங்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? சரி, எல்லோரும் வேலிக்கதவுக்கு வெளியே நில்லுங்கள். நாங்கள் புலியை இங்கே கூப்பிட்டு வருகிறோம். ஆனால் யாரும் அதைத் தட்டிக் கொடுக்கவோ, தின்பதற்கு அதற்கு எதுவும் தரவோ கூடாது.''

''சரி நீங்கள் சொல்கிறபடி நடந்து கொள்ளுகிறோம்.''

பிறகு அவர்கள் வேலிக் கதவுக்கு அப்பால் வரிசையாய் நிற்பார்கள்.

நாங்கள் தோட்டத்திற்குச் சென்று வாஸ்காவைக் கூப்பிடுவோம். தன்னைப் பார்க்க வந்தவர்கள் முன்னால் வருகையில் எப்போதும் அது மிகவும் ஆடம்பரமாய்த்தான் நடைபோடும்.

அதைப் பார்த்ததும் அவர்கள் எல்லோரும் மிரண்டு போய் ஓரடி பின்னால் செல்வார்கள். வாஸ்கா வியப்புற்று எங்கள் பக்கம் திரும்பிப் பார்க்கும்.

உடனே நாங்கள் அவர்களைத் தைரியப்படுத்துவோம்:

''நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. இது சாதுவானது.''

''நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் என்று அதனல் புரிந்து கொள்ள முடியவில்லை. எவ்வளவு அருமையாய்ப் பழகுகிறது பாருங்கள்.''

இவ்வாறு சொல்லி நாங்கள் வாஸ்காவின் வாய்க்குள் கையை விடுவோம், அதன் தலையில் தட்டிக் கொடுப்போம், காதுகளையும் கழுத்தையும் தொட்டுக் காட்டுவோம், அதன் பாதத்தைத் தூக்கி அதிலுள்ள தசைத் திண்டுகளை அவர்களுக்குக் காண்பிப்போம்.

''நகங்களை உள்ளே இழுத்துக் கொண்டு விட்டது பாருங்கள். யாரும் பயப்படத் தேவையில்லை'' என்று அவர்களிடம் கூறுவோம்.

அவர்கள் வாஸ்காவைப் பார்ப்பார்கள், பார்க்கப் பார்க்க அவர்களுக்கு மேலும் பார்க்க வேண்டும் போலிருக்கும். அதனால் வெகுவாய்க் கவரப்பட்டு அவர்கள் அதைத் தட்டிக்கொடுக்க விரும்புவார்கள்.

''தட்டிக் கொடுக்கக் கூடாது'' என்று சொல்லுவோம். ''அதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம். தட்டிக் கொடுத்தால் எங்களைத் திட்டுவார்கள்.''

''திட்டமாட்டார்கள்.''
''இல்லை, திட்டுவார்கள்.''

ஆனால் அவர்கள் ஓயாமல் வற்புறுத்தினார்கள். முடிவில் நாங்கள் அவர்களிடம் சொன்னோம்:

''எப்படியும் இது ஒரு புலி. கூர்மையான பல்லால் இது உங்களை ஒரு கடி கடித்தால் என்னவது? அப்போது என்ன செய்வீர்கள்?''

இதைக் கேட்ட பிறகுதான் அதைத் தட்டிக் கொடுக்க வேண்டுமென்ற விருப்பம் அவர்களிடமிருந்து மறையும்.

வாஸ்கா தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்தபோது ஒரு நாள் வேலியில் ஒரு ஓட்டை இருக்கக் கண்டது. அதனுள் தலையை விட்டுப் பார்த்த போது வெளியே தெருவில் நாய்கள் ஓடியதையும், வண்டிக்காரர்களும் குதிரைகளும் சென்றதையும், தொலைவில் குழந்தைகள் விளையாடியதையும் கண்ணுற்றது. வேலிக்குப் பக்கத்தில் புல் தரையில் சில பேர் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்.

யாவற்றையும் பார்த்ததும் வாஸ்கா தலையை உள்ளே இழுத்துக் கனைத்துக் கொண்டது, பிறகு 'ஊ-ஊ!' என்றது. திரும்பவும் தலையை ஓட்டைக்குள் நுழைத்து வெளியே பார்த்தது.

மனிதர்கள் அதைக் கவனியாதிருப்பது அதற்கு சகிக்க முடியாத ஒன்றாதலால் சற்று நேரம் அந்த மனிதர்களைப்

பார்த்திருந்துவிட்டு ஓட்டையில் புகுந்து அவர்களிடம் சென்றது.

சீட்டாடியவர்கள் திரும்பிப் பார்த்து விட்டுக் கூறினுர்கள்:

''என்ன இது?''

''இம்-இம்'' என்று பதிலளித்தது வாஸ்கா.

உடனே அவர்கள் குதித்தெழுந்து நின்ருர்கள். ஓராள் இன்னெருவரிடம் சொன்னுர்:

''வாஸ்கா, வா நீ! சீக்கிரமாய்ப் போய் விடுவோம்! வனத் துறையாளரது புலியாய் இருக்கும் போல் தெரிகிறது! பொல்லாதது!''

''வாஸ்கா, வா நீ'' என்று அவர் சொன்னது தன்னைப் பார்த்துச் சொல்லப் பட்டதாய் புலிக் குட்டி நினைத்துக் கொண்டு அவர்கள் பின்னுல் சென்றது. அவர்கள் பீதியடைந்து ஓட்டமாய் ஓட முற்பட்டனர். அங்கே போய்க் கொண்டிருந்த ஒரு பெண் பீதியுற்று அலறினுள். வாஸ்கா குழப்பமடைந்து நடுத் தெருவில் உட்கார்ந்து காதைச் சொறிய ஆரம்பித்தது.

அந்த நேரத்தில் அப்பா வேலி அருகே செல்ல நேர்ந்தது. வெளியே பார்த்த போது வாஸ்கா நடுத் தெருவில் உட்கார்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்ததாய்க் காதைச் சொறிந்து கொண்டதையும், பக்கத்து வீட்டுக்காரர்கள் தொலைவில் நின்று அதைக் கவனித்ததையும், சிரித்ததையும் கண்ணுற்ருர்.

உடனே அப்பா வேலியைத் தாண்டிக் குதித்து, வாஸ்காவை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வருவதற்காகத் திரும்பினுர்.

அவரைப் பார்த்ததும் பக்கத்து வீட்டுக்காரர்களுக்குத் தைரியம் பிறந்து விட்டது. அவர்கள் கூறினுர்கள்:

''இருங்கள்! அதற்குள் அதை அழைத்துச் செல்ல வேண்டாம்.''

''கண்ணைக் கவர்வதாய் இருக்கிறதே!''

''என்ன இது பூனையா, அல்லது வேறு வகையான விலங்கா?''

புலிகளைப் பற்றி அப்பா அவர்களுக்கு விளக்கமாய்ச் சொன்னார். பிறகு வாஸ்கா மற்போர் புரிய வல்லது என்பதை அவர்களுக்குக் காட்டினார்: அதன் முகவாயில் அவர் மெல்ல ஒரு தட்டு தட்டினார். உடனே வாஸ்கா அவர் கையைப் பாதத்தால் தள்ளிக் கொண்டு பதிலுக்கு அப்பாவுக்கு ஓர் அடி கொடுக்க முயன்றது.

இறுதியில் அப்பா அதை வீட்டுக்கு அழைத்து வந்த போது பக்கத்து வீட்டுக்காரர்கள் தொலைவில் பின்தொடர்ந்து வந்தனர்.


''வாஸ்கா! எங்களிடம் வந்ததற்காக நன்றி உனக்கு!'' என்று கூறினார்கள்.

வீட்டில் எங்களிடம் கோழிகள் பலவும் இருந்தன. வாஸ்கா மிகுந்த அக்கறையோடு அவற்றை உற்று நோக்கி வந்தது.

ஒரு நாள் மழை பெய்து ஓய்ந்ததும் வாஸ்கா வெளி முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தது. திட்டு திட்டாய் மழைநீர் தேங்கியிருந்தது. அவற்றினிடையே வாஸ்கா கவனமாய் நடந்து, பூனையைப் போல் பாதங்களை உதறிக் கொண்டு சென்றது.

அப்போது ஒரு கோழியும் அதன் குஞ்சுகளும் வெயிலில் தரையைக் கொத்திக் கொண்டு திரியக் கண்டது வாஸ்கா. குஞ்சுகள் யாவும் பஞ்சுப்பந்துகள் மாதிரி இருந்தன. வாஸ்கா உடனே காதுகளைச் சாய்த்துப் பிடரியில் அழுத்திக் கொண்டது. (பதுங்கிப் பாயுமுன் எப்போதுமே அது அப்படி தான் செய்யும்), தரையோடு தரையாய் உடலைக் கவிழ்த்துக் கொண்டு அந்தக் குஞ்சுகள் மீது பாயத் தயாராயிற்று.

அபாயத்தை உணர்ந்து விட்ட கோழி பரபரப்புற்று



தன் குஞ்சுகளை ஒருசேரத் திரட்டிக் கொண்டது. கூடுமான அளவுக்கு அச்சுறுத்தும்படி இறகுகளைச் சிலிர்த்து விட்டுக் கொண்டு சீறிப் பாய்ந்து வாஸ்காவைத் தாக்க முற்பட்டது. இறகுகளைப் படபடவென அடித்து அதன் மீது பாய்ந்து அதன் கண்களைக் கொத்த முயன்றது.

வாஸ்கா பயந்து போய் தலையை ஆட்டிக் கொண்டது, அங்கிருந்து ஓட்டமாய் ஓட முற்பட்டது. எதையும் கவனி யாது நீர்த் திட்டுகளில் விழுந்தடித்து, சேற்றை சுற்றிலும் வாரி இறைத்தவாறு ஓடிற்று. கோழி மேலும் மேலும் துணி வுடன் தாக்கிப் பின் பக்கத்திலிருந்து கொத்தியவாறு அதைத் துரத்திக் கொண்டு வந்தது. வாஸ்கா கதி கலங்கிப் போய் வாயில் முகப்பின் படிகளில் அடித்து மோதிக் கொண்டு மேலே ஏறிய பிற்பாடுதான், சிறகுகள் படபடக்க கோழி அங்கிருந்து திரும்பித் தன் குஞ்சுகளை நோக்கி வெற்றி நடை போட்டது.

கோழிகளுடன் வாஸ்காவுக்கு ஏற்பட்ட இரண்டாவது மோதல் ஒரு முக்கிய விழாவிற்கு முன்னதாய் நடைபெற்றது.

எல்லோரும் அன்று அவசர வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். அதிகாலையிலிருந்தே யாவற்றையும் சுத்தம் செய்து கொண் டும் சமயலறையில் வேலை செய்து கொண்டும் இருந்தோம். இந்த அமளியில் நாங்கள் வீட்டுப் பிராணிகளுக்கு நேரத்தில் உணவளிக்கத் தவறி விட்டோம்.

நாய்களுக்குப் பசி வந்து விட்டது. அதே போல வாஸ் காவுக்கும் பசியாய் இருந்தது.

திடுமென சோன்யா சமையலறைக்கு ஓடி வந்து கூச்ச லிட்டாள்:

''அம்மா நாய்கள் செய்திருக்கும் அநியாயத்தை வந்து பாரேன்!''

''என்ன ஆயிற்று?'' என்று கேட்டவாறு அம்மா சோன் யாவின் பின்னால் விரைந்தார்.

நாய்கள் தமக்கு வேண்டிய உணவைத் தாமே தேடிக் கொள்வதென முடிவு செய்து, விழா விருந்துணவுக்காக நாங் கள் வைத்திருந்த தொடை இறைச்சியை எடுத்துச் சென்று தின்று கொண்டிருந்தன. கிடங்கினுள் நுழைந்து அங்கிருந் ததை அவை திருடி எடுத்துக் கொண்டு விட்டன.

வாஸ்காவுக்கு இன்னும் உணவு அளிக்கவில்லை என்று அப்போதுதான் எங்களுக்கு நினைவு வந்தது. அதற்கு உணவு தயாரிப்பதற்காக ஓடினோம். ஆனால் ஏற்கெனவே கால தாமத மாகி விட்டது.

வெளிமுற்றத்தில் பசியால் குணம் கெட்டுப் போய் வெயிலில் உட்கார்ந்திருந்த வாஸ்கா, அங்கும் இங்கும் திரிந்து கொத்திக் கொண்டிருந்த கோழிகளைக் குரோதமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது. அவற்றின் அருகே செல்ல அதற்கு தைரியமில்லை, முன்பு கொத்து பட்டதை அது மறந்து விட வில்லை.

சரியாய் அந்நேரத்தில் நொண்டிச் சேவல் ஒன்று அதன் அருகே தத்தித் தள்ளாடிச் சென்றது.

வாஸ்கா வெடுக்கென பாய்ந்தது, அதே கணத்தில் அந்த

அவலச் சேவல் அதன் பற்களில் சிக்கிக் கொண்டு விட்டது. வாயில் முகப்பிலிருந்து இதைக் கண்ணுற்ற நாங்கள் வாஸ்காவைப் பார்த்துக் கூச்சலிட்டோம்.

வீட்டுக்குள்ளிருந்து அப்பா வெளியே ஓடி வந்தார். கைக்கு அகப்பட்ட ஒரு கம்பால் வாஸ்காவைச் சுளீரென அடித்து விட்டு அதட்டினார்.

''அதைக் கீழே விடு! போட்டு விடு அதை!''

சேவலை இறுகக் கடித்த பற்களுக்கு இடையிலிருந்து வாஸ்கா ஆத்திரமாய் உறுமிற்று. அதன் கண்கள் நெருப்பாய்க் கனன்றன, அதைப் பார்ப்பதற்குப் பயங்கரமாய் இருந்தது. இப்போது அதை அப்படியே விட்டு விட்டால், விரைவில் இதே போல் திரும்பவும் நடக்கவே செய்யும் என்பதை அப்பா உணர்ந்து கொண்டார். அப்பா அதைத் திரும்பத் திரும்ப அடித்தார்.

வாஸ்கா ஆவேசமாய் உறுமியவாறு தத்தித் தாவிற்றே ஒழிய, சேவலை அது விடவே இல்லை.

பிறகு அப்பா அதன் பின்னங் கால்களைப் பிடித்து, அதைத் தூக்கிச் சுழற்றி, அதன் பற்களிடையே இருந்த சேவலுடன் சேர்த்து அப்படியே வேலி மீது அடித்தார்.

மிகவும் கடுமையான தண்டனைதான், ஆனால் ஆத்திரங் கொண்ட புலியை உடனே அது அடங்கிவிடச் செய்தது. பற்களுக்கிடையே இருந்த சேவலைக் கீழே விட்டு விட்டுப் பொறி கலங்கிய நிலையில் அது அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தது.

சீக்கிரமே அம்மா அதற்கு உணவு அளித்தார்கள். தின்று விட்டு அது கூனிக் குறுகியவாறு தோட்டத்துக்குப் போய்ச் சேர்ந்தது.

அப்பாவை அது நெடுங்காலம் வரை மன்னிக்கவில்லை. அவரிடம் போகவும், அவர் மீது உராயவும், அவருடன் ''பேசுவதற்கும்'' கூட மறுத்து விட்டு அவரிடமிருந்து விலகியிருந்தது அது.

ஆனால் அதன் பிறகு அது எந்தக் கோழியையும் தொட வில்லை. எப்போதாவது புதர்களுக்கு மத்தியில் தனது பதுங்கு இடத்திலிருந்து கோழிகள்மீது திடுமென அது பாய்ந்தது மெய்தான். ஆனால் அது விளையாட்டே அன்றி வேறல்ல. கோழி கள் கூச்சலிட்டுக் கத்தியவாறு சிதறி ஓடுவதோடும், வாஸ்கா தனது சேஷ்டையால் தானே மிரண்டு எதிர்த் திசையில் பாய்ந்து மறைவதோடும் இந்த விளையாட்டு முடிவுற்று விடும்.

நாங்கள் சகோதரிகள் நால்வரும் எங்களது பிறந்த நாட்கள் அதிக இடைவெளி இல்லாமல் அடுத்தடுத்து வரு மாறு பிறந்திருந்தோம்.

பிறந்த நாள் விருந்துக்கு எங்களுக்கும் விருந்தினர்கள் எல்லோருக்கும் கேக்கு வேண்டும், அந்தி முழுதும் சிரிப்பும் கும்மாளமுமாய் இருக்க வேண்டும், சிறப்புக்குரிய அன்பளிப் பும் வேண்டும். ஒரு பிறந்த நாளெனில் அவ்வளவு சிரம மல்ல, ஆனால் அடுத்து அடுத்து நான்கு பிறந்த நாள் கேக்கு கள் தயார் செய்து, கூச்சலும் கூத்துமான நான்கு மாலைகளைச் சமாளிக்க வேண்டுமெனில், பொறுமையைச் சோதிக்கும் நிலைமையாய் அல்லவா ஆகி விடுகிறது? இந்த நான்கு நாட் களும் முடிவடைவதற்குள் அம்மா களைத்து ஓய்ந்து போய் எதற்கெடுத்தாலும் எரிந்து விழ ஆரம்பிப்பார். ஆகவே எங்கள் பிறந்த நாட்களை ஒரு பெரிய விழாவாய்க் கொண்டாடு வதென்றும், இதற்கேற்ப கேக்கையும் விருந்தினர் எண்ணிக் கையையும் கேளிக்கையையும் பெரிதாக்கிக் கொள்வதென் றும் முடிவு செய்தோம்.

எங்களது இந்த ஒருமித்த பிறந்த நாளுக்கு முன்தினம் நாங்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து அம்மாவுக்கு உதவியாக வேலை செய்தோம். வெளி முற்றத்தையும் தோட்டத்தில் நடை பாதைகளையும் கூட்டி சுத்தம் செய்தோம். மிகவும் கடின பணியான எங்களது பெரிய பிறந்த நாள் கேக்கு

தயார் செய்யும் பணியில் துணையாய் இருந்து தொண்டு புரிய முற்பட்டோம். சிறப்பாய் அமைய வேண்டுமென்ற ஆவலாலும் அக்கறையாலும் உந்தப்பட்டு, கேக்கின் உள்ளே வைக்க வேண்டியவற்றை நாங்கள் அவ்வப்போது ருசி பார்த்துக் கொண்டிருந்தோம். இருக்க வேண்டியவற்றில் பாதிதான் எஞ்சியிருந்தன. முடிவில் அம்மா எங்களிடம் சொன்னார்:

''சரி, நீங்கள் உதவியது போதும்! வேலைகளை நானே பார்த்துக் கொள்கிறேன்.''

எங்களைப் போய் படுத்துறங்கும்படி சொல்லி அனுப்பி விட்டார்கள்.

பிறகு நாங்கள் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கையில் அவர் சந்தடியின்றி வந்து எங்கள் ஒவ்வொருவர் தலையணைக்கு அடியிலும் அன்பளிப்பை மறைத்து வைத்தார். பிறகு தாமும் போய்ப் படுத்துக் கொண்டார்.

பொழுது விடிந்ததும் முதற் காரியமாய் நாங்கள் எங்கள் தலையணைக்கு அடியில் பார்த்தோம். ஒவ்வொருவருக்கும் அவரவரும் பெரிதும் விரும்பிய அன்பளிப்புக் கிடைத்தது. எல்லா விலங்குகளையும் பற்றிக் கூறி பிரேம் எழுதிய தடித்த புத்தகம் சோன்யாவுக்கு அன்பளிக்கப் பட்டிருந்தது. எனக்குக் காகித அட்டையிலான பொம்மலாட்ட நாடக மன்றம் கிடைத்தது. யூலியா ஓவிய வண்ணங்கள் அடங்கிய ஒரு பெரிய பெட்டியையும், நத்தாஷா ''வீட்டுப் பிராணிகள்'' என்பதான விளையாட்டுத் தொகுதியையும் பெற்றுக் கொண்டனர்.

எங்கள் அன்பளிப்புகளை வரிசையாய் வைத்து அவற்றைப் பார்த்து நாங்கள் மகிழ்ந்து கொண்டிருந்தோம். எங்களைப் போலவே அம்மாவுக்கும் ஆனந்தமாய் இருந்தது. எங்களைக் காலை உணவருந்துவதற்காகக் கூப்பிட வந்த அவர், பேசிக் கொண்டு நெடுநேரம் எங்கள் அறையில் இருந்து விட்டார். பூரிப்பிலும் பரபரப்பிலும் நாங்கள் காலை உணவையே மறந்து விட்டோம்.

இதற்கிடையில் எங்கள் வீட்டுக்கு விருந்தினர் ஒருவர் வந்தார். வாயில்முகப்பின் கதவு திறந்திருந்தது. வந்தவர் நேரே சாப்பாட்டு அறைக்குள் சென்றதன் சப்தம் எங்கள் காதில் விழவில்லை. அப்பாவின் ஊழியர்களில் ஒருவர் அவர். சாப்பாட்டு மேசைக்குச் சென்று அதன்மீது இருந்த எங்கள் பிறந்த நாள் கேக்கையும், ''செல்வியரே, இனிய பிறந்த நாள்!'' என்று அதில் காணப்பட்ட வாழ்த்தினையும் பார்த்து மகிழ்ந்து கொண்டார் அவர்.

''ஹா-ஹா! பிறந்த நாள் விழா கொண்டாடப் போகிறுர் கள்!'' என்று அவர் தமக்குத் தாமே கூறிக் கொண்டு, வாய்க்குள் பாட்டுப் பாடியவாறு அறைக்குள் நடை போட் டார்.

வந்தவர் ஒல்லியாய் சிற்றுருவினராய் இருந்தார், பத்து வயதுப் பையனின் உயரம்தான் இருந்திருப்பார். ஆயினும் நேராய் நிமிர்ந்து நின்ருர், விறைப்பாய் இருந்தார். யாரும் அவரிடம் வேடிக்கை செய்யலாமென நினைத்திருக்க மாட் டார்கள். அப்படி அவர் பெரிய மனிதத் தோரணையில் நடந்து கொண்டார்.

குழந்தைகளாகிய எங்களை அவர் சந்திக்கையில் நாங்கள் குலுக்குவதற்கு இரண்டே இரண்டு விரல்களை நீட்டுவார், கர்வமாய்ப் புருவங்களை உயர்த்திக் கொள்வார். எங்களுக்கு அவரைப் பிடிக்காது, இரகசியமாய் நாங்கள் அவரைக் கேலி செய்வது வழக்கம்.

அறையில் நடை போட்டுக் கொண்டிருந்த அவர், கோட்டுப் பைக்குள்ளிருந்து கைக் குட்டையை எடுத்து மீசை யைத் தடவி விட்டுக் கொண்டார். கைக்குட்டையிலிருந்து வீசிய செண்டின் வாசனை அறையினுள் நிரம்பி விட்டது.

அவருக்கு மிக அருகிலிருந்து யாரோ ஒருவர் திடுமென அருவருப்புடன் 'உச்-ச்சி!' என்றது அவர் காதில் விழுந்தது.

''அடே, யாரப்பா அது?'' என்று அவர் திரும்பிப் பார்த் தார்.

யாருமல்ல, வாஸ்காதான்! செண்டின் வாசனை மூக்கில் ஏறியதும் அது தும்மிவிட்டது. அது படுத்திருந்த சோபாவில் எழுந்து உட்கார்ந்து கொண்டு, மீண்டும் ஒரு தரம் மூச்சை இழுத்து மோப்பம் பிடித்துப் பார்த்தது—சீ, சகிக்க முடியவில்லையே! முகத்தைச் சுளித்துக் கொண்டது. அதன் நாக்கு வெளியே தொங்கிற்று, அதன் மூக்கைச் சுற்றிலும் தோலில் சுருக்கங்களாய்த் தெரிந்தன. பாவம் வீட்டுக்கு வந்திருந்த மனிதர் கல்லாய்ச் சமைந்து போய் விட்டார். வேடிக்கை அல்லவே! அவரிடமிருந்து இரண்டு தப்படி தள்ளி புலி அல்லவா உட்கார்ந்திருந்தது—ஆம், மெய்யானபுலி, உயிருள்ள கொடும் புலி அவரைப் பார்த்துப் பயங்கரமாய்க் கோப்பு காட்டிற்று!

வாஸ்கா திரும்பவும் தும்மி விட்டுத் தலையை ஆட்டிற்று. மனிதர்களிடமிருந்து இவ்வளவு கடுமையான வாடை வீசுவதன் காரணம் வன விலங்குகளுக்கு விளங்குவதே இல்லை. விலங்குகள் தாம் இருக்கும் இடம் தம் பகைவர்களுக்குத் தெரியாதிருக்கும் பொருட்டு தம்மிடமிருந்து வாடை அதிகமாய் வீசாமல் பார்த்துக் கொள்கிறவை.

எப்படித் தப்புவதென்று விருந்தினர் பரபரக்கச் சிந்தனை செய்தார். திறந்திருந்த அறைக் கதவைச் சோகக் கண் கொண்டு உற்று நோக்கினார், ஆனால் காலை எடுத்து வைத்து நடக்கத் துணிவின்றி அசையாமல் நின்றிருந்தார்.

இதற்கிடையில் வாஸ்கா அவருடைய நிலைமையை வேறு விதமாய்ப் புரிந்து கொண்டது. அவரை அது தன்னுடன் விளையாட வந்த ''பையனாய்'' நினைத்துக் கொண்டது. சோபாவிலிருந்து இறங்கி அம்மனிதரிடம் சென்று அது கனைத்தது; ''சரி, என்ன விளையாடலாம்?'' என்று கேட்பது போலிருந்தது அதன் கனைப்பு.

விருந்தினருக்கு அங்கமெல்லாம் நடுங்கிற்று. வாஸ்கா ஓர் அடி பின்னால் சென்றது. அதற்கு சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தது; விபரீதமான 'பையனாய்' இருக்கிறானே என்று

நினைத்தது. இவனிடமிருந்து கடுமையான வாடை வீசுகிறது, நடுங்குகிறான், ஏனையோரைப் போலல்லாமல் வாஸ்காவுடன் பேசாமல் நிற்கிறான்—மெய்யாகவே விபரீதமாய் இருக்கிறானே என்று நினைத்தது.

ஒவ்வோர் அடியாய் எடுத்து வைத்து வாஸ்கா பின் வாங்கிச் சென்றது. முடிவில் அறைக் கதவுக்குச் சென்று அங்கே நின்றது.

''கண்ணு! கண்ணு!''—விருந்தினர் பெருமுயற்சி செய்து வாயைத் திறந்து ஈனக்குரலில் கூறினார். ''கண்ணு! நீ வெளியே போய் விடேன்!''

அவர் அதைப் போகச் சொல்லி கைக்குட்டையை ஆட்டினார். வாஸ்கா பலமாய் மீண்டும் தும்மிற்று. விருந்தினர் ஒரு குதி குதித்து மேசைக்குப் பின்னால் வந்து நின்றார்.

ஓகோ! ''பையன்'' தனது விபரீத முறைகளை விட்டு விட்டு விளையாட வருகிறானே என்று நினைத்த வாஸ்கா பூரிப்படைந்தது. தாவிப் பாய்ந்து அவரிடம் ஓடிற்று. விருந்தினர் ஓட்டமாய் ஓடி சோபாவின் மீது ஏறிக் கொண்டார், வாஸ்காவும் அவர் பின்னால் ஓடிற்று. விருந்தினர் சோபாவிலிருந்து மேஜைக்குத் தாவி கோப்பைகளுக்கு மத்தியில் எங்களுடைய பிறந்த நாள் கேக்குக்குப் பக்கத்தில் மண்டியிட்டுக் குனிந்து கொண்டார். சற்று நேரத்துக்கு அவர் வாஸ்காவின் பார்வையிலிருந்து மறைந்து விட்டார்.

நல்லாய் இருக்கிறதே இது! விளையாட்டு இப்போதுதான் சூடு பிடிக்க ஆரம்பித்தது. அதற்குள் பையன் எங்கோ மறைந்து விட்டானே.

வாஸ்கா பின்னங்கால்களில் எழுந்து நின்று முன்னங்கால்களை மேசையில் வைத்துக் கொண்டு எட்டிப் பார்த்தது. ஓகோ! இதோ இருக்கிறானே! மேசை மீது உட்கார்ந்து கொண்டு வாஸ்கா வரட்டுமென்று காத்திருக்கிறான்.

ஆனந்தமடைந்து புலிக் குட்டி அங்கும் இங்கும் தாவிக் குதித்து ஆடிற்று. பாவம், விருந்தினருக்குப் தலையில் முடிகள்

குத்திட்டு நின்றன. அமத்தலேயும் ஆடம்பரத்தையும் அறவே மறந்து விட்டு அவர் நீரில் மூழ்கித் தவிக்கும் ஆளேப்போல் கூச்சலிட்டார்:

''ஐயோ! உதவுங்கள்!... யாரும் இல்லேயா? உதவுங் கள்!''

இடையிடையே வாஸ்கா தனது குதியாட்டத்தை நிறுத்திக் கொண்டு எழுந்து நின்று மேசை மேல் எட்டிப் பார்க்கும். புலியின் மூக்கு தம்மிடமிருந்து சற்றே அப்பால் தெரிவதையும் அதன் கண்கள் களிப்புற்றுத் தகதகப்பதையும் பார்த்து விட்டு விருந்தினர் தமது வாசனேக் கைக்குட்டையை வீசிய வாறு புலம்புவார்:

''ஐயோ, யாருமே இல்லேயா? என்னேக் காப்பாற்றுங்க ளேன்!''

இந்தப் புலம்பல் எங்கள் காதுக்கு எட்டவே, நாங்கள் அலறிப் புடைத்துக் கொண்டு சாப்பாட்டு அறைக்கு ஓடி வந்தோம். ஆனுல் திடுக்கிட்டுப் போய் கதவருகே நின்று விட்டோம்: எங்களது விருந்து மேசையில் எங்களது அரிய பிறந்த நாள் கேக்குக்குப் பக்கத்தில் அப்பாவின் எழுத்தர் மிரண்டு போய் மண்டியிட்டுக் கவிழ்ந்து கொண்டிருந்தார். மதங் கொண்ட யானே ஒன்று தம்மைத் தாக்க ஓடி வருவது போல் அவர் தமது கலங்கிய கண்களால் தரையை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனுல் தரையில் அப்படி ஒன் றையும் காணும், வாஸ்காதான் அங்கே அமர்ந்திருந்தது. சிரிப்பால் அதன் மீசை முடிகள் விறைத்து உயர்ந்திருந்தன.

நாங்கள் எல்லோரும் கூச்சலிட்டுச் சிரிக்கத் தொடங்கி விட்டோம். விருந்தினர் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண் டார். ஆனுல் மேசையிலிருந்து கீழே இறங்கத் துணியாது பீதியுடன் வாஸ்காவைப் பார்த்து விழித்துக் கொண்டிருந் தார்.

பிறகு அப்பா அங்கே வந்து சேர்ந்தார். அவர் உதவி செய்து விருந்தினரைக் கீழே இறக்கி விட்டு, அவருடைய

கசங்கிய உடுப்புகளைச் சரி செய்து, வாஸ்காவின் நடத்தைக் காக அவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். ஏன், காலால் வாஸ்காவுக்கு உதையுங்கூட கொடுத்தார், பிறகு எங்களைப் பார்த்துக் கடுமையான குரலில் கூறினார்:

''போதும் நிறுத்துங்கள்! சிரிப்பதற்கு என்ன இருக்கிறது இங்கே? இந்த உருப்படாளை வெளியே இழுத்துச் செல்லுங்கள்.''

''அந்த உருப்படாளை'' நாங்கள் முன்னங்கால் பாதங்களைப் பிடித்து வீட்டிலிருந்து வெளியே தோட்டத்துக்கு அழைத்துச் சென்றோம். அங்கே போய்ச் சேர்ந்ததும் விழுந்து விழுந்து நெடுநேரம் சிரித்தோம்.

வசந்தத்திலும் கோடையிலும் இலையுதிர் காலத்திலும் வாஸ்காவை நாங்கள் சிறு குட்டியாய்க் கருதிச் செல்லங் கொடுத்து வந்தோம். ஆனால் இலைகள் எல்லாம் உதிர்ந்து தோட்டத்தில் மரங்கள் மொட்டையானதும் வாஸ்கா பெரிய புலியாய் மாறிவிட்டது என்பதைத் திடுமெனக் கவனித்தோம்.

பிள்ளைப் பருவ விளையாட்டுகளை ஒவ்வொன்றாய் விட்டொழித்து விட்டு இப்போது அது தடங் கண்டு பின்தொடருதல், பதுங்கிச் செல்லுதல், போராடுதல், பாய்தல் போன்றவற்றில் ஈடுபட முற்பட்டது.

பெரிய புலிக்குரிய சில சிறப்பியல்புகள் பிள்ளைப் பிராயம் முதற் கொண்டே அதனிடம் இருக்கவே செய்தன. ஓசையின்றி பதுங்கிச் சென்று பல பிராணிகள் மீதும் பறவைகள் மீதும் பாய்வதில் எப்போதுமே அது நாட்டங் கொண்டிருந்தது. வயது ஆக ஆக இந்த இயல்புகள் மேலும் மேலும் ஓங்கி வளர்ந்து சென்றன.

கோழியால் கொத்தப் பட்ட அந்த முதலாவது அனுபவத்துக்குப் பிற்பாடு, இன்னும் முக்கியமாய் சேவலைப் பிடித்ததற்காக அதற்குக் கிடைத்த தண்டனைக்குப் பிற்பாடு, வாஸ்கா எந்தக் கோழியையும் தொடவே இல்லை. ஆயினும் இறகுகள் மேலே பட்டபோதும், சேவலின் துவளும் உடல்

அதன் வாயில் இருந்த போதும் அதற்கு ஏற்பட்ட சுகானுப வத்தை அது மறந்து விடவில்லை.

ஆகவே இப்போது அது தனக்கு ஒரு புதிய விளை யாட்டை வகுத்தமைத்துக் கொண்டது.

எங்களுடைய அறையில் யாரும் இல்லாத நேரமாய்ப் பார்த்து அங்கே சென்று அது இந்த விளையாட்டை ஆடத் தொடங்கும்.


எங்கள் படுக்கையிலிருந்து ஒரு தலையணையை வெளியே இழுத்து ஒரு மூலையைக் கடித்துக் கிழித்து விட்டு, பாதத் தால் தட்டி இறகுகளை நாற்றிசையிலும் கிளர்ந்து எழச் செய்யும். பிறகு தலையணைக்குள் பற்களைப் பதித்துக் கொண்டு உறுமும்.

இது காட்டுப் பறவையை வேட்டையாடுவது போன்றது தானே!

அதன் உறுமலையும் கனைப்பையும் கேட்டு நாங்கள் ஓடி வருவோம், வாஸ்காவைக் கையும் மெய்யுமாய்ப் பிடிப் போம். தலையணை தரையிலே கிடக்கும், அதன் மேல் வாஸ்கா இருக்கும். புலியின் மூர்க்க குணம் வாஸ்காவின் முகத்திலே குடி கொண்டிருக்கும், மேலெல்லாம் இறகுகள் படிந்திருக் கும்.

''என்ன ஆயிற்று உனக்கு? பற்களில் தினவா எடுக்கிறது?'' என்று கடிந்து கொண்டவாறு எங்களுடைய உடைமைகளை அதனிடமிருந்து திருப்பி வாங்குவோம். ''பற்களை வைத்துக் கொண்டு அதனால் சும்மா இருக்க முடியவில்லை!'' என்று கூறிக் கொள்வோம்.

விரைவில் நாங்கள் ஒரு வழி கண்டு பிடித்தோம். ஒரு பழைய ஒட்டுக் கம்பளி பூட்சைத் தேடிப் பிடித்து எடுத்து வந்து அதை வாஸ்காவுக்கு அன்பளித்தோம். அந்தப் பூட்சில் ஒரு நூலைக் கட்டி நாங்கள் இழுத்துச் செல்வோம். பதுங்கி வந்து சுண்டெலியின் மீது பாயும் பூனை போல் வாஸ்கா அதன் மீது பாயும். இப்படிச் சிறிது நேரம் அதனுடன் விளையாடிய



தும் நாங்கள் அந்தப் பூட்சை அதனிடமே கொடுத்து விடுவோம். வாஸ்காவைப் பிற சேஷ்டைகளில் இறங்காமல் தடுப்பதற்கு இது ஒரு நல்ல வழியாய் இருந்தது. இந்தப் பூட்சு அதன் வாயில் இருக்குமாயின் அது வேறு எதையும் தொடுவதில்லை.

பூட்சைக் கவ்விக் கொண்டு அது கொட்டிலுக்குப் புறப்பட்டுச் செல்லும். குதிரையைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பது வாஸ்காவுக்கு ஒரு சுவையான பொழுது போக்கு. பகற் பொழுதில் தோட்டத்தில் வேலியால் அடைக்கப்பட்ட ஒரு பகுதியில் குதிரையை மேய விடுவோம். அப்போது வாஸ்கா புதர்களில் ஒளிந்து கொண்டு மணிக் கணக்காய்க் குதிரையைப் பார்த்துக் கொண்டிருக்கும்.

எங்களுக்கு மிகவும் பிடித்த ஒரு விளையாட்டு வருமாறு:

எங்களுடைய பொம்மைகளை நாங்கள் எங்களது சிறு வண்டிகளில் வைத்துக் கொண்டு புறப்படுவோம். குறிஞ்சிப் புதர்கள் வழியே, இந்த பொம்மைகள் 'வசித்து வந்த' சிறு வெளியை நோக்கிப் போய்க் கொண்டிருப்போம்.

குறுகலான பாதை வழியே சோன்யாவும் யூலியாவும் நத்தாஷாவும் வண்டிகளை இழுத்துச் செல்வார்கள். நான் அவர்களுக்குப் பக்கத்தில் ஒரு கம்பின்மீது சவாரி செய்வேன். அந்தக் கம்புதான் எனது அரும்பெரும் குதிரையான ''சூறுவளி''.

இப்படி *நாங்கள் பயணம் போய்க் கொண்டிருக்கும் போது எங்களுக்குள் கூறிக் கொள்வோம்: ''இந்தப் பகுதியில் காட்டு விலங்குகள் அடிக்கடி கிராமவாசிகளைத் தாக்குகின்றன.''

இதற்குள் புதர்களுக்கு இடையிலிருந்து வாஸ்காவின் குண்டுக் கண்கள் பளிச்சிடும். எக்கணத்திலும் பாய்வதற்குத் தயாராய் அது பூனை போல வண்டிகளைப் பின்தொடர்ந்து வரும்.

நாங்கள் சென்றடைய வேண்டிய வெளியினை நெருங்கி வந்து கொண்டிருப்போம். புதர்களும் மரங்களும் அடர்ந்த மிகவும் அபாயகரமான பாதையை இனி நாங்கள் கடந்தாக வேண்டும். நாங்கள் ஒரு திருப்பத்தை வந்தடைவோம், வண்டிகள் ஒவ்வொன்ருய் அந்தத் திருப்பத்தினுள் மறையும்.

திடுமென ஒரு புலி பாய்ந்து வந்து எங்கள குழுவைத் தாக்கும். புலி ஒரு பொம்மையைக் கவ்விக் கொண்டு ஓடும் போது கிராமவாசிகள் அலறிக் கூச்சலிடுவார்கள். புலி அந்த பொம்மையுடன் தோட்டத்தின் கோடியிலே மறைந்து விடும். அந்தக் கோடியை நாங்கள் ஒரு காடாய்க் கற்பனை செய்து கொள்வோம்.

அவசரமாய் நாங்கள் எங்களது துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு (முனையில் உருளைக் கிழங்கு குத்திப் பொருத்தப் பட்ட கம்புகள்தான் எங்கள் துப்பாக்கிகள்), புலியிடமிருந்து ''குழந்தையைக்'' காப்பாற்றுவதற்காக ஓடுவோம். உருளைக் கிழங்கு குண்டுகளின் தாக்குதலுக்கு உள்ளாகி புலி பின்வாங்கி ஓட, நாங்கள் ''குழந்தையை'' அதனிடமிருந்து காப்பாற்றுவோம், போரும் முடிவடையும். ஆனல் இந்த அபாக்கியக் ''குழந்தை'' அதன் முடியை இழந்திருப்பதையும், அதனுள்

அடைக்கப்பட்ட பஞ்சு வெளியே வந்திருப்பதையும் நாங்கள் அடிக்கடி காண நேரும்.

பிறகு பொம்மையின் முடியும் தலைக் கவிகையும் வாஸ் காவின் வாயிலிருக்கக் காண்போம்.

விரைவில் வாஸ்கா தானாகவே மேலும் ஒரு புதிய விளை யாட்டை வகுத்தமைத்துக் கொண்டது. மரத்தின் மீது பாயும் விளையாட்டு அது.

எங்கள் வீட்டுக்கு எதிரே வயது முதிர்ந்த ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் கிளை ஒன்றில் நாங்கள் ஒட்டுக் கம்பளித் துண்டு ஒன்றைத் தொங்க விட்டு, வாஸ்கா அதைத் தரவிப் பிடிப்பதை வேடிக்கை பார்ப்போம். தரையிலிருந்து சுமார் இரண்டு மீட்டருக்கு மேலான உயரத்தில் கம்பளி தொங்கிக் கொண்டிருக்கும். வாஸ்கா தரையில் குனிந்து கொண்டு குறி பார்த்துப் பாயும். ஒட்டுக் கம்பளியில் பற்களையும் நகங்களை யும் புதைத்துக் கொண்டு அது மரக் கிளையில் தொங்கும் போது நெகிழ்ச்சி மிகுந்த அதன் பூனை உடலின் ஒவ்வொரு தசைநாரும் துவண்டு அலைவுறும்.

ஆசை தீர ஆடியபின் அது கீழே குதித்து மௌனமாய் இரண்டு மூன்று தரம் மரத்தைச் சுற்றி வரும். பிறகு திரும் பவும் குறி பார்க்கும். அதன் கண்கள் நெருப்பு போல் தகதகக்கும், அதன் மீசை விறைத்து நிற்கும், அதன் வால் துடித்து ஆடும்.

சோபாவின் நீளம் இப்போது வாஸ்காவுக்குப் போத வில்லை.

தொடர்ந்து நாங்கள் வாஸ்காவுடன் விளையாடி வந் தோம். ஆனால் வாஸ்காவின் வாழ்க்கை முறையை மாற்ற வேண்டிய காலம் நெருங்குவதாய் அப்பாவும் அம்மாவும் தமக்குள் பேசி வந்தனர்.

பயந்த சுபாவங் கொண்ட ஓர் அன்னை ஒரு நாள் நகராட்சித் தலைவரிடம் சென்றார். முனகிப் பெருமூச்சு விட்டபின் அவர் வாஸ்காவைப் பற்றி முறையிட்டார்:

''இதற்கு இடம் தருவது முறையாகுமா? நகரில் புலியைத் திரிய விடலாமா? நினைக்கவே எனக்கு நடுக்கமாய் இருக்கிறதே! அது யாரை என்ன செய்யுமோ? நாம் ஏன் இப்படி நம்மை அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டும்? எதற்காக இந்தத் தொல்லையும் ஆபத்தும்?''

நகராட்சித் தலைவர் அப்பாவை அழைத்து வாஸ்காவைத் திரிய விடக்கூடாது, அதைக் கூண்டில் அடைக்க வேண்டும் என்று சொன்னார். கூண்டு தயாராகும் வரை அதைச் சங்கிலியில் கட்டி வைக்க வேண்டும் என்றார்.

நகராட்சித் தலைவரின் உத்தரவுக்குக் கீழ்ப்படிவதைத் தவிர எங்களுக்கு வழி ஏதும் இல்லை.

ஆரம்பத்தில் வாஸ்காவால் சங்கிலிக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆக்ரோஷக் குரலில் அது உறுமிக் கொண்டிருந்தது: 'ஆ-ஹம், ஆ-ஹம்! பா-உம், பா-உம்...!'

அது படும் துன்பத்தைப் பார்க்க எங்களுக்கு சகிக்க முடியாமற் போய்விடும். அதை அவிழ்த்து விடுவதில்லை என்று நாங்கள் ஒத்துக் கொண்டிருந்த போதிலும், பெரியவர்கள் பக்கத்தில் இல்லாத போது அதை நாங்கள் அவிழ்த்து விடுவோம் (நாங்கள் இல்லாத போது பெரியவர்கள் அதை அவிழ்த்து விடுவார்கள்).

முன்பு போலவே வாஸ்கா தோட்டத்தில் சுற்றித் திரியும், சோபாவில் வந்து படுத்துக் கொள்ளும், மரத்தில் தொங்கும் ஒட்டுக் கம்பளியை எட்டிப் பிடிப்பதற்காகத் தாவும். மரத்துப் போன தசைநார்களுக்கு இவ்விதம் அது வேலை தரும்.

நாட்கள் உருண்டோடின, ஆனால் கூண்டு வரவில்லை.

வலுவான பெரிய கூண்டைத் தயாரிக்கச் சொல்வதற்கு எங்களிடம் போதிய பணம் இல்லை. சிறியதாய்ச் செய்யச் சொல்வதில் அர்த்தமில்லை, ஏனெனில் வாஸ்காவை ஒருபோ

தும் நாங்கள் அதில் ஒடுங்கிக் கொள்ளச் செய்திருக்க மாட்டோம்.

நகராட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து விரும்பத்தகாத புதிய உத்தரவுகள் வரலாமென்று அப்பா எதிர்பார்த்தார், கவலை அதிகமாகி அவர் சிடுசிடுத்துக் கொண்டிருந்தார்.

எங்களுடைய கெட்ட காலம் வியாபாரி ஒருவர் வந்து சேர்ந்தார். ''உங்கள் புலியை விலைக்குத் தந்து விடுங்களேன்! நான் அதற்கு வயிறு நிறையும்படி உணவு அளிப்பேன். அதற்கு அருமையான பெரிய கூண்டு தயாரித்துத் தருவேன். அரசன் மாதிரி வாழும் அது.''

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கொஞ்சங்கூட விருப்பமில்லை, வாஸ்காவை விட்டுப் பிரிய அவர்களுக்கு மனம் வரவில்லை. ஆனால் புலிக்காக அதிக அளவில் செலவு செய்ய வேண்டியிருந்தது. வீட்டில் புலி இருப்பது பக்கத்து வீட்டுக்காரர்களுக்குப் பிடிக்கவே இல்லை, வாஸ்காவைப் பற்றி அவர்கள் முறையிட ஆரம்பித்தார்கள். இவையும் மற்றும் பலவும் சேர்ந்து எங்கள் பெற்றோரைக் குழம்பச் செய்தன.

போதாக்குறைக்கு வாஸ்கா புதிய சிக்கல்களை உண்டாக்கி வந்தது.

ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணி இருக்கும், அப்பா ஒரு பயங்கரக் கத்தல் எழக் கேட்டார். என்ன ஆயிற்று என்று பார்ப்பதற்காக அவர் வெளியே ஓடினார். அப்போது அம்மா வாயில்முகப்புப் படிகளில் இறங்கி ஓடிக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்து அம்மா கூச்சலிட்டு வேலியின் பக்கம் கையைக் காட்டினார்கள்.

அங்கே வேலிக்குப் பக்கத்தில் ஒரு சிறிய காட்டு வெள்ளாடு இருப்பது தெரிந்தது. ஆடு கீச்சிட்டுக் கத்திற்று. விழிகள் இரண்டும் களிப்பால் பூரித்து ஜொலிக்க இந்தச்

சனியன் பிடித்த வாஸ்கா அதை கூர் நகங்களால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தது.

அப்பா ஓடி வருவதைக் கண்டதும் அது ஆட்டை விட்டு விட்டு குதித்தெழுந்து ஓடிற்று. நல்ல வேளையாய் அப்பா விடம் வாஸ்காவுக்கு இன்னமும் பயம் இருந்து வந்தது. முன்பு சேவலைப் பிடித்ததற்காக அவர் அதைத் தூக்கி வேலி யில் மோதியதை அது மறந்து விடவில்லை. ஆயினும் ஓடும் போதே அது அப்பாவின் பூட்சைக் கடிக்க,முயன்றது.

இதன் பிறகு வாஸ்காவை அவிழ்த்து விடக் கூடாதென்று கண்டிப்பாய்த் தீர்மானிக்கப் பட்டது. நாள் முழுதும் அதைக் கட்டிப் போட்டிருந்தோம்.

ஆனால் பத்து நாட்களுக்குப் பிற்பாடு வாஸ்கா திரும்ப வும் சேஷ்டை புரிந்து விட்டது. இந்த தடவை அது தானே சங்கிலியை அவிழ்த்துக் கொண்டு ஓடி ஒரு குதிரைக் குட்டி யைப் பிடித்து விட்டது. மெய்தான், குட்டிக்குத் தீங்கிழைக்க அதற்கு நேரம் கிடைக்கவில்லை. ஆயினும் அங்கு ஒருவர் மீது விழுந்து கடித்து விட்டது. வாஸ்காவை வெளியே அனுப்பி விடுவதென்று அப்பாவும் அம்மாவும் இப்பொழுது இறுதியான முடிவுக்கு வந்தனர்.

அவர்கள் அந்த வியாபாரியை (விலங்கினக் காட்சிசாலை களுக்கு விலங்குகள் தந்தவர் அவர்) கூப்பிட்டு அனுப்பினர் கள். வாஸ்காவை நன்றாய்க் கவனித்துக் கொள்வதாகவும், விலங்கினக் காட்சிசாலைக்கு அதை விற்பதில்லை என்றும் அவரி டம் அவர்கள் வாக்குறுதி கேட்டு வாங்கிக் கொண்டார்கள்.

வாஸ்கா விரைவில் எங்களை விட்டுப் போய்விடும் என்று முதலில் நாங்கள் நம்பவில்லை. ஆனால் பிற்பாடு நாங்கள் புரிந்து கொண்டதும், எங்கள் புலம்பல் சகிக்க முடியாமற் போகவே, அப்பாவும் அம்மாவும் எங்களைத் தோட்டத் துக்குத் துரத்தி விட்டனர். அந்தத் தந்திரக்கார வியாபாரி யும் எங்களைப் பின்தொடர்ந்து அங்கே வந்து சேர்ந்தார். மிட்டாய் தந்து எங்களை அவர் சரிப்படுத்த முயன்றார்.

அவருடைய விலங்கின சாலேக்கு வந்து பார்க்கும்படி எங்களே அழைத்தார். விலங்குகளேத் தாம் பெரிதும் நேசிப்பதாய்க் கூறினுர். தவிரவும் எங்களே அவர் வாஸ்காவின் பழக்க வழக்கங்களேப் பற்றிச் சொல்லும்படி கேட்டார்.

முதலில் நாங்கள் அவருடன் பேச விரும்பவில்லே. ஆனல் இறுதியில் சிறிது சிறிதாய் யாவற்றையும் அவருக்குத் தெரியப் படுத்தினேம். வாஸ்காவுக்கு எப்படி உணவு அளித்தோம், எப்படிக் குளிப்பாட்டினேம், எப்படி அதைப் பேணிப் பாதுகாத்தோம் என்று காண்பித்தோம். ஆயினும் சந்தேகக் கண் கொண்டுதான் நாங்கள் அவரைப் பார்த்து வந்தோம். வாஸ்காவிடம் அவர் அன்பு பாராட்டுவார் என்று அவரை மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளிக்கச் செய்து வந்தோம்.

''ஆனல் அதற்கு உங்களுடைய அன்பு தேவைப்படாமல் இருப்பதுதான் மேல்'' என்று கடுப்புடன் அவரிடம் சொல்லிவிட்டு, எங்களுக்குள் துக்கப்பட்டுக் கொள்வதற்காக விலகிச் சென்றேம்.

அந்தச் சோக தினம் முடிவில் வந்து சேர்ந்தது.

இலேயுதிர் கால மாலேப் பொழுதில் எங்களது வெற்றுத் தோட்டத்தில் காக்கைகள் கரைந்து கொண்டிருந்த ஒரு நேரத்தில் வெளிமுற்றத்தினுள் வண்டி ஒன்று கிறீச்சிட்டுத் தடதடத்து வந்து நின்றது. வண்டியில் இரும்புக் கூண்டு இருந்தது.

வாஸ்காவை அப்பா அவிழ்த்த போது வேடிக்கையாய் அம்மாவிடம் இது பற்றி பேச முயன்றர், ஆனல் அவர் கைகள் நடுங்கின. கூண்டுக்குள் ஏறுவதற்கான பலகையின் மேல் நடந்த போது வாஸ்கா பீதியுற்று அப்பாவின் கால்களுடன் ஒண்டிக் கொண்டது. வாஸ்காவைக் கூண்டினுள் தனியே விட்டு விட்டு அப்பா வெளியே வந்ததும் அது கூச்சலிட்டவாறு இரும்புக் கம்பிகளின் மீது மீண்டும் மீண்டும் மோதிக் கொண்டது. பிறகு பரிதாபமாய் ஊளேயிட்டு முன்னங்கால் பாதங்களே அந்தக் கம்பிகள் வழியே அப்பாவின் பக்கமாய்

நீட்டிற்று. வாஸ்காவின் தவிப்பைக் கண்டு கலங்கிப் போய் அப்பாவும் அம்மாவும் அங்கே நின்றிருந்தார்கள்.

வாஸ்கா அழைத்துச் செல்லப்படும் செய்தி முடிவில் எங்களுக்கு எட்டிற்று. விளையாட்டுச் சாமான்களைப் போட்டு விட்டு வெளிமுற்றத்துக்கு ஓடி வந்தோம், புறப்படப் போன வண்டியைத் தடுத்து நிறுத்தினோம்.

''வாஸ்கா! அருமை வாஸ்கா!'' என்று இரும்புக் கம்பிகளில் முகத்தை வைத்து அழுத்திக் கொண்டு நடுங்கும் குரலில் நாங்கள் முணுமுணுத்து முனகினோம். கூண்டுக்குள்ளிருந்து வாஸ்கா எங்களைப் பார்த்து உருக்கமாய் உறுமி 'உர்-ர், உர்-ர்' என்றது.

அம்மாவின் கண்கள் பனித்து விட்டன. மீண்டும் வண்டி புறப்பட்டதும் நாங்கள் அவசரமாய் எங்கள் கோட்டுகளை எடுத்துக் கொண்டு வண்டியை நோக்கி ஓடினோம். கூண்டின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நடந்து வாஸ்காவை நாங்கள் அதன் புதிய இல்லத்துக்கு அழைத்துச் சென்றோம். அங்கே நெடுநேரம் தங்கியிருந்தோம். வாஸ்காவுக்கு அதன் புத்தம் புதியதான பெரிய கூண்டுக்குள் உலர் புல்லை விரித்து அதற்கு இதமான படுக்கை தயாரித்துத் தந்து அதைத் தட்டிக் கொடுத்தோம்.

''நாளைக்குப் பொழுது விடிந்ததும் உன்னிடம் திரும்பி வருகிறோம்'' என்று சொல்லி அதனிடம் விடை பெற்றுக் கொண்டோம்.

அதை அங்கே விட்டு விட்டு நாங்கள் திரும்பி வர வேண்டியிருந்தது. அதன் வாழ்விலே முதன்முதலாய் இப்படித் தனியே விடப்பட்ட எங்கள் புலி கூண்டுக்குள்ளிருந்து பரிதாபமாய் ஊளையிட்டது.

மறுநாள் அதிகாலையில் நாங்கள் வாஸ்காவைப் பார்ப்பதற்காக ஓடோடி வந்தோம். தோட்டத்தில் விலங்குகளுக்கு அருகே படுத்திருந்த காவற்காரரை எழுப்பி எங்களை உள்ளே விடும்படிக் கோரினோம்.

''உங்களது விலங்குகளைப் பார்ப்பதற்காக இங்கு நாங்கள் வரவில்லை'' என்று திரும்பத் திரும்பக் கூறி வற்புறுத்தினோம், ஏனெனில் அவர் எங்களை உள்ளே விட விரும்பவில்லை. ''வாஸ்காவைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறோம். எங்களுடைய புலி அது, இங்கே வந்து அதைப் பார்ப்பதற்கு எங்களுக்கு உரிமை உண்டு'' என்று சொன்னோம். ,

அவரை விலக்கித் தள்ளிக் கொண்டு வேகமாய் நாங்கள் நடைபாதையில் ஓடினோம். அவர் ஒன்றும் செய்வதற்கில்லை, தோளை உலுக்கிக் கொண்டார்.

எங்களிடமிருந்து பிரிந்து வாஸ்கா தனியே இங்கு கழித்த இந்த முதல் இரவில் அதற்கு எதாவது தீங்கு நேரிட்டிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டு ஓடினோம். பாதையின் கோடியில் ஒரு கூண்டு இருப்பது தெரிந்தது. ஆரோக்கியமான புலி ஒன்று எங்களை உற்றுப் பார்த்துக் கொண்டு அதனுள் நின்றிருந்தது. காவற்காரருடன் நாங்கள் வாதம் புரிந்தது காதில் விழுந்ததும் வாஸ்கா எங்களை வரவேற்பதற்காக குதித்தெழுந்து விட்டது.

சோன்யாதான் முதலில் அதனிடம் போய்ச் சேர்ந்தாள்.

''அருமை வாஸ்கா, எப்படி இருக்கிறாய்?'' என்று அவள் கத்தினாள்.

வாஸ்கா தனது மீசையைச் சுளித்துக் கொண்டு சிரித்தவாறு ''உர்-ர், உர்-ர்!'' என்றது. கம்பிகளுக்கு இடையே பாதத்தை எங்களிடம் நீட்டிற்று, ஒவ்வொருவராய் நாங்கள் அதைப் பிடித்துக் குலுக்கினோம்.

பிறகு நாங்கள் அதன் கூண்டைக் கழுவி விட்டு கந்தல் துணியால் துடைத்தோம். உலர் புல்லை உதறிப் போட்டோம். பிறகு அதன் உணவு குண்டான் இன்னும் சுத்தமாய்க் கழுவப்பட வேண்டும், அழுக்குக் குண்டானில் எங்கள் வாஸ்கா உணவு அருந்தாது என்று சொன்னோம். அதற்குத் தரப்பட்ட உணவு நன்றாய் இருக்கிறதா என்று பரிசீலித்தோம். பிறகு நாங்கள் வீட்டுக்குத் திரும்பியதும், வாஸ்கா எப்படி

இருக்கிறதென்று அப்பா, அம்மாவிடம் கூறினோம். தமது முதலாவது ஓய்வு நாளன்றே அப்பாவும் அம்மாவும் எங்களுடன் சேர்ந்து வாஸ்காவைப் பார்ப்பதற்காக வந்தார்கள்.

வாஸ்கா எப்படி ஆனந்தப் பட்டுக் கொண்டது தெரியுமா? அப்பா அதன் கூண்டைத் திறந்து அதை வெளியே விட்டு அந்தப் பெரிய தோட்டத்தில் விளையாடச் சொன்னார். வாஸ்கா தாவிப் பாய்ந்தது, புல்லில் புரண்டு எழுந்தது, அப்பாவின் கால்களில் உரசிக் கொண்டு நின்றது, அவர் கைகளை நக்கிற்று, பாதங்களால் அவரைக் கட்டிக் கொண்டது. தன் பார்வையிலிருந்து அவர் விலகி மறைந்து விடாதபடி கவனித்துக்கொண்டது. மீசைக்கு அடியிலிருந்து முழுநேரமும் அது சிரித்துக் கொள்வது போலவும் கெக்கலிப்பது போலவும் தோன்றிற்று.

நாங்கள் அதனுடன் விளையாடினோம், அதற்கு உணவு அளித்தோம். பிறகு நாங்கள் புறப்பட வேண்டிய நேரம் வந்தது. வாஸ்கா நம்பிக்கையுடன் அப்பாவைப் பின்தொடர்ந்து கூண்டுக்குள் சென்றது. ஆனால் அப்பா திடுமென வெளியே வந்து கூண்டின் கதவை மூடினார். இதையும் வாஸ்கா ஏற்றுக் கொண்டது. கூண்டுக்குள் அடைக்கப்பட்ட பிறகும் அது எங்களைப் பார்த்து மகிழ்ச்சியுடன் உறுமிக் கொண்டது, கம்பிகளில் தலையை உரசிக் கொண்டது. ஆனால் நாங்கள் வெளிக் கதவுக்குச் சென்று வெளியே செல்லும் வரைதான் இது நீடித்தது.

பிறகு வாஸ்கா கூண்டின் பக்கச் சுவர்கள் மீது பாய்ந்து மோதிக் கொண்டது, பொறுக்க மாட்டாமல் சோகமாய் உறுமிப் பெருஞ் சப்தம் எழுப்பிற்று. அதன் கூப்பாடு நெஞ்சைப் பிளப்பதாய் இருந்தது...

வாஸ்காவின் புதிய எசமானர் எங்களைப் போலவே அதைக் கண்ணுங் கருத்துமாய்த்தான் கவனித்து வந்தார். ஆனால் உண்மையில் அவருக்கு விலங்குகளிடம் அன்பு அதிகம்

இருக்கவில்லை. இலாபம் தரும் தொழிலாய்க் கருதியே அவற்றை அவர் வளர்த்து வந்தார். தவிரவும் வாஸ்கா தன்னை என்ன செய்யுமோ என்று எப்போதும் அவர் அஞ்சி நடுங்கி வந்தார்.

அதிர்ஷ்ட வசமாய், இஸ்மயீல் என்றொரு கசாஹ் முன்பு எங்களுடன் இருந்து வந்தார், வாஸ்காவிடம் அளவிலா அன்பு கொண்டிருந்தார்; வாஸ்காவைக் கவனித்துக் கொள்வதற்கென்று அவர் வாஸ்காவின் புதிய எசமானரிடம் வேலைக்குச் செல்ல உடன்பட்டார். வாஸ்காவின் வாழ்க்கை இதனால் ஓரளவுக்கு இன்பகரமானதாகியது.

இஸ்மயீல் தன்னுடன் இருந்ததால் வாஸ்கா இப்போது தனிமை உணர்வால் அவ்வளவாய் வருந்தவில்லை. அதன் வாழ்க்கை நன்றாகவே இருந்தது. வயிறார உண்ண அதற்கு உணவு கிடைத்து வந்தது.

வாஸ்கா இப்போது எங்களுடன் இல்லை, சற்றுத் தொலைவில் வசித்து வந்தது. நாளாவட்டத்தில் இந்த நிலைமைக்கு நாங்கள் பழக்கப்பட்டு விட்டோம். பள்ளிக்கூடம் திறந்த பிறகு ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும்தான் நாங்கள் அதைப் பார்த்துவிட்டு வர முடிந்தது. ஒவ்வொரு தடவையும் முந்திய வாரத்தில் இருந்ததைவிட அது இன்னும் வளர்ந்திருந்ததைக் கவனித்து வந்தோம். ஒரு மாதத்துக்குள் அது சக்தி வாய்ந்த மிகப் பெரிய புலியாகிவிட்டது.

ஒரு நாள் வாஸ்காவின் புதிய எசமானர் எங்கள் வீட்டுக்கு ஓடி வந்தார். என்ன ஆயிற்று என்று அப்பாவிடம் அவரால் சரியானபடி சொல்லக் கூட முடியாமல் அப்படி அவர் நிலை குலைந்து போயிருந்தார். ஆயினும் பெருமூச்சுக்கும் அங்கலாய்ப்புக்கும் இடையில் அவர் கூறியவற்றிலிருந்து வாஸ்காவுக்கு ஏதோ அபாயம் நேர்ந்துவிட்டது என்பதை அப்பா புரிந்து கொண்டார். உடனே அவர் தொப்பியை மாட்டிக் கொண்டு அவசரமாய் வாஸ்காவுக்கு உதவுவதற்காக விரைந்தார்.

கூண்டின் கதவு திறந்திருந்ததையும் கூண்டு காலியாய் இருந்ததையும் அப்பா கண்ணுற்ருர். அப்போது இஸ்மயீல் அவரிடம் வந்து வாஸ்கா வீட்டினுள் இருப்பதாய்ச் சொன்ஞர். இதைக் கேட்டதும் வாஸ்காவின் புதிய எசமானர் விலங்கு மருத்துவரை அழைத்து வருவதற்காக ஓடினர்; அப்பா வாஸ்காவைப் பார்ப்பதற்காக வீட்டுக்குள் சென்ருர்.

வாஸ்கா தரையில் படுத்துக் கிடந்தது, அதற்கு மூச்சு வாங்கிற்று. அதன் கழுத்துப் பட்டி கழற்றப்பட்டிருந்தது. அப்பா அதன் மீது கவிழ்ந்து கொண்டு அதைத் தட்டிக் கொடுத்தார், அதன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார். ஆனால் வாஸ்காவால் எதையும் கண்டு கொள்ள முடியவில்லை. காலம் கடந்து விட்டது, அதற்கு இனி ஒன்றும் செய்வதற் கில்லை. சில நிமிடங்கள் கழிந்தன. வாஸ்கா ஆழ்ந்த பெரு மூச்சு விட்டது, உயிரற்றதாகி விட்டது.

அப்பா அதிர்ச்சியுற்றுக் கலங்கினர். என்ன ஆயிற்று என்று இஸ்மயீலை விசாரித்தார்.

''யாராவது அதை அடித்தார்களா? விஷம் தந்திருப்பார் களோ?''

''இல்லை, சிறிது காலமாகவே அதற்கு உடம்பு சரியாய் இல்லை. சில தினங்களாகவே அது எப்போதும் தூக்கக் கலக் கம் கொண்டதாய்த் தோன்றிற்று. ஓட விரும்பவில்லை, விளையாட விரும்பவில்லை, எந்நேரமும் படுத்துக் கிடந்தது. இன்று காலை நான் கூண்டுக்குள் சென்றபோது அது தலை யைக் கூட உயர்த்தவில்லை. அதை எழுப்பிவிட முயன்றேன். ஆனால் அதற்கு மூச்சு வாங்கக் கண்டேன். உடனே உங்களை அழைத்து வரும்படி எசமானரை அனுப்பி விட்டு, சிரமப்பட்டு வாஸ்காவை வீட்டுக்குள் கொண்டு வந்து சேர்த்தேன். உள்ளே வந்தால் அதன் நிலைமை மேம்படும் என்று நினைத் தேன். பாவம் வாஸ்கா!''


விலங்கின மருத்துவர் பிரேதப் பரிசோதனை நடத்தினர். அப்பா அவருக்குத் துணை புரிந்தார். கொழுகொழுப்பான

இருதயமே வாஸ்காவின் மரணத்துக்குக் காரணம் என்பதாய் நிர்ணயிக்கப் பட்டது. வாஸ்கா மிதமிஞ்சி கொழுத்து விட்டது. இங்கே அது அளவுக்கு மீறிய இறைச்சியை, அதுவும் கொழுப் புள்ள இறைச்சியை உண்டு வந்தது; அதோடு தண்ணீரும் நிறைய குடித்து வந்தது. ஆனால் எங்கள் வீட்டில் இருக்கையில் சூப்பும் பாலும் முட்டையும் மிகக் குறைவாய் இறைச்சியும் உண்டு வந்தது. அதோடு இங்கு அதற்கு ஓட்டமும் வெகு வாய்க் குறைந்து விட்டது.

அப்பா வீட்டுக்குத் திரும்பியதும் இந்தத் துயரச் செய் தியை எங்களுக்கு எப்படித் தெரிவிப்பதென்று தவித்தார்.

எங்களது அருமைப் புலியின் மறைவைக் கேட்டு நாங் கள் அழுது புலம்பினோம். எந்நாளும் அதை மறக்க மாட் டோம், எல்லாக் குழந்தைகளுக்கும் அதைப் பற்றிச் சொல் வோம் என்று எங்களுக்குள் உறுதி செய்து கொண்டோம்.





பிரான்திக்

''பேசியது போதும்!'' என்று நரிக்குட்டியின் துயரம் தோய்ந்த கோபக் கண்களை உற்று நோக்கியவாறு சொன்னுள் சோன்யா. ''ஓயாமல் பேசி அதைத் தொல்லை செய்வதற்குப் பதில், அதற்கு உணவளிப்பது நல்லதல்லவா?'' என்ருள்.

அந்தச் சின்னஞ்சிறு நரிக்குட்டி எங்களுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு கட்டிலுக்கு அப்பால் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தது. அதன் பளபளப்பான கண்களில் கண்ணீர் ததும்பியது போல் அவை பளிச்சிட்டு மின்னின.

சின்னஞ்சிறு குட்டியான அது, கூர்மையான இரு காதுகளையும் பொசு பொசுப்பான வாலையும் மட்டும் கொண்டதாகத் தோன்றிற்று.

வனக் காவலர்களில் ஒருவரான பெதோத் இவானவிச் சில மணி நேரத்துக்கு முன்புதான் வீட்டுக்கு முன்னுல் வந்

திறங்கி எங்களை அழைத்தார். நாங்கள் அவரிடம் ஓடி வருவதற்குள், கையிலிருந்த பையின் கயிற்றை அவிழ்த்து, நடுங்கும் சிறிய கம்பளி உருண்டையை அதனுள்ளிருந்து வெளியே எடுத்தார்.

அதைப் பார்த்ததும் சாம்பல் நிறப் பூனைக் குட்டி என்று நினைத்தோம்.

''இந்தா, சோன்யா! இதை வீட்டுக்குள் எடுத்துச் செல்'' என்றார் பெதோத் இவானவிச். ''யாரும் இதை மிரளச் செய்யாதபடி பார்த்துக் கொள். எப்படி பயந்து நடுங்குகிறது பார்!''

நரிக்குட்டியை அறைக்குள் கொண்டு வந்தாள் சோன்யா. அவள் அதைத் தரையிலே விட்டதும் அவசரமாய் அது கட்டிலுக்கு அப்பால் அறையின் கோடிக்கு ஓடி மூலையில் பதுங்கிக் கொண்டது.

அது மிரளுவதைக் கண்ட நாங்கள் தரையில் அரை வட்டமாக உட்கார்ந்து சப்தம் செய்யாமல் முணுமுணுக்கும் குரலில் பேசிக் கொண்டோம்.

''ஓ, கண்ணுக்கு இனியதாய் இருக்கிறதே!'' என்று கட்டிலுக்குப் பின்னால் எட்டிப் பார்த்தபடி கிசுகிசுக்கும் குரலில் வியந்து கொண்டாள் நீத்தாஷா.

அவள் அதைத் தட்டிக் கொடுக்க விரும்பினாள். ஆனால் கையை அவள் நீட்டியதும், குட்டி அவளை அச்சுறுத்தும் முறையில் முதுகை வளைத்துக் கொண்டு, பாதங்களை மாற்றி வைத்து ஊன்றி, கிரீச்சிடும் வினோதக் குரலில் 'கீ-கீ-கீ!' என்று கத்திற்று. அது இருமுகிறதோ என்று நினைக்கத் தோன்றியது, அதன் தொண்டைக்குள்ளிருந்து 'உர்-ர்-ர்' என்று சப்தம் எழுந்தது.

''நரிகள் என்ன தின்னும்?'' என்று கேட்டாள், தன் கையை அதனிடமிருந்து இழுத்துக் கொண்ட நத்தாஷா. ''கோழிகளைத் தின்பவை அல்லவா அவை?''

''ஆமாம்.... ஆமாம்'' என்றுள் சோன்யா அழுத்தமான குரலில். ''ஆனுல் நாம் இதற்குக் கோழிக்குஞ்சு தரமுடியாது. உன்னுடைய 'சக்கு' அல்லது 'சிக்கை' இதற்குத் தந்தோமானுல் எல்லாருக்கும் முதலாய் நீ கூச்சல் போடுவாய். அதோடு இது மிகச் சிறிய குட்டி, இதற்கு வேண்டியது பால்தான். ஆகவே நீ போய் ஒரு சிறு தட்டில் பால் கொண்டு வா.''

நத்தாஷா ஒற்றைக் காலில் நொண்டி அடித்துக் கொண்டு போய்ச் சேர்ந்தாள். நரிக்குட்டியை சோன்யா தூக்கி வந்து தரையில் உட்கார்ந்து கொண்டு, அதைக் கைகளால் அணைத்துப் பிடித்துத் தொட்டிலில் ஆட்டுவது போல ஆட்டினுள்.

''நரிக்குட்டி நல்லக் குட்டி, சின்னக் குட்டி, சமர்த்துக் குட்டி...'' என்று அவள் அதனுடன் கொஞ்சினுள்.

நரிக் குட்டியின் மென்முடிகள் சிலிர்த்து நின்றன. பாதங்களை உதைத்துக் கொண்டு அவளிடமிருந்து விலகிச் செல்லமுயன்றது அது.

சோன்யா அதைத் தன் மடியில் வைத்து அழுத்தி அதன் காதுக்குப் பின்னுல் மெல்ல வருடினுள். குட்டிக்கு இது பிடித்திருந்தது, துள்ளுவதை நிறுத்திக் கொண்டது அது.

பிறகு அது சோன்யாவின் கண்களுக்குள் உற்று நோக்கிற்று. அவளிடம் அதற்கு நம்பிக்கை பிறந்தது. முடிகளுடன் பொசு பொசுப்பாய் இருந்த தன் தலையை அது அவளுடைய நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டது. நத்தாஷா திரும்பி வந்த போது திரும்பவும் அது மூலைக்கு ஓடிச் செல்ல முயலவில்லை. சோன்யாவின் கரங்களுக்கு அடியில் அது இன்னும் அடக்கமாய் ஒடுங்கிக் கொண்டது.

நத்தாஷா பால் தட்டைத் தரையிலே வைத்ததும், சோன்யா பாலுக்கு அருகே நரிக்குட்டியின் மூக்கைக் கொண்டு வந்து காட்டினுள். குட்டி பலமாய் மூச்சை இழுத்து முகர்ந்து பார்த்தது. உடனே சோன்யாவின் மடியிலிருந்து அவசரமாய்க்

கீழே இறங்கி பால் தட்டைச் சுற்றிப் பரபரப்புடன் குதித்தோடி வந்து, 'கீ-கீ-கீ!... கீர்...ர்-ர்!' என்று கத்திற்று.

பிறகு அது தட்டின் மீது நின்று முதுகை வளைத்து எங்கள் கண்ணில் படாமல் தட்டை மூடி மறைத்துக் கொண்டது. அந்தப் பாலை நாங்கள் குடித்து விடுவோமோ என்று அச்சப்படுவது போல் பதற்றத்துடன் எங்களைப் பார்த்தது.

''நாம் விலகிச் செல்வோம்! அது பயப்படுகிறது, பாலைக் குடிக்க மாட்டேன்கிறது'' என்றேன் நான்.

நாங்கள் விலகிச் சென்று ஒளிந்து கொண்டோம். சோன்யா மட்டும் தான் அதனருகே இருந்தாள்.

குட்டி மீண்டும் சந்தேகக் கண்கள் கொண்டு அவளை உற்றுப் பார்த்தது. பிறகு பாலை நக்கிக் குடிக்க ஆரம்பித்தது. அதன் நாக்கு நீளமாகவும் கூர்மையாகவும் இருந்தது, நாக்கின் நுனி கொக்கி போல் வளைந்திருந்தது. சொட்டுப் பால் கூட சிந்தாமல் பூனையைப் போல் சுத்தமாகவும், அதே போது நாய்க் குட்டியைப் போல் அதி விரைவாகவும் குடித்து முடித்தது. இது வரை நல்ல பசியுடன் இருந்த அது பாலைக் குடித்ததும், அதன் முகம் களிப்பால் மலர்ந்தது, மீசைகளின் பின்னால் புன்சிரிப்பு பளிச்சிட்டது. ஆனந்தம் தாங்காமல் கண்களை மூடிக்கொண்டது, அதே போது பேராசையினால் அதன் கரிய பாதங்கள் துடித்தன.

பருமனில் அந்த நரிக்குட்டி ஒரு சிறு பூனையைப் போன்றதாய் இருந்தது. அதன் கால்கள் ஓரளவு வலு மிக்கனவாக இருந்தன; அதன் உடம்பு மெலிந்து சிறிதாகவும், இறகு போல இலேசாகவும் இருந்தது. அதன் கழுத்து உண்மையில் மிக ஒல்லியாய் இருந்தது, ஆனால் பொசபொசப்பான முடிகள் அடர்ந்திருந்ததால் அது தடித்து உருண்டையாகவும் கெட்டியாகவும் இருப்பது போல் தோன்றியது. அதன் தலை பருத்துக் குண்டாயிருந்தது, அதில் துடிதுடிக்கும் கரிய கூம்பு மூக்கும், கூர்மையான காதுகளும் பொத்தானைப் போன்ற கண்களும் இருந்தன. அதன் முடிகள் மஞ்சள் கலந்த சாம்பல் நிற

முடையவை, பாதங்கள் கறுப்பானவை. நுனிக் காதுகளில் கரு முடிகள் இருந்தன. அதன் தாடைகளும் கழுத்தும் வயிறும் வெளுப்பாய் இருந்தன.

பாலைக் குடித்து முடித்த நரிக்குட்டி பாலில் நனைந்த ரொட்டித் துண்டைத் தட்டிலிருந்து வெளியே எடுத்து அதி லிருந்த பாலை நக்கிற்று. பிறகு பற்களால் அதைக் கவ்விக் கொண்டு அடுப்படிக்கு ஓடிற்று.

அங்கே ரொட்டித் துண்டைத் தரையில் வைத்தது. கத்திகளை சுத்தம் செய்வதற்காக அடுப்படிக்கு அருகே நாங் கள் வைத்திருந்த மணலை முகர்ந்து பார்த்தது. அந்த வாசனை அதற்குப் பிடிக்கவில்லை போலும். திரும்பவும் ரொட்டித் துண்டை வாயில் கவ்விக் கொண்டு அறை முழுதும் சென்று சுற்றிப் பார்க்க முற்பட்டது.

''எதைத் தேடிக் கொண்டு அலைகிறது?''

நாங்கள் மறைவிடங்களில் இருந்தபடி தலையை நீட்டி அது என்ன செய்கிறதென்று ஆவலுடன் கவனித்தோம். மூலை முடுக்கெல்லாம் ஆராய்ந்தபின் மீண்டும் அது அடுப்படிக்கு வந்தது. அங்கே ரொட்டித் துண்டை வாயில் வைத்துக் கொண்டே மணலுக்குள் குழி தோண்டியது. அந்தக் குழிக் குள் ரொட்டியை வைத்து மூக்கால் அழுத்திற்று, தனது புதையலை நன்ருய் மூடிற்று. பிறகு திரும்பி நின்று கொண்டு, தனது உணவைப் புதைத்தை அதே இடத்தில் அசிங்கம் செய்தது!

''ஏய், என்ன வேலை இது? இங்கே செய்யக் கூடாது இதெல்லாம்!'' என்று கத்திஞள் சோன்யா.

எதிர்பாராத இந்தக் கூச்சலைக் கேட்டு நரிக்குட்டி திடுக் குற்று குதித்தது. அது அவள் பக்கம் திரும்பி வாலை ஆட்டிக் கொண்டு ஏதோ சொல்வது போல் முனகிற்று. மனிதர்கள் உணவை அலமாரியில் வைத்து மூடுவது போல் நரிகள் வழக்க மாகச் செய்யும் காரியமே இது என்று விளக்கம் கூற விரும் பிற்ருே என்னமோ?

அது கூறிய விளக்கம் எங்களுக்குப் புரியாவிட்டாலும் நாங்கள் அதனிடம் சொன்னோம்:

''ஓகோ, சரிதான், சரிதான்!''

அம்மா வரும் சப்தம் கேட்டது. அவசரமாய் நாங்கள் அவ்விடத்தைத் துடைத்துச் சுத்தமாக்கினோம், அறைக்குள் நரிக்குட்டி என்ன செய்ததென்பதை அம்மா தெரிந்து கொள்ள முடியவில்லை.

இரவில் நாங்கள் சாப்பிட உட்காருவதற்குள் நரிக்குட்டி அறையில் இருந்தவை யாவற்றையும் முகர்ந்து ஆராய்ந்து பார்த்து விட்டது. பிறகு அதற்குரிய மூலையில் விரிப்பிலே படுத்து உறங்கிற்று. அது தூங்குகையில் நத்தாஷா கையில் ஒரு சிறு கம்பை வைத்துக் கொண்டு கதவருகே பெட்டி மீது அமர்ந்து காவல் புரிந்தாள்.

நாங்கள் சாப்பிட்ட போது நரிக்குட்டி அவள் மடியில் இருந்தது. தனது சூப்பு வட்டிலிலிருந்து இறைச்சித் துண்டு களைத் தேடியெடுத்து அதனிடம் கொடுத்துத் தின்னச் சொன்னாள்.

''உடனே அதைக் கீழே விடு நீ'' என்று, அவள் செய்த வேலையைக் கவனித்துவிட்ட அப்பா கூறினர். ''அது ஒன்றும் பட்டினி கிடக்க நேர்ந்து விடாது, உன் சாப்பாட்டை ஒழுங் காகச் சாப்பிடு நீ!''

நாங்கள் தேநீர் அருந்திய போது அம்மா அதற்கு சர்க் கரைக் கட்டி ஒன்றைத் தந்தார், அது மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தது. அதைக் கடித்துச் சிறு துண்டுகளாக்கி வைத்துக் கொண்டு, தரையிலிருந்து ஒவ்வொன்ருக எடுத்துச் சுவைத் துத் தின்றது.

''பெதோத் மாமா, இதற்கு என்ன பெயர் வைக்க லாம்?'' என்று எங்களுக்கு மிகவும் பிடித்தமான வனக் காவ லரைச் சுற்றி நின்று கொண்டு நாங்கள் கேட்டோம். ''நீங்கள் தந்த அன்பளிப்பு இது, ஆகவே நீங்களே பெயர் சூட்டுங்கள்.''

''பெயர் சூட்டுவது எளிய காரியமல்லவே'' என்ருர்,

பெதோத் இவானவிச். ''பழைய பெயர் எதையும் இதற்குச் சூட்டக் கூடாது. சுவையான பெயராய்த் தேடிப் பிடிக்க வேண்டும். என் நண்பர் ஒருவரிடம் கூர் மூக்கு கொண்ட ஒரு சிறு வெண்ணிற நாய் இருந்தது. அதற்கு ஜிப் என்று பெயர் நம்முடைய மினுக்கனுக்கும் ஜிப் என்று பெயரிடுவோம். என்ன சொல்கிறீர்கள்?''

''ஜிப், என்ன பெயர் இது? வேண்டாம் இது'' என்று ஆர்வமில்லாத குரலில் கூறினுள் நத்தாஷா. ''பிரான்த்* என்று பெயரிடுவோம், சரிதானு?'' என்ருள் அவள்.

''பிரான்த், பிரான்திக்! ஓ, நன்ருகத்தான் இருக்கிறது'' என்று நாங்கள் உடன்பாடு தெரிவித்தோம்.

இதற்கிடையில் பிரான்திக் அறையை ஆராய்ந்து கொண்டிருந்தது. அது பரபரப்புக்குரிய ஒன்றைக் கண்டு பிடித்தது. அடுப்படிக்கு அருகே பெஞ்சுக் கடியில் ஒரு கூடையில் முட்டைகள் இருக்கக் கண்டது. பின்னங்கால்களில் நின்று கூடைக்குள் எட்டிப் பார்த்தது. அடேயப்பா! எத்தனை முட்டைகள்! அது திகைத்துப் போய் முழித்தது. சிறு நரிக்குட்டி இத்தனை முட்டைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது? முடிந்தவரை பார்க்கலாம் ஒரு கை என்று முடிவில் தீர்மானம் செய்து கொண்டது.

பிறகு அது ஒரு வினுடி கூட வீணுக்காமல் வேலையில் இறங்கிற்று. கூடையிலிருந்து ஒரு முட்டையை வாயில் கவ்விக் கொண்டு பக்கத்து அறைக்கு ஓடிற்று எங்களுடைய கட்டில்களில் ஒன்றின் மீது தாவி கம்பளி விரிப்பைப் பாதத்தால் தள்ளி விட்டு தலையணைக்கு அடியில் முட்டையை நன்ருய் உள்ளே தள்ளி, தலையணையை அழுத்தி வைத்தது. பிறகு இன்னொரு முட்டை எடுத்து வருவதற்காகப் புறப்பட்டது.

இரண்டாவது முட்டையை ஒளித்து வைப்பது அவ்வளவு சுலபமாய் இருக்கவில்லை. அங்கும் இங்கும் ஓடிக் கொண்டி

---

* பிரான்த்—மினுக்குகிறவன் (ருஷ்யன்).

ருந்தது. முடிவில் கம்பளிச் செருப்பு ஒன்று இருக்கக் கண்டதும் அதை முகர்ந்து பார்த்து விட்டு, முட்டையை அதனுள் விரல் முனைக்குப் போய்ச் சேரும்படி உள்ளே தள்ளி வைத்தது. பிறகு மூன்றாவது முட்டையை எடுக்கச் சென்றது.

அது செய்து வந்த வேலையைக் கவனித்த பெதோத் இவானவிச் அதனிடம் சொன்னார்:

''பிரான்திக், சுறுசுறுப்பான ஆள்தான் நீ!''

முட்டைக் கூடையைத் தூக்கி பெஞ்சு மேல் வைத்தார் அவர்.

கையும் மெய்யுமாய்ப் பிடிபட்டுவிட்ட பிரான்திக் பெட்டிக்குப் பின்னால் ஓடித் தப்பித்துக் கொள்ள முயன்றது. ஆனால் சோன்யா பெட்டிக்குப் பின்னால் எட்டிப் பார்த்ததும் இனிதன்னால் முட்டையை மறைத்துவைக்க முடியாதென்று உணர்ந்து கொண்டது. ஆகவே அது முட்டை ஓட்டில் துளையிட்டு உள்ளே இருந்ததை உறிஞ்சிக் குடித்து விட்டு வாயை நக்கிக் கொண்டது.

முன்பே அதன் வயிறு நிரம்பியிருந்தது மெய்தான், ஆனால் கைக்குக் கிடைத்த முட்டையை யாரும் வேண்டாமென்று எறிவார்களா?

பிரான்திக் முன்பு போல் இப்பொழுது கூச்சப் படவில்லை. அதன் முகத்தில் களிப்பும் வேடிக்கைச் சிரிப்பும் தவழ்ந்தன, அதன் கண்களில் குறும்பு பளிச்சிட்டது, முக்க முக்கத் தின்றதன் விளைவாய் அதன் வயிறு ரப்பர் பந்து போல் குண்டாய் உப்பியிருந்தது.

சோன்யாவின் மடியில் அது சுருட்டி மடக்கிப் படுத்துக் கொண்டு விளக்கைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த அந்துப் பூச்சிகளையும் வண்டுகளையும் வேடிக்கை பார்த்தது.

பிரான்திக் இரவில் படுத்துறங்குவதற்காக, அம்மா அதை ஒரு சிறிய காலி அலமாரியினுள் விட்டு வைத்தார்கள்.

பிறகு நத்தாஷாவின் படுக்கையை அம்மா உதறிப்

போட்ட போது தலையணைக்கு அடியில் ஒரு முட்டை ஒளித்து வைக்கப் பட்டிருக்கக் கண்டார்.

''நத்தாஷா செய்திருப்பதைப் பாருங்களேன்! முட்டையிட்டு வைத்திருக்கிறாள்!'' என்று கூறி அம்மா சிரித்தார்.

நத்தாஷாவைத் தவிர எல்லாருமே அவருடன் சேர்ந்து சிரித்தோம். குழம்பிப் போன நத்தாஷா அது ஒன்றும் தான் இட்டதல்ல என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள். பிறகு அவளுக்கு அழுகை வந்து விட்டது. உடனே நாங்கள் கேலியை நிறுத்திக் கொண்டு, எல்லாம் பிரான்திக் செய்த வேலை என்று சொன்னோம்.

''பார்த்தாயா, அம்மா! பிரான்திக் செய்ததை நான் செய்தேன் என்றாயே நீ'' என்று நத்தாஷா முறையிட்டாள்.

இந்த வேடிக்கை எங்களுக்குச் சிரிப்பு மூட்டுவதாய் இருந்ததால் நாங்கள் பிரான்திக்கைத் திட்ட மறந்து விட்டோம். ஆனால் பிற்பாடு அப்பா தமது கம்பளிச் செருப்பைக் காலில் மாட்டிக் கொண்டபோது, ஆத்திரமடைந்து பிரான்திக்கைத் திட்டினார். அதிலிருந்த முட்டை நசுங்கிக் கொழகொழவென்று ஒட்டிக் கொண்டது. இந்த பிரான்திக் அசிங்கம் பிடித்த பிராணி என்று அவர் கத்தினார்.

ஆரம்பத்தில் பிரான்திக் எங்களோடு வீட்டினுள் வசித்து வந்தது. ஆனால் நாங்கள் எப்போதும் வெளி முற்றத்திலோ, தோட்டத்திலோ இருந்ததால், அது தனித்திருக்க முடியாமல் தயங்கியவாறு வெளியே வாயில்முகப்புக்கு வந்து எட்டிப் பார்க்கும்.

மனிதர்களுடன் அது நன்கு பழக்கப்பட்டதாகி விட்டது. ஆனால் நாய்களையும், திறந்த கதவு வழியே உள்ளே அடிக்கடி எட்டிப் பார்த்த வெள்ளாட்டுக் குட்டியையும் கண்டதும் அதற்குக் கிலியாகத்தான் இருக்கும்.

ஒரு நாள் காலையில் பிரான்திக் துணிந்து வாயில் முகப்புக்கு வந்து அங்கே வெயிலில் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்திருந்தது.

அப்போது படிகளில் திடுமென சிறு குளம்புகளின் ஒலி கேட்டது, எங்களது வளர்ப்பான வெள்ளாட்டுக் குட்டி ஸ்தெபான் வாயில் முகப்பினுள் வந்தது. பீதியுற்று விட்ட பிரான்திக் மெல்ல நழுவி கதவை நோக்கி ஓடப் பார்த்தது. ஆனால் ஆட்டுக் குட்டி வழி மறித்து நின்றது. இனி பிரான்திக் என்ன செய்யமுடியும்?

கணமும் பார்வையை ஆட்டுக் குட்டியிடமிருந்து திருப்பாமல் அப்படி அது தரையோடு தரையாய்ப் படுத்துக் கொண்டது. ஸ்தெபானும் பதிலுக்கு அதை முறைக்கப் பார்த்துக் கொண்டு நின்றது. பிறகு ஸ்தெபான் கனைத்து விட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டு நரிக்குட்டியை நோக்கி ஓடிற்று.

ஆறே மாதமாகிய ஆட்டுக் குட்டி ஒரு பயங்கர பகைவனல்லதான். ஆனாலும் அது பிரான்திக்கைக் கதிகலங்கச் செய்து விட்டது. தக்க தருணம் கிடைத்ததும் பிரான்திக் சுண்டெலியைப் போல் ஓரமாய் ஒதுங்கி ஸ்தெபானைக் கடந்து அறைக்குள்ளும் பிறகு கட்டிலுக்கு அடியிலும் ஓடிற்று.

பிரான்திக்கைத் துரத்திக் கொண்டு ஸ்தெபானும் அறைக்குள் ஓடி கட்டிலுக்கு அடியில் தலையை நுழைத்துப் பார்த்தது.

ஆனால் கட்டிலுக்கு அடியில் இருளுக்குள் சென்றதும் பிரான்திக்குக்குத் தெம்பு பிறந்தது. இங்கு இருக்கையில் அதற்குத் தனக்குரிய நரிப் பொந்தில் இருப்பது போல் தோன்றியது. படுக்கையிலிருந்து தொங்கிய மெத்தை விரிப்பின் முனைக்கு அடியிலிருந்து தலையை அது வெளியே நீட்டி கீச்சுக் குரலில் கத்திற்று: 'கீ-கீ-கீ!... உர்-ர்-ர்!'

ஸ்தெபான் குழம்பிப் போய், பின் வாங்கிற்று. அது பின்னால் ஓரடி எடுத்து வைத்ததும் பிரான்திக் தைரியமடைந்து கீச்சிட்டுக் குரைத்தவாறு முன்னால் சென்றது; காதுகளைப் பின்னோக்கிச் சாய்த்துத் தலையை நிமிர்த்திக் கொண்டது.

முன்பு மிரட்டிக் கொண்டு முன்னே வந்த ஸ்தெபான் இப் போது மிரண்டு போய் பின்வாங்கவேண்டியதாயிற்று.

பிரான்திக் குரைப்பதைக் கேட்டதும் நாங்கள் அதற்கு உதவுவதற்காக ஓடி வந்தோம்.

இது வெள்ளாட்டு விவகாரமல்ல என்பதை உணர்ந்து கொண்ட ஸ்தெபான் சன்னல் அடிக்கட்டை மீது தாவி, சோன்யாவைப் பார்த்துக் குறும்பாய்த் தலையை ஆட்டி விட்டு வெளியே தோட்டத்துக்குள் பாய்ந்தது.

இதற்குள் பிரான்திக் மகிழ்ச்சியுடன் வாலைக் குழைத்துக் கொண்டு எங்களிடம் ஓடி வந்தது.

''பாவம், பிரான்திக்!எப்படி மிரண்டிருக்கிறது பாரேன்! நெஞ்சு எப்படி அடித்துக் கொள்கிறது!''

நாங்கள் எல்லோரும் அதைத் தட்டிக் கொடுத்தோம். அதை உற்சாகப் படுத்துவதற்காக அதற்குச் சர்க்கரைக் கட்டி தந்தோம்.

பிறகு பல நாட்களுக்கு அது அறையை விட்டு வெளியே தலை காட்டத்துணியவில்லை. சன்னல் வழியே எங்களைப் பார்ப் பதுடன் திருப்தியடைந்து வந்தது.

நாங்கள் பந்து விளையாட ஆரம்பித்ததும், பிரான்திக் சன்னலில் அமர்ந்து கொண்டு எங்களைக் கருத்துடன் உற்று நோக்கும். பொசபொசப்பானவாலை முன்னங்கால் பாதங் களைச் சுற்றி வளைத்து வைத்துக் கொண்ட அது, பார்ப்பதற்கு அப்படியே பூனை போலிருந்தது. நன்றாகப் பழக்கப் பட்டதாகி வந்தது அது. நாங்கள் தந்தவை யாவற்றையும் வாங்கித் தின்றது; பால், ரொட்டி முட்டை, சர்க்கரை, சமைத்த காய்கறி, பழங்கள், பழப்பாகு ஆகிய எல்லாவற்றையும் தின்றது. புல்லையுங்கூட அது வேண்டாமென்று மறுக்கவில்லை. அதன் சுவையுணர்வு அதி விநோதமானதாகவே இருந்தது. உதாரணமாக, பழப்பாகை நக்கித் தின்றதும் ஓடிச் சென்று தனது சேமிப்புகளிலிருந்து பழைய இறைச்சிக் கழிவுத்

துண்டைத் தோண்டி யெடுத்து வந்து ஆசையாய் மென்று கொண்டிருக்கும்.

சிறிதளவே தின்றதென்ருலும் அடிக்கடி தின்று வந்தது. எஞ்சியதை அது விட்டொழிப்பதில்லே, முதன் முதல் நாங்கள் அதற்கு அளித்த ரொட்டித் துண்டைச் செய்தது போல், பத்திரமாக புதைத்து வைத்தது.

அதனுடைய இந்தப் பழக்கம் எங்களுக்கு விரும்பத் தக்கதாய் இல்லே. ஏனெனில் சிறிதும் எதிர்பாராத இடங் களில் எல்லாம் இறைச்சித் துண்டுகளும் எலும்புகளும் சர்க் கரைக் கட்டிகளும் இருக்கக் கண்டோம்.

இராப் பகலாய் சன்னல்களே நாங்கள் திறந்து வைத் துங்கூட, பிரான்திக் இருந்து வந்த அறையில் நரியின் வாடை மூக்கைத் துளேக்கும்படி கடுமையாய் வீசிக் கொண்டுதான் இருந்தது. நாய்கள் எப்போதாவது உள்ளே வர நேரும் போது அவை சந்தேகங் கொண்டு மூச்சை இழுத்து முகர்ந்து பார்க்கும். நாய்களேக் கண்டதும் பிரான்திக் பலமாய் இருமிக் குரைத்துக் கொண்டு ஓடி வரும், பிறகு அவசரமாய் உயர மான இடத்தில் ஏறி உட்கார்ந்து கொள்ளும்.

நாளடைவில் நாய்களுக்கு நரிக்குட்டி பழக்கப்பட்ட பிராணியாகி விட்டது, அவை அதை நச்சரித்துத் தொல்லே செய்வதை நிறுத்திக் கொண்டு விட்டன. ஆனுல் எக்காலத் தும் அவற்றுக்கிடையே நட்பு வளரவில்லே.

பிரான்திக் நாய்களுடனே, பூனேயுடனே நட்பு கொள்ள முயற்சி செய்ய வில்லே. அவை பராமுகமாகவே இருந்து வந்தன. அரிதாய் எப்போதாவது அவை சந்தித்து மோதிக் கொள்ள நேர்ந்தபோது பிரான்திக்குதான் தோல்வியடைய வேண்டியிருந்தது.

வேட்டை நாய்களால் தமது ''வேட்டை இலக்கு'' தம் மிடமிருந்து ஓடி ஒளிந்து கொள்ளாமல் ஏன் தம் காலுக்கு அடியில் வந்து புகுந்து தொல்லே செய்ததென்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லே.

''அட எழவே!'' என்று கோபமாகக் கூவியவாறு அம்மா என்னுடைய தொப்பிக்குள்ளிருந்து பூசணம் பூத்த பாலாடைக் கீற்று ஒன்றை வெளியே எடுத்தார்.

''இந்த சனியன் பிடித்த நரியால் வீட்டிலே சுண்டெலிகள் அல்லவா அதிகமாகி விடும்.''

''அப்படிச் சொல்லக் கூடாது, அம்மா'' என்ருள் சோன்யா, ''அதனுல் சுண்டெலி வரக் கூடும் என்ருலும், வருகிறவற்றை அதுதான் பிடித்து விடுகிறதே.''

அவள் கூறியது மெய்தான். ஆகவே அதற்கு மேல் அம்மா ஒன்றும் சொல்லவில்லை.

சுண்டெலி பிடித்தல் பிரான்திக்குக்கு மிகவும் விருப்பமான வேலை. மணிக் கணக்காய் அது அறையில் சுற்றித் திரிந்து அவ்வப்போது தரைப் பலகைகளிலுள்ள இடுக்குகளில் முகர்ந்து பார்த்துச் செல்லும். ஏதேனும் ஓர் இடுக்கில் மூக்கை வைத்து அழுத்திவிட்டு கடுப்புடன் கனைத்துக் கொண்டு தலையை வேகமாய் ஆட்டிக் கொள்ளும். ஓசையின்றி அறையில் அது அங்கும் இங்கும் போய்வருகையில் சில நேரங்களில் காதுகளை விறைப்பாக்கிக் கொண்டு தரையில் ஓர் இடுக்கை வெறிக்கப் பார்த்தவாறு நிற்கும், பிறகு அதன் மீது தாவும்! பலகைகளுக்கு அடியில் சுண்டெலி ஒன்று ஓடிற்று என்று அதற்கு அர்த்தம்.

ஒரு தரம் பிரான்திக் ஒரு சுண்டெலியைப் பிடித்தது. மகிழ்ச்சி கொண்டு அது பெருமைப்பட்டுக் கொண்டதைப் பார்க்க வேண்டுமே! பற்களில் சுண்டெலியைக் கவ்விக் கொண்டு பூனை போல் விளையாடியவாறு ஓடிக் கொண்டிருந்தது. ஆனுல் முடிவில் அது ஏமாற வேண்டியதாயிற்று. செத்துப் போன சுண்டெலியை அது இந்த விளையாட்டின் போது அறையின் மையத்தில் வைத்து விட்டு, ஒரு ஓரத்துக்கு ஓடிச் சென்று நெருப்பாய்க் கனன்ற கண்களால் அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. அப்போது எங்கள் பூனை

திடுமென அலமாரி உச்சியிலிருந்து குதித்துச் சுண்டெலியைக் கவ்விக் கொண்டு ஓடி விட்டது.

பிரான்திக் தலை தெறிக்க அறையைச் சுற்றி சுற்றி ஓடிப் பார்த்தது, ஆனால் அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

''பிரான்திக், என்ன ஆயிற்று பார்த்தாயா?'' என்றாள் நத்தாஷா அதனிடம். ''பிடித்தவுடனே நீ அதைத் தின்றிருக்கலாம் அல்லவா? அதைச் சித்திரவதைச் செய்ய விரும்பினாய். உனக்கு நன்றாய் வேண்டும்!''

ஏறத் தாழ ஒரு மாதம் கழிந்தது. பிரான்திக் எலிகளைப் பிடித்தது, நல்லபடியாகவே நடந்து கொண்டது என்றாலும் வீட்டினுள் அதை வைத்திருப்பது தொந்தரவாய் இருந்தது. அதை வெளி முற்றத்துக்குக் குடி மாறச் செய்வதெனத் தீர்மானித்தோம். ஒரு நாள் காலையில் அம்மா தம் பின்னால் பிரான்திக்கை வெளிமுற்றத்துக்கு வருமாறு அழைத்துக் கொண்டு வெளியே வந்தார். பிரான்திக் வெளியே வந்ததும் கதவை இழுத்து மூடினார். வாயில் முகப்பு வரை அது தைரியமாகவே வந்தது. பிறகு படிகளில் இறங்கத் துணியாமல் நின்று கொண்டு மூடியிருந்த கதவை யாரும் திறக்க மாட்டார்களா என்று திரும்பித் திரும்பிப் பார்த்தது.

''பயந்து சாகாதே, கீழே இறங்கி வா!''

சோன்யா அதைத் தூக்கிக் கீழே கொண்டு போய்த் தரையில் விட்டாள்.

அது பயந்து போய் வாயில் முகப்புக்கு அடியில் ஓடி ஒளிந்து கொண்டது.

துரதிஷ்ட வசமாய், வாயில் முகப்புக்கு அருகே தானிய மணிகள் இறைந்து கிடந்ததை எங்கள் சேவல் ஒன்று கண்டது. அங்கே அது வேகம் வேகமாய் மண்ணைக் கிளறியவாறு தனது பெட்டைகளையும் வருமாறு பலக்கக் கூவியழைத்தது. இப்போது பிரான்திக்கின் அச்சமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. அது ஒரு பாய்ச்சல் பாய்ந்து,

கழுத்தை நெரித்துச் சேவலைக் கொன்றது. இறந்து போன சேவலை அது வெளி முற்றத்தின் தொலைக் கோடிக்கு இழுத்துச் சென்றது. திருட்டு முழி முழித்துச் சுற்றிலும் பார்த்தவாறு அங்கே ஒரு குழி தோண்டிச் சேவலை அதனுள் திணித்து மண்ணைத் தள்ளி மூடிற்று, சாண எருவைத் திரட்டிக்குவித்து வைத்தது.

தனக்குக் கிடைத்த இரையைப் பத்திரமாய் மறைத்து வைத்து விட்டதாகவே நினைத்துக் கொண்டது பிரான்திக். ஆனால் மண்ணிலிருந்து சேவலின் கால்கள் துருத்திக் கொண்டு வெளியே தெரிந்தன.

வெளிமுற்றத்தைப் பெருக்கிக் கொண்டிருந்த நத்தாஷா சேவலின் கால்கள் துருத்திக் கொண்டிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தாள். காலைப் பிடித்து இழுத்து அவள் அந்த துர்பாக்கியச் சேவலைப் புதைகுழியிலிருந்து வெளியே எடுத்தாள். அது தனது வளர்ப்பான சக்கு என்பது தெரிய வந்தது.

''ஏய் சனியனே! உன்னை வெறுக்கிறேன்!'' என்று அழாக் குரலில் ஆத்திரமாய்க் கத்திக் கொண்டு, நத்தாஷா தனது கொலையுண்ட சேவலைப் பிரான்திக்கின் காலடியிலே போட்டாள்.

''உனக்குப் பசி கொஞ்சங்கூட இல்லை, காரணமில்லாமலே என் சக்குவைக் கொன்றிருக்கிறாய்!''

''உனக்குக் கோபமூட்டி வேடிக்கை பார்ப்பதற்காக அது இந்த வேலையைச் செய்திருக்கிறது'' என்று அப்பா கூறினார். பிறகு அவர் கண்டிப்பான குரலில், ''இந்த திருட்டுச் சைத்தானை இனி நாம் சங்கிலியில் கட்டிப் போட வேண்டும்'' என்றார்.

எப்போதும் பிரான்திக்கை ஆதரித்துப் பேசி வந்த நாங்கள், இப்போது வாயை மூடிக் கொண்டு சும்மாயிருந்தோம்.

அன்றைய தினமே பிரான்திக்கின் கழுத்தில் சங்கிலி கட்டப்பட்டது.

குதிரைக் கொட்டிலின் கூரை முனையிலிருந்து வாயில்

முகப்பின் தூண்களில் ஒன்றின் உச்சிக்கு, வெளிமுற்றத்தின் குறுக்கே அப்பா வலுவான கம்பியை இழுத்துக் கட்டினுர்.

இந்தக் கம்பியில் ஒரு கப்பி மாட்டப் பட்டிருந்தது, இந்தக் கப்பியுடன் நீளமான மெல்லிய சங்கிலி இணைக்கப் பட்டிருந்தது. கம்பி வழியே கப்பி உருண்டோற்று. ஆகவே பிரான்திக் தடங்கலின்றி வெளிமுற்றத்தில் ஓடித்திரிய முடிந் தது. முதலில் சில நாட்களுக்கு பிரான்திக் தரையிலே இறங் காமல் உயரமான இடங்களில் இருக்க முயன்றது, ஏனென் ருல் நாய்களிடம் அதற்குப் பயமாயிருந்தது.

கொட்டிலுக்கு அருகே மரக் கட்டைகள் குவித்து வைக்கப் பட்டிருந்தன. இந்தக் குவியலை அது தனது வசிப்பிட மாக்கிக் கொண்டது. உடலைப் பந்தாகச் சுருட்டிக் கொண்டு அது இங்கே படுத்துறங்கிற்று. இந்த கட்டைகளுக்கு இடுக்கில் அது தனது தின்பண்டங்களை ஒளித்து வைத்திருந்தது. குவிய லின் உச்சியில் அமர்ந்து கொண்டோ, படுத்துக் கொண்டோ கீழே வெளி முற்றத்தில் வேலை செய்யும் ஆட்களையும் பிராணிகளையும் அது பார்வையிட்டு வந்தது.

தன்ருல் முடிந்த அளவுக்கு உயரமாய் ஏறிச் செல்ல விரும்பிற்று பிரான்திக். வெளிமுற்றத்தில் நாங்கள் தேநீர் அருந்திக் கொண்டோ, சாப்பிட்டுக் கொண்டோ உட்கார்ந் திருக்கையில், அதைக் கூப்பிடுவோம். உடனே பிரான்திக் வாயிற் படிக்கு அடியில் ஓடி வந்து கம்பங் கூத்தாடியைப் போல் மேலே ஏறி கைப்பிடிக் கம்பி அடைப்பை வந்தடை யும். நாங்கள் அதற்குச் சன்மானமாகச் சுவையான தின்பண் டம் தருவோம்.

ஒரு நாள் நத்தாஷா தனக்குக் கிடைத்த மிட்டாயை அதனுடன் பகிர்ந்து கொள்வதற்காக வெளிமுற்றத்துக்கு வந்தாள். ஆனுல் பிரான்திக்கைக் காணவில்லை, எங்கோ ஓடி விட்டது. என்ன நேர்ந்திருக்க முடியும்? அது எங்கே போயிருக்க முடியும்? சங்கிலி கப்பி இவை எல்லாங்கூட மறைந்து விட்டன.

''பிரான்திக் ஓடி விட்டது! வாருங்கள் சீக்கிரம்!''

அவள் குரலைக் கேட்டு நாங்கள் ஓடி வந்தோம். விபரீத மாகவே இருந்தது. எப்படி ஓடியிருக்க முடியும் அது? மேலே இருந்த கொடிக் கம்பி நன்றாகவே இருந்தது, ஆனால் கப்பியும் சங்கிலியும் மாயமாய் மறைந்து விட்டன. கொடிக் கம்பியின் முழு நீளத்துக்கும் நடந்து அப்பா அதைப் பரிசீலித்தார். அவர் குதிரைக் கொட்டிலின் கூரைக்குப் போய்ச் சேர்ந்ததும், அங்கே மேலே ஒரு மூலையில் கப்பியும் சங்கிலியும் தெரியக் கண்டார்.

''இதோ இருக்கிறது! கண்டுபிடித்து விட்டேன்!'' என்று அவர் கூவினார். ''ஆனால் எப்படி அதனால் இந்த உயரத் துக்கு ஏற முடிந்ததோ, தெரியவில்லை.''

சங்கிலியானது கொட்டில் பரணுக்குள் சென்றது.

கொட்டிலின் சுவரில் அவ்விடத்தில் ஏணியைக் கொண்டு வந்து வைத்தோம். அப்பா மேலே ஏறி பரண் வாயிலினுள் எட்டிப் பார்த்தார்.

''என்ன சேதி?... பெண்களே இங்கே உட்கார்ந்திருக் கிறது! சரியான குரங்கு!'' என்று சொல்லிச் சிரித்துக்கொண் டார். ''இங்கே அது கொலு வீற்றிருப்பதை வந்து பாருங் களேன்!'' என்றார்.

முகத்திலே கவடு குதிபோட, பிரான்திக் அங்கே உலர் புல்லின் குவியல் மேல் ஆடம்பரமாய் அமர்ந்து, பரண் வாயில் வழியே தெரிந்த சுற்றுப்புறக் காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டிருந்தது.

அப்பாவின் தலையும் தோள்களும் மேலே தெரிந்ததும் அது புன்னகை புரிந்து வாலை ஆட்டிக் கொண்டது. பிறகு அங்கிருந்து அப்பாவின் தோள்களுக்குத்தாவிற்று. அப்பா அதைக் கீழே கொண்டு வந்து சேர்த்ததும்,

''பெண்களே, இளம் இயற்கை இரசிகர் ஒருவரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்றார்.

பிரான்திக்குக்கு வெட்கமாகி விட்டது, தனது மரக் குவியலுக்கு ஓடிச் சென்றது அது.

கொட்டில் பரணில் சுவரை ஒட்டினாற் போல் வரிசை யாய் ஐந்து சிறு ஒட்டுப் பலகைப் பெட்டிகள் இருந்தன. கோடையில் எங்கள் பெட்டைக் கோழிகள் முட்டையிடுவதற் கான கூடுகள் இவை. தினமும் நத்தாஷாவும் நானும் மேலே ஏறி முட்டைகளைச் சேகரித்து எடுத்து வருவோம்.

எங்கள் கோழிகளில் அனேகமாய் எல்லாமே அடைகாக் கும் கோழிகள், ஆகவே ஒவ்வொரு கூட்டிலும் நாங்கள் மூன்று, நான்கு முட்டை இருக்கக் காண்போம். நாங்கள் இருநூறு முட்டை எடுத்து வந்ததும் அம்மா எனக்கு ஒரு புத்தகமும் நத்தாஷாவுக்கு ஒரு பொம்மையும் வாங்கித் தரு வதாகச் சொல்லியிருந்தார்.

நாங்கள் நூறு முட்டைக்கு மேல் எடுத்து வந்து தந்திருப் போம். பிறகு கோழிகள் முட்டையிடுவது குறைந்து வந்தது. ஒவ்வொரு கூட்டிலும் மூன்று முட்டையும், பிறகு இரண்டும், சிலசமயம் ஒன்றே ஒன்று மட்டும் இருக்கக் கண்டோம். முடிவில் முட்டை ஒன்று கூட இல்லாமற் போயிற்று.

கோழிகளுக்கு என்ன நேர்ந்ததென்று எங்களுக்குப் புரிய வில்லை. தீனி போதவில்லையோ? நாங்கள் அவற்றுக்கு அதிக தீனி அளித்துப் பார்த்தோம், பயன் இல்லை. ஒரு வேளை அளவு மீறி பருத்து விட்டனவோ? கோழிகள் அதிகம் கொழுத்து விட்டால் அவை முட்டையிடுவது நின்று போவது உண்டு. தீனியைக் குறைத்துப் பார்த்தோம், அப்போதும் பயன் இல்லை.

நத்தாஷாவும் நானும் எங்கள் விளையாட்டுகளை விட் டொழித்தோம், எங்களது ஏனைய பிராணிகளையும் வளர்ப்பு களையும் மறக்கலானோம். எந்நேரமும் கோழிகளைச் சுற்றிவந்து அவற்றுக்கு வேண்டிய வேலைகளைச் செய்வதில் முழுக் கவனம் செலுத்தினோம். அப்படியும் நாங்கள் இருநூறு முட்டை யிலிருந்து நெடுந் தொலைவிலேதான் இருந்தோம்.

ஒரு நாள் அதி காலையில் கொட்டில் பரணிலிருந்து கோழி ஒன்று பரபரப்புற்றுக் கத்தக் கேட்டோம்.

கொட்டிலிலிருந்து நாங்கள் அதிக தொலேவிலேதான் இருந்தோம் என்றாலும், நத்தாஷா என் கையைப் பிடித்து அழுத்தி ஓசையின்றி என் காதுக்குள் சொன்னாள்:

''முட்டையிட்டிருக்கிறது! எனது புள்ளிக் கோழி!''

''இல்லே, சிவப்புக் கோழிதான் முட்டையிட்டிருக்கிறது. அதன் குரல் தெரியவில்லையா உனக்கு?''

''குரலேக் கேட்டுதான் சொல்கிறேன், புள்ளிக் கோழியேதான்!''

''சரி, வா! போய்ப் பார்ப்போம்!''

நாங்கள் கொட்டில் பரண் மீது ஏறி, பெட்டைகள் மிரண்டு விடாமல் இருக்க வேண்டுமென்று ஓசையின்றி உள்ளே ஊர்ந்து சென்றோம். முணுமுணுக்கும் குரலில் நத்தாஷா சொன்னாள்:

''கூட்டுக்குள் இருக்கிறது.''

''சிவப்புக் கோழிதானே?'' என்று கேட்டேன்.

''தெரிய வில்லே, இருட்டாக இருக்கிறது.''

அவள் ஓசையின்றி தவழ்ந்து அங்குலம் அங்குலமாய் நெருங்கிச் சென்றாள்.

''புள்ளிக் கோழிதான் என்று நினைக்கிறேன்... இல்லே, சிவப்புக்கோழி...'' திடீரென அவள் குதித்தெழுந்து கூச்சலிட்டாள்:

''திருடன்! கொள்ளேக்காரன்! உன்னே என்ன செய்கிறேன் பார்!''

சங்கிலி கிணுகிணுத்தது, கூட்டுக்குள்ளிருந்து பிரான்திக் வெளியே பாய்ந்து எங்களேக் கடந்து பறந்தோடிற்று.

இதனால்தான் எங்களுக்கு முட்டை கிடைக்க வில்லே! எங்களது அருமை பிரான்திக் எங்களுக்காக முட்டைகளேச் சேகரித்து வந்தது.

அத்தனே முட்டையையுமா அது தின்றிருக்க முடியும்? எங்காவது மறைத்து வைத்திருந்தாலும் இருக்கலாம்

அல்லவா? நிச்சயமாக்கிக் கொள்ளும் பொருட்டு நாங்கள் தேட முற்பட்டோம் சிறிதும் எதிர்பாராத இடத்தில் நான் ஒரு குவியல் இருக்கக் கண்டேன். பதின்மூன்று முட்டைகள் உலர் புல் குவியலுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. பிரான்திக் திருடியதை நாங்கள் கண்டு பிடித்திராவிடில், இந்த முட்டைகள் புல்லுடன் சேர்ந்து எறியப் பட்டிருக்கும், அல்லது உடைந்து வீணுகியிருக்கும்.


விரைவில் இரண்டாவது குவியல் ஒன்றும், பிறகு மூன்ரு வது குவியல் ஒன்றும் ஒரு மூலேயில் இருக்கக் கண்டோம். யாவற்றையும் சேர்த்து எண்ணினேம், மொத்தம் இருபது முட்டைகள் இருந்தன. ஒரு சிறிய நரிக்குட்டிக்கு அப்படி ஒன்றும் குறைவான சேமிப்பு அல்ல!

அதே நாளன்று நாங்கள் நீதி விசாரணே நடத்தினேம். பிரான்திக்கின் சங்கிலியினுடைய நீளத்தைக் குறைத்து, மரக்குவியல் அல்லது வாயில் முகப்புக்கு மேல் அது அதிக தூரம் செல்ல முடியாதபடிச் செய்வதென்று தீர்மானித் தோம். ஆனுல் அப்படியும் அது எங்கள் கோழிகளுக்கு நாசம் விளேவித்து வந்தது—தந்திரக்கார நரி ஆயிற்றே!

அதற்குக் கூழ் கொண்டு வந்து வைத்து விட்டுச் செல் வோம். நரிக்குட்டி தனது மூக்கால் கூழைக் கிண்டி கிண்ணத் தைச் சுற்றிலும் இறைத்து வைக்கும். பிறகு விலகிச் சென்று கால்களே நீட்டிப் படுத்துக் கொண்டு செத்து விட்டது போல் கண்களே மூடிக் கொள்ளும்.

கூழ் இறைந்து கிடப்பதைக் காணும் சேவல் கிண்ணத் தின் அருகே ஓடி வந்து வியந்து கூவும்.

அயர்ந்து தூங்குவது போல் பிரான்திக் படுத்துக் கிடக்கும். அது குறட்டை விடுவது கூட காதில் விழும். பெட்டைகளே ஓடிவருமாறு சேவல் கூவி அழைக்கும். கூழைப் பங்கிட்டுக் கொள்வதற்காக கோழிகள் அவசரமாய்க் கிண்ணத்தை சூழ்ந்து கொண்டுவிடும்.



பிரான்திக் ஒரு கண்ணைத் திறந்து பார்க்கும்.... 'சடார்' என்று பாயும் அதே கணத்தில் அந்தக் கோழிகளில் ஒன்று அதன் பற்களில் அகப்பட்டுக் கொண்டு இறக்கைகளைப் பட படவென்று அடித்துக் கொள்ளும், ஏனையவை பீதியுற்றுச் சிதறி ஓடும்.

கோழியை உடனே ஒளித்து வைக்க வேண்டுமென்பது பிரான்திக்குக்குத் தெரிந்ததுதான். குழி தோண்டி புதைப் பதென்றால் நெடுநேரம் ஆகிவிடும், நாய்கள் நிச்சயம் வந்து சேர்ந்துவிடும். ஆகவே கோழியை அது மரக்குவியலின் உச்சிக்கு இழுத்துச் சென்று, கட்டைகளுக்கு இடுக்கில் அமைந்த தனது களஞ்சியத்துக்குள் போட்டு விடும்.

அந்த இடுக்கில் கோழியை நுழைத்துக் கீழே போடுவது கடினமல்ல. ஆனால் பிரான்திக்கால் திரும்பவும் அதை மேலே எடுப்பது முடியாத காரியமாகும். ஏனென்றால் இடுக்கு ஆழமாகவும் குறுகலாகவும் இருந்தது. ஆனால் திருட்டு நரிக்குட்டி அதைப் பற்றிக் கவலைப் படவில்லை. வீட்டில் அதற்கு வயிறு நிறைய உணவு கிடைத்தது, அது கோழிகளைப் பிடித்தது விளையாட்டுக்காகவே அன்றி உண்பதற்காக அல்ல.

வெப்பமான நாட்கள் அவை. விரைவில் பிரான்திக்கின் களஞ்சியத்திலிருந்து எழுந்த நாற்றம் காற்றை நச்சுப் படுத்திற்று.

''இது என்ன நாற்றம்?'' என்று மூக்கைப் பிடித்துக் கொண்டார் அப்பா. ''குடலைப் பிடுங்குகிறதே. வெளிமுற்றத்தின் வழியே போக முடியவில்லையே. இந்த பிரான்திக் தனக்கென தனியே ''வாசனைத் திரவம்'' தயாரித்து உபயோகித்துக் கொள்கிறதா, என்ன?'' என்று கேட்டார்.

ஒரு நாள் சோன்யா மரக் குவியலுக்குப் பின்னால் சென்று மேலே ஏறிப் பார்த்தாள், செத்துப் போன கோழிகள் கிடப்பது தெரிந்தது.

மட்டு மீறிய செயல், பொறுக்க முடியாது இதை!

மடிந்த கோழிகளை எடுத்து வந்து அதன் முன்னால் வரிசையாய் வைத்து பிரான்திக்குக்குப் பிரம்பால் ஓங்கி ஓர் அடி கொடுத்தோம்.

''வெட்கமாய் இல்லையா உனக்கு?'' என்று ஏசினாள் நத்தாஷா.

மனம் புண்பட்டு விட்டதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு பிரான்திக் தன் மரக்குவியலின் மேல் ஏறிற்று. பிறகு கோபமாகத் திரும்பிப் பார்த்து விட்டுக் கீச்சிட்டுக் குரைத்தது: 'கீ-கீ-கீ! உர்-ர்-ர்!'

பிரான்திக்கைப் போல் கூர்மதி கொண்டு துருதுரு வென்று இருக்கும் ஓர் பிராணி எங்களிடம் இருந்ததே இல்லை. நிமிட நேரங்கூட அதனால் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது.

தூங்கும் நேரமும், புதிதாய் என்ன குறும்பு செய்யலாமென்று ஆலோசிக்கும் நேரமும் போக, எஞ்சிய நேரம் முழுதும் வாயில் முகப்பிலிருந்து கொட்டில் பரண் வரை ஓயாமல் அங்கும் இங்கும் ஓடி ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கும். இல்லையேல் வாயில் முகப்புக்குப் பக்கத்தில் அடுக்கப்பட்டிருந்த கற்கள் மீது ஏறி கைப்பிடிக் கம்பித் தடுப்பை வந்தடையும்.

அதன் களஞ்சியத்தால் எப்போதும் அதற்கு தொல்லையே ஏற்பட்டு வந்துங்கூட ஓயாமல் அது களஞ்சியம் சேர்ப்பதில் கருத்து செலுத்தி வந்தது.

உணவைப் பத்திரமாய்ப் பதுக்கி வைக்கும் பிரான்திக்கின் பழக்கத்தை நாய்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டன. தனது அரிய பொக்கிஷங்களைப் பதுக்கி வைப்பதற்கு அது சிறப்பான புதுப்புது வழிகளை வகுத்துக் கொண்டிருக்கும்; ஆனால் நாய்கள் அவற்றைத் தேடி எடுப்பதற்கான புதுப் புது முறைகளைத் தெரிந்து கொண்டு விடும்.

இதில் நாய்கள் நரியைக் காட்டிலும் சாமர்த்தியசாலிகளாக இருந்தன.

மரக்குவியலும், குதிரைக் கொட்டிலுக்குப் பின்பக்கத்தில் குவிக்கப்பட்டிருந்த சாணமும்தான் உணவைப் பதுக்கி வைப்பதற்குச் சிறந்த இடங்களாகுமென்று பிரான்திக் கருதிற்று.

தனது பொக்கிஷங்களுக்கு அருகே நாய்களை வரவிடாமல் தடுப்பதற்காக அது தனது சேகரிப்புகளைத் தன்னுடைய கடுமையான நாற்றத்தில் துவைத்து வைத்துவிட்டு வரும். ஆனால் இந்த தந்திரம் பலிக்கவில்லை. நாய்களை அந்த வீச்சம் நேரே அந்த மறைவிடங்களுக்கு அழைத்துச் சென்றது.

நாளாவட்டத்தில் நாய்கள் இந்த வீச்சத்தைச் சகித்துக் கொள்ள பழகிக் கொண்டு விட்டன. அதன்பின் அவற்றுக்கு இந்த வீச்சம் குமட்டுவதாய் இல்லை.

பிரான்திக் அதிகம் கவலைப்பட்டுக் கொள்ளும் பிராணி அல்ல. தின்பதற்கு அதற்கு வேண்டிய அளவு ஆகாரம் கிடைத்து வந்ததால் மறைவிடங்களில் பதுக்கி வைத்தவற்றில் பெரும் பகுதியை அந்தக் கணமே அது மறந்து விடுவது வழக்கம். ஆனால் இரண்டொரு முக்கிய மறைவிடங்களை அது நினைவில் வைத்திருந்தது. நெடுநேரம் சிரமப்பட்டுப் போராடி கனமான மரக் கட்டையை மூக்கால் அது புரட்டிப் போட்டபின், தனது சாசெஜ் துண்டு காணமற் போய்விட்டதைக் காணும் போது அதற்கு நெஞ்சு பொறுக்க முடியாமற் போய்விடும்.

சீற்றம் கொண்டு வாலைக் கால்களுக்கு இடுக்கில் வைத்துக் கொண்டு வாயில் முகப்புக்கு வந்து மேலே கைப்பிடிக் கம்பித் தடுப்பின் மேல் ஏறிக் கொண்டு நீண்டநேரம் 'உர்-ர்-ர்' என்று உறுமும். காதுகள் இரண்டும் அப்போது அதன் மண்டையுடன் ஒட்டிக் கொள்ளும்படி அவற்றைப் பின் பக்கம் சாய்த்துக்கொள்ளும். இடையிடையே அது நாக்கைச் சொடுக்கிக் கொள்வதைப் பார்க்கையில், ''திருடிக் கொண்டு விட்டார்கள்! பாவம் இவன் மனம் வருந்துவானே என்று நினைத்தார்கள் இல்லை! ஏமாற்றி விட்டார்கள்!'' என்று அது புலம்புவதாக நினைக்கத் தோன்றும்.

சுத்தத்தில் பிரான்திக்குக்கு அதிக நம்பிக்கை இல்லை. புழுதியிலும் குப்பையிலும் அது படுத்து புரண்டு எழும். சற்று நேரத்துக்குள் முடிகளில் காகிதத்துண்டுகளையும் சிறுய்த் தூளையும் குப்பையையும் ஒட்டிக் கொண்டு வந்து நிற்கும்.

''பிரான்திக்கைப் பாரேன்! கிறிஸ்த்மஸ் பிர்மரம் மாதிரி இருக்கிறது!''

அலங்கோலமான நரியை சோன்யா எத்தனை தரம்தான் பிரஷ்செய்து முடிகளை வாரி விட்டு ஒழுங்கு செய்யட்டுமே, பயன் ஒன்றும் இருக்காது. நூலையும் குப்பைக் கூளத்தையும் அவள் அதன் முடிகளிலிருந்து எடுத்தபின் ஒருமணி நேரத்துக்குள் பிரான்திக் மண்ணில் புரண்டும், கொட்டில் பரணில்

ஏறிச் சுற்றியும் வால் பூராவும் முட்களையும் தூசித் துரும் பையும் நிரப்பிக்கொண்டுவிடும். பிறகு குப்பை மேட்டுக்குச் சென்று விளையாடும். இவ்விதம் முன்னிலும் அலங்காரமான நிலையில் திரும்பி வந்து சேரும்.

பிரான்திக் தனியாகவோ நத்தாஷாவுடன் கூடவோ விளை யாடுவது வழக்கம். இருவரும் ஒருவரையொருவர் விரட்டிக் கொண்டு ஓடுவார்கள், தாவிக் குதிப்பார்கள், ஒளிந்து பிடித்து விளையாடுவார்கள். பிரான்திக் ஒரு மரக் கட்டைக்குப் பின்னால் ஓடித் தலையைக் கவிழ்த்துக் கொண்டு மெல்ல எட்டிப் பார்க்கும் அதன் முழு உருவமும் உங்களுக்குத் தெரி யும், ஆயினும் தான் யாருக்கும் தெரியாதபடி நன்றாய் ஒளிந்து கொண்டு விட்டதாய் நினைத்து அங்கிருந்து அது எட்டிப் பார்க்கும்.

பிரான்திக்குக்கு இனிப்புத் தின்பண்டங்கள் என்றால் உயிர் தான். அம்மா எங்களைப் பன்முறை எச்சரித்துங்கூட எந்நேரமும் நாங்கள் அதற்காக சர்க்கரைக் கட்டிகளை திருடி எடுத்து வருவோம்.

பின்னங்கால்களில் நின்று கொண்டு எங்கள் சட்டைப் பைக்குள் மூக்கை விட்டு, தானே தனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்வதற்கு, அதற்கு நாங்கள் கற்றுத் தந்தோம். சர்க்கரைக் கட்டி அதற்கு எப்படிக் கிடைத்ததென்று அம்மா விசாரிக்க முற்பட்டால், நாங்கள் குற்றமற்றவர்கள் என் பதை இவ்வழியில் நிரூபிக்க முடிந்தது.

சட்டைப் பைக்குள் சர்க்கரைக் கட்டியைப் போட்டுக் கொண்டு நாங்கள் மெதுவாய் வெளிமுற்றத்தில் நடப்போம். பிரான்திக் உடனே தான் செய்ய வேண்டியதைப் புரிந்து கொண்டு செயலில் இறங்கும். நேரே எங்களிடம் அது ஓடி வந்து சட்டைப் பைகளில் தேடி சர்க்கரைக் கட்டியை எடுத்துக் கொண்டு எதிர்திசையிலே பாய்ந்தோடிவிடும்.

''பிரான்திக்குக்குச் சர்க்கரை தராதீர்களெனச் சொல்ல வில்லையா நான்?'' என்று அம்மா கோபித்துக் கொள்வார்.

''நாங்கள் அதற்குத் தரவில்லையே. அதுவேதான் என் பைக்குள் மூக்கை விட்டு எடுத்துச் சென்று விட்டது. நான் தின்பதற்காக பையில் வைத்திருந்தேன். அதை இழந்து விட்டோமே என்று நான் வருத்தப் படுகிறேன்.''

இதன் பிறகு என்ன செய்யமுடியும்? சர்க்கரைக்கிண்ணத்திலிருந்து சர்க்கரைக் கட்டிகள் மறைந்து கொண்டிருந்தன. ஆனால் யாரையும் குற்றம் சொல்லமுடியவில்லை.

எங்கள் சட்டைப் பைகளை ஆராய்ந்து பழக்கிக் கொண்ட பின் பிரான்திக், வருகிறவர் யாராயிருந்தாலும் அவர் பைக்குள் என்ன இருக்கிறதென்று பார்த்த பிறகே அவரை உள்ளே வர விட்டது.

ஒரு நாள் அது சலிப்புற்று அதனுடைய மரக் குவியலின் மேல் உட்கார்ந்திருந்தபோது வேலிக் கதவின் தாழ்ப்பாள் திறக்கப்படும் சப்தம் கேட்டது. கோடை பருவ ஆடை அணிந்த ஒரு பெண்ணும் பெரிய பைகளைக் கொண்ட மழைக் கோட்டில் ஓர் ஆடவருமாய் இரண்டு பேர் வெளிமுற்றத்துக்குள் நுழைந்தார்கள். அவர்களைக் கண்டதும் பிரான்திக் கொட்டாவி விடுவதை நிறுத்தி விட்டு, அவசர வேலை வந்து விட்டாற் போல் வேகமாகக் கீழே இறங்கிற்று. மழைக் கோட்டின் அந்தப் பெரிய பைகளிலிருந்து பார்வையைத் திருப்பாமல், சங்கிலி கிணுகிணுக்க அது, வந்தவர்களை நோக்கி ஓடிற்று.

''ஐயோ, வீக்தர் வசீலியெவிச்! இதைப் பாருங்கள்!'' என்று கத்தியவாறு அந்தப் பெண் வேலிக் கதவை நோக்கிப் பின் வாங்கினார்.

''தோத்தோ, தோத்தோ! பர்போசிக், எங்களை நீ கடிக்க மாட்டாயே!'' என்று அந்த ஆடவர் தைரியமாகவே பிரான்திக்கைப் பார்த்துச் சொன்னார்.

''பர்போசிக்குக்கு'' யாரையும் கடிக்கும் உத்தேசம் இல்லை. அது விரும்பியது எல்லாம் அந்த ஆடவரின் பெரிய பைகளுக்குள் பார்க்க வேண்டும் என்பதுதான். அவ்வளவு

பெரிய பைகளில் வாய்க்கு இனிய பண்டம் ஏதாவது நிச்சயம் இருந்தாக வேண்டுமென நினைத்தது.

''உங்களை ஏன் அது அப்படி முறைத்துப் பார்க்கிறது? அது நாயாக இருக்குமென நான் நினைக்கவில்லை. ஏதோ காட்டு விலங்கு மாதிரி இருக்கிறது, நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்'' என்ருர் அந்தப் பெண்.

கோடையில் பிரான்திக்கின் மென்முடிகள் கொத்து கொத்தாய் உதிர்ந்து வந்தன. விலாப்புறங்களில் முடிகள் சடை சடையாகத் தொங்கின. அதன் வால் முடிகளை இழந்து குச்சி போலாகி விட்டது. பார்ப்பதற்கு அது விகாரமாகவும் பரிதாபமாகவும் இருந்தது. இவ்வளவு கோரமான ஒரு பிராணியைப் பார்ப்பவர்கள் இது மூர்க்க விலங்கா அல்லது பழக்கப்பட்டதுதானு என்று புரியாமல் குழம்ப வேண்டியிருந்தது.

பிரான்திக் இந்தக் கேள்விக்குத் தானே பதிலைத் தெரியப் படுத்திற்று. அந்த ஆடவர் அந்தப் பெண்ணின் பக்கம் திரும்பிய அதே கணத்தில் பிரான்திக்கின் சிறிய தலை அந்தப் பெரிய பைகளில் ஒன்றினுள் நுழைந்து துழாவிற்று. ஆகா, அது நினைத்தது போலவே அந்தப் பையினுள் ஒரு மிட்டாய் இருந்தது. பிரான்திக் அதைக் கவ்விக் கொண்டு வாயில் முகப்பை நோக்கிப் பாய்ந்தோடிற்று. மேல் படியில் உட்கார்ந்து கொண்டு 'கீ-கீ-கீ! உர்-ர்-ர்!' என்று முணு முணுத்தவாறு மிட்டாயை மென்று தின்ன முற்பட்டது. வந்தவர் இந்த வினோத பிராணி தன்னிடமிருந்து மிட்டாயைப் பறித்துக் கொண்டு விட்டதை உணர்ந்ததும் வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பித்தார்.

''சரியான திருடனுய் இருக்கிறதே! அது என்ன விரும்பிற்று என்று என்னுல் புரிந்து கொள்ளமுடியவில்லை!''

''உங்களை அது எப்படி தாக்கிற்று என்பதைக் கவனித்தீர்களா? உங்கள் விலாப்புறத்தில் கடிக்கப் போகிறது என்றே எண்ணினேன். ஆனுல் அது விரும்பியது அந்த மிட்டாய்தான்!

நேரே உங்கள் கோட்டுப் பைக்குள் சென்று எடுத்ததே, அதன் சாமர்த்தியத்தை என்னென்பது!''

அப்பா அவசரமாய் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தார். என்ன நடந்தென்று அவருக்கு விளங்கவில்லை. வந்தவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள், பிரான்திக் எதையோ தின்று கொண்டும், அதே போது உறுமிக் கொண்டும் இருந்தது.

''எங்கள் குழந்தைகள் இதற்குக் கற்றுத் தந்த சேஷ்டைகளில் ஒன்று இது'' என்று கூறினார் அவர். என்ன நடந்ததென்று புரிந்ததும், ''இதற்கு அவர்கள் பல குறும்புகள் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் இது குறித்து குறைபட்டுக் கொள்ளாமல் இருக்கவேண்டும். பெரிய கில்லாடியாகிவிட்டது இது. எல்லோர் பைகளிலும் தலையை விடுகிறது.''

வந்தவர்கள் ஒன்றும் குறைபட்டுக் கொள்ள வில்லை; அதற்கு மாறாக நரிக்குட்டியின் சாமர்த்தியத்தை வியந்து போற்றினார்கள்.

பிரான்திக்கின் சேஷ்டைகள் குறித்து அவர்களிடம் அப்பா மேலும் மேலும் சொல்லிச் சென்றபோது, அவர்கள் அதை மேலும் மேலும் போற்ற முற்பட்டார்கள். பதினைந்து நிமிடங்கள்தான் ஆகியிருக்கும், அதற்குள் நாங்கள் இந்த அரிய விருந்தினர்களுடன் வாழ்வெல்லாம் நெருங்கிப் பழகியிருந்தது போல் நினைக்கலானோம். அவர்கள் இருவரும் அருகாமையில் இருந்த வனப் பள்ளியின் இரு இளம் ஆசிரியர்களாவர்.

அம்மா அவர்களைத் தேநீர் அருந்தும்படி அழைத்தார். சோன்யாவும் நானும் சமவாரில் நீரைக் கொதிக்க வைத்தோம், யூலியா தேநீர் பாத்திரங்களையும் நாற்காலிகளையும் எடுத்து வந்தாள்.

விருந்தினர்கள் தேநீர் அருந்தியவாறு பிரான்திக்கைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

''உள்ளங் கவரும் பிராணி! எவ்வளவு காலமாய் உங் களுடன் இருந்து வருகிறது இது? வீட்டில் இதை வைத்திருப் பது தொல்லையாகவே இருக்கும். எங்கள் பள்ளிக்கூடத்துக்கு இதைத் தந்துவிடுங்களேன். அங்கே அதற்கு வேண்டியவை யாவும் கிடைக்கும், எந்தக் குறையுமின்றி அது வாழ முடியும். இதற்குப் பதில் நாங்கள் உங்களுக்கு வேட்டை ஜாதிநாய்க் குட்டி ஒன்று தருகிறோம், என்ன சொல்கிறீர்கள்?''

இல்லையெனச் சொல்ல மனம் வராமல் அப்பா தயங் கிஞர், ஆனால் அவர் நத்தாஷாவைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறிவிட்டார். வாயிற்படியில் உட்கார்ந்திருந்த அவள் இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''முதலாவதாக, இந்த பிரான்திக் என்னுடையது'' என்று அடித் தொண்டைக் குரலில் அவள் அறிவித்தாள். ''நான் கீழே விழுந்து மூக்கை உடைத்துக் கொண்ட போது அம்மா இது என்னுடையதாகுமெனச் சொன்னார். இதைக் கொடுத்து விட்டு உதவாக்கரை நாய்க்குட்டியைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை நான்.''

அவளது உணர்ச்சி வேகத்தைக் கண்டு ஆசிரியர்கள் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

''உங்கள் நாய்க் குட்டியை வைத்துக் கொண்டு நீங்களே அழுங்கள், எனக்கு வேண்டாம்!'' என்று ஆவேசமாய்க் கூறி முடித்தாள் அவள்.

''நத்தாஷா! இங்கே இருக்காதே, எழுந்து போ! மரியாதை தெரியாத முரட்டுச்சிறுமி! உன்னுடைய பிரான் திக்கைத் தோற்கடித்து விடுவாய் போலிருக்கிறதே.''

நத்தாஷா எழுந்து விறைப்புடன் படிகளில் இறங்கி நடந்தாள், பிரான்திக்கையும் தூக்கிக் கொண்டு கொட்டில் பரண் மீது ஏறினாள். அங்கே அதனுடன் தனியே அமர்ந்து, அடங்காமல் தாரையாய் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, பிரான்திக்கை அவர்களிடம் தந்து விட்டால் அவர் கள் அதை எவ்வளவு மோசமாய் நடத்துவார்கள் என்று

அதனிடம் விளக்கிச் சொன்னுள். பிரான்திக் பொறுமையுடன் கேட்டது, ஆனுல் அது கொஞ்சமும் கவலேப்பட்டதாகத் தெரியவில்லே. வாய்ப்பு கிடைத்த முதலாவது தருணத் திலேயே அது அவளுடைய சட்டைப் பைக்குள் மூக்கை விட்டுப் பார்த்தது.

அங்கே கொட்டில் பரணில் நத்தாஷா தனது உள்ளக் குமுறலே பிரான்திக்குக்குத் தெரிவித்துக் கொண்டிருந்த நேரத் தில் அவர்களது கதி இங்கே வாயில் முகப்பில் தீர்மானிக்கப் பட்டு வந்தது.

இளம் ஆசிரியர்கள் இருவரும் தமது வனப் பள்ளியின் சிறப்புகளே விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார்கள். ஆதியில் இந்தப் பள்ளி உடல் நலமின்றி நலிவுற்ற குழந்தைகளுக்காக அமைக்கப்பட்டது. தூய மலேக் காற்றிலே பைன் மரங்களுக் கிடையே இந்தக் குழந்தைகள் நலிவு நீங்கி நலமடைந்தன. இந்தப் பள்ளி எங்கள் வீட்டிலிருந்து அதிக தொலேவில் இல்லே என்று அவர்கள் கூறினர்.

''அன்று இந்தக் குழந்தைகள் எங்களிடம் வந்த போது அவர்களுடைய தோற்றத்தை நீங்கள் பார்த்திருக்க வேண் டும்! இப்போது அடையாளம் தெரியாதபடி மாறி விட்டனர். பட்டினி கிடந்த ஓநாய்கள் மாதிரி அப்படி ஆவலாய்ச் சாப் பிடுகிருர்கள், எவ்வளவு தந்தாலும் இன்னும் வேண்டும் என்கிருர்கள். மலேகளில் ஏறிச் சுற்றுகிருர்கள், மேனி பழுத்துப் போய் நிற்கிருர்கள்.

''எங்கே இருக்கிறது உங்களுடைய இந்தப் பள்ளி?''

''சாலேயின் இரண்டாவது திருப்பத்தில், மலேயடிவாரத் தில் முன்பு தேனீ வளர்ப்புப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வந்தனவே, அதே இடத்தில் இருக்கிறது.''

''ஓ! எங்களுக்கு மிகவும் அருகாமையில்தான் இருக் கிறது.''

''ஆமாம்.''

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒரே மாதிரியான எண்ணம் உதித்தது.

''எங்கள் சிறுமிகளையும் இங்கே...''

ஆசிரியர் புரிந்து கொண்டார்.

''உங்கள் சிறுமிகளையும் சேர்த்துக் கொள்ள முடியுமா என்றுதானே கேட்கிறீர்கள்? ஏன் முடியுமென்றே நினைக்கிறேன்.''

''எங்கள் மூத்த பெண்கள் இருவரும் நகரிலுள்ள பள்ளிக்குச் செல்கிறார்கள். கடைசிச் சிறுமிகள் இருவரையும் இங்கே வீட்டுக்கு அருகில் சேர்க்க முடிந்தால் நன்றாயிருக்கும்.''

''அப்படியே செய்யலாமே. எங்கள் பள்ளி அவர்களுக்குப் பிடித்தமானதாகவே இருக்கும். எங்கள் பள்ளியில் குழந்தைகள் வேண்டிய மட்டும் சுதந்திரமாய் இருக்கிறார்கள். எங்களிடம் கனிச் சோலையும், காய்கறித் தோட்டமும், பல வகையான விலங்குகளும் இருக்கின்றன. எங்கள் சிறுவன் ஒருவன் தனது வளர்ப்பு நரியை வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு எடுத்து வந்துவிடுவதாகச் சொல்லியிருக்கிறான். உங்கள் சிறுமிகள் அவர்களது பிரான்திக்கையும் அங்கே கொண்டு வந்துவிடலாம்.''

''ஆம், சந்தேகமில்லை! உங்கள் பள்ளி எங்கள் சிறுமிகளுக்கு உற்சாகமூட்டுவதாய் இருக்கும்!''

''நத்தாஷாவுக்கும் எனக்கும் விலங்குகளை வளர்க்கத் தெரியும். அவற்றை நாங்கள் கண்ணுங்கருத்துமாய்க் கவனித்துக் கொள்வோம்'' என்று அம்மாவின் முதுகுக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்தபடி மெல்லக் கூறினாள் யூலியா. அவளும் நத்தாஷாவும் பள்ளிக்கூடத்தில் சேருவது பற்றி நெடுநாளாய் ஆசைக் கனவுகள் கண்டு வந்தனர்.

''யார் இந்த நத்தாஷா?'' என்று கேட்டார் வீக்தர் வசீலியெவிச். ''நான் எனது நாய்க்குட்டியை வைத்துக் கொண்டு அழலாம் என்றாளே, அவள்தானே?''

''அவள் தவறிழைத்து விட்டாள்'' என்று கூறி, பதற்றத்துடன் இருமிக் கொண்டாள் யூலியா. ''அவள் குழம்பிப் போய், என்ன சொல்கிறேம் என்று தெரியாமல் சொல்லி விட்டாள்.''

பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் யூலியா அங்கிருந்து நழுவிப் படிகளில் இறங்கி வெளிமுற்றத்துக்குச் சென்ருள். பிறகு கொட்டிலுக்கு அருகே சென்று கிசுகிசுக்கும் குரலில் கூப்பிட்டாள்:

''நத்தாஷா!''

''என்ன?'' என்று கொட்டில் பரணிலிருந்து கடுப்பான குரல் பதிலளித்தது.

யூலியா மேலே ஏறிச் சென்று, என்ன நடந்ததென்று அவளிடம் சொன்ஞன். அரை மணி நேரத்துக்குப் பிற்பாடு சிறுமிகள் இருவரும் நெளிந்து துவண்ட நரிக்குட்டியைத் தூக்கிக் கொண்டு வாயில்முகப்புக்கு வந்தனர்.

அப்பாவும் அம்மாவும் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ஆசிரியர்கள் எங்கே?'' என்று கேட்டாள் யூலியா.

''பள்ளிக்கூடத்துக்குத் திரும்பிச் சென்று விட்டனர்.... நத்தாஷா, வழக்கமான உனது துடுக்குத்தனத்தையும் மிஞ்சி விட்டாய் இன்று நீ! நாங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியதாயிற்று!''

மறுதினமே அப்பா கினெதோயை அவிழ்த்து வந்து வண்டியில் பூட்டிஞர். யூலியாவும் நத்தாஷாவும் அவர்களது வெண்ணிறக் கவிகைகளைத் தலையில் கட்டிக் கொண்டனர். அம்மாவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். எல்லோருமாய்ப் புறப்பட்டார்கள். நத்தாஷா வாயைத் திறக்க வில்லை, வழி நெடுகிலும் வாட்டமாய் இருந்தாள். முந்திய நாளன்று ஆசிரியரிடம் துடுக்காகப் பேசியதற்காக அவளை அவர்கள் பள்ளியில் சேர்த்துக் கொள்ள மறுத்து விடுவார்களோ என்று அவள் பயந்தாள்.

யூலியாவை மட்டும் சேர்த்துக் கொண்டு தன்னை வீட்டுக்கு அனுப்பி விட்டால் என்ன செய்வது? பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் நிறைய இருந்தனர், எல்லாரும் படித்துக் கொண்டும் விளையாடிக் கொண்டும் இருப்பார்கள், அவள் மட்டும்....

நத்தாஷா நம்பிக்கை இழந்து குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தாள்.

வண்டி மலைச் சரிவில் உருண்டோடிற்று. இப்போது சரிமட்டமாகச் சென்ற இதமான மண் சாலையில் கினெதோய் ஓடிக் கொண்டிருந்தது. பிறகு இன்னொரு குன்றின் மீது ஏறிச் சென்றது வண்டி. விரைவில் பள்ளியின் வெண்ணிறக் கட்டிடங்கள் கீழே தெரியலாயின.

''கண்ணைக் கவரும் இடமாய் இருக்கிறதே!'' என்று அம்மா வியந்து கொண்டார்.

''அம்மா'' என்று நத்தாஷா பேச ஆரம்பித்தாள். ''நேற்று நான் அப்படிச் சொல்ல வேண்டுமென விரும்பவே இல்லை, என் வாயில் அப்படி வந்து விட்டது. எங்கள் வெளி முற்றத்தில் எலும்புகள் இறைந்து கிடக்கின்றன, அவர்களுடைய சிறு நாய்க்குட்டி இவற்றை விழுங்கித் தொண்டை அடைத்துப் போய் அழுது ஊளையிடும் என்றே சொல்ல விரும்பினேன்.''

எங்களுக்குச் சிரிப்புதான் வந்தது.

''நீ விளக்கம் தந்தது போதும்! உன்னைப் போன்ற அசட்டுச் சிறுமி கூறுவதைப் பெரிதாய் நினைத்து மனதில் வைத்துக் கொள்கிறவரல்ல வீக்தர் வசீலியெவிச். நீ அவரிடம் கூறியதை மறந்து விடுவோம். ஆனால் இன்னொரு தரம் நீ இம்மாதிரித் துடுக்காய் பேசாமல், என்ன சொல்கிறோம் என்று ஆலோசித்துப் பேசு.''

சாலையிலிருந்து ஒதுங்கி அமைந்த இரு கட்டிடங்களையும் கனிச் சோலையையும் சுற்றிப் புதிதாகப் போடப்பட்டிருந்த வேலியை நோக்கி வண்டி திரும்பிற்று. நுழை வாயிலில் ''வனப் பள்ளி'' என்ற பெயர்க் குறிப்பு காணப்பட்டது.

அம்மாவும் அப்பாவும் அந்த வாயில் வழியே சென்று முகப்புப் படிகளில் ஏறினர். அங்கிருந்து அவர்கள் நத்தாஷாவைத் திரும்பிப் பார்த்து உற்சாகமாய்ச் சிரித்துக் கொண்டனர். சிறுமிகள் இருவரும், முடிவு எப்படி இருக்குமோ என்று நினைத்தவாறு வண்டியில் காத்திருந்தனர்.

அவர்கள் அதிக நேரம் காத்திருக்க நேரவில்லை. உள்ளே வெளிமுற்றத்தில் பேச்சுக் குரல் கேட்டது. பிறகு நுழை வாயிலை நோக்கி அப்பா நடந்து வந்தார். அவருடன் கூட ஆசிரியரும் வருவது தெரிந்தது.

நத்தாஷாவுக்கு முகம் செக்கச் சிவந்து விட்டது, அவள் கண்ணில் கண்ணீர்த் துளித்துவிட்டது. ஆசிரியர் யாவற்றையும் நினைவில் வைத்திருப்பார், நேற்று தான் துடுக்காய்ப் பேசியதற்காக இப்போது தனக்குச் சரியானபடி பதிலளித்துப் போகச் சொல்லிவிடுவார் என்று நினைத்து அவள் தலையைத் திருப்பிக் கொண்டு நின்றாள்.

''பெண்களே, வந்தனம்!'' என்று அவர் அன்பு கனிந்த குரலில் அவர்களை வரவேற்றுக் கதவை விரியத் திறந்தார். ''வாருங்கள் உள்ளே. உங்கள் பெற்றோரும் நானும் பேசிக் கொண்டிருக்கையில் நீங்கள் உள்ளே சென்று ஏனைய குழந்தைகளைச் சந்தியுங்கள். அவர்கள் உங்களை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டுவார்கள் சரிதானா?''

அவருடைய அன்பான பேச்சைக்கேட்ட போது நத்தாஷாவுக்கு வெட்கமாயிருந்தது. கால் விரலால் மண்ணில் தோண்டிக் கொண்டு நின்றாள் அவள்.

''கோல்யா! மாஷா!'' என்று கூப்பிட்டார் ஆசிரியர். ''இங்கே வந்து யூலியாவையும் நத்தாஷாவையும் சந்தியுங்கள். இவர்களை அழைத்துச் சென்று நமது வளர்ப்புகளைக் காட்டுங்கள்.''

பிறகு அவரும் அப்பாவும் பள்ளிக்கூடக் கட்டிடத்துக்குள் சென்றார்கள்.

யூலியாவை விட சற்றே பெரியவனுன கோல்யா, ''முத லில் எதைப் பார்க்க விரும்புகிறீர்கள்? தோட்டத்தையா, வகுப்பறைகளேயா, எங்கள் விலங்குகளேயா?'' என்று கேட் டான்.

''முதலில் வகுப்பறைகளே'' என்று சிறுமிகள் இருவரும் ஆவலுடன் பதிலளித்தனர்.

''வாருங்கள்.''

ஓ, வகுப்பறைகள் அற்புதமாய் அல்லவா இருந்தன! வெளிச்சமான இரு பெரிய அறைகளில் சாய்வு மேசைகளும் கரும் பலகைகளும் புத்தக அலமாரிகளும் இருந்தன. சுவர் களில் சித்திரங்களும் புள்ளி விவரப் படங்களும் புவியியல் படங்களுமாய் இருந்தன.

நத்தாஷா பலமாய்ப் பெருமூச்சு விட்டாள். சன்னல் மேடையில் தூங்கிக் கொண்டிருந்த பூனே அந்தச் சப்தத்தில் விழித்தெழுந்து அறையின் குறுக்கே விழுந்தடித்து ஓடிற்று.

பிறகு பள்ளிக்கூடச்சிறுவர் சிறுமியர் அவர்களே சமைய லறைக்குள் அழைத்துச் சென்ருர்கள். அங்கே அலுவலில் இருந்த சிருர் தமக்குரிய வேலேகளேச் செய்து கொண்டிருந் தார்கள். சிலர் பாடிக் கொண்டிருந்தனர்.

தோட்டத்துக்குள் சென்று சுற்றிப் பார்த்தபோது அங்கும் இதேபோல் யாவும் உற்சாகமூட்டுவதாய் இருந்தன.

பிறகு குதிரைகளேயும் பசுவையும் கோழிகளேயும் வான் கோழிக் குஞ்சுகளேயும் பார்வையிட்டனர். கனிச் சோலேயில் கம்பி வலேகளாலான பெரிய கூண்டுகளில் பலவகையான பறவைகள் பாடிக் கொண்டும், பறந்து கொண்டும் இருந் தன. கம்பி வலேயிடப்பட்ட பெரிய மர வீட்டினுள் முயல் களின் குடும்பம் ஒன்று இனிது வாழ்ந்து வந்தது.

''இந்தக் கூண்டு எதற்காகத் தெரியுமா உனக்கு?'' என்று அந்த குழந்தைகளில் ஒன்று நத்தாஷாவைக் கேட்டது. ''விரைவில் எங்களுக்கு ஒரு நரிக்குட்டி வரப் போகிறது. அதற்கென செய்யப்பட்ட கூண்டு இது.''

கண்ணுக்கு இனிய இடம் கூண்டாக உருவாக்கப்பட்டி ருந்தது. ஒரு குன்றின் பக்கத்தில் இருந்த பெரிய திறந்த வெளி அந்தக் கூண்டுடன் சேர்க்கப்பட்டிருந்தது. கம்பி வலை யால் இந்த வெளி குன்றிலிருந்து பிரிக்கப் பட்டிருந்தது. கம்பி வலையின் இருபுறங்களிலும் புதர்களும் மரங்களும் இருந்ததால் வலைத் தடுப்பு எளிதில் கண்ணுக்குத் தெரியாத படி மறைந்திருந்தது.

''நரிக்குட்டிக்கு இங்கு கொண்டாட்டமாகத்தான் இருக் கும்'' என்றாள் யூலியா. ''பிறகு பிரான்திக்கும் இங்கே வந்து வசித்தால் என்ன?'' என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

இதே நினைப்பு நத்தாஷாவுக்கும் மனத்துள் எழுந்திருக்க வேண்டும், ஏனெனில் அவள் சொன்னாள்:

''வீட்டில் என்னிடம் ஒரு நரி இருக்கிறது.''

''மெய்யாகவா? சாதுவான நரியா?''

''ஆம், சாதுவானது. நீங்கள் விரும்பினால் எங்கள் வீட் டுக்கு வந்து பாருங்கள். எங்கள் வீடு இதே சாலையில்தான் கணவாய்க்கு அருகே இருக்கிறது. பிரான்திக் மிக இனிமை யானது. எனக்குத் தெரியும், உங்களுக்கு அது பிடித்தமான தாகிவிடும்.''

''எங்களிடம் மீஷ்கா என்றொரு மானும் இருக்கிறது. ஆனால் பொல்லாத முரடு.''

கோல்யாவுக்கும் மாஷாவுக்கும் அவர்கள் தமது வளர்ப் புகளைக் காட்ட விரும்பினார்கள்.

''எப்போது வேண்டுமானாலும் எங்கள் வீட்டுக்கு வாருங் கள். பிரான்திக்குடன் நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டு மானாலும் விளையாடலாம்.''

''சரி, நீங்கள் இருவரும் எங்கள் பள்ளியில் சேரப் போகிறீர்கள் அல்லவா?

''இன்னும் தெரியவில்லையே.''

சிறுமிகள் இருவரும் இனிய மயக்கம் கொண்ட நிலையில் வீட்டுக்குத் திரும்பினர். ஏனெனில் இப்போது அவர்கள் பகல்

நேர மாணவிகளாகப் பள்ளியில் சேர்ந்து கொள்ளலாம், பிறகு குளிர்கால அரையாண்டு ஆரம்பமானதும் ஏனைய குழந்தைகளைப் போல் பள்ளியிலேயே வசிக்கலாம் என்று ஆசிரியர் அவர்களிடம் கூறினர்.

இவ்வாறு அவர்கள் தினமும் வீட்டிலிருந்து புறப்பட்டுப் பள்ளிக்கூடம் போய் வந்தனர். இதே போல அவர்களது புதிய நண்பர்களும் தினமும் அவர்களுடைய வீட்டுக்கு வந்து சென்றார்கள்.

பிரான்திக்கை எல்லா குழந்தைகளுக்கும் பிடித்தது. அவர்கள் அதற்குச் செல்லம் கொடுத்துக் கெடுத்தார்கள், தான் மிகப் பெரிய ஆள் என்று நினைத்துக் கொண்டு பிரான்திக் கணப் பொழுதுகூட தனியே இருக்க முடியாதென அடம் பிடித்தது.

செப்டம்பரில் சோன்யாவும் நானும் நகரில் நாங்கள் படித்து வந்த பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். யூலியாவும் நத்தாஷாவும் ஆனந்தம் பொங்கத் தமது புதிய நண்பர்களுடன் சேர்ந்து தமது வனப் பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட்டார்கள். அவர்கள் புதிதாகக் கற்றுக் கொண்ட பாட்டைப் பாடிக் கொண்டு நடந்தார்கள்.

அச்சமில்லை தோழர்காள்....

தெளிந்த காற்றில் அவர்களது குரல்கள் நெடுந் தொலைவுக்குச் சென்று ஒலித்தன. பிரான்திக்கின் சங்கிலி அவர்களது காலடி ஓசைக்கு இசைவாய்க் கிணுகிணுத்தது.

வாயில்முகப்பில் நின்ற அம்மா துயரார்ந்த முறையில் புன்னகை புரிந்தவாறு கூறினர்:

''நத்தாஷாவைப் பாரேன்! பிரான்திக்கூட கடைசியாக ஒருதரம் வீட்டைப் பார்க்க வேண்டுமென்று திரும்பி பார்த்து விட்டுப் போகிறது. ஆனால் இவள் அதற்குள் நம்மை மறந்து விட்டாள். இவள் சிந்தனை எல்லாம் அங்கே பள்ளியில் இருக்கிறது. அம்மாவுக்கு வணக்கம் தெரிவித்து இன்னொரு

தரம் விடை பெற்றுக் கொள்வோமென்ற நினைப்பில்லாமலே போகிருள்.''

ஆனுல் அம்மா கூறியது சரியல்ல, சாலையின் திருப்பத்தில் குழந்தைகள் மறையுமுன் அவர்கள் எல்லோரும் நடையை நிறுத்திக் கொண்டு, பிரான்திக்கைத் தலைக்கு மேல் தூக்கிக் காட்டி, தமது தொப்பிகளை ஆட்டிக் கூச்சலிட்டுக் கத்தி விடைபெற்றுக் கொண்டனர்.

''போய் வாருங்கள்! போய் வாருங்கள்!'' என்று குழப் பத்துடன் அம்மா முணுமுணுத்தார். இப்போது வீடு காலி யாய் இருந்தது.

உணவு அருந்தியதும் பிரான்திக் ஒரு பீப்பாவின் மேல் சுருட்டி மடக்கிக் கொண்டு குறட்டை விட்டு நிம்மதியாக உறங்கும். பெரிய கம்பி வலை அடைப்பின் நடுவில் அதற்காக பெரிய பீப்பா ஒன்றை படுக்கையில் போட்டிருந்தார்கள். மேலும் அடியும் இல்லாத பீப்பா அது. அகலமான மரத் தொட்டிகளாலான குழாய் வழிகள் பீப்பாயின் இந்த இரு வாய்களோடும் இணைக்கப்பட்டிருந்தன. நரிக்கு மிகவும் பிடித்தமான இரு வழிப் பொந்தாக அமைந்தது இது.

மழை நாட்களில் பிரான்திக் தனது பீப்பாப் பொந்துக் குள் தங்கியிருந்தது. இன்று வெயிலாக இருந்ததால், அது பீப்பாவின் மேல் படுத்துறங்கிற்று. இன்று காலை அதற்கு ஒரு புதிய துணை கிடைத்தது. லீஸா என்ருெரு பெண் நரி அதன் அடைப்புக்குள் கொண்டு வந்து விடப்பட்டது. லீஸா இனிய குணமுடையது, உற்சாகமானது, சாதுவானது.

ஆயினும் இரு நரிகளது முதல் சந்திப்பு ஆர்வமிக்கதாய் இருக்கவில்லை.

பிரான்திக் அதனிடம் ஓடிச் சென்று முகர்ந்து பார்த் தது. பிறகு அதை அறவே மறந்து விட்டு, குழந்தைகளு டைய சட்டைப்பைகளை ஆராய்வதில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டது.

முதலில் லீஸாவும் பிரான்திக்கைத் தனக்குப் பிடிக்காதது போல்தான் நடந்து கொண்டது. ஆனால் பிற்பாடு அது நிழல் போல் பிரான்திக்குடன் ஒட்டிக் கொண்டு அதைப் பின்தொடர்ந்து செல்ல ஆரம்பித்தது.

இப்போது பிரான்திக் பீப்பாமீது அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில், லீஸா அந்த பீப்பா மீது சாய்ந்து கொண்டு கீழே உட்கார்ந்திருந்தது. ஏதோ ஆலோசிப்பது போல் பின்னங் காலால் காதைச் சொறிந்து கொண்டது.

இடையிடையே இவ்வேலையை நிறுத்தி விட்டுப் பின்னங் கால்களில் எழுந்து நின்று பிரான்திக்கை முகர்ந்து பார்த்தது.

குழந்தைகளுக்கு ஏமாற்றமாக இருந்தது. நரிகள் இரண்டும் ஒன்றையொன்று சந்தித்ததும் குதூகலமடைந்து குதித்து விளையாடுமென்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அப்படி ஒன்றும் நடைபெறவில்லை.

''கவலைப்படாதீர்கள், முதலில் சில நாட்களுக்கு இப்படிதான் முறைப்பாய் இருக்கும், பிற்பாடு எல்லாம் சரியாகிவிடும்'' என்று வீக்தர் வசீலியெவிச் அவர்களிடம் சொன்னார்.

அதே போல் நான்கு நாட்களுக்குப் பிற்பாடு பிரான்திக்கும் லீஸாவும் நெடு நாளைய நண்பர்கள் மாதிரி குதித்தாடியும் கட்டிப் புரண்டும் விளையாட ஆரம்பித்தன.

நாங்கள் மரங்களுக்குப் பின்னால் மறைந்து கொண்டு, அவை விளையாடுவதைக் கண்டு களித்தோம்.

குளிர் காலம் ஆரம்பமாவதற்குள் அவற்றுக்கு அடர்த்தியாய் மென்முடிகள் வளர்ந்து விட்டன. இரண்டும் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தன, குதூகலமாய் விளையாடிக் கொண்டிருந்தன. நவம்பர் தொடக்கத்தில் வெண்பனி பெய்ய ஆரம்பித்தது, பிறகு கடுங்குளிர் வந்து விட்டது.

வீடுகளில் கணப்பு அடுப்புகள் பிரகாசமாய் எரிந்தன. புகை போக்கிகளிலிருந்து புகை வெண்ணிற மரங்களுக்கு மேல் எழுந்தது.



புத்தாண்டு விழாவுக்குப் பிற்பாடு வீக்தர் வசீலியெவிச் கூறினார்:

''கம்பி வலையை ஒட்டினாற் போல் நாம் பலகைத் தடுப்பு எழுப்ப வேண்டும். ஏனென்றால் மரங்கள் இலையின்றி குச்சிகளாய் நிற்கின்றன. பிரான்திக்குக்கும் லீஸாவுக்கும் அவை காற்றிலிருந்தும் காப்பு அளிக்கவில்லை, நம்மிடமிருந்தும் காப்பு அளிக்கவில்லை.''

''நம்மிடமிருந்து கூடவா அவற்றுக்குக் காப்பு வேண்டும்?''

''ஆம், அவற்றை நாம் அவற்றின் விருப்பம் போல் இருக்கும்படி தனியே விட்டோமானால், வசந்த பருவத்தில் நமக்கு அவை நரிக்குட்டிகள் அளிக்கும்.''

''அப்படியானால் உடனே நாம் பலகைத் தடுப்பு அமைத்திடுவோம்!''

நரிகளது இருப்பிடத்தின் மூன்று பக்கங்களில் எல்லோருமாய்ச் சேர்ந்து பலகைத் தடுப்பு அமைத்தார்கள். பிறகு நரிக்குட்டிகள் எப்போது வருமென்று காத்திருந்தார்கள்.

இரவில் சில சமயம் பிரான்திக்கின் விநோத குரைப்பு கேட்டு வந்தது. இதன் பிறகு பிரான்திக் லீஸாவிடம் முன்பு போல் அந்த அளவுக்குக் கவனம் செலுத்தாமல் இருக்க ஆரம்பித்தது. விரைவில் லீஸா பருத்து வரக் கண்டோம்.

''குட்டியா போடப் போகிறது?''

''போடும் போலத்தான் தெரிகிறது.''

குழந்தைகள் லீஸாவுக்குச் செல்லம் கொடுக்க ஆரம்பித்தார்கள். அதற்குச் சுவையான பலவும் கொடுத்து உபசரித்தார்கள், அதைக் கருத்துடன் கவனித்துக் கொண்டார்கள்.

''லீஸா, எங்களை நீ ஏமாற்றி விடாதே!''

மாலை நேரத்தில் ஆசிரியர்கள் நரிகளின் வாழ்க்கையைப் பற்றிக் குழந்தைகளுக்குக் கூறி வந்தனர். குட்டி போடும் காலத்தில் தாய் நரிகள் அமைதி யிழந்துவிடும் என்று கூறினார்கள்.

குட்டி நரிகள் பிறந்து சில நாட்கள் வரை அவற்றை யாரும் தொடவோ, பார்க்கவோ கூடாது. தொடவோ, பார்க்கவோ செய்தோமானால் தாய் நரி அச்சமுற்றுவிடும். அது தன் குட்டிகளை ஒளித்து வைக்க முயலும், குழி தோண்டிப் புதைத்துங்கூட வைக்கும், குட்டிகளை இவ்விதம் தொல்லை செய்து அவற்றைக் கொன்று விடுவதும் உண்டு.

''ஆகவே நான் சொல்கிறவரை நீங்கள் யாரும் தடுப்புக்குள் போகக் கூடாது'' என்று வீக்தர் வசீலியெவிச் எல்லாக் குழந்தைகளையும் எச்சரிக்கை செய்தார். ''நரிக் குட்டிகளுக்கு மூன்று வாரம் ஆகும் வரை அவற்றின் கண்கள்

மூடியிருக்கும். ஒரு மாதமானதும் அவை தமது பொந்துக்குள்ளிருந்து வெளியே வந்து வெயிலில் விளையாடும்.''

விரைவில் மார்ச் மாதம் பிறந்தது, பிறகு ஏப்ரலும் வந்தது. ஏப்ரல் மாதத்தின் நடுவில் லீஸாவுக்குக் குட்டிகள் பிறந்தன.

''அவற்றின் அருகே யாரும் போகாதீர்கள்! அவற்றைப் பயமுறுத்தி விடாதீர்கள்!'' என்று யூலியாவும் நத்தாஷாவும் ஏனைய எல்லாக் குழந்தைகளிடமும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

ஆனால் குட்டிகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அடக்க முடியாததாகி வந்தது.

யாவரிலும் சிறியவளான ஒருத்தி ஒரேயொரு கணம் பார்த்து விட்டு ஓடி வந்து விடலாமென்று பீப்பாவின் புழைக் கதவைத் திறந்து பார்த்து விட்டாள். பிறகு பெருங்கேடு உண்டாயிற்று.

அன்று இரவு முழுதும் லீஸா தன் குட்டிகளை வாயில் கவ்விக் கொண்டு அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தது. மரத்தின் வேர்களுக்கு அடியில் அவற்றை மறைத்து வைத்தது, குளிர்ந்த ஈரத் தரையில் அவற்றைப் புதைத்து வைத்தது.

மறு நாள் காலையில் லீஸா கீச்சிட்டுக் கத்திய சின்னஞ் சிறு குட்டி ஒன்றைக் குழிக்குள்ளிருந்து எடுத்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு போய் இரண்டாவது தரம் குழி தோண்டி அதைப் புதைக்கக் கண்டாள் யூலியா. உடனே அவள் தன் ஆசிரியரிடம் ஓடினாள்.

''வீக்தர் வசீலியெவிச், சீக்கிரம் வாருங்கள்! லீஸா தன் குட்டியைப் புதைத்துக் கொண்டிருக்கிறது!''

பாதி உயிர் போன நிலையில் அவர் அந்தக் குட்டியை மிதமிஞ்சிய பாதுகாப்பு உணர்ச்சி கொண்ட அதன் தாயிடமிருந்து காப்பாற்றினார். ஏனைய குட்டிகள் ஏற்கெனவே இறந்து விட்டன. கடைசிக் குட்டியையாவது காப்பாற்ற

வேண்டுமென அவர்கள் முயற்சி செய்தார்கள். குழந்தைகள் லீஸாவைத் திட்டின:

''அசட்டு நரி! கொலேகார நரி!''

''லீஸாவைக் குற்றங் கூறக் கூடாது'' என்றார் வீக்தர் வசீலியெவிச். ''உங்களில் யாரோ ஒருவர் குட்டிகளைத் தொட்டிருக்க வேண்டும், அல்லது பார்த்திருக்க வேண்டும். இல்லா விட்டால் லீஸா ஒரு போதும் தன் குட்டிகளை ஒளித்து வைக்க முயன்றிருக்காது.''

இவ்வாறு சொல்லிய வாறு அவர் கண் திறவாத, அந்த நடுங்கும் குட்டி மீது பஞ்சைச் சுற்றினர்.

''இப்படிச் செய்தால் வெது வெதுப்பாகி விடுமா அது?''

''தெரியவில்லை... முயற்சி செய்து பார்ப்போம். இதை நான் லீஸாவிடம் திருப்பித் தந்தால் அது மீண்டும் இதை மறைத்து வைக்கவே முற்படும். குட்டி போட்ட பூனையிடம் நரிக்குட்டியைக் கொடுத்தோமானல், அந்தப் பூனை பால் கொடுத்துக் குட்டியைக் காப்பாற்றிவிடும் என்று நான் படித்திருக்கிறேன். ஆனல் குட்டி போட்ட பூனைக்கு நாம் எங்கே போவது?''

மறு பேச்சின்றி யூலியாவும் நத்தாஷாவும் கோட்டுகளை எடுத்து மாட்டிக் கொண்டு, அருகாமையிலிருந்த ஒரு குடிசையை நோக்கிக் குன்றிலிருந்து கீழே ஓடினர். அந்த குடிசையிலிருந்த காவற்காரக் கிழவரிடம் செய்தியேடுகள் கொடுத்து வரும்படி அதற்கு முந்திய நாளன்று வீக்தர் வசீலியெவிச் அவர்கள் இருவரையும் அனுப்பியிருந்தார். அங்கே சென்றிருந்த அவர்கள் இருவரும் கிழவரின் பூனையையும் அது போட்டிருந்த குட்டிகளையும் பார்த்து மகிழ்ந்து போற்றிவிட்டு வந்தனர்.

இருவரும் கிழவரிடம் ஓடி அவரிடம் மன்றடினர்.

''இல்லாவிட்டால் நரிக் குட்டி செத்துதான் போகும்'' என்று இருவரும் புலம்பினர்.

''குழந்தைகளே, நான் சொல்வதைக் கேளுங்கள்'' என்றார் கிழவர். ''இந்தப் பூனே கிழப்பூனே, இவ்விடத்தை விட்டு வேறு எங்கும் போய் வசிக்காது. அப்படி நீங்கள் இதை அழைத்துச் சென்றாலும், நிச்சயம் இது குட்டி களையும் தூக்கிக் கொண்டு இங்கே தான் திரும்பி வரும். வழியில் குளிரில் குட்டிகள் செத்துதான் போகும். ஆகவே உங்களுடைய நரிக் குட்டியை இங்கே கொண்டு வருவதுதான் நல்லது. நரிக்குட்டி பெரியதாகித் தட்டிலிருந்து உணவருந்த ஆரம்பிக்கும் வரை, என்னுடைய பூனேபால் கொடுத்து அதை வளர்த்து வரும்.''

அது போலவே செய்தார்கள். நரிக் குட்டியைத் தாய்ப் பூனேயிடம் கொண்டு வந்து விட்டார்கள். பூனே தன் குட்டி களில் ஒன்றாய் அதை ஏற்றுக் கொண்டது.

லீஸா தன் குட்டிகள் யாவும் போய் விட்டதை அறிந்து கொண்டதும் அது அடைப்புக்குள் அங்கும் இங்கும் ஓட ஆரம்பித்தது. துயரத்தால் வருந்திய அது எதுவும் தின்ன மறுத்து விட்டது. குட்டிகளேக் கொன்ற லீஸாவை முதலில் குழந்தைகள் கண்ணெடுத்தும் பார்க்க விரும்பவில்லே. ஆனால் விரைவில் எல்லோரும் அதன்மீது பரிதாபம் கொள்ளத் தொடங்கினர், மீண்டும் அதற்குச் செல்லம் கொடுக்க முற் பட்டனர். எவ்வளவு இனிமையான மனப்பாங்கு கொண்டவை இந்த விலங்குகள்! ஐந்து நாட்களுக்குப் பிற்பாடு லீஸா எப்போதும் போல் குதூகலமாய் விளேயாடிக் கொண்டிருந் தது. ஏதும் நடைபெறுதது போல் மகிழ்ந்து கொண்டது. இதற்கிடையில் அதன் குட்டி நரிக்குட்டி வளர்ப்பகத்தில்—பூனேக்குடும்பத்தை இப்படிதான் குழந்தைகள் அழைத்து வந் தனர்—நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து கொண்டிருந்தது.

குற்றமிழைத்த குழந்தை எது என்று கண்டுபிடிக்க ஆசி ரியர்கள் முயலவில்லே. குழந்தைகளுக்கு இது கடுமையான

ஒரு படிப்பினையாகும், இனி யாரும் இம்மாதிரி காரியத்தைச் செய்ய மாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். தாம் பெரியவர்களானதும் என்ன செய்யலாம் என்று ஒரு நாள் குழந்தைகள் விவாதித்து வந்தன.

''நான் விலங்கின மருத்துவராகப் போகிறேன்'' என்றாள் ஒரு சிறுமி. உடனே அவள் கண்ணீர் வடிக்க ஆரம்பித்து விட்டாள். ''நான் விலங்கின மருத்துவராய் இருந்திருந்தால் குளிரில் உறைந்து போன நரிக்குட்டிகளைக் காப்பாற்றியிருப் பேன். குட்டிகளைப் பார்த்து லீஸாவை அச்சங்கொள்ளச் செய்தது நானேதான்.''

ஆசிரியர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண் டனர்.

''மான்யா, நீ அழக் கூடாது. இம்மாதிரி சோகமாய் முடிவுறும் என்பது தெரியாமல் நீ இவ்வாறு செய்து விட் டாய். ஆனால் நீ விலங்கின மருத்துவராகியதும் பல விலங்கு களுக்கும் உதவி செய்வாய். நரிக்குட்டிகளுக்குப் புரிந்த தவறுக்காக நீ இவ்விதம் மன்னிப்பு தேடிக் கொள்வாய்.''

அவர்கள் அவளுக்கு ஆறுதல் கூற முயற்சி செய்தார் கள். பேச்சை மாற்றுவதற்காக, நத்தாஷாவையும் யூலியா வையும் பார்த்துக் கேட்டார்கள்:


''பெண்களே, நீங்கள் பெரியவர்களானதும் என்ன செய்ய விரும்புகிறீர்கள்?''


''காடுகளை எப்படி பேணிக் காப்பது என்று கற்றுக் கொள்ள விரும்புகிறோம்'' என்று இருவரும் ஒரே விதமாய்ப் பதிலளித்தனர். ''அடர்ந்த காடுகள் இருக்கும் வரை அவற் றில் விலங்குகளும் இருக்கும். மனிதனுக்கும் விலங்குகளுக் கும் உற்ற நண்பன் இந்த காடு. வீட்டில் அம்மாவும் அப்பா வும் எப்போதும் இப்படிதான் சொல்கிறார்கள்.''

''அருமையிலும் அருமையான கருத்து! நீங்கள் பெரிய வர்களானதும் வனக் காவலர்களாகி விடுங்கள், உங்கள் அப் பாவுக்கு உதவியாக வேலை செய்யுங்கள் வசந்த காலத்தில்

எல்லா விலங்குகளிடமும் ஏலாத சிறு குட்டிகள் இருப்பதை மறவாதிருங்கள்.''

''வீக்தர் வசீலியெவிச், நாங்கள் எந்நாளும் இதை நினை வில் வைத்திருப்போம்.''





சுபாரி

கணவாயில் விபத்து நேர்ந்திராவிடில் சுபாரி எங்கள் வசம் வந்திருக்குமென கனவுகூட கண்டிருக்க முடியாது. சுபாரி முதல்தரமான குதிரை—அதைப் போய் சிறு பிள்ளை களான எங்களிடம் தந்திருப்பார்களா?

முதன் முதல் நாங்கள் இந்தக் குதிரையைப் பார்த்தது குளிர் காலத்தில். பெரியவர்கள் எல்லாரும் அப்பாவின் பின்னுல் கொட்டிலுக்குப் போனுர்கள், அங்கே பலமாய் வாக்கு வாதம் புரிந்தார்கள், அளக்கும் நாடாவால் குதிரையை அளந்து பார்த்தார்கள்.

''கண்ணைக் கவரும் குதிரை! சித்திரத்திலே அன்றி உண் மையில் இம்மாதிரி ஒன்றைக் காணலாமென நினைக்க முடி யாது!'' என்று, முகம் சிவந்து குளிரில் விறைத்துப் போய்,

கதகதப்பான அறைக்குத் திரும்பி வந்ததும் அவர்கள் வியந்து கூறிக் கொண்டார்கள்.

போய் பார்த்து விட்டு வரலாமென்று நாங்களும் சென்றோம்.

உயரமாய், நேர்த்தியாயிருந்த இளம் ஆண் குதிரை அங்கே வெண்பனியில் ஆடிக் குதித்துக் கொண்டிருந்தது. கம்பத்தில் கட்டப்பட்டிருந்த அது தலையை அந்தக் கம்பத்தில் தேய்த்துக் கொண்டும், அதைக் கடித்துக் கொண்டும் கால்களால் தரையைத் தட்டிக் கொண்டும் இருந்தது. அதன் வயிற்றுக்குள் ஏதோ இரைந்து கொண்டிருந்தது.

நாங்கள் அதன் அருகே சென்றோம். முன்னிலும் பரபரப்பாய் ஆடிக் குதித்தவாறு கறுகறுத்த விழிகளை உருட்டி அது எங்களைப் பார்த்தது.

''நல்ல குதிரையாய்த்தான் இருக்கிறது'' என்று எல்லாம் அறிந்த தோரணையில் கூறினாள் சோன்யா. ''ஆனால் இதனுள் ஓயாமல் ஏதோ இரைகிறது. துறுதுறுவென்று ஆடிக் குதிக்கிறது, கிட்டச் சென்று தட்டிக் கொடுக்கக்கூட விடாது போலிருக்கே. ஓ-ஓ-ஓ!'' என்று அடித்தொண்டையால் கத்திக் கொண்டு கம்பத்தை நோக்கி தைரியமாய் ஓரடி எடுத்து வைத்தாள்.

குதிரை மெல்லக் கனைத்து விட்டு சோன்யாவின் தலைக் கவிகையைக் கவ்வி அவளை இப்படியும் அப்படியுமாய் ஆட்டிற்று.

''ஐயோ அவளை அது கொன்றுவிடும்!'' என்று கூச்சலிட்டாள் என் பக்கத்தில் நின்றிருந்த நத்தாஷா.

பலக்கக் கத்தியவாறு சுபாரியைப் பார்த்துக் கையை வீசினாள் யூலியா. குதிரை வியப்புற்று அவளைப் பார்த்தது. அதே போது வாயிலிருந்த கவிகையைக் கீழே விட்டது. சோன்யா பின்னால் தாவித் தப்பித்துக் கொண்டாள்.

''பைத்தியம் பிடித்த குதிரை! பைத்தியக்கார விடுதியில் தான் கொண்டு போய் விடவேண்டும்! தலையைப் பிடித்துத்

தூக்குகிறது!'' என்று சோன்யா கடிந்து கொண்டாள். அவள் முகம் வெள்ளையாய் வெளுத்திருந்தது.

கோடையில் சுபாரியின் மீது ஏறிக் கொண்டு தெருவில் அப்பா சென்ற போது பலரும் வேலிக் கதவுக்கருகே ஓடி வந்து வேடிக்கை பார்ப்பது வழக்கம். நாய்கள் கதவுக்கு அடியில் புகுந்து ஓடி வந்து சுபாரியை எட்டிப் பிடிக்க முயலும். ஆனால் எவ்வளவுதான் மூச்சு பிடித்துக் கொண்டு பாய்ந்தோடினாலும் அவற்றால் சுபாரியின் வாலுக்கு அருகேகூட வர முடியாமற் போய்விடும். ஒவ்வொன்றாய் அவை பின்தங்கி நின்று ஆத்திரமாய்க் குரைக்கும்.

குதிரைகளிலுங்கூட எவையும் சுபாரியுடன் போட்டி போட முயலுவதில்லை. அம்மாதிரியான முயற்சி நகைக்கத் தக்கதாகவே இருந்திருக்கும். இஸ்ஸீக்-கூல் ஏரிக் கரையின் வழியே நகரிலிருந்து எங்கள் வீட்டுக்கு இருந்த பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில் ஒரு தரங்கூட அதன் ஓட்ட ஒழுங்கை மாற்றிக் கொள்ளாமல் இலாகவமாய் அது பறந்தோடிவரும் காட்சி கண்கொளாக் காட்சியாய் இருக்கும்!

எங்கள் வீட்டின் எதிரே புல்வெளி ஒன்று இருந்தது. சுபாரி இந்தப் புல்வெளியைச் சுற்றி ஓடி வந்து வேலிக் கதவின் முன்னால் நின்று கழுத்தை வளைத்துச் சாய்த்துக் கொண்டு பலமாய்க் கனைக்கும். பிறகு மெதுவாகவும் சீராகவும் மூச்சு விட்டுக் கொண்டு நிற்கும். நாங்கள் ரொட்டித் துண்டையோ, சர்க்கரைக் கட்டியையோ எடுத்து வந்து கொடுப்போம். சுபாரி உதடுகளால் மிடுக்காய் அந்த அன்பளிப்பை எடுத்துக் கொள்ளும், ஒரு தரங்கூட தவறிப் போய் அது யார் கையையும் கடித்ததில்லை.

''இது மூச்சு விடுவதைப் பாருங்கள்! எவ்வளவு ஓடினாலும் அசங்காது அமைதியாய் மூச்சு விடுவதைப் பாருங்கள்!'' என்று அப்பா பெருமையாய்ச் சொல்வார்.

நாங்கள் அதன் நெஞ்சு வாருக்கு அடியில் விரலை வைத்துப் பார்த்து விட்டு உடன்பாடு தெரிவிப்போம்.

எங்கள் சுபாரி பிரமாதமான குதிரையாய் இருந்தது. அப்போது கோடையின் நடுப் பகுதியில் ஒரு நாள் அப்பா அதற்குச் சேணமிட்டு, பயணத்துக்கு வேண்டிய தளவாடங்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். வனத் துறையினரது பிராந்திய மாநாட்டுக்குச் செல்வதற்காக சுபாரியின் மீதேறி மலைகளைக் கடந்து வேர்னியை நோக்கிச் சென்றார் அவர். அந்த காலத்தில் அல்மா-அத்தா நகர் வேர்னி என்று அழைக்கப்பட்டு வந்தது.

ஏறத்தாழ ஒரு மாதம் கழிந்தது. அப்பா இன்னும் திரும்பி வரவில்லை. பிறகு ஓர் இரவில் கடும் புயல் அடித்தது. நாங்கள் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டோம். காற்றும் மழையும் மோதி சன்னலைத் தடதடக்கச் செய்தன. இடி இடித்தது, மின்னலில் அறை ஒளிமயமாயிற்று. அறைக்குள் படுத்துத் தூங்குகிறவர் மீது மின்னல் பாய்ந்து அவரைக் கொல்ல முடியுமா என்று கேட்பதற்காக நான் வாயெடுத்தேன். அந்த நேரத்தில் புயலின் சப்தம் சற்று ஓய்ந்தது, அறைக் கதவுக்கு அப்பாலிருந்து அப்பாவின் பேச்சுக் குரல் காதில் விழுந்தது. பரபரப்புற்று கம்பளிப் போர்வைகளை மேலே இழுத்துப் போர்த்திக் கொண்டு அப்பாவைப் பார்ப்பதற்காகப் பக்கத்து அறைக்கு ஓடினோம். அவருடைய நனைந்த ஆடைகள் கீழே தரையில் கிடந்தன. காய்ந்த ஆடைகளில் அப்பா அங்கே மேசையிலிருந்த சமவாருக்கு முன்னால் அமர்ந்து தேநீர் அருந்தித் தம்மை வெது வெதுப்பாக்கிக் கொள்ள முயன்று கொண்டிருந்தார்.

அவருக்கு வாழ்த்துத் தெரிவித்த நாங்கள்: ''ஓ, பழுக்கச் சிவந்து போய் விட்டீர்களே!'' என்று வியந்து கூவினோம். ''வெயிலில் நன்றாய்க் காய்ந்தீர்களா, என்ன?''

''அதெல்லாம் இல்லை!''

''எங்களுக்கு வாங்கி வருவதாய்ச் சொல்லியதை நீங்கள்

மறந்து விடவில்லை அல்லவா? மிட்டாய்கள் வாங்கி வந்திருக்கிறீர்களா?''

''இல்லை.''

''ஏன்?''

''இல்லை, அவ்வளவுதான்!''

''அப்படியானால் வேறு எதாவது கொண்டு வந்திருக்கிறீர்களா?''

''இல்லை, எதுவும் கொண்டு வரவில்லை.''

நாங்கள் எங்களுக்குள் ஒருவரையொருவர் திகைப்புடன் பார்த்துக் கொண்டோம்.

''ஏன் அப்படி? வாங்கி வருவதாய்ச் சொல்லிவிட்டுச் சென்றீர்கள்...''

அப்பா தமது நெற்றிப் பொட்டுகளை அழுத்திப் பிடித்துக் கொண்டார். குளிரால் வருந்துவது போல் உடம்பைக் குலுக்கிக் கொண்டார். அவருக்கு அங்கமெல்லாம் நடுங்கிற்று.

''இவர்களை இங்கிருந்து போகச் சொல்'' என்று அம்மாவிடம் சொன்னார். ''மண்டை வலி பொறுக்க முடியவில்லை, இவர்களுடைய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் நிலையில் இல்லை நான்.''

''அப்பா எதையும் மறக்கவில்லை. வாங்கிக் கொண்டு வந்தார். வீட்டுக்கு எடுத்து வந்திருப்பார். ஆனால் வழியில் விபத்து நேர்ந்து விட்டது. அவரைத் தொல்லை செய்ய வேண்டாம், உயிரோடு வந்து சேர்ந்தாரே என்று நாம் மகிழ வேண்டும்.''

அம்மா எங்களை வெளியே அனுப்பிக் கதவை மூடினார். என்ன ஆயிற்று என்று எங்களுக்குப் புரியவில்லை.

''மலைகளில் மிட்டாய்க்கு என்ன நேர்ந்திருக்க முடியும்?''

''மழையில் நனைந்து ஊறிக் கரைந்து போயிருக்கும்'' என்றாள் நத்தாஷா.

''இல்லை, வேறு ஏதோ நடைப் பெற்றிருக்கிறது.''

''புத்தகங்கள் எல்லாம் படிக்கிறீர்கள், மலைகளில் பாதை தவறிப் போய்த் திண்டாட நேருமென்பது தெரியவில்லையே, உங்களுக்கு.''

சோன்யா அலட்சியமாய்த் தோளை உலுக்கிக் கொண்டு, தலையணைக்கு அடியில் கையை விட்டு ''தீரச் செயல்களது உலகம்'' என்ற தனது தடிப் புத்தகம் அங்கே இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

''வழி தவறிப் போய் உணவின்றி அலைய நேருமாயின் கிடைத்ததை எல்லாம் சாப்பிடுவீர்கள், தெரியுமா?'' என்று யாரோ ஒருவர் முணுமுணுக்கும் குரலில் கூறியது காதில் விழுந்தது. ''பசியால் பலமிழந்து சுற்றித் திரிந்த போது மிட்டாய்களை அப்பா தின்றிருப்பார். தக்க தருணத்தில் மிட்டாய் உதவியாய் இருந்ததென்று நாம் மகிழ்ந்து கொள்ள வேண்டும்.''

பிறகு நாங்கள் திரும்பவும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டோம்.

புயலுக்குப் பின் விடிந்தபொழுது தெளிவாய் பளிச் சென்றிருந்தது. உதித்தெழுந்த சூரியனது ஒளியில் மர உச்சிகள் பளிச்சிட்டன. ஆனால் தரை குளிராகவும் ஈரமாகவுமே இருந்தது. வீட்டிலிருந்து நேரே நாங்கள் கொட்டிலுக்குச் சென்றோம்.

''என்ன இது? வேறு ஏதோ ஒரு குதிரை அல்லவா வந்திருக்கிறது'' என்றாள் சோன்யா.

பார்ப்பதற்கு அழகாகக்கூட இல்லை.''

''நம்முடையை சுபாரியை விட மட்டமானதா?''

''என்ன கேள்வி கேட்கிறாய்!''

''நம்முடைய சுபாரி எங்கே?''

மீன் கண்களுடன் கவர்ச்சியற்ற ஒரு சிறு குதிரையைச் சுற்றி நாங்கள் நின்று கொண்டிருந்தோம்.

அந்தக் குதிரை எங்களைப் பார்த்துக் கனைத்து விட்டு,

தலையை எதிர்ப் பக்கம் திருப்பிக் கொண்டு கவணையிலிருந்த உலர் புல்லை மெல்ல ஆரம்பித்தது.

''மோசமான குதிரை அல்ல.''

''நம்மை இது கண்டு கொள்வதாய்த் தெரியவில்லை.''

''வாலை ஆட்டிக் கொள்கிறது, பார்.''

''கண்கள் விநோதமாய் இருக்கின்றன'' என்றாள் சோன்யா. இம்மாதிரியான கண்கள் குதிரையின் சிறப்பைக் குறிப்பனவா இல்லையா என்று எங்களுக்குப் புரியவில்லை.

புதிய குதிரை குறித்து நாங்கள் விவாதித்துக் கொண்டிருக்கையில் வயது முதிர்ந்த கிர்கீஸியர் ஒருவர் கொட்டிலுக்குள் வந்தார்.

''பெண்களே, என்ன சேதி?''

''நல்ல சேதி, வணக்கம்! யாருடைய குதிரை இது? உங்களுடையதா?''

''என்னுடையதுதான், பிடிக்கிறதா உங்களுக்கு?''

''பிடிக்கிறது, பரவாயில்லை. ஆனால் நாங்கள் கேட்க விரும்பியது வேறொன்று. எங்களுடைய சுபாரி எங்கே?''

''சுபாரியா?'' என்று கேட்டு அந்தக் கிழவர் விசில் அடித்துக் கையை வீசிக் காட்டியவாறு கூறினார்: ''அது போய்ச் சேர்ந்து விட்டது, அதன் கதை அவ்வளவுதான்.''

பொழுது விடிந்தது முதல் வேலிக் கதவு ஓயாமல் திறக்கப்படுவதும் மூடப்படுவதுமாய் இருந்தது. இரவில் அப்பா திரும்பி வந்தது தெரிந்ததும் கிராமத்திலிருந்து பலரும் செய்திகளைத் தெரிந்து கொள்வதற்காக வந்து கொண்டிருந்தார்கள்.

அப்பாவுக்கு உடம்பு சுகமில்லை, காய்ச்சல் அடித்தது. கனத்த ஆட்டுத் தோல் கோட்டுகளைப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார், வந்தவர்களோடு ஓயாமல் பேசினார். அபாயகரமான கொய்னார்ஸ்கி கணவாய் வழியே அவர் வீட்டுக்குத் திரும்பி வந்தது பற்றி அவர்களிடம் சொன்னார்.

நாங்கள் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொண்டு அவர் கூறிய தில் ஒரு சொல்லும் தவறிவிடாதபடி கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் நாங்கள் முக்கியமாய்த் தெரிந்து கொள்ள விரும்பியது குறித்து ஏதும் அறிந்து கொள்ள முடிய வில்லை. சுபாரிக்கு என்ன ஆயிற்று? அவர் பாதிக் கதைக்கு வந்ததும், அவரைப் பார்க்கப் புதிதாய்ப் பலரும் வந்து சேர்வார்கள். ஆரம்பத்திலிருந்து சொல்லும்படி அவர்கள் கேட்பார்கள்.

அப்பா திரும்பவும் தொடக்கத்திலிருந்து சொல்ல முற் படுவார். இப்படி அவர் திரும்பத் திரும்ப தொடங்கிக் கூறிச் சென்றபோது மேலும் மேலும் அவர் குரல் பலமாய் ஒலித் தது, அவர் மேலும் மேலும் பரபரப்புற்றுக் குழப்பமடைய லானார்.

''இதைக் கேளுங்கள், காய்ச்சல் கடுமையாகி வருவ தாய்த் தெரிகிறது'' என்று பக்கத்து வீட்டுக்காரர்களில் ஒருவர் குறுக்கிட்டுச் சொன்னார். ''இன்னும் நன்றாய்ப் போர்த் துங்கள், அஸ்பரீன் கொடுக்க வேண்டும்'' என்றார்.

மருத்துவ மனைக்குச் சென்று டாக்டரை அழைக்கும்படி எங்களை அனுப்பினார்கள். மருத்துவமனை அருகாமையில்தான் இருந்தது.

நாங்கள் ஓட்டமாய் ஓடினோம், டாக்டரைத் தேடிப் பிடித்துப் பரபரப்பாய் அவரிடம் தகவலைச் சொன்னோம்.

''மிகவும் முக்கியம்!'' என்று கூவிக் கொண்டு வேக மாய்த் திரும்பினோம். நாங்கள் இல்லாதபோது கதையை அப்பா கூறி முடித்து விடக் கூடாதென்று வீட்டுக்கு ஓடி வந்தோம்.

''உடனே வருவதாய்ச் சொன்னார்'' என்று மேல் மூச்சு வாங்கக் கூறியவாறு அறைக்குள் விழுந்தடித்துக் கொண்டு வந்தோம்.

'உஸ்-ஸ்!'

விரலைக் காட்டி அம்மா எங்களைச் சப்தம் செய்ய வேண்டாமென்று எச்சரித்தார்.

அப்பா படுக்கையில் அப்படியும் இப்படியுமாய் புரண்டு, சிரித்துக் கொண்டார். பிறகு அவசரமாய்ப் பேச ஆரம்பித்தார்:

''எப்படிக் குதித்தது தெரியுமா?.. யாவற்றையும் இழக்க வேண்டியதாயிற்று... என் துப்பாக்கி, பணம், சேணம் எல்லாம் போயிற்று... போய்க் காப்பாற்றியாக வேண்டும், உதவ வேண்டும்... அது குதித்ததை நீங்கள் பார்த்திருக்க வேண்டும்... உதவ வேண்டும்... நான் இப்போது...''

படுக்கையில் அவர் எழுந்து உட்கார்ந்தார்.

''வேண்டாம் படுத்துக் கொள்ளுங்கள்!''

அறைக்குள் டாக்டர் வந்தார்.

''எல்லாம் போயிற்று... உதவ வேண்டும்...'' என்றார் அப்பா.

''கடுமையான காய்ச்சல் அடிக்கிறது, சன்னியாய் இருக்கும் போல் தெரிகிறது'' என்றார் டாக்டர்.

பிறகு சப்தமே இல்லாதபடி அமைதியாகி விட்டது. நாங்கள் ஓசையின்றி நுனி விரலில் அங்குமிங்கும் நடந்தோம்.

யாரையோ வெளியே தூக்க வேண்டுமென்று அப்பா மீண்டும் கத்தினார். ஓயாமல் பேசிக் கொண்டே இருந்தார்...

மறு நாள் காலையில் நாங்கள் யாரும் அவரிடம் போகக் கூடாதென்று தடுத்து விட்டார்கள்.

சாவித் துளையில் காதை வைத்துக் கேட்ட யூலியா எங்களைப் பார்க்கத் திரும்பிக் கொண்டு புன்னகை புரிந்து விட்டுக் கூறினாள்:

''குழந்தை மாதிரி உளறுகிறார்.''

துளையில் காதைப் பலமாய் அழுத்தி நெடுநேரம் அவள் கேட்டுக் கொண்டு நின்றாள். நாங்கள் பொறுமை இழந்து போய் அவளைக் குலுக்கினோம்:

''பார்ப்பதற்கு இது என்ன, வேடிக்கையா?'' என்றோம் நாங்கள்.

அவள் எங்கள் பக்கம் திரும்பியதும் அவள் கண்களி லிருந்து கண்ணீர் வழியக் கண்டோம்.

''சிரிக்க வேண்டாம்'' என்று துயரம் மேலிட்டவளாய் முகத்தைச் சுளித்துக் கொண்டு சிணுங்கினுள்.'' அப்பா தொண்டையில் கட்டி இருப்பதாய்ச் சொல்கிருர்கள்.''

அந்தியில் அப்பாவின் நிலே மேலும் மேலும் மோசமா கிற்று. இரவு முழுதும் டாக்டர் அவருடன் இருந்தார்.

மறுநாள் காலேயில் மருத்துவ மனேயிலிருந்து இன்னெரு டாக்டர் வந்தார். சற்று நேரம் ஏதோ பேசிய பின் பளபளக் கும் சாமணங்களேயும் கத்தரிக்கோல்களேயும் எடுத்து மேசை மீது வரிசையாய் வைத்தார்கள்.

அம்மா கலக்க முற்றவராய்த் தோன்றினுர். டாக்டரின் பின்ஞல் அறைக்குள் சென்ற போது அம்மாவின் முகம் வெளுப்பாய் இருந்தது.

''நான் கூச்சலிட மாட்டேன், எவ்விதத்திலும் இடை யூருய் இருக்க மாட்டேன்'' என்று அம்மா கூறிக் கொண்டிருந் தார். ''நீங்கள் நம்பலாம்... உங்களுக்கு நான் உதவியாய் இருப்பேன்... உங்களுக்கு வேண்டியதை வைத்துக் கொண்டு பக்கத்தில் நின்று நான் உதவி செய்ய முடியும்.''

பிறகு அறைக்குள் ஒரு குண்டானே எடுத்துச் சென்ருர்கள். எங்களே வெளியே சென்று சமொவாரில் நீரைக் கொதிக்க வைக்கச் சொன்ஞர்கள்.

டாக்டர்கள் அறுவை மருத்துவம் செய்ய முற்பட்டனர். இல்லேயேல் அப்பாவுக்கு மூச்சு அடைபட்டுப் போக நேரலா மென்று அஞ்சினர்.

அம்மா சில புத்தகங்களேயும் நத்தாஷாவின் பொம்மை களேயும் எடுத்து வந்து எங்களிடம் தந்தார்.

நாங்கள் மிரண்டு போய் நிற்பதைக் கண்டதும்: ''நீங்கள் பயப்படக் கூடாது'' என்ருர். ''சப்தம் போடாமல்

சமர்த்தாய் இருங்கள், யாவும் நல்லபடியாய் முடிந்து விடும்.''

பிறகு அம்மா அறைக்குள் சென்ருர், நாங்கள் சமர்த்தாய் இருக்க முயன்ருேம். கைக்குட்டை கீழே விழுந்ததும் எடுத்து வைப்பதற்காக எல்லோருமாய் ஓடிஞேம், தவறிப் போய் எங்களில் ஒருவர் வேருெருவரை இடித்துத் தள்ளியதும் வருத்தம் தெரிவித்து, அதிகமாய் வலித்து விட்டதா என்று விசாரித்துக் கொண்டோம். பிறகு நத்தாஷா தனது பொம்மைகளில் ஒன்று வீணுக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்ருள்.

''சூருவளியின் வாலேப் பிடித்து இழுத்தது யார்? சேண இருக்கை நழுவித் தொங்குகிறது. ஓல்கா, நீதான் செய்திருப்பாய்! எனக்குத் தெரியும். நீதான்!'' என்ருள் அவள்.

''இல்லே, நான் ஒன்றும் இல்லே! எப்போதும் இப்படி தான், என் மீதுதான் பாய்வாய் நீ! செய்தது யார் என்று தெரியாது உனக்கு, இருந்தாலும் நான்தான் செய்தேன் என்கிருய். போதும் இது!''

நான் நாத்தாஷாவின் தலே முடியைப் பிடித்து இழுக்கப் போனேன், ஆனுல் சோன்யா என் கையைப் பிடித்துத் தடுத்தாள்.

''சண்டை போட்டது போதும்! இம்மாதிரியான ஒரு நேரத்தில் கூச்சல் போடக்கூடாது என்பது கூடவா தெரியவில்லே?''

''என்னுடைய பொம்மைகளே அவள் ஏன் தொடுகிருள்? என் குதிரையை என்ன செய்து வைத்திருக்கிருள், பார்!''— நத்தாஷா ஓய்வதாயில்லே.

''புளுகுணி! இன்று எப்படிப்பட்ட நாள் என்பது தெரியும் உனக்கு, எவ்வளவு வேண்டுமானுலும் பொய் பேசு நீ! என்னுடைய நல்லதனத்தை நன்ருய்ப் பயன்படுத்திக் கொள். நான் வாய் திறக்கப் போவதில்லே!''

''அப்படிச் சொல்! அப்பாவுக்காக நீதான் அதிகம் கவலைப்படுகிருய் என்பதைக் காட்டுகிறது இது.''

என் புத்தகத்தை எடுத்துக் கொண்டு நான் ஒதுங்கிச் சென்றேன், நத்தாஷா மேலும் கூறியதைக் கவனிக்காதிருக்க முயன்றேன்.

''குற்றம் அவளுடையது தான்! அவள்தான் செய்தாள், தெரியும் எனக்கு!'' என்று நத்தாஷா சீறிக் கொண்டிருந்தாள்.

நேரம் நகர மறுத்தது. புத்தகங்களும் விளையாட்டுச் சாமான்களும் எங்கள் கையிலிருந்து கீழே நழுவின. என்ன செய்வதென்று தெரியாமல் அங்குமிங்கும் திரிந்தோம், ஒவ்வொரு சப்தத்தையும் காது கொடுத்துக் கேட்டோம். எங்கள் நாய் ஜிக்கா எங்கள் பின்னுல் அலைந்து கொண்டிருந்தது. எங்களைப் போலவே அதுவும் கலங்கிப் போய் சோகம் கொண்டதாய்த் தோன்றியது. ஏதோ கோளாறு என்பதை உணர்ந்து கொண்டு, என்ன நேர்ந்தது என்று விசாரிப்பது போல் எங்கள் கண்களை உற்று நோக்கிற்று.

''நீ வராதே இங்கே! இன்று உன்னுடன் கொஞ்சுவதற்கு நேரமில்லை'' என்று நாங்கள் அதைப் பார்த்து முணுமுணுத்தோம்.

தான்தான் ஏதோ தவறிழைத்து விட்டதாய் நினைத்துக் கொண்டு, எங்களிடம் மன்னிப்பு பெற்று எங்கள் அன்புக்குரியதாய் ஆக வேண்டுமென்று தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளத் தீர்மானித்தது அது. வாயில் முகப்பில் கதவுக்குப் பின்னுல் மூலையில் அமர்ந்து தலையைத் தொங்க விட்டுக் கொண்டது. இடையிடையே பெருமூச்சும் கொட்டாவியும் விட்டுக் கொண்டு சோகமாய் முனகிற்று.

இறுதியில் யாவும் முடிந்து அறைக் கதவு திறக்கப்பட்டது.

டாக்டரும் அம்மாவும் களைப்புற்று ஓய்ந்தவர்களாய், அதே போது மகிழ்ச்சி கொண்டவர்களாய் வெளியே வந்தார்

கள். அறுவை முடிந்து விட்டது, அப்பா நல்லபடியாகி விடு வார் என்று எங்களிடம் சொன்னார்கள்.

நாங்கள் தாவிக் குதித்து வாயில் முகப்பிலிருந்து கீழே பாய்ந்து ஆனந்தமாய் வீட்டைச் சுற்றி ஓடி வந்தோம். ஜிக்கா தனது மூலையிலிருந்து எட்டிப் பார்த்தது. எங்களு டைய குதூகலத்தைக் கண்டதும் அதே கணத்தில் அதுவும் மாற்றமடைந்து விட்டது. தரையில் கவிந்து ஒரு தாவு தாவிப் பாய்ந்தது, தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டு பறந்தோடிற்று.

அல்மா-அத்தாவில் வனத்துறையாளர் மாநாடு எதிர் பார்த்ததைக் காட்டிலும் அதிக நாட்களுக்கு நீடித்தது.

குறுக்கு வழியில் வீட்டுக்குத் திரும்புவதென்று அப்பா முடிவு செய்தார். அவரும் கிர்கீஸிய வனத் துறையாளர் ஒரு வரும் சேர்ந்து தூரத்தில் குறைவாயினும் மிகவும் அபாயகர மான பாதையில் புறப்பட்டனர். அவர்கள் கணவாயின் உயரத்துக்கு மேலே ஏறி மலையைத் தாண்டிக் கொண்டு எதிர்ப் பக்கத்தில் இஸ்ஸீக்-கூல் ஏரிக் கரைக்கருகே வந் திறங்க வேண்டியிருந்தது.

அந்தி நெருங்கியதும் அவர்கள் பனி மூடிய முகடுகளுக்கு அருகே வந்தனர், ஆடு மேய்ப்பாளர்களுடன் தங்கி இரவைக் கழித்து விட்டு, விடிவதற்குமுன் அங்கிருந்து புறப்பட்டனர்.

அல்மா-அத்தாவில் சுபாரி இரண்டு வாரங்களுக்கு எந்த வேலையுமின்றி கொட்டிலில் இருந்து வந்தது. அப்போது அது பருத்துப் போய் நெகிழ்வு குறைந்து விறைத்து விட்டதால் பயணத்தின் முதல் நாளன்றே அது களைத்துப் போய்விட்டது.

ஆடுகளுக்கு ஏற்ற குறுகலான பாதை பாசி படர்ந்த முகடு களைச் சுற்றிக் கொண்டு வளைந்து பாறைச் சரிவுகளில் சென் றது. சில சமயம் நேரே பெரும் பிளவின் உச்சி விளிம்புக்குப் போய்ச் சேர்ந்தது. பிறகு அவர்கள் திரும்பிக் கீழே இறங்கிச் சென்று வேறொரு பாதையில் போக வேண்டியிருந்தது. சில

சமயம் பாறையின் படிவிளிம்பில் எக்கச்சக்கமாய்ச் சிக்கித் தவிக்க நேர்ந்தது. எப்பக்கமும் செல்ல முடியாதபடி சுபாரி திணறித் திண்டாடிற்று, அதன் குளம்புகளுக்கு அடியிலிருந்து கற்கள் உருண்டு கீழே சரிந்து சென்றன.

சுபாரியின் பருமனுக்கும் எடைக்கும் ஏற்ற பாதை அல்ல அது.

அதன் கால்கள் நடுங்கியதையும் அதன் விலாப்புறங்கள் குழித்துச் சென்றதையும் அப்பா கண்ணுற்ருர். நடையை நிறுத்தியதும் தலையை சோர்வுடன் சாய்த்துக் கொண்டது.

ஆனுல் அவரது துணைவரின் நோஞ்சான் குதிரை ஆட்டைப் போன்றதாய் இருந்தது. அந்த மலைப் பாதையில் அது அதிகம் சங்கடப் படவில்லை. இப்பகுதியைச் சேர்ந்த கிர்கீஸியக் குதிரையான அது மலைப் பாதைகளில் சென்று பழக்கப் பட்டது. பின்னங்கால்களில் அமர்ந்து கொண்டு செங்குத்தான பாதைகளிலும் சுலபமாய் சரிந்து சென்றது. புகை பிடிப்பதற்காக அவர்கள் இடையில் சற்று நேரம் தங்கியதும் அந்த கிர்கீஸியக் குதிரை அமைதியாய் வாலைச் சொடுக்கி அடித்து மலைப் பூண்டுகளைக் கொறித்துக் கொண்டு நிற்கும்.

நண்பகல் நேரத்தில் பயணிகள் இருவரும் செங்குத்தாய் நெடிதுயர்ந்த பாறை முகட்டை வந்தடைந்தார்கள். கொய்னுர்ஸ்கி பனியாற்றின் ஓரம் அது.

பனியாறு கண்களை உறுத்தும்படி வெள்ளை வெளேரென்று இருந்தது. இங்குமங்கும் துருத்திக் கொண்டிருந்த பாறை முகடுகளான கரிய பற்கள்தான், இங்கே வருவோர் எச்சரிக்கையாய் இல்லாவிடில் நிரந்தரமாகவே இங்கே இருக்க நேர்ந்து விடும் என்பதை உணர்த்தும் அபாய அறிவிப்பாய் அமைந்திருந்தன.

காற்று கடுமையாய் இருந்தது, காதைத் துளைத்தது. வெண்பனித் தூளை இந்தக் காற்று வாரிக் கொண்டு புகை போல மூண்டெழுந்து வீசிச் சென்றது. வானம் இருண்டு வந்தது.



பயணிகள் இருவரும் தமது குதிரைகளைத் துரிதப்படுத்தினர். சுபாரி சில தரம் இடறி விழுந்து முழங்கால்களைச் சிராய்த்துக் கொண்டு விட்டது. கிர்கீஸிய வனத்துறையாளரது குதிரையுங்கூட களைப்படைந்து வந்தது. அதன் எசமானர் வானத்தில் திரண்டு வந்த மேகங்களைப் பார்த்ததும் முறையிட்டுத் தமது தலைவிதியை நொந்து கொண்டார்.

''ஊ-ஊ'' என்று காற்று அந்த குறுகலான கணவாய் வழியே ஊளையிட்டுச் சென்றது. திடுமென காற்று மூண்டெழுந்து பலமாய் வீசிற்று, இப்போது ஊளையானது கடுங் கர்ஜனையாய் மாறிற்று.

சுபாரி ஓய்ந்து போய் விட்டது. முடிவில் காலை நகர்த்த முடியாதபடி தெம்பு இழந்து போய் நகராமல் நின்றது. அப்பா கீழே இறங்கி அதன் பக்கத்தில் நடந்தார். பிறகு சுபாரியை அவர் தன்னைப் பின்தொடர்ந்து வரச் சொல்லி விட்டு முன்னே நடந்தார். ஆனால் குதிரை பின்னோக்கி இழுத்தது. அப்பா லகானைப் பிடித்து அதை பலவந்தமாய் இழுத்துச் செல்ல வேண்டியதாயிற்று.

நீளமான ஆட்டுத் தோல் கோட்டைப் போட்டுக் கொண்டு, உயர்ந்து சென்ற கரடுமுரடான பாதையில் குதிரையையும் இழுத்துச் செல்வது எளிய காரியமல்ல. அவருக்கு முன்னுல் கிர்கீஸிய வனத் துறையாளர் அவரது நோஞ்சான் குதிரை மீது போய்க் கொண்டிருந்தார்! ஆனுல் நன்ருய்த் தீனி தின்று வலு மிக்கதாய் வாட்ட சாட்டமாய் இருந்த குதிரையை அதன் எசமானர் இழுத்துச் செல்ல வேண்டியிருந்தது. பொறுமையிழந்து லகானை அப்பா சொடுக்கி இழுத்தார். சுபாரி தலையை பின்னுல் சாய்த்துக் கொண்டு பின்னேக்கி நகர்ந்தது.

''ஓகோ! அழிச்சாட்டியமா செய்கிருய்? இழுத்துச் சென்ருல் வர மாட்டாயா? சரி, என்ன செய்கிறேன், பார்!''

குதிரையின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு சவுக்கினுல் ஓர் அடி அடித்தார். சுபாரியை இதற்கு முன் என்றுமே அவர் அடித்ததில்லை. சுபாரிக்கு உடம்பெல்லாம் உதறியது. அது விளிம்புவரிப் பாதையில் விரைந்து சென்றது.

கீழே கணவாயிலிருந்து பெரிய மேகம் திரண்டெழுந்தது. பரட்டை ரோமக் கரடி போலிருந்த அது, இரு பயணிகளையும் தாண்டிச் சென்று பனியாற்றுக் கணவாயை அவர்களது கண்ணுக்குத் தெரியாதபடி மறைத்தது. முன்னிலும் இருட்டாகி விட்டது.

வானத்தில் மின்னல் பாய்ந்து பளிச்சிட்டது. இடி முழங்கிற்று. மலைகளில் இடி இடிப்பதை நேரில் தாமே கேட்டிராதவரால் அது எப்படி இருக்குமென்று கற்பனை செய்வது கடினம். கரிய வானத்திலிருந்து கிளர்ந்து தடதடத்துக் கொண்டு கீழே விழுகிறது. பாறை முகடுகள் பூதக் குரல்கள் எழுப்பி அலறுகின்றன. இந்தக் காட்டுக் கூச்சல் எதிரொலித்து பயங்கரமான மிகப் பல குரல்களது கர்ஜனையாய்ப் பெருகிக் காது செவிடுபடும்படியாகி உங்களைக் கதிகலங்கிக் குமையச் செய்கிறது.

இயற்கையின் கோபாவேசங் கொண்ட மூர்க்க சக்தி களிடையே மனிதன் பலமிழந்து தான் தூசித் துரும்பாகி விட்டது போன்ற உணர்ச்சியால் ஆட்கொள்ளப் படுகிருன். தனது திக்கற்ற நிலையை உணருகையில் அஞ்சா நெஞ்சம் கொண்டவனும் திண்டாடித் தவிக்க நேர்கிறது. இருட்டிலே பாதை கண்ணுக்குத் தெரியவில்லை, பயணிகள் இருவரும் திக்குமுக்காடியவாறு முன்னே போய்க் கொண்டிருந்தார்கள். புயல் பனிப் புயலாய் மாறியது. மேகங்கள் மூடிக் கொண்டு விடவே இருள் இப்போது இரவின் மையிருட்டாகி விட்டது.

குதிரைகளை இருவரும் துரிதப்படுத்தினர். சீக்கிரத்தில் பனியாற்றை விட்டு அப்பால் சென்றுவிட வேண்டுமென்று அவர்கள் அவசரப்பட்டனர். இதற்குத் தாம் கடக்க வேண்டிய தூரம் ஒரு கிலோமீட்டருக்கு மேல் இருக்காது என்று கிர்கீஸியர் அப்பாவிடம் சொன்னுர்.

திடுமென சுபாரி நின்று விட்டது. லகானை குலுக்கினுர் அப்பா, இரண்டாம் தரமும் குலுக்கினுர். ஆனுல் சுபாரி அசைய மறுத்தது. பிறகு அப்பா தமது சவுக்குக் கட்டையால் அதை அடித்தார். குதிரை முன்னே காலை எடுத்து வைக்கப் போயிற்று, ஆனுல் முன்னே செல்லாமல் பிடிவாதமாய்த் தலையை ஆட்டிக் கொண்டு பக்கவாட்டில் நகர்ந்து நின்றது.

இங்கு பாதை இல்லை, அபாயம் இருக்கிறதென்பதை அது உணர்ந்து கொண்டு விட்டது போல் அங்கேயே நின்றது. ஆனுல் அப்பா விடாமல் அதை வற்புறுத்தினுர்.

சுபாரி பின்னுல் நகர்ந்து வெடுக்கெனத் தாவி முன்னுல் பாய்ந்தது...

அடுத்த கணத்தில் என்ன ஆயிற்று என்று அப்பாவுக்குத் தெரியவில்லை. சேணத்திலிருந்து அவர் மேலே பறந்து சென்று கீழே பனிக் கட்டியில் விழுந்தார்.

சுபாரி செல்ல மறுத்த இடத்தில் பாறைகளுக்கிடையே வெண்பனி ஏராளமாய் அடித்துக் குவிக்கப் பட்டிருந்தது. இந்தப் பனி இங்கு பாலம் போல் அமைந்து மேலே இறுகிக்

கட்டியான பரப்பால் மூடப்பட்டிருந்தது. இது கெட்டியாய் வலுமிக்கதாய்த் தோன்றினாலும் இதற்குக் கீழே கிடுகிடு பாதாளமாய் வெறுங் காற்று அடங்கிய வெற்றிடமே இருந்தது.

சுபாரி முன்னேத் தாவிப் பாய்ந்து முன்னங் கால்களிலே அதன் முழு எடையுடன் தரையில் குதித்ததும், பனிக் கட்டிப் பரப்பை உடைத்துக் கொண்டு மார்பளவுக்கு அது வெண் பனியிலே அழுந்தி விட்டது. அது மீண்டும் முயற்சி செய்து மேலே தாவிற்று. இப்போது அதன் முன்னங் கால்கள் பனியி லிருந்து விடுபட்டன, ஆனால் பின்னங் கால்கள் மேலும் ஆழ மாய்ப் பனியினுள் அழுந்தி விட்டன.

அது ஆவேசமாய்க் கால்களை உதைத்துக் கொண்டது. அப்போது அது பெரிய அளவில் வெண்பனியை பெயர்ந்து விழச் செய்தது. திடீரென பனிச் சரிவு நகர ஆரம்பித்தது. தனது எசமானனிடம் விடை பெற்றுக் கொள்வது போல் சுபாரி நெடுங் குரலெழுப்பிக் கனைத்தது. பின்னங் கால்களில் நின்று கொண்டிருந்த அது மெதுவாய் அப்படியே பாதாள இடுக்கினுள் தாழ்ந்து சென்று மறைந்தது.

கிர்கீஸியர் பனிச் சரிவினையும் பாதை குடைவுற்றுப் படு குழியாய் மாறியதையும் கண்ணுற்றார். மின்னல்களின் வெளிச்சத்தில் அவர் கண்ணுக்குத் தெரிந்தது இவ்வளவு தான். குதிரையில் வந்தவரும் குதிரையும் இந்தப் படுகுழியில் புதையுண்டு விட்டதாய் அவர் முடிவு செய்து கொண்டார்.

குதிரையிலிருந்து கீழே இறங்கி வெண்பனியில் அமர்ந்து அழுதார் அவர்.

துயரில் மூழ்கியவராய் அங்கேயே மலை விளிம்பில் நெடு நேரம் அவர் அமர்ந்திருப்பார், ஆனால் அவருடைய குதிரை தானாகவே முன்னால் போய்க் கொண்டிருப்பதைத் திடுமென கவனித்தார். உடனே அதன் பின்னால் தவழ்ந்து சென்றார் அவர். தலையைக் குனிந்து கொண்டு பாதையை முகர்ந்து பார்த்து விட்டு எச்சரிக்கையாய்க் குதிரை தக்க வழியைத்

தேடிப் பிடித்துச் சென்று கொண்டிருந்தது. அவரும் தவழ்ந்து முன்னே சென்ருர், இடையிடையே எழுந்து குதிரையின் பின்னுல் தடுமாறிக் கொண்டு சில தப்படிகள் நடந்தார்.

முடிவில் பனிப் பரப்பு முடிவுற்றது. குதிரை நின்று பின் பக்கம் திரும்பிப் பார்த்தது. கிர்கீஸியர் லகானைக் கையில் பிடித்துக் கொண்டு குதிரை மீது ஏறிக் கொண்டார். இரண்டு மணி நேரத்துக்குப் பிற்பாடு அவர் உயர் மட்டத்து மலைக் கிராமத்துக் கூடாரம் ஒன்றில் கணப்புத் தீயின் முன்னுல் அமர்ந்து, வனத்துறையாளரை எப்படி சைத்தான் தூக்கிச் சென்றதென்று அங்கிருந்தோரிடம் விளக்கிக் கூறினுர்.

சுபாரி மறைந்த தருணத்தில் மின்னல் மின்னிற்று. பிறகு கார் இருள் சூழ்ந்து கொண்டு விட்டது. அப்பா எழுந்து நின்று கணப் பொழுதுக்கு முன் தமது குதிரை இருந்த இடத்தை உற்று நோக்கினுர்.

''இருக்காது, அப்படி ஒன்றும் இருக்காது'' என்று முனகினுர் அவர். ''இம்மாதிரி இங்கு அபாயம் இருப்பதை சுபாரி உணர்ந்து கொண்டுதானே போகாமல் நின்றது! நம் இருவர் உயிரையும் காப்பாற்றும் பொருட்டல்லவா அப்படி அது போராடிற்று!''

மீண்டும் மின்னல் எப்போது மின்னுமென்று நம்பிக்கையுடன் அவர் காத்திருந்தார். அப்போது சுபாரி எங்கே சிக்கியிருக்கிறதென்பது தெரியும், லகானை மட்டும் எப்படியாவது பற்றிக் கொண்டு விட்டால் போதும், சுபாரி மெதுவாய் மேலே தவழ்ந்து ஏறி வந்து விடும், நிச்சயம் ஏறி வந்து விடும் என்று நினைத்தார்.

வானத்தின் குறுக்கே ராக்கெட்டு போல் மின்னல் பளிச்சிட்டுப் பாய்ந்து சென்றது. அப்பா கண்ணுற்ருர்—கரிய ஆழத்தையும் சுபாரி புதையுண்ட இடத்தில் எழுந்த தூள் பனிக் கம்பத்தையும்.

புயலில் இப்போது அப்பா தனியே விடப்பட்டு விட்டார்.

காலே எடுத்து வைத்து ஒரு தப்படி நடந்ததுமே ஆழ மான குழிக்குள் விழுந்தார்.

முழு பலத்தையும் திரட்டிக் கொண்டு, கிர்கீஸியரின் காதுக்கு எட்ட வேண்டுமென்று சீழ்க்கை அடித்தார், பிறகு உச்சக் குரலில் கத்தினுர்:

'ஓ-கோ-கோ-கோ!'

பதில் வருகிறதா என்று கூர்ந்து கவனித்தார். காற்று தான் முன்னிலும் மூர்க்கமாய் வீசிற்று.

''பயனில்லே! பக்கத்தில் அவர் நின்ருலுங்கூட காதுக்கு எட்டாது!''

குளிர் அவரைத் தாக்கிற்று. காதுகளே மூடும்படி ரோமக் குல்லாவை இழுத்து விட்டுக் கொண்டார். குளிரில் அவர் விரல்கள் மரத்துப் போயின. ஆட்டுத் தோல் கோட்டை இழுத்துக் கெட்டியாய் உடம்பை போர்த்திக் கொண்டு பனி யிலே படுத்துத் தூங்க வேண்டும் போலிருந்தது அவருக்கு. இந்த ஆசையை அடக்கிக் கொண்டு அவர் தொடர்ந்து நடந்து சென்ருர். தூக்கத்தை விரட்டும் பொருட்டு தனக்குத் தானே உரக்கப் பேசிக் கொண்டு நடந்தார். கால் இடறிக் கீழே விழுந்தெழுந்தார், வெண்பனிக் குவியல்களில் அழுந்தி யெழுந்தார். எங்கே செல்கிறேும் என்று தெரியாமலே தொடர்ந்து தடுமாறிச் சென்ருர்.

நீளமான ஆட்டுத்தோல் கோட்டில் இடறிக் கொண்டு விழுந்து விழுந்து எழுந்து நடந்தார். விரைவில் அறவே ஓய்ந்து விட்டார். அவருக்கு மூச்சுத் திணறிற்று, வியர்த்துப் போய் விட்டது. பாறைகளே வந்தடைந்ததும் சற்று ஓய் வெடுக்கலாம், புகை பிடிக்கலாமென்று உட்கார்ந்தார். ஆனுல் அவரது புகையிலேயும் புகைக் குழாயும் சேணப் பைக்குள் இருந்தன, அவரது குதிரை...

''எனக்கு சன்னிக் காய்ச்சலாகவே இருக்கும். எல்லாம் பயங்கரக் கனவாய் இருக்கலாம். சுபாரி என் உயிரைக் காப் பாற்றியது. அதை அங்கே சாக விடக் கூடாது.''

துயரம் தாங்க மாட்டாமல் தலையைக் குலுக்கிக் கொண்டார். பிறகு அவர் வெண்பனியில் ஒரு கை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு எழுந்தார். அவர் முகம் ஜிவுஜிவுத்தது, தலை இலேசாயிருந்தது, கால்கள் வலித்தன.

முடிவில் பொழுது விடிந்தது. மலைகளில் வெயிலாய் இருந்தது, ஆயினும் பனியாற்றிலிருந்து வீசிய காற்று ஜில்லிட்டு வருத்திற்று. நீல வானத்தைப் பின்னணியாய்க் கொண்ட கசகசா மலர்கள் கண்ணைப் பறிக்கும்படி செம்மஞ்சள் நிறத்தில் பிரகாசித்தன.

கிர்கீஸியர்கள் இருவர் குதிரைகளிலிருந்து கீழே இறங்கி பாறையிலே படுத்துறங்கும் மனிதனிடம் சென்று குனிந்து பார்த்தனர்.

''யார் இது? எங்கிருந்து வந்தவராய் இருக்கும்? குதிரையும் துப்பாக்கியும் எங்கே?''—இந்த கேள்விகள் அவர்கள் இருவரின் மனதிலும் எழுந்தன. ஆயினும் கிர்கீஸிய மரபுக்கு ஏற்ப அவர்கள் வியப்புற்றதாய்க் காட்டிக் கொள்ளவில்லை.

இருவரும் மண்டியிட்டு அமர்ந்து கொண்டனர், வாயில் மெல்லும் புகையிலைப் பொட்டலத்தை எடுத்தனர். ஒவ்வொருவரும் ஒரு சிறு கொட்டையளவு புகையிலை எடுத்து வாயில் அடக்கிக் கொண்டு மற்றொருவரை உற்று நோக்கினர். வயது வந்த ஆள் பொறுமையிழந்தவராகவோ இன்னொருவர் விவகாரத்தை அறிந்து கொள்வதில் ஆவல் கொண்டவராகவோ நடந்து கொள்வது கவுரவக் குறைவானது. வாய் பேசாமல் புகையிலையைக் குதப்பிக் கொண்டு சிந்தித்தவாறு அவ்வப்போது எச்சிலைத் துப்பிக் கொண்டு அங்கே உட்கார்ந்திருந்தார்கள்.

மூன்றாவது ஆள் ஒருவர் விரைவில் அங்கே வந்து சேர்ந்தார். உயரமாகவும் ஒல்லியாகவும் இருந்த கிழவர் அவர். உயர் மட்டத்து மலைக் கிராமத்தில் இரவில் தங்கி விட்டு

இங்கே வந்த அவர், கிர்கீஸிய வனத் துறையாளர் கூறிய கதையைக் கேட்டிருந்தார்.

''பனிச் சரிவில் சிக்கிய வனத்துறையாளர்தான் இவர்!'' என்றார் அந்தக் கிழவர். ''உயிருக்கு ஆபத்தின்றி தப்பித்துக் கொண்டு விட்டார். கணவாயில் இவருடைய உடலைத் தேடிப் பிடிப்பதற்குக் கிராமத்திலிருந்து ஆட்கள் புறப்படப் போகிறார்கள். விழித்தெழுங்கள்! வெயிலில் தூங்கக் கூடாது!''

சிரமப்பட்டுதான் கண்களைத் திறந்தார் அப்பா, தலைவலி பொறுக்க முடியவில்லை. காதுகளில் ஏதோ முனகுவது போல் சப்தம் கேட்டது. உணர்வில்லாத கண்களால் அவர் தம் அருகே இருந்த மூவரையும் உற்றுப் பார்த்தார், பிறகு திரும்பவும் படுத்து விட்டார். கிழவர் அவரைத் தூக்கித் தமது குதிரை மீது வைத்து வீட்டுக்குக் கொண்டு வந்து எங்களிடம் ஒப்படைத்தார்.

ஏறத்தாழ ஒரு மாதம் கழிந்தது. அப்பா நல்லபடி ஆகி விட்டார். கடுமையான காய்ச்சலிலிருந்து மீண்டும் உடல் நலமடைந்து எழுகிறவர் எப்போதுமே குதூகலமாகவே காணப்படுவார். நாள் முழுதும் அப்பா மகிழ்ச்சிகரமான மெட்டுகளைச் சீட்டியடித்துக் கொண்டிருந்தார், ஆர்வமாய்ச் சாப்பிட்டார், நன்றாய்த் தூங்கினார், அடிக்கடி சிரித்துக் கொண்டிருந்தார்.

குற்றமிழைத்தவரைப் பார்ப்பது போல் நாங்கள் அவரை உற்று நோக்கினோம்.

''அவர் சிரிப்பதைப் பாரேன்'' என்று நாங்கள் குதிரைக் கொட்டிலுக்குப் பின்னால் ஒன்று கூடும் போது எங்களுக்குள் பேசிக் கொள்வோம். ''சுபாரியை ஏன் கொன்றார்? சுபாரி அவருக்கு என்ன செய்தது?'' என்று கேட்போம்.

ஒரு நாள் அம்மா எங்களுடைய படுக்கைகளை உதறித் தட்டிக் கொண்டு வரும்படி எங்களிடம் சொன்னார். தலையணைகள், போர்வைகள் யாவற்றையும் தூக்கிக் கொண்டு ஒட்டகப்

பயணக் குழுவைப் போல் வரிசையாய் நாங்கள் வெளி முற்றத்துக்குப் புறப்பட்டோம். வெயில் காய்ந்து கொண்டிருந்தது. அடுப்பில் வைத்து எடுத்தால் எப்படியோ அந்த மாதிரி விரைவில் எங்கள் தலையணைகள் சூடாகிவிட்டன. நாங்கள் அவற்றைத் திருப்பிப் போட்டோம். இந்த வேலையைச் சிறப்பாய்ச் செய்திருப்பது யார் என்று பாருங்களென ஒருவருக்கொருவர் கூறி நாங்கள் பெருமையடித்துக் கொண்டோம்.

''என்னுடையதுதான் அதிகமாய் சூடாகியிருக்கிறது!'' என்று கூவினுள் நத்தாஷா. ''உட்கார்ந்து பாருங்கள், உடனே குதித்தெழுவீர்கள்!'' என்று சொல்லித் தலையணை மீது உட்கார்ந்து, உடனே குதித்தெழுந்து, எங்களையும் அதேபோல் செய்து பார்க்கும்படிச் சொன்னுள் அவள்.

''என்னுடைய தலையணையை நான் கம்பால் தட்டி எல்லாக் கிருமிகளையும் விரட்டியடிக்கப் போகிறேன்.''

எல்லோரும் கம்புகள் கொண்டு தலையணைகளைத் தட்ட ஆரம்பித்தோம்.

''இனி இதிலிருந்து ஒரு தூசி கூட எழுப்பமுடியாது உன்னுல்.''

''இதோ எழுப்பிக் காட்டுகிறேன் பார்!'' என்று நான் என்னுடைய கம்பை வீசினேன்.

கம்பு தலையணையில் பட்ட நேரத்தில் யூலியா அலறினுள்.

''கண்ணில்லையா உனக்கு? நேரே என் தலையில் அடித்து விட்டாய்....''

''யாருக்கும் தெரியாமல் பின்பக்கமாய் ஏன் வந்தாய்?''

''அதெப்படி நீ கம்பை அந்த மாதிரி வீசலாம்?''

''நீ வந்ததைப் பார்க்கவில்லை.''

''பார்க்கவில்லையாமே! பார்க்காமல் கம்பை வீசக் கூடாது.''

''இரத்தம் வருகிறதே, என்ன செய்யலாம்? தலையை

நிமிர்த்திக் கொள், இல்லையேல் இரத்தம் அதிகமாய் வெளியே வரும்.''

இரத்தத்தைப் பார்த்ததும் யூலியா அழ ஆரம்பித்தாள்.

அந்த நேரத்தில் சோன்யா அவசரமாய் ஓடி வந்தாள்.

''அழுதது போதும்! சுபாரியைப் பற்றிய செய்தி கிடைத்திருக்கிறது. கசாக்கு வனத்துறையாளர் ஒருவர் வந்திருக்கிறார், வாயில் முகப்பில் இருக்கிறார், சுபாரிக்கு நேர்ந்ததைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்'' என்றாள் அவள்.

இதைச் சொல்லி விட்டு நத்தாஷாவை இழுத்துக் கொண்டு திரும்பி ஓடினாள் அவள்.

சுபாரியைப் பற்றிய செய்தியா? என்ன செய்தியாய் இருக்கும்?

நான் தோளை உலுக்கிக் கொண்டேன்.

யூலியா கண்களையும் மூக்கையும் சட்டையின் முனையால் துடைத்துக் கொண்டாள். நடந்தது குறித்து எனக்கு வருத்தமாய் இருந்தது, அவளிடம் நான் மன்னிப்பு கேட்டுக் கொண்டேன். நாங்கள் சேர்த்தியாகி விட்டோம். உடனே வாயில் முகப்புக்கு ஓடினோம்.

வந்திருந்தவர் அதற்குள் கதையில் ஒரு பகுதியைக் கூறி முடித்து விட்டார். தொப்பியைத் தலைக்குப் பின்னால் தள்ளி விட்டிருந்தார், துப்பாக்கியைத் தமது முழங்கால்களுக்கிடையே தரையில் நிற்க வைத்திருந்தார். பரபரப்புற்றவராய்க் கைகளை ஆட்டி வீசிப் பேசினார். அவர் கூறியதை எல்லோரும் உருக்கமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் அங்கே ஓடி வந்ததும்: ''சப்தம் செய்யாதீர்கள், சுபாரியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்'' என்று எங்களிடம் கூறினார்கள்.

''தைரியத்தை வரவழைத்துக் கொள்வதற்காக நான் கொஞ்சம் வோத்கா அருந்தி விட்டு, கோட்டைக் கழற்றினேன். பிறகு அவர்களிடம் சொன்னேன்: 'சரி, நீங்கள் வேண்டுமானால் உங்கள் சைத்தானை நினைத்துத் திகிலடையுங்கள்,



நான் எந்தச் சைத்தானையும் மதிப்பவனல்ல. சைத்தான் என்பதாய் எதுவும் இல்லை. என் கைகளுக்கு அடியில் மார்பில் கயிற்றைக் கட்டி என்னைக் கீழே இறக்குங்கள். கவலைப்படாதீர்கள், நான் போய்ச் சேணத்தையும் பைகளையும் எடுத்து வருகிறேன்.' இதைக் கேட்டு அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள், ஏனெனில் இங்கே கீழே இறங்க கிர்கீஸியப் பழக்கங்கள் அவர்களை அனுமதிக்கவில்லை. என்மீது கயிற்றைக் கட்டி என்னை மலைப் பிளவினுள் இறக்கினார்கள். பனிக் கட்டியில் நான் சரிந்து சென்றேன், செங்குத்தாய் அது கீழே சென்றது. கயிற்றை விட்டார்களானால், என் கதி அதோகதிதான் என்று நினைத்துக் கொண்டேன்! கீழே பார்க்காமல் இருப்பதுதான் மேல், எப்படியும் தரை கண்ணுக்குத் தெரியவில்லை. தரை தெரியாத படுகுழி அது. கொக்கியில் மாட்டிய புழு



போல் நான் கயிற்றிலே தொங்கினேன். நான் கீழே போய்க் கொண்டிருந்தது திடுமென நின்று விட்டது! ஒரு பெரிய பனிக்கட்டி விளிம்பிலே வந்து நின்றேன். அங்கே சுற்றிலும் பார்த்தேன். என்ன நினைக்கிறீர்கள்? ஏதோ கனைக்கும் சப்தம் கேட்டது. பிறகு தான் அது என் கண்ணில் பட்டது. பனிச் சுவருடன் ஒட்டிக் கொண்டு நின்றிருந்தது. மேலெங்கும் உறை பனி மூடி வெள்ளை வெளேரென்று இருந்தது!'' கசாக்கு தலையை ஆட்டிக் கொண்டார்.

உணர்ச்சி மேலிட்டவராய் அவர் தொடர்ந்து மேலும் கூறினர்:

''அது ஒரு குதிரை தான், எவ்வளவு கெட்டிக்காரக் குதிரை! ஆடாமல் அசையாமல் இவ்வளவு நேரமும் அங்கே நின்றிருந்தது. விழிகள் மட்டும்தான் அசைந்தன. அங்கே அதனருகே நின்று நான் என்னுள் கூறிக் கொண்டேன்: ''இக்கட்டான நிலையாய் இருக்கிறதே! குதிரையைக் காப்பாற்றுவது எப்படி? பிறகு கயிற்றை மூன்று தரம் ஆட்டிக் குலுக்கினேன். நாங்கள் பேசி ஒத்துக் கொண்ட குறி அறிவிப்பு அது. அவர்கள் என்னை மேலே தூக்க ஆரம்பித்தார்கள்.''

சோன்யா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். யூலியா சட்டை முனையை முகத்தில் வைத்து அழுத்திக் கொண்டாள். நத்தாஷா நேரே அவரிடம் சென்று வெயிலில் பழுப்பேறிய தனது சிறு கையால் அவர் முழங்காலில் தட்டி முணுமுணுக்கும் குரலில் கேட்டாள்:

''அதன் பிறகு என்ன ஆயிற்று?''

''நான் மேலே வந்ததும் என்னை எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள். 'சேணத்தையும் பையையும் எடுத்து வரவில்லையே ஏன்?' என்று கேட்டார்கள். எனக்கு அப்போது கோபம் கோபமாய் வந்தது. 'அங்கே உயிருள்ள குதிரை ஒடுங்கிக் கொண்டு நிற்கிறது, இங்கே நீங்கள் சேணத்தைப் பற்றி விசாரிக்கிறீர்களே' என்றேன் நான். 'எப்படியாவது நாம் அந்தக் குதிரையைக் காப்பாற்றியாக வேண்டும்!'

ஆனால் அவர்கள் தலையை ஆட்டியவாறு 'ஐயோ, அது எப்படி முடியும்? சாத்தியமான காரியமல்ல. குதிரை விழுந்ததென்றால், அது அங்கே சாக வேண்டியதுதான். மனிதனுடைய உயிர் குதிரையினுடையதைக் காட்டிலும் உயர் மதிப்புக்குரியது' என்றார்கள். அவர்கள் விடாமல் இதையே சொன்னார்கள், நானும் விட்டுக் கொடுக்கவில்லை. இறுதியில் கிர்கீஸியர்களில் ஒருவர் என்னுடன் கீழே வருவதாய்க் கூறினார். நாங்கள் சில பலகைகளையும் கம்பளங்களையும் எடுத்துக் கொண்டு கீழே இறங்கினோம். குதிரையைக் கண்டுபிடிப்பது சுலபமாய் இருக்கவில்லை. அது முனகிக் கனைத்திராவிடில் நாங்கள் தாண்டிக் கீழே போயிருப்போம். அப்படி அது வெண்பனி போல் வெள்ளையாய் இருந்தது.''

கதையை இங்கே நிறுத்தி விட்டு அவர் தமது புகையிலைப் பையை வெளியே எடுத்து தமக்கு ஒரு சிகரெட்டு சுருட்டித் தயாரித்துக் கொள்ளப் போனார். ஆனால் முடியவில்லை அவரால், ஏனென்றால் பொறுத்திருக்க மாட்டாமல் சுற்றிலுமிருந்து நாங்கள் கேள்விகளை அடுக்கிச் சென்றோம்.

''குதிரையை மேலே கொண்டு வந்தீர்களா?''

''எப்படிக் கொண்டு வர முடிந்தது?''

''மெய்யாகவே அது உயிரோடுதான் இருக்கிறதா?''

''உண்மையைச் சொல்வதெனில் அது உயிர் பிழைக்குமென்று நான் நம்பவே இல்லை. நாங்கள் ஒருவாறு அதை மேலே கொண்டு வந்து சேர்த்தோம். ஒட்டுக் கம்பளிகளை அதன் மேல் சுற்றி, அதன் வயிற்றுக்கு அடியில் பலகைகளை வைத்துக் கயிறுகளால் அதனுடன் சேர்த்துக் கட்டினோம். பிறகு மேலே சென்று எல்லோருமாய் அதை இழுத்தோம். சிறிது சிறிதாய் இழுத்து அதை மேலே கொண்டு வந்து சேர்த்து விட்டோம். கயிறுகளை அவிழ்த்தெடுத்தேன், அந்தப் பெரிய கம்பளி மூட்டையிலிருந்து ஆவி எழுந்தது. கதகதப்பாகி சுபாரிக்கு வியர்க்கத் தொடங்கிவிட்டது. அதன் ரோமம் எல்லாம் சுருள்களாகி விட்டது. நன்றாய் நனைந்து போய்,

தலையைத் தூக்குவதற்குக் கூட பலமில்லாததாய் முனகிக் கொண்டிருந்தது. நான் வோட்கா புட்டியை எடுத்து அப்படியே பூராவையும் அதன் தொண்டையினுள் ஊற்றினேன். குடித்து விட்டுத் தலையை மட்டும் ஆட்டிற்று அது. பிறகு திரும்பவும் அதன் மீது போர்த்தினேம். முனகிக் கொண்டு அங்கே அது படுத்துக் கிடந்தது. அது சாகவே போகிறது என்று கிர்கீஸியர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். 'ஒன்றும் பயனில்லை, எப்படியும் பிழைக்காது இனி' என்ருர்கள். ஆனல் நான் விட்டுக் கொடுக்கவில்லை. 'கொஞ்சம் அவகாசம் கொடுங்கள், மீண்டும் நல்லபடி மூச்சுவிடும் பாருங்களேன்' என்றேன். நான் சொன்னபடியே ஆயிற்று. அது பிழைத்துக் கொண்டு விட்டது.''

கசாக்கு சிரித்துக் கொண்டார். நத்தாஷா திரும்பவும் அவர் முழங்காலில் தட்டினுள்.

ஆரம்பத்தில் சுபாரியால் தலையை உயர்த்தக் கூட முடியவில்லை. எதுவும் தின்ன மறுத்து விட்டது. ஆனல் உடம்பு உலர்ந்ததும் அதற்கு கடும் பசி எடுத்தது. கிர்கீஸியர்கள் அதற்கு ஓட்ஸ் தந்தார்கள். பிறகு வெண்பனியை ஒரு பானையில் போட்டுத் தீயில் வைத்துச் சூடாக்கி அந்த வெதுவெதுப்பான நீரைக் கொடுத்தார்கள். பிறகு அதைத் தூக்கி நிற்கச் செய்தார்கள். அதனல் நடக்க முடியவில்லை, அடிக்கொருதரம் விழுந்து கொண்டிருந்தது. சேணத்தையும் சேணப்பைகளையும் அதன் மீதிருந்து அகற்றி விட்டு இருபுறமிருந்தும் அதைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள். மெதுவாய் அது மலையிலிருந்து கீழே நடக்கத் தொடங்கிற்று. பத்துப் பதினைந்து தப்படி நடந்ததும் திரும்பவும் கீழே விழுந்து விடும். சற்று நேரம் படுத்திருக்கும்படி விட்டபின் மீண்டும் அதைத் தூக்கி நிறுத்துவார்கள். பனியாற்றை விட்டு நெடுந்தூரம் வந்து விட்டார்கள். விரைவில் அவர்கள் முகாமை வந்தடைந்து விடுவார்கள். ஆனல் கிர்கீஸியர்கள் களைத்து விட்டார்கள்.

குதிரையை அங்கே பாதையில் விட்டுச் செல்வதென்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

சுபாரியின் உயிர் திரும்பவும் மயிரிழையில் தொங்கிற்று. இரவில் அது திறந்த வெளியில் படுத்துக் கிடந்தால், நிச்சயம் ஓநாய்களுக்கு இரையாகும்படி நேரும்.

அப்போது மரங்களுக்கிடையே விளக்கு ஒளி தெரிந்தது, நாய் ஒன்று குரைத்தது.

உதவி நெருங்கி வந்து கொண்டிருந்தது.

''குதிரை உயிரோடு இருக்கிறது!''

''மெய்தானா? உயிரோடா இருக்கிறது?'' என்று வந்தவர்கள் கூவிக் கேட்டார்கள்.

''ஆமாம், அதன் சமாதியிலிருந்து அதைக் கொண்டு வந்துவிட்டோம்.''

தடுமாறிக் கொண்டு மேலும் நூறு தப்படி நடந்து முதலாவது கூடாரத்தை அடைந்ததும் சுபாரி ஓய்ந்து விழுந்து விட்டது.

கணப்புத் தீயின் முன்னால் மனிதர்கள் அப்படியும் இப்படியும் ஓடினர். பரட்டை நாய்க் குட்டிகள் ஓடி வந்து குதிரையை முகர்ந்து பார்த்தன. பெண் குதிரைகள் கனைத்துக் கொண்டு பாய்ந்தோடின.

ஆனால் புல் தரையிலே சுபாரி அசையாமல் படுத்துக் கிடந்தது, கரகரப்பான குரலில் முனகிற்று, சிரமப்பட்டு மூச்சு விட்டது.

மலையில் அந்த முகாமில் சுபாரி ஒரு மாதத்திற்கு மேல் தங்கியிருந்தது. விரைவில் அவ்வப்போது அதைப் பற்றிய செய்திகள் வரலாயின. சுபாரி தானாகவே எழுந்து நிற்கிறது, சுபாரி மெதுவாய்த் தானாகவே நடக்கிறது, இப்போதுதான் முதல் முறையாய் அது பலக்கக் கனைத்தது என்று எங்களுக்குச் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

நோயின் மீது சுபாரி கண்ட இந்த ஒவ்வொரு வெற்றியையும் கேட்டு நாங்கள் கூச்சலிட்டு மகிழ்வது வழக்கம்.

''நாளைக்கு சுபாரியை வீட்டுக்கு அழைத்து வருவார்கள்'' என்று ஒரு நாள் மதிய உணவு அருந்தும் போது எங்களுக்குத் தெரிவித்தார்கள்.

''கொட்டிலை நாங்கள் தயார் செய்து வைப்போம்'' என்றுள் சோன்யா இச்செய்தியைக் கேட்டதும்.

அப்பா அவளைப் பார்த்து வருத்தத்துடன் புன்னகை புரிந்து கொண்டார்.

சில நாட்களுக்கு முன்பு அவர் காடுகளைச் சுற்றி மேற்பார்வையிட்டு வருவதற்காக போயிருந்த போது அப்படியே சுபாரியையும் பார்த்து விட்டு வந்திருந்தார்.

''அந்த குதிரையில் இப்போது ஏதும் எஞ்சியிருக்கவில்லை. அது எனது குற்றமுள்ள நெஞ்சாய்க் காட்சியளிக்கிறது'' என்றுர் அப்பா.

பிறகு நத்தாஷா இது பற்றி எல்லோரையும் கேள்விகள் கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தாள்.

''சுபாரிக்கு என்ன நேர்ந்தது? அதற்கு வந்திருப்பது என்ன வியாதி? ஏதோ நெஞ்சு என்று அப்பா சொன்னதன் அர்த்தம் என்ன?''

''குற்றமுள்ள நெஞ்சு'' என்றுள் யூலியா. சுபாரியின் நுரையீரல்களில் ஒன்று நன்றுயில்லை, கடுங்குளிரால் தாக்கப்பட்டபோது அது வீணுகிவிட்டது. அதற்கு இரண்டு நுரையீரல்கள் இருக்க வேண்டும் இல்லையா? ஆனுல் இப்போது அதற்கு ஒன்றுதான் இருக்கிறது.''

''குற்றமுள்ள நெஞ்சாமே அதற்கு, அப்படி என்றுல் என்ன?''

''அது என்ன—'குற்றமுள்ள நெஞ்சு'? பிறத்தியார் சொன்னதை நீ ஏன் திருப்பிக் கூறிக் கொண்டிருக்கிறுய்? சோன்யா! குற்றமுள்ள நெஞ்சு என்பது ஒரு வியாதியா?''

''ஆமாம், வியாதிதான் அது. மிகவும் கடுமையானது.''

''சுபாரிக்கா வந்திருக்கிறது அது?''

''யாருக்கு?''

''சுபாரிக்கு''

''சீச்சீ! முட்டாள் பெண்களாய் இருக்கிறீர்களே!''

சோன்யா கோபமாய் என் பக்கம் திரும்பி, நத்தாஷாவைக் குறிப்பிடும் முறையில் சொன்னாள்:

''பெரியவர்களுடைய உரையாடலில் சிறு கிருமிகள் புகுவதால் வரும் விளைவு இது.''

சுபாரி குறித்து எப்போதுமே நாங்கள் பெருமைப் பட்டு வந்தோம்.

இப்போது அது வீட்டுக்குத் திரும்பி வருவது தெரிந்ததும் அதைத் தக்கபடி வரவேற்பதென நாங்கள் முடிவு செய்தோம்.

''எங்கள் குதிரை மூன்று நாட்கள் வரை பனியாற்றுக் கணவாயில் இருந்தது அதற்கு ஒன்றும் ஆகவில்லை!'' என்று கிராமத்தில் பெருமையாய்க் கூறிச் சென்றோம். ''நுரையீரல் ஒன்று வீணாகி விட்டது, அவ்வளவுதான், விரும்பினால் நீங்களும் எங்களுடன் வந்து அதை வரவேற்கலாம்.''

மறுநாள் காலை கிராமச் சிறுவர் சிறுமிகளில் பலரும் கூட்டமாய் எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

சிரித்து மகிழ்ந்து கொண்டும் பாட்டு பாடிக் கொண்டும் சென்றோம். வழியில் அவர்களுக்கு நாங்கள் சுபாரியைப் பற்றிக் கூறினோம், அது எவ்வளவு சிறப்பான குதிரை என்று விளக்கினோம்.

''பிற குதிரைகளால் சமாளிக்கவே முடியாது, ஆனால் இது சிரமமின்றி செய்து முடித்துவிடும்! நீங்களே நேரில் பார்க்கப் போகிறீர்கள்!''

நான்கு கிலோமீட்டர் தொலைவு நடந்தோம். இரு மருங்கும் மரங்களைக் கொண்ட சாலையின் முடிவை வந்தடைந்தோம். எங்களது தண்ணீர் குடுவையிலிருந்து தண்ணீர் குடித்தோம் (உண்மையில் எங்களில் யாருக்கும் தாகம் எடுக்கவில்லை). பிறகு திரும்பி வீட்டை நோக்கி நடந்தோம்.

சாலையில் பலரும் செல்லக் கண்டோம். ஐந்திலிருந்து பத்து பேர் வரை அடங்கிய கிர்கீஸியக் குதிரைச் சவாரிக் குழுக்கள் சென்றன. குதிரையில் ஏறி வேறு பலரும் போய்க் கொண்டிருந்தார்கள். பெரிய பெரிய வண்டிகள் கற்களில் தடதடத்துச் சென்றன. கிழக் குதிரைகளிலும் விரைந்து செல்லக் கூடிய குதிரையிலும் சவாரி செய்தார்கள் சிலர், எருதுகள் மீதும் பசுக்கள் மீதுங்கூட சவாரி செய்தார்கள். கிர்கீஸிய ஆடவர்கள் எலும்பும் தோலுமான குதிரைகளில் செல்ல, அவர்களது மனைவியர் பசுக்கள் மீது பக்கத்தில் சென்றதை அடிக்கடி கண்டோம். மனைவியின் கையில் குழந்தை இருக்கும், பசுவின் கன்று கயிற்றால் பசுவின் வாலுடன் கட்டப்பட்டிருக்கும். குழந்தையும் கன்றும் போட்டி போட்டுக் கொண்டு தொண்டை கிழியக் கத்த, இந்த பயணக் குழு விறுவிறுப்பாய்ப் போய்க் கொண்டிருக்கும்.

சாலையில் சென்றவர்கள் ஒவ்வொருவரையும் நாங்கள். உற்றுப் பார்த்தோம். குதிரைகளை அழைத்துச் சென்றோரும் இருந்தார்கள். குதிரைகள் பின்னால் சென்றோரும் இருந்தார்கள். ஆனால் கண்ணைக் கவரும் எங்கள் சுபாரியை எங்குமே காண முடியவில்லை.

''இன்று அதை அழைத்து வர மாட்டார்கள் போல் தெரிகிறது'' என்று இறுதியில் நாங்கள் முடிவு செய்து கொண்டு, வீட்டுக்குத் திரும்பினோம்.

''இன்று அவர்கள் அதை அழைத்து வரப் போவதில்லை'' என்று கூவிக் கொண்டு வேலிக் கதவைத் திறந்து வெளிமுற்றத்துக்குள் சென்றோம் நாங்கள்.

''எதை? சுபாரியையா? முன்பே இங்கு அது வந்து சேர்ந்து விட்டதே. நீங்கள் அதைப் பார்க்காமலே நடந்திருக்கிறீர்கள்.''

''என்ன?!.. வந்து சேர்ந்து விட்டதா? அது எப்படி நாங்கள் அதைப் பார்க்கத் தவறியிருக்க முடியும்? எங்கே அது? கொட்டிலிலா?''

எங்களுக்கு ஏற்பட்ட பரபரப்பில் எங்களால் அந்தக் கனமான தாழ்ப்பாளைத் திறக்க முடியவில்லை. வேகமாகத் தள்ளினோம், இழுத்தோம், ஒருவருக்கொருவர் முரணுகச் செயல்பட்டுக் குழப்படி செய்தோம்.

''இரு நான் திறக்கிறேன்!''

''இல்லை, அப்படித் திறக்கமுடியாது இதை!''

''சும்மாயிருங்கள்! என்னிடம் விடுங்கள்!''

சுபாரியைப் பார்க்க வேண்டுமென்று நாங்கள் அப்படித் துடி துடித்தோம். அதைத் தடவிக் கொடுக்க விரும்பினோம்; சர்க்கரைக் கட்டியைக் கொடுத்து, வெல்வெட் போன்ற மிருதுவான உதடுகளால் அது எங்கள் கையிலிருந்து எடுத்துக் கொள்வதைப் பார்க்க ஆசைப்பட்டோம்.

நாங்கள் சர்க்கரைக் கட்டி எடுத்து வருகிறோம் என்று ஊகித்துக் கொண்டு ஆனந்தமாய் கனைத்தவாறு துள்ளிக் குதிக்கும்.

முடிவில் நாங்கள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றோம்.

அங்கே உலர் புல்லின் மேல் குச்சியாய் இளைத்துப் போய், பார்க்கப் பரிதாபமான எலும்புக் கூடு போன்ற நோஞ்சான் குதிரை ஒன்று படுத்துக் கிடந்தது. சிரமப்பட்டு எங்கள் பக்கம் தலையைத் திருப்பிற்று அது. கனைப்பதற்கு பதில் கர கரப்பான குரலில் முனகி விட்டு இரும ஆரம்பித்தது.

''சுபாரியா இது?'' என்று துயரம் தொண்டையை அடைக்க நாங்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் முணு முணுத்துக் கொண்டோம்.

''பாவம், சுபாரி!..''

''எப்படி அதனால் இந்த நிலையை அடைய முடிந்தது?''

''ஒன்றும் கெட்டு விடவில்லை! முன்னிலும் இப்போது அது நன்றாகவே இருக்கிறது! எவ்வளவு சாதுவாய் இருக் கிறது, பாருங்கள்!.. சமர்த்துக் குதிரை!''

''அருமையிலும் அருமையான குதிரை'' என்று கண்

களில் பொங்கி எழுந்த கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிய வாறு கூறினுள் நத்தாஷா.

''இந்தா, சுபாரி! இதைத் தின்று பாரேன்!'' என்று யூலியா அதனுடன் கொஞ்சினுள்.

சோன்யாவும் நானும் நெடு நேரம் மௌனமாகவே இருந்தோம். முடிவில் வாயைத் திறந்ததும் நான் கூறியது இதுதான:

'' 'குற்றமுள்ள நெஞ்சு' என்பதன் அர்த்தம் இப்போது தான் தெரிகிறது... இப்படி உடல் நலமின்றி இருக்கும் இதைத் துறப்பதற்கு யாருக்குதான் மனம் வரும்?''

''ஆமாம்'' என்று சோன்யா பெருமூச்சு விட்டாள். பிறகு வைராக்கியமான குரலில் மேலும் சொன்னுள்: ''இதைத் துறக்கலாமென யாரும் நினைக்க நாம் அனுமதிக்கப் போவதில்லை!''

நோயுற்றிருந்த குதிரையை விட்டு மாலை வரை நாங்கள் நகரவே இல்லை. அதனருகே அமர்ந்து அதைத் தட்டிக் கொடுத்தோம்; உரக்கப் பேசினுல் அதற்குக் களைப்பாகி விடுமென அஞ்சியது போல் முணுமுணுக்கும் குரலில் பேசிக் கொண்டிருந்தோம். தேநீர் அருந்துவதற்காக நாங்கள் வீட்டுக்குள் வந்தோம். நாங்கள் மௌனமாயிருந்தோம், வைராக்கிய முடிவுக்கு வந்தவர்களாய்த் தோன்றினேம்.

''சரி, எப்படி இருக்கிறது?'' என்று எங்களைக் கேட்டார்கள்.

''நன்ருய் இருக்கிறது—அருமையிலும் அருமையாய், சமர்த்தாய் இருக்கிறது.''

''நீங்கள் கவனிக்கவில்லையா?''

''எதை? என்றையும் விட நன்ருகவே இருக்கிறது.''

''ஆமாம், முன்னிலும் இப்போது அதை எனக்கு அதிகம் பிடித்திருக்கிறது.''

''எனக்கும் தான்!''

''எனக்குங்கூட!''

எங்கள் நால்வர் குரலும் இசைவாய் ஒருங்கே ஒலித்தன. யாரும் கொஞ்சங்கூட தயங்கவில்லை. சுபாரிக்கு இப்போது எங்களது முழு ஆதரவும் தேவைப்பட்டது. ஆனால் அது கவலைப்பட வேண்டியதில்லை, ஒருபோதும் நாங்கள் அதைக் கைவிட மாட்டோம்.

கிளர்ச்சியுற்ற எங்களது முகங்களை அம்மா உற்றுப் பார்த்தார்.

''என் பெண்கள் அற்புதமானவர்கள்!'' என்றார்.

அன்று அந்தியில் அம்மாவுக்கும் அப்பாவுக்குமிடையே பலத்த வாக்குவாதம் மூண்டு விட்டது. உணர்ச்சி மேலிட்டவர்களாய் இருவரும் உரக்கப் பேசினார்கள். அவர்களது குரல் வீடு முழுதும் ஒலித்தது.

''நாம் அதைத் துறக்கலாகாது, யாரிடமும் அதைக் கொடுக்கலாகாது!''—மூடிய கதவுக்குப் பின்னாலிருந்து அம்மாவின் குரல் கணீரென ஒலித்தது.

''நிலைமையை நீ புரிந்து கொள்ளவில்லை! மடியப் போகும் குதிரை அது!''

''அதனால் என்ன? உயிர் பிழைக்க முடியாது, சாகவே வேண்டுமென்றால், சாகட்டும், அது பிழைத்து எழுந்தாலும் எழலாம். உன் உயிரைக் காப்பாற்றியது, இப்போது அதன் கடைசி காலத்தை அமைதியாகவும் குறைவின்றியும் கழிக்க அதற்கு உரிமை உண்டு.''

''ஆனால் என் வேலைக்கு எனக்கு ஒரு நல்ல குதிரை அல்லவா வேண்டும்? ஓய்வு ஊதியக் கிழடு எதற்கு எனக்கு?''

''நல்லது, நீ வேறொரு குதிரையை வாங்கிக் கொள். சுபாரி பெண்களிடம் இருக்கட்டும். அவர்கள் உயிர் பிழைக்க வைத்தார்களானால், அது அவர்களுக்கு உரியதாய் இருக்கட்டும்.''

இதைக் கேட்டதும் சோன்யா கை தட்டிக் கூச்சலிட்டாள்:

''அப்படிச் சொல்லு! அம்மா, உன்னை வாழ்த்துகிறோம்!

ஆனந்தம் தாங்காமல் ஆடிய அவள் கதவில் மோதினாள், கதவு திறந்து கொள்ளவே, நாங்கள் எல்லோரும் சிரித்துக் கொண்டு அறைக்குள் போய் விழுந்தோம்.

மறு நாள் காலையில் நாங்கள் சுபாரியிடம் சென்றோம். முந்திய இரவில் நாங்கள் அதை விட்டுச் சென்றிருந்த அதே நிலையில் தான் இருந்தது. உலர் புல் நசுக்கப்பட்டு இறைந்து கிடந்தது. அதன் நெற்றி முடிகளிலும் பிடரியிலும் புற்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. எழுந்திருப்பதற்காக அது. முயற்சி செய்து பார்த்திருக்க வேண்டும். நேற்றைய நெடுந் தூரப் பயணம் அதை அடியோடு பலமிழக்கச் செய்து விட்டதாய்த் தெரிந்தது.

நாங்கள் அதனிடம் சென்றதும் திரும்பவும் அது எழுதிருக்க முயன்றது. முன்னங்கால்களை நீட்டிக் கொண்டு பெரு முயற்சி செய்து சற்றே எழுந்தது.

ஆனால் முடியவில்லை.

பின்னங் கால்களும் பிட்டமும் கீழ்ப்படிய மறுத்தன. சுபாரி தடாரெனக் கீழே விழுந்து பெருமூச்சு விட்டுக் கால்களை உதைத்துக் கொண்டது. பிறகு உலுக்கிக் கொண்டு திரும்பவும் எழுந்தது.

''எழுந்து நிற்கப் போகிறது! வாருங்கள், அதற்கு உதவி செய்வோம்!''

சோன்யா அதன் விலாவில் தோளை வைத்துத் தூக்கினாள். நான் அவளுக்குத் துணை புரிந்தேன்.

வண்டிக்காரர் ஒருவர் கீழே விழுந்துவிட்ட தமது குதிரையை இவ்விதம் தூக்கியதை நாங்கள் பார்த்திருந்தோம்.

''எழுந்திரு! எழுந்திரு!''

யூலியாவும் நத்தாஷாவும் சுபாரியின் விறைப்பான கால்களைப் பிடித்து தக்க இடத்தில் ஊன்றி நிற்கச் செய்ய முயன்றனர்.

''இதோ நிற்கிறதே! சுபாரி! நில் நேராய்!''

''ஐயோ!''

''நீ ஏன் கத்துகிறுய்?''

''ஐயோ! உன் காலாய் இருந்தால் தெரியும்...''

கால்களை அகற்றி வைத்துக் கொண்டு நின்றது சுபாரி. வலி பொறுக்க முடியாமல் சோன்யா முகத்தைச் சுளித்துக் கொண்டு தவித்தாள். சுபாரி தனது குளம்பு ஒன்றை அவளுடைய வெறும் பாதத்தின் மீது வைத்துக் கொண்டு நின்றது.

சோன்யாவுக்கு உதவுவதற்காக நான் ஓடினேன்.

''இல்லை, அப்படிச் செய்யாதே! சுபாரியை அசைக்காதே. காலை மட்டும் கொஞ்சம் தூக்கு. அப்படிதான்!''

அவளுடைய காலில் சிராய்ப்புக் காயம் பெரிதாகவே இருந்தது.

''ஒன்றுமில்லை ஆறிப் போய்விடும்'' என்றுள் அவள்.

நத்தாஷா கொட்டிலின் மூலையில் கிடந்த துண்டுக் காகிதத்தை எடுத்து வந்தாள். அவள் அதில் எச்சிலைத் துப்பி காகிதத்தை சோன்யாவின் பாதத்தில் ஒட்டினுள்.

''இல்லாவிட்டால் காயத்தின் மீது ஈ உட்காரும்'' என்று அனுபவம் வாய்ந்த டாக்டரின் குரலில் அவள் விளக்கம் கூறினுள்.

வேலிக்கு அப்பால் புல்வெளிக்குச் சென்று மேய்வதற்கு சுபாரி பலம் பெறும் வரையில் அதற்கு நாங்கள் புல் அறுத்துக் கொண்டு வந்து தந்தோம். கொட்டிலுக்கு வெளியே அது அசையாமல் வெயிலில் படுத்திருந்தது. அவ்வப்போது புதிதாக நாங்கள் பசும்புல் கொண்டு வந்து போட்டு, வாடாத புல் எந்நேரமும் அதற்குப் பக்கத்தில் இருக்கும்படி பார்த்துக் கொண்டோம். அதோடு அதற்குப் பிடித்தமான ஓட்ஸ், ரொட்டித் துண்டு, சர்க்கரை கட்டி முதலான வற்றைத் தேடி எடுத்து வந்து தந்தோம். பசுவுக்குத் தீனி தயார் செய்யப்பட்ட போது, தவருமல் சுபாரிக்காக நாங்கள் கொஞ்சம் தவிடு அல்லது பீட் கிழங்குகளைச் சந்தடி செய்யாமல் எடுத்துச் செல்வோம். காய்ந்த குளோவர் புல்லை நறுக்கி



அதைச் சூடான கஞ்சியில் சேர்த்து உப்பிட்டு எங்களுடைய நோயாளிக்கு ஊட்டுவோம்.

நெடு நாட்களுக்கு சுபாரி பார்க்கச் சகிக்காத நிலையில் தான் இருந்து வந்தது. ஆனால் எங்கள் கண்களுக்கு அது எப்போதும் அழகாகவே இருந்தது.

காலையில் நாங்கள் அதை பிரஷ்ஷால் தேய்த்து முடிகளை வாரிவிட்டு பிடரியையும் நெற்றி முடிகளையும் வாலையும் சடைகளாய்ப் பின்னினோம். ஒவ்வொரு சடையிலும் பளிச்சி டும் ரிப்பனைக் கட்டினோம். நத்தாஷா மணிக் கணக்காய் அதனுடன் இருந்து, அதன் பிடரி முடிகளைச் சடைகளாய்ப் பின்னியவாறு அதனுடன் பேசிக் கொண்டிருந்தாள். அவளு டைய குரலையும் சிரிப்பையும் கேட்டு சுபாரி மகிழ்ந்து கொள் ளும். அது விலாப் புறமாய்ப் படுத்திருக்கும், அதன் பெரிய தலை அவளுடைய வயிறு அளவுக்கு இருக்கும். சில நேரம் அவள் குனிந்து கொண்டு அதன் காதுக்குள் ஏதோ இரகசியம் சொல்வாள். சுபாரி வேகமாய்த் தலையை ஆட்டும். நத்தாஷா வாய்விட்டுச் சிரித்து விட்டுக் கூறுவாள்:

''மெய்தான், நான் சொன்னது மெய்தான்! நீ ஏன் தலையை ஆட்டுகிறாய்? நம்பவில்லையா நீ?''

எந்நேரமும் நாங்கள் அதற்கு அருகே நின்று அதனுடன் பேசிக் கொண்டும், அதற்கு ஏதாவது வேலை செய்து கொண்டும் இருந்தோம். எப்போதாவது அதிக நேரம் நாங்கள் அதை விட்டு விலகிச் செல்ல நேர்ந்ததும், அது அமைதியிழந்து, சிரமப்பட்டுக் கீச்சுக் குரலில் கனைக்கும், விரைவில் இந்தக் கனைப்பு இருமலாய் மாறிவிடும். எங்களுக்கும் அதன் அருகே இருக்கையில் தான் மகிழ்ச்சியாக இருந்தது. ஆகவே படிக்கவேண்டிய நேரத்திலுங்கூட நாங்கள் வெளியே வந்து அதன் அருகே அமர்ந்து படிக்க ஆரம்பித்தோம்.

''படுக்கைகளையுங்கூட அங்கேயே கொண்டு போய்ப் போட்டுக் கொண்டு கொட்டிலிலேயே நீங்கள் வசிப்பது தானே'' என்றார்கள் எங்கள் பெற்றோர்.

எங்களுடைய முயற்சிகள் வீணாகிவிடவில்லை. நாளுக்கு நாள் சுபாரியின் நிலை மேம்பட்டு வந்தது. ஆரம்பத்தில் அது எச்சரிக்கையுடன் அடிமேல் அடி வைத்து வெளிமுற்றத்துக்குள் நடந்து கொண்டிருந்தது. பிறகு ஏரிக்குப் போய் வர முற்பட்டது. அங்கே கரையிலே கதகதப்பான வெயிலில் கண்ணயர்ந்த நிலையில் நின்று கொண்டிருக்கும்.

குளிப்புத் துறைகளில் எப்போதும் கும்மாளமாக இருக்கும். பத்து பன்னிரண்டு கிராமச் சிறுருடன் சேர்ந்து கொண்டு நாங்கள் தண்ணீரில் கூத்தடித்துக் கொண்டிருப்போம். நாங்கள் கரைக்கு ஏறிவந்ததும் சுபாரி கண்களைத் திறந்து பார்த்து விட்டு, நாசிகள் துடி துடிக்க தலையை எங்களுக்கு அருகே நீட்டும்.

''சுபாரி! சுபாரி!'' என்று நீரிலிருந்தபடி அதைக் கூப்பிடுவோம்.

அது தலையை உயர்த்தி, நீல நீர்ப் பரப்பை உற்றுப் பார்க்கும். எங்கள் தலைகள் அதற்கு அடையாளம் தெரிந்ததும் இதமாகக் கனைத்தவாறு நீர் ஓரமாய் மேலும் கீழும் நடைபோடும். சில நேரங்களில் நீரில் இறங்கியும் வரும்.

அப்போது நாங்கள் அதன் பிடரியைப் பிடித்து நீருக்குள் இழுப்போம். சுபாரி முண்டிக் கொண்டு பின் வாங்கும். முதலில் அது ஆழத்துக்குச் செல்ல துணியவில்லை, ஆனால் சிறிது சிறிதாய் தைரியமடைந்து நீருக்குள் வரத் தொடங்கிற்று. முடிவில் ஆர்வமாய் நீராட முற்பட்டது.

ஒருநாள் அம்மா எங்களை வெளியே எங்கோ போய்வரச் சொல்வதற்காக வெளிமுற்றத்திற்கு வந்து கூப்பிட்டுப் பார்த்தார். பதில் கிடைக்காமற் போனதும் ஏரிக் கரைக்கு வந்து துறை மேடையில் நின்று வெயிலிலும் காற்றிலும் கண்களைச் சுளித்துக் கொண்டு எங்களைக் கூப்பிட்டார்.

உடனே இரண்டு நாய்கள் நீந்திக் கொண்டு வந்து கரையில் ஏறின. பிறகு சுபாரியின் சடைத் தலை தெரிந்தது, அதனுடன் கூச்சலிட்ட ஆறு ஏழுக் குட்டிச் சைத்தான்களும் கரையை நோக்கி வந்தன.

சூழ்ந்து கொண்டு நெருக்கிய குழந்தைகள் கூட்டத்தோடு சுபாரி கரையில் ஏறி மூக்கால் சீற்றொலி எழுப்பிவிட்டு நாயைப் போல் உடம்பை உலுக்கிக் கொண்டது.

''சுபாரிக்கு மெய்யாகவே உடம்பு தேறிவிட்டதே!'' என்று அம்மா வியந்து கூறினார்.

சுபாரி நோயாளியாக இருந்தது அதுவே கடைசி நாள்.

சில வாரங்கள் கழிந்தன.

பிறகு ஒரு நாள் வெளிமுற்றத்திலிருந்து குதூகலக் கூச்சல் எழுந்தது. நேர்த்தியான ஒரு குதிரை பளபளத்துப் பளிச்சிட்டு சன்னல் ஓரமாய்ப் பாய்ந்தோடிற்று. சிவப்புத் தொப்பிகள் அணிந்த நான்கு சிறுமிகள் அதன் மீது அமர்ந்திருந்தார்கள்.

சோன்யா கடிவாளக் கயிறுகளைப் பிடித்துக் கொண்டு முன்னால் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய வயிற்றைக் கைகளால் கெட்டியாய் அணைத்துக் கொண்டு அவளுக்குப் பின்னால் அமர்ந்திருந்தாள் யூலியா. அடுத்து நானும், பிறகு அனே

கமாய்க் குதிரையின் வாலுக்கு மேல் என்று சொல்லும்படி நத்தாஷாவும் இருந்தோம்.

சுபாரியைத் தடபுடலாய் அலங்கரித்திருந்தோம். அதன் பிடரியிலும் வாலிலும் ரிப்பன்கள் பளிச்சிட்டன, நெற்றி முடிகளில் சிவப்புக் கசகசா மலர்க் கொத்து இருந்தது. காணக் கண் கொளாக் காட்சி என்றே சொல்ல வேண்டும்.

''ஓ...ஓ!'' என்று கடிவாளக் கயிறுகளை இழுத்தாள் சோன்யா. ''நாங்கள் நகரத்துக்குப் போகிறோம். ஏதாவது வாங்கி வரவேண்டுமா?''

''நல்லா இருக்கே இது! பெண்களே, நகரத்துக்கு ஒன்றும் போக வேண்டாம், தொலைவில் இருக்கிறது அது. இங்கேயே வீட்டுக்கு அருகே சுற்றுங்கள். கவனமாக சவாரி செய்ய வேண்டும், தெரிகிறதா? நத்தாஷாவைப் பார்த்துக் கொள்ளுங்கள், அவள்....''

''ஏய்-ஏய்! சுபாரி! பாதங்களை கொஞ்சம் செயல் படவை, பார்க்கலாம்!''

நான்கு சிவப்புத் தொப்பிகள் மேலும் கீழுமாய்க் குதித் தாட சுபாரி மண் சாலையிலே பறந்தோடிற்று.

தினமும் எங்களுக்குப் பாதி பொழுது குதிரை முதுகி லேதான் கழிந்தது. சேண இருக்கையிலும் சவாரி செய்தோம், வெறும் முதுகிலும் சவாரி செய்தோம், குழிகளையும் வேலி களையும் தாவிக் குதித்துச் சென்றோம். ஏறவும் இறங்கவும் கற்றுக் கொண்டோம். சோன்யாவும் நானும் மூத்தவர்களா தலால், எங்களுக்கு இது கடினமாக இல்லை. ஆனால் யூலியா வும் நத்தாஷாவும் இன்னும் போதுமான அளவுக்கு வளர்ந் தாகவில்லை. படிப்படியாய் மூன்று கட்டங்களில் நத்தாஷா மேலே ஏறி சேண இருக்கையில் அமர வேண்டியிருந்தது. முதலில் அவள் கடிவாள வாரைப் பிடித்துக் கொண்டு மேலே எழுந்தாக வேண்டும்; பிறகு அவள் இருக்கை முனையைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டு மேலே ஏறவேண்டியிருந் தது; முடிவில் காலைத் தூக்கி எதிர் புறத்தில் போட்டுக்

கொண்டு நிமிர்ந்து உட்கார வேண்டியிருந்தது. ஆனால் இந்த சில்லறை விவகாரங்களை அவள் பொருட்படுத்துகிறவள் அல்ல.

''சவாரி செய்யக் கற்றுக் கொள்வது கடினமல்ல, ஆனால் கீழே விழவும் கற்றுக் கொண்டாக வேண்டும், அதன் பிறகுதான் சவாரி செய்வதில் நீங்கள் தேர்ந்தவர்களாக முடியும்'' என்று அப்பா சொன்னார்.

மறுநாள் முழுதும் நாங்கள் கீழே விழுவதற்குப் பயிற்சிகள் செய்து வந்தோம். உலர் புல் போருக்குப் பக்கத்தில் புல்லைக் குவித்து, குதிரையிலே பாய்ந்தோடி வந்து அதன் மீது விழுந்தெழ முயன்றோம். உண்மையில் இது மிகக் கடினமான காரியமாகும். எங்களை அறியாமலே எங்கள் கைகள் லகானை இழுத்துக் குதிரையை நிறுத்த முயன்றன. கீழே விழுவது இனிய அனுபவமாய் இருக்கவில்லை.

''கீழே விழுவது வருத்தம் தரும் செயலாகும்'' என்று பிற்பாடு நாங்கள் அப்பாவிடம் பேசுகையில் ஒத்துக் கொண்டோம்.

''அப்படியா? முயற்சி செய்தா பார்த்தீர்கள்?''

''ஆமாம், எங்களால் செய்ய முடியவில்லை. சோன்யா ஒருத்தி மட்டும்தான் இதை நல்லபடிச் செய்யக் கூடியவள்.''

எங்களுடைய ''பயிற்சிகள்'' குறித்து அவரிடம் சொன்னோம்.

நாங்கள் உணரும் முன்பே குளிர் காலம் திடுமென வந்து சேர்ந்தது. சுபாரியை இப்போது நாங்கள் சறுக்கு வண்டியில் பூட்டினோம். நாள்தோறும் காலையில் எங்களை அது நகருக்கு, பள்ளிக்கூடத்துக்கு இட்டுச் சென்றது. காலையில் ஏழு மணிக்கு வாயில் முகப்பிலே வந்து தயாராய் நிற்க அது பழகிக் கொண்டு விட்டது. வண்டியில் பூட்டியதும் உடனே அது தானாகவே கொட்டில் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு வெளிமுற்றத்துக்குள் வண்டியை இழுத்து வந்து வாயில் முகப்பிலே நிற்கும்.

சோன்யாவும் நானும்(யூலியாவும் நத்தாஷாவும் இன்னும் பள்ளி செல்ல ஆரம்பிக்கவில்லை) அடித்து மோதிக் கொண்டு ஓடி வந்து சறுக்கு வண்டியில் ஏறி அமர்ந்து கூச்சலிடுவோம்:

''சுபாரி! சீக்கிரம்! நேரமாகிவிட்டது!''

இந்த நேரத்தில் வழக்கமாய் எல்லோரும் வேலையாய் இருந்ததால் யூலியாதான் வண்டியை ஓட்டிச் செல்ல வேண்டி யிருக்கும். கனத்த குளிர்காலக் கோட்டும் மென்முடிக் குல்லாயும் பெரிய கையுறைகளும் போட்டுக் கொண்டு அவள் வண்டிக்காரரது பெட்டி மீது ஏறி உட்காருவாள். இதற்கிடையில் வாயில் முகப்பிலே நாள்தோறும் அம்மாவுக்கும் நத்தாஷாவுக்குமிடையே மூண்டெழும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

''நானும் போகிறேன்! ஏன் போகக் கூடாது?''

''ஏனென்றால் நீ போகத் தேவையில்லை.''

''நான் வீட்டில் இருக்கத் தேவையில்லை!''

''கடுங்குளிரில் உனக்கு மூக்கு உறைந்து தான் போகும்.''

''உறைந்து போகட்டுமே...''

''மூக்கு இல்லாமல் எப்படி இருப்பாய் நீ? இல்லை, உன்னை நான் போக விடப் போவதில்லை. யூலியா, ஓட்டு வண்டியை!''

''வேண்டாம்! இரு, நானும் வருகிறேன்! இரு, இதோ வருகிறேன்! இரு! ஈ-இ-இ!...''

வீரிட்டு அழும் சப்தமும், பிறகு கூச்சலும் கேட்கும். கண நேரத்துக்கெல்லாம் மகிழ்ச்சி பொங்க, தொடர்ந்து கன்னத்தில் கண்ணீர் வழிந்தோட நத்தாஷா ஓடி வந்து சறுக்கு வண்டியில் ஏறிக் கொள்வாள். தனது வெற்றியைக் கொண்டாடும் முறையில் பலமாய் மூக்கு சிந்திவிட்டு அமர்ந்து கொள்வாள்.

பெரிய கொள்ளைக் கூட்டத் தலைவி மாதிரி யூலியா விசிலடிப்பாள். உடனே சுபாரி துள்ளிக் கொண்டு புறப்படும்,

வெண்பனி படிந்து இறுகிய பாதையிலே நாங்கள் பறந்தோடு வோம்.

வண்டியோட்டுவதில் யூலியா இணையற்றவளாகவே இருந்தாள். அவள் நாக்கைச் சொடுக்கியதையும், கூச்சலிட்டதையும், அபாயகரமான வளைவுகளில் அடித் தொண்டையால் "ஓ-ஓ-ஓ!" என்று குதிரையை சாந்தப்படுத்தியதையும் பார்க்க வேண்டுமே!

சந்தை கூடும் நாட்களில் சாலையில் வண்டிகள் யாவற்றையும் காண முடியும். ஒற்றைக் குதிரை, இரட்டைக் குதிரை, ஏன் மூன்று குதிரையுங்கூட பூட்டிய சறுக்கு வண்டிகள் சந்தைக்கு விரைந்து கொண்டிருக்கும்.

ஆனால் சாதாரண நாட்களில் சாலை காலியாகவே இருக்கும். அண்டை அயலாரது இரண்டு மூன்று சறுக்கு வண்டிகளைத் தவிர வேறு எவற்றையும் காணமுடியாது. இவ்வண்டிகளில் ஒன்றைக் கண்டதும் போட்டிக்கு வரும்படி நாங்கள் பின்னாலிருந்து சவால் விடுவோம்.

"வாருங்கள், பார்க்கலாம்!" என்று கூவுவோம்.

பிறகு சிரிப்பும் கூச்சலும் கிளர்ந்தெழும்.

பரபரப்பால் சுபாரிக்கு உடம்பு துடிதுடிக்கும், லகானை அது கடித்திழுக்கும்.

"ஓ-ஓ-ஓ!" என்று அடித் தொண்டைக் குரலால் யூலியா அதைக் கட்டுப் படுத்துவாள், அவள் கண்களில் ஆவேசம் ஒளிரும்.

அண்டை வீட்டாரது குதிரைகள் எங்களுக்கு முன்னால் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும், ஆனால் நாங்கள் நெருங்கி வந்து விடுவோம். சாலை குறுகலானது, ஆயினும் தாண்டிச் செல்வதற்கு அங்கே வாய்ப்பு இருந்தது.

"ஏய்-ஏ-ஏய்!" என்று யூலியா கூச்சலிடுவாள்.

உடனே நாங்கள் எழுந்து நின்று கொண்டு விடுவோம். மிகவும் பரபரப்பான தருணம் அது. திடுமென யாரோ

எங்கள் வண்டியைத் தூக்கி முன்னுல் கொண்டு போய் வைத்து விட்ட மாதிரி இருக்கும்... இப்போது சுபாரி ஏனைய குதிரைகளை எட்டிப் பிடித்து, பிறகு தாண்டிச் செல்ல முற் படும். மூச்சுத் திணறும் ஏனைய குதிரைகள் ஒவ்வொன்ருய் பின் தங்கிவிடும்.

இதற்கிடையில் சுபாரி முன்னிலும் கிளர்ச்சியுற்றதாகி வேகமாகப் பறந்தது. எங்களுடைய ஆனந்தக் களிப்புக்கும் கூச்சலுக்கும் அளவே இருக்காது.

''போதும், வேகத்தைக் குறையுங்கள்!'' என்று எங் களுக்குப் பின்னுல் வந்தவர்கள் கத்திஞர்கள்.

''ஓ-ஓ-ஓ!.. போதும் உன் வேகம்! சுபாரி, போதும்! அந்த ஆமைகள் வந்து சேரட்டும், காத்திரு நீ!''

வண்டியை நிறுத்திக் கொண்டு அவை வந்து சேர்வதற் காகக் காத்திருந்தோம். வயது முதிர்ந்த கோபக்காரக் கிழவர் ஒருவர் அண்டை வீட்டாரின் வண்டியை ஓட்டி வந் தார்.

''பைசாசங்களா, இருங்கள், உங்களுக்குப் பாடம் கற்பிக்கிறேன்! உங்கள் சேஷ்டைகளை உங்கள் அப்பாவிடம் சொல்கிறேன், மீண்டும் தனியே நீங்கள் வண்டியில் செல்ல அவர் அனுமதிக்காதபடி செய்கிறேன். வண்டிக்காரர் இல் லாமல் குழந்தைகளை இப்படி அனுப்பலாமா? என்ன வேலை இது?''

''ஏன், என்ன ஆயிற்று? உங்கள் பாதையில் வந்தா குறுக்கிட்டோம்?''

''யாரையாவது சாகடிக்கவா விரும்புகிறீர்கள்? இப்படி தலை தெறிக்கும் வேகத்திலா வண்டியை ஓட்டுவது? இருங்கள், உங்கள் அப்பாவிடம் வந்து பேசப் போகிறேன். நடந்ததை எல்லாம் அவரிடம் சொல்லப் போகிறேன்!''

இதைக் கேட்டதும் எங்களது உற்சாகம் மறைந்து விட்டது.

''உங்களுடைய முதற் குதிரை சிறப்பானதாய் இருக்கிறது'' என்று திடுமென மகிழ்ச்சியான குரலில் கூறினாள் சோன்யா.

''இந்த சாமர்த்தியப் பேச்சு எல்லாம் வேண்டாம், நான் ஏமாந்து விட மாட்டேன்.''

''நாங்கள் இதுவரை யார்மீதும் மோதியதில்லை. நீங்கள்தான் நேற்று சரியானபடி ஒரு வண்டி மீது மோதினீர்கள்.''

''வாயில் வந்தபடி பேசாதே நீ!'' என்று முணுமுணுத்தார் கிழவர். மீண்டும் அவருக்குக் கோபம் வந்து விட்டது. ''ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இந்த மாதிரி இனி நீங்கள் வண்டி ஓட்டிச் செல்ல முடியப் போவதில்லை.''

கிழவர் மெய்யாகவே அப்பாவிடம் சென்று சொன்னாரானால் என்னவது? கண்ணை மூடிக்கொண்டு வண்டியை விரட்டிச் செல்கிறோம் என்று அல்லவா சொல்வார் இவர்?

எங்களுக்குக் கவலையாகவே இருந்தது.

பள்ளிக்கூடத்தில் அன்று புவியியல் வகுப்பின்போது ஆசிரியர் என்னைக் கூப்பிட்டார்.

''அரைத் தூக்கத்தில் இருக்கிறாயே, எழுந்து கரும் பலகையிடம் வா நீ! வோல்கா ஆற்றில் அதன் முகத்துவாரத்திலிருந்து புறப்பட்டு அதன் உற்பத்தி இடத்துக்குப் போகும் பாதையைக் காட்டு. கேள்வி புரிகிறதா உனக்கு?''

நான் எழுந்து கரும் பலகையிடம் சென்றேன். அங்கே தேசப்படத்தின் அருகே நின்ற எனக்கு நினைப்பு எல்லாம் எங்களது சறுக்கு வண்டிச் சவாரியிலேதான் இருந்தது.

''ஏன் விழிக்கிறாய்? எப்படிப் போக வேண்டுமென்று தெரியவில்லையா உனக்கு?'' என்று கேட்டார் ஆசிரியர்.

உடனே நான் கனவில் பேசுவது போல் பதிலளித்தேன்:

''தெரியும், கவனமாகப் போக வேண்டும், நாங்கள் எப்போதுமே கவனமாகத்தான் போகிறோம், இதுவரை ஒரு தரங்கூட எதிலும் மோதியதில்லை.''

பிறகு எத்தனையோ நாளுக்கு நான் எல்லோரது கேலிக்கும் சிரிப்புக்கும் இலக்காக வேண்டியதாயிற்று.

சுபாரியை இதற்கு முன் பார்த்திராதவர் எவரும், பனியாற்றுக் கணவாயில் முடக்கப்பட்டு மூன்று நாட்கள் அங்கே அது இருந்ததென்று நம்பியிருக்க மாட்டார்கள்.

அதனுடைய பழைய வடிவழகும் தகதகப்பும் அதற்குத் திரும்பி விட்டன. ஆனால் இப்போது அது முன்பு போல் அவ்வளவு கம்பீரமாய்த் தலை நிமிர்ந்து நடை போட முடியவில்லை, சில நேரங்களில் அதன் கால்கள் சுரந்து வீங்கிப் போயின, உயர்ந்து சென்ற ஏற்றச் சாலைகளில் அதற்கு மூச்சு வாங்கிற்று. ஏற்ற இறக்கமில்லாத சமவெளிச் சாலைகளில் ஏறத்தாழ அதன் பழைய வேகத்தில் அதனால் ஓட முடிந்தது.

ஒருநாள் நாங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வேகமாய் வீட்டுக்குப் பறந்தோடி வந்து கொண்டிருந்தோம். கிராமத்துக்கு அருகே சாலையில் எங்களுக்கு முன்னால் யாரோ ஒருவர் போவது தெரிந்தது. நாங்கள் அவரைத் தாண்டிச் சென்ற போது யூலியா உற்சாகமாய் விசிலடித்து வண்டியை ஓட்டிச் சென்றாள். சாலையில் சென்றவர் சிரித்துக் கொண்டு கைகளை வீசியது திடுமென எங்கள் கண்ணில் பட்டது.

''அப்பா! அப்பா வருகிறார்! நிறுத்து வண்டியை!''

''ஆகா! அப்பா, நீங்களும் ஏறிக் கொள்ளுங்கள், அழைத்துச் செல்கிறோம்!''

சுபாரி பொறுமையின்றி துள்ளிற்று. அப்பா அதனருகே சென்று சிரித்துக் கொண்டு குதிரையைப் பார்வையிட்டார்.

''எனது சுபாரி பழைய நிலைக்கு வந்து விட்டதே. இனி உங்களுக்கு நான் ஒரு கழுதை வாங்கித் தருவேன்.''

''ஓ, வாங்கித் தாருங்கள்! சிறப்பாய் இருக்கும்!''

சுபாரியை அப்பா வியந்து போற்றினார்.

அதன் கழுத்தில் தட்டிக் கொடுப்பதற்காகக் கையை நீட்டினர் அவர்.

ஆனால் சுபாரி கனைத்துச் சீறியவாறு வெடுக்கென விலகிக் கொண்டது. காதுகளை பின்னால் சாய்த்துக் கொண்டு பற்களை வெளியே தெரியும்படிக் காட்டிற்று. அதன் கண்களில் கோபக் கனல் ஒளிர்ந்தது.

''தம்பி, என்ன இது?'' இன்னுமா உனக்கு என் மீது கோபம்?''

சுபாரி ஏன் அப்படி நடந்து கொண்டது என்று எங்களுக்குப் புரியவில்லை. அப்பா அதைத் தட்டிக் கொடுக்க திரும்பவும் முயன்றார், ஆனால் மறுபடியும் சுபாரி பற்களை வெளியே தெரியும்படிக் காட்டிற்று.

''சரி, பெண்களே, நீங்கள் போய்ச் சேருங்கள்.''

''நீங்கள் வரவில்லையா?''

''எனக்கு இங்கே கொஞ்சம் வேலை இருக்கிறது.''

அப்பா முன்னால் சற்று தூரம் செல்லும் வரை யூலியா காத்திருந்தாள். பிறகு லகானை சொடுக்கினாள், சுபாரி அதன் முழு எழிலை வெளிக் காட்டியவாறு அப்பாவைத் தாண்டிக் கொண்டு பறந்தோடிற்று.

அப்பா அளித்த வாக்குறுதி எங்களுக்கு ஒருங்கே வியப்பும் மகிழ்ச்சியும் உண்டாக்கிற்று. சுபாரியுடன் கூட இப்போது எங்களுக்கு ஒரு கழுதையும் கிடைக்கப் போகிறதென்று மகிழ்ந்து கொண்டோம். இனி நாங்கள் எப்படி சவாரி செய்யலாம் என்று அன்றைய பொழுது பூராவும் விவாதித்துக் கொண்டிருந்தோம். முடிவில் ஒருவர் கழுதையிலும், ஏனைய மூவரும் சுபாரியிலும் செல்வதெனத் தீர்மானித்தோம். சிறப்பாகவே இருக்குமெனக் கூறிக் கொண்டோம்.

பிறகு சாப்பிட்டுக் கொண்டிருந்த போது அம்மாவிடம் அப்பா கூறினார்:

''சுபாரி திரும்பவும் முன்பு போல் அற்புதமான குதிரையாகி விட்டது. இனி நான் அதில் சவாரி செய்யலாமென்று

நினைக்கிறேன். குதிரைக்கு பதில் கழுதை ஒன்று வாங்கித் தருவேனென்று பெண்களுக்கு வாக்களித்திருக்கிறேன்.''

''சுபாரிக்குப் பதிலாகவா?'' என்று நாங்கள் திகைப் புற்றுக் கூவினோம்.

''இல்லை, அப்படி ஒன்றும் இல்லை!''

''முதலில் அதை எங்களுக்கே உரியது என்றீர்கள், இப் போது திருப்பிக் கேட்கிறீர்கள்.''

''மனதுக்கினிய பெற்றோர் செய்யும் காரியமல்ல இது'' என்றாள் சோன்யா. அவள் குரல் நடுங்கிற்று. ''அப்பா! அறையை விட்டு எங்களை வெளியே போகச் சொல்வீர்கள், தெரியும் எனக்கு! நீங்கள் சொல்லாமலே நாங்கள் போய் விடுகிறோம். நீங்கள் செய்வது சரியல்ல!''

அவள் எழுந்து அமத்தலாய் கதவை நோக்கி நடந்தாள். யூலியாவும் நானும் வாய் பேசாமல் அவள் பின்னால் சென் றோம்.

''அம்மா! நீ ஏன் பேசாமல் இருக்கிறாய்?'' என்று கூறிக் கொண்டு நத்தாஷா, தனது நாற்காலியிலிருந்து கீழே இறங்கி, எங்களுடன் சேர்ந்து கொள்வதற்காக ஓடி வந்தாள்.

அம்மா எங்களை ஆதரித்தார். தணிவான குரலில் அப் பாவிடம் ஏதோ சொன்னார்.

''ஆரோக்கியமான, வலுவான குதிரையை விளையாட்டுச் சாமானாகக் கருதி இவர்களிடம் கொடுக்க நான் சம்மதிக் கமாட்டேன்'' என்று பலத்த குரலில் அப்பா பதிலளித்தார்.

''அது ஒன்றும் அவர்களிடம் விளையாட்டுச் சாமானாய் இருந்து வரவில்லை. அவர்களை அது பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு போய் விடுகிறது; அவர்களை நான் வெளியே வேலை யாய் அனுப்பும் போது அது அழைத்துச் செல்கிறது. வீட்டில் அது வேலையின்றி சும்மாயிருக்கவில்லை. இந்தக் குதிரை இப் போது உனது வேலைப் பயணங்களுக்கு ஏற்றதல்ல, திரும்ப வும் அதற்குச் சளி பிடித்துக் கொண்டுவிடும். உனது வேலை களுக்கு உன்னிடம் குதிரை இருக்கிறது. அது போதாவிடில்

இன்னொரு குதிரை வாங்கிக் கொள். இவர்கள்தானே சுபாரி யைப் பராமரித்து நலம் பெற்றெழச் செய்தார்கள்.''

''எனக்கு வேண்டியது சுபாரிதான். குழந்தைகளது அசட்டு விருப்பங்களுக்கு விட்டுக் கொடுப்பது சரியல்ல.''

இருவரும் இதன் பின் மௌனமாகி விட்டனர். நாங்கள் ஒருவரையொருவர் கலவரத்துடன் உற்று நோக்கிக் கொண் டோம். சுபாரியின் சிறப்பை வெளிக்காட்டி நாங்கள் பெரு மைப் பட்டுக் கொண்டதன் விளைவு இது! இனி நடைபெறப் போவது என்ன?

சுபாரிதான் இந்த பிரச்சினைக்கு முடிவு கட்டிற்று.

பனியாற்றுக் கணவாயில் அது கழிக்க நேர்ந்த அந்த பயங்கர நாட்களையும் அவற்றைத் தொடர்ந்து நெடுநாட்கள் அது நோயால் பீடிக்கப்பட்டிருந்ததையும் அதனுல் மறக்க முடியவில்லை. அப்பாவைப் பார்த்ததும், அவர் முகம் தெரிந் ததும், அவர் குரல் கேட்டதும் அதற்கு பீதியாக இருந்தது.

அப்பாவின் கையிலிருந்து அது எதையும் வாங்கித் தின்ன மறுத்தது. அவர் அதைத் தட்டிக் கொடுத்த போதெல்லாம் காதுகளை விறைப்பாய்ப் பின்பக்கம் சாய்த்துக் கொண்டது.

இதைக் கண்டதும் அப்பாவுக்கு வேதனையாய் இருக் கும். முன்பு அப்பாவிடம் அளவிலா பாசம் கொண்டிருந்த குதிரை அது. ஆகவே திரும்பவும் தாம் அதன் பாசத்துக்கு உரியவராக வேண்டுமென்று அப்பா முயற்சி செய்து வந்தார்.

ஒரு நாள் மாலை அப்பா மகிழ்ச்சி மிக்கவராய் வீட் டுக்குத் திரும்பி வந்தார். கொட்டிலைக் கடந்து வந்த அவர், உள்ளே சென்று சுபாரிக்கு ஓர் ஆப்பிள் தர விரும்பினர். கொட்டிலுக்குள் இருட்டாய் இருந்தது. அப்பா அதனுள் சென்ருர். சுபாரி ஆத்திரங்கொண்டு சீறிக் கனைத்தது.

''தம்பி, அமைதியாய் இரு நீ! என்னை அடையாளம் தெரியவில்லையா உனக்கு?'' என்று அப்பா அன்பான குரலில் கேட்டார்.

சுபாரிக்கு அடையாளம் தெரிந்தது, அதில் எந்த சந்தேகமும் இல்லை. அது விறைத்து நின்றது, திடுமென கால்களை உயர்த்தி தனது முழு பலத்தையும் திரட்டி கொட்டில் சுவற்றை எட்டி உதைத்தது.

மூலையை நோக்கி அப்பா தாவி ஓடினார். இப்பொழுது குதிரை அமைதியடைந்து அந்த இருண்ட மூலையை உற்று நோக்கிற்று.

''சுபாரி! உனக்கு ஏன் இந்தக் கெட்ட கோபம்? உன் எசமானனையே உதைப்பாயா நீ?''

இதன் பிறகு சில நாட்களுக்கெல்லாம் விறுவிறுப்பான சாம்பல் நிற சவாரிக் குதிரை ஒன்று வெளிமுற்றத்துக்குள் வந்தது.

''எப்படிப்பட்டது தெரியுமா? அருமையான சவாரிக் குதிரை!'' என்று அப்பா பெருமைப் பட்டுக் கொண்டார். ''சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருப்பது மாதிரி இருக்கும்; ஆடாமல் குலுங்காமல் பறந்தோடிக் கொண்டிருக்கலாம்; காதில் காற்று சீழ்க்கை அடிக்கும்.''

நாங்கள் குதிரைக் கொட்டிலின் பின்னால் கூடி களி நடனம் புரிந்தோம்.

பிறகு சிறிது காலத்துக்குள் அப்பாவுக்கும் சுபாரிக்கு மிடையே மனத் தாங்கல் மறைந்து நேசம் மலராயிற்று. ஆனால் அதன்பின் அவர் எங்கள் மெய் நண்பனை எங்களிட மிருந்து பிரிக்க முயலவே இல்லை.

ஏரிக்கரை கிராமத்துக்கு ஒரு புதிய டாக்டர் வந்து சேர்ந்தார். தாமாஷான ஆள், குண்டாய் இருந்தார். அவருடைய கோட்டுப் பைகளில் எப்போதும் மிட்டாய்களும் தூண்டில் கொக்கிகளும் விசில்களும் பயனுள்ள மற்றும் பல அரிய பொருள்களும் நிறைய இருக்கும். சுபாரியை அவர் ''பனியுகம்'' என்று அழைத்து வந்தார்.

அவர் பேசிய முறை எங்களுக்குப் பிடித்திருந்தது சுவையான விஞ்ஞான சொற்களை அடிக்கடி அவர் கையாண்டார்.

அவருடைய கோட்டுப் பைகளும் எங்களைக் கவர்ந்திழுத்தன. டாக்டரின் குழந்தைகளும் எங்களுக்கு ஒத்த வயதுடையவர்கள்தான். அவர்களுடைய அந்த கருஞ்சிவப்புக் குதிரைகள் மட்டும் இல்லாதிருந்தால் யாவும் நல்லபடியாகவே நடந்தேறியிருக்கும்.

அந்த குதிரைகளால் எங்களுக்கு ஓயாத தொல்லையாகி விட்டது. தினமும் அவை சுபாரிக்கு முன்னதாய்ப் பள்ளிக்கூடத்துக்குப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தன. எங்களுக்கு அது பிடிக்கவில்லை என்றாலும், அந்த குதிரைகள் இரண்டும் உன்னதமானவை என்பதை நாங்கள் ஒத்துக் கொள்ளவே வேண்டியிருந்தது.

முதல் நாள் முதற் கொண்டே டாக்டரின் குழந்தைகள் எங்களுடைய சுபாரியைக் கேலி செய்து வந்தார்கள்:

''எங்களுடைய ஓர்லிக்கும் ஸ்மெய்க்காவுக்கும் முன்னால் உங்களது கிழட்டுப் ''பனியுகம்'' எந்த மூலைக்கு?!''

''எங்கள் சுபாரி விரும்பினால்...''

''ஏன் விரும்பாமல் இருக்கிறதாம் அது?''

''கண்ட குதிரைகளோடும் நாங்கள் போட்டிக்கு வருவோம் என்று நினைக்கிறீர்கள்....''

'' 'கண்ட குதிரைகளாமே!' சரியான வாய்ப் பேச்சு வீரர்கள்!''

நாங்கள் எவ்வளவோ பொறுமையாகத்தான் இருந்து வந்தோம். பள்ளிக்கூடம் போகும் போது குதிரைப் பந்தயம் நடத்தக் கூடாதென்று எங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. நடத்தினால் சுபாரி எங்களிடமிருந்து பிடுங்கப்பட்டு விடும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் டாக்டரின் குழந்தைகள் நாங்கள் போட்டிக்கு வர அஞ்சுவதாய் நினைத்துக் கொண்டு ஓயாமல் எங்களைக் கேலி செய்தனர்.

முடிவில் நாங்கள் பொறுமை இழக்க வேண்டியதாயிற்று.

''சரி, நாளைக்குக் காலையில் முன்னதாகவே புறப்பட்டு வருவோம், யார் குதிரை சிறந்ததென்று பார்க்கலாம்'' என்றேம்.

மறுநாள் காலையில் நாங்கள் ஆறு மணிக்கே புறப்பட்டு வந்து சாலையில் அவர்களுக்காகக் காத்திருந்தோம்.

யூலியா அவளது தொப்பியின் வார்களை இழுத்து முக வாயின் அடியில் கட்டிக் கொண்டாள்.

நாங்கள் டாக்டரின் வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்த் தோம்.

வேலிக் கதவு விரியத் திறந்திருந்தது. வாயில் முகப்புக் குப் பக்கத்தில் கருஞ்சிவப்புக் குதிரைகள் இரண்டும் நின்று கொண்டிருந்தன. பிறகு வீட்டுக்குள்ளிருந்து ஆட்கள் வெளியே வந்தார்கள். குழந்தைகள் சறுக்கு வண்டியில் ஏறிக் கொண்டார்கள், சறுக்கு வண்டி கிளம்பிற்று.

குதிரைகளது குளம்புகள் பாலத்தின் மீது தடதடத்தன. திருப்பத்தில் வண்டி மறைந்தது. அதோ மீண்டும் தெரிந் தது....

''புறப்படுவோம்!'' என்று கத்தினேன் நான், எனது குரல் என்னுடையதாக ஒலிக்கவில்லை.

சறுக்கு வண்டி கிளம்பிற்று. அதிர்ச்சியில் எனக்குப் பற்கள் படீரென அடித்துக் கொண்டன.

வயல் வெளியை நோக்கிச் சென்றேம். போட்டியானது முதலாவது திருப்பத்தைத் தாண்டியதும் ஆரம்பித்து, குன்றின் அடியில் கல் தூண்களுக்கு அருகே முடிவுறுவதாய் ஏற்பாடாகி யிருந்தது.

எங்களுக்கு ஒரே பரபரப்பு, வாயடைத்துப் போய் அமர்ந் திருந்தோம். குளிர் கடுமையாகவே இருந்தது. ஆனல் யூலியா கையுறைகளைக் கழற்றினுள்.

''சூடாயிருக்கிறது'' என்று சொல்லி அவற்றை வண்டி யினுள் எறிந்தாள்.

குதிரைகள் ஒன்றுக்கொன்று பின்னடையாமல் இணையாக ஓடிக் கொண்டிருந்தன.

அன்றைய காலையை நான் மறக்கவே முடியாது. வெண்ணிற வெளியின் பரப்புக்குமேல் குளிரான பனி மூட்டம் கவிந்திருந்தது. சூரியன் அப்போது தான் உதித்துக் கொண்டிருந்தான். வெறிச்சோடிய வழ வழப்பான பனிச் சாலையிலே இரண்டு சறுக்கு வண்டிகள் பறந்தோடிக் கொண்டிருந்தன.

யூலியா சில சமயம் செய்வது போல் எதிராளிகளுக்குத் தலையளவு தொடக்கச் சலுகை அளிக்க இப்போது துணியாமல், அவர்களுக்குச் சரிசமமாகப் போக முயன்றாள்.

சுபாரி மிகச் சிறப்பான நன்னிலையில் இருப்பது தெரிந்தது. அகலமான முதலாவது குன்று இடுக்கு வருவதற்காக நாங்கள் காத்திருந்தோம். அதற்குப் பிற்பாடு யாவும் தெட்டத் தெளிவாகி விடும். அங்கே திருப்பத்துக்கு அப்பால் இரண்டு வண்டிகளும் சேர்ந்து சரிசமமாகச் செல்ல முடியாதபடி சாலை குறுகலாகி விட்டது. இங்கேயே நாங்கள் முந்திக் கொள்ளாவிடில், அவர்கள்தான் முதலில் இறுதி இலக்குக்குப் போய்ச் சேர்வார்கள்.

யூலியா இதை உணர்ந்து கொண்டு முழு சக்தியையும் பிரயோகித்து முயற்சி செய்தாள்.

குன்று இடுக்கை நாங்கள் நெருங்கி விட்டோம், ஆயினும் இன்னமும் முந்திச் செல்ல முடியாமல் சரிசமமாகவே போய்க் கொண்டிருந்தோம்.

திருப்பத்துக்கு அப்பால் ஒரு குன்றும், சற்று உயர்ந்து சென்ற குறுகலான சாலையும் இருந்தன. அதற்குப் பக்கத்தில் பயன்படுத்தப்படாத ஒரு பழைய சாலை சென்றது. அது கொஞ்சம் குறுக்கு வழியில் அமைந்ததென்றாலும், அதிக ஏற்ற முடையதாக இருந்தது.

யூலியா பின்னால் திரும்பி எங்களைப் பார்த்தாள்.



''பழைய சாலையிலே போ!'' என்று கத்தினுள் சோன்யா.

டாக்டரின் சறுக்கு வண்டி முன்னேக்கிப் பிய்த்துக் கொண்டு சென்ற அதே கணத்தில் நாங்கள் வெடுக்கெனத் திரும்பி வெண்பனிப் பெருக்கு வழியே பறந்து பழைய சாலையை அடைந்து, கீழ்நோக்கி வேகமாய்ப் பாய்ந்து சரிந்தோம். பிறகு மேலே ஏறி எங்கள் எதிராளிக் குதிரைகளுக்கு முன்னல் பறந்தோட முற்பட்டோம்.

''ஓய்!'' என்று கத்தினர் கிர்கீஸிய வண்டிக்காரர். ''பலே! பலே!'' என்று வியந்து போற்றினர்.

இனி ஆற்றங் கரை யோரத்தில் குறுகலாய் வளைந்து சென்ற பாதையில் அவர்கள் எங்களுக்கு முன்னல் சென்று விடாதபடி பார்த்துக் கொண்டாக வேண்டும்.

எங்களுக்குப் பின்னால் சாட்டையின் சொடுக்கொலி கேட்டது. கரும் பழுப்புக் குதிரைகளுக்குக் கிர்கீஸிய வண்டிக்காரர் ஊக்கமூட்டுவதற்காக எழுப்பிய ஒலி அது. கரையோரப் பாதையில் சுபாரி முன்னால் பறந்தோடிக் கொண்டிருந்தது. கல் தூண்கள் கண்ணுக்குத் தெரியலாயின.

கடைசித் திருப்பம் வந்து விட்டது.

'விஸ்—ஸ்க்!'

சறுக்கு வண்டி கடுமையாய்ப் பக்க வாட்டில் சாய்ந்து கிரீச்சொலி எழுப்பிற்று; நாங்கள் பட்டாணிக் கடலை போல் வீசியெறியப்பட்டு பனிக் கட்டியிலே போய் விழுந்தோம்.

நான் தரையிலே விழுந்த நேரத்தில் கரும்பழுப்புக் குதிரைகள் எங்களைக் கடந்து பறந்தோடி இறுதி இலக்கிலே போய் நிற்கக் கண்டேன்.

எங்கள் சறுக்கு வண்டி இதற்குள் நேர் நிலைக்குத் திரும்பி விட்டது. யூலியாவுக்குச் சரியானபடி அடிபட்டும், இன்னமும் அவள் வண்டிக்காரர் பெட்டியிலேதான் உட்கார்ந்திருந்தாள். வண்டியை அவள் சாலைக்கு ஓட்டி வந்து நிறுத்திவிட்டு, நாங்கள் அவசரமாய் எங்களது குல்லாய்களையும் புத்தகங்களையும் பொறுக்கியதைக் கலவரத்துடன் உற்று நோக்கினாள். நாங்கள் நடக்கமுடியாமல் நொண்டினோம். உடம்பைத் தடவி விட்டுக் கொண்டோம்.

டாக்டரின் மூத்த மகளும் கிர்கீஸிய வண்டிக்காரரும் எங்களிடம் ஓடி வந்தார்கள்.

''நன்றாகத்தானே இருக்கிறீர்கள்? காயம் பட்டு விடவில்லை அல்லவா? எலும்பு முறிந்து விட வில்லையே?'' என்று கவலை தொனிக்கக் கூச்சலிட்டுக் கேட்டார்கள். இருந்தாலும் அவர்களால் தமது வெற்றிக் களிப்பை மறைத்துக் கொள்ள முடியவில்லை.

''இல்லை, எலும்பு முறிந்து விடவில்லை'' என்று சோன்யா முணுமுணுக்கும் குரலில் பதிலளித்தாள்.

மலர்ந்த முகத்தோடு அவர்கள் தமது சறுக்கு வண்டிக்குத் திரும்பி எங்களைப் பார்த்து ஏதோ கூச்சலிட்டுச் சொல்லி விட்டு வண்டியில் ஏறிக் கொண்டார்கள். அவர்களது வண்டி புறப்பட்டு அமைதியாய்ப் போய்ச் சேர்ந்தது.

யாவரும் அறிந்த கவிதை கூறுவது போல் ''பிறகு எங்கள் காயங்களை எண்ணிக் கணக்கிட முற்பட்டோம்....''

சோன்யாவுக்கு பெருவிரல் பிசகி விட்டது. யூலியாவுக்கு சறுக்கு வண்டியின் சட்டத்தில் முட்டிக் கொண்ட போது உதட்டில் காயம் பட்டு விட்டது, அதில் இப்பொழுது இரத்தம் கசிந்தது. நத்தாஷாவுக்கு நெற்றியில் புடைத்திருந்தது, மூக்கிலும் அடிபட்டுச் சிராய்த்திருந்தது. எனக்குக் காலில் வலி பொறுக்க முடியவில்லை.

எல்லோருக்கும் வலிக்கவே செய்தது. ஆனால் இது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. பந்தயத்தில் கருஞ்சிவப்புக் குதிரைகள் வெற்றி பெற்று விட்டதுதான் சகிக்க முடியாத வேதனை தருவதாய் இருந்தது!

வசந்தத்துக்குள் சுபாரி அதன் பழைய நிலைக்கு முழு அளவுக்குத் திரும்பி, முன்பு போலவே துடிப்பும் போர் ஆர்வமும் மிக்கதாகி விட்டது. தவறிப் போய் வேலிக்கதவை யாராவது திறந்து வைத்து விட்டால் போதும், உடனே அது தெருவுக்கு ஓடி ஏனையோரது குதிரைகளுடன் சண்டை போட ஆரம்பித்து விடும்.

வண்டியில் பூட்டப்பட்டிருக்கையிலும் அது போராடப் புறப்பட்டு விடும். தெருவின் எதிர்ப் பக்கத்தில் ஏதாவது குதிரை நிற்கக் கண்டதும் அது காதுகளை விறைப்பாய் உயர்த்தி, கழுத்தை வில் போல் வளைத்துக் கொண்டு மெல்லச் சறுக்கு வண்டியைத் திருப்பும். பிறகு அந்தக் குதிரையை அணுகி முகர்ந்து பார்க்கும்.

இரு குதிரைகளும் மூக்கோடு மூக்கு உராயும் நிலையில், கழுத்தை வளைத்து அமைதியிழந்து, பாதங்களால் தரையில்

தட்டிக் கொண்டு நெடு நேரம் முறைத்துக் கொண்டு நிற்கும். பிறகு திடுமென்று பலமாகக் கனைத்துவிட்டு தலையை ஆட்டிக் கொண்டு திரும்பவும் ஒன்றையொன்று முகர ஆரம்பிக்கும்.

இரு குதிரைகளும் வண்டிகளில் பூட்டப்பட்டிருக்கையில் இப்படி நடைபெறும். இல்லையேல் இரண்டும் ஒரு விநாடிக்கு முகர்ந்து பார்த்து விட்டு, ஒவ்வொன்றும் மற்றதன் கழுத்தைக் கடிக்கும், அல்லது திரும்பி நின்று கொண்டு காலை உயர்த்தி உதை விடும்!

வசந்தத்தில் பல குதிரைகள் கிராமத்துக்கு அப்பாலிருந்த குன்றுகளில் மேய்ந்துக் கொண்டிருக்கும். சுபாரி ஓடிச் சென்று அவற்றுடன் சேர்ந்து கொள்ள முயலும். பிறகு மேலெல்லாம் கடிபட்டுக் காயங்களுடன் வீட்டுக்குத் திரும்பி வரும்.

ஒரு தரம் அதன் கண்ணில் பலமாக அடிபட்டு விட்டது, பூ விழுந்து விடுமென நாங்கள் பயந்தோம். காயம்பட்ட கண்ணில் சர்க்கரைத் தூளைத் தூவிப் பொறுமையுடன் பல நாட்கள் சிகிச்சை செய்து குணப்படுத்தினோம்.

இன்னொரு சமயம் தோளுக்கு அடியில் பெரிய காயத்துடன் அது திரும்பி வந்தது. நாங்கள் மருந்து தடவி, காயத்தில் மொய்த்த ஈக்களை ஓட்டிக் கொண்டு நின்றோம். ஒரு முழு வாரத்துக்கு எங்கள் மேல் மருந்து வீச்சம் வீசிக் கொண்டிருந்தது.

''சுப்பாரி அந்தக் குதிரைகளிடம் ஓடி விடும்! கொலைகாரக் குதிரைகள் அவை! வேலிக் கதவை மூடு! சுபாரி ஓடிவிடும்! கதவைத் திறந்து வைத்தது யார்? கொட்டில் கதவை இழுத்துப் பூட்டுங்கள்! சுபாரி....'' பொழுதுக்கும் இந்த கூப்பாடுகள்தான் எழுந்து கொண்டிருந்தன.

வீட்டு விலங்குகளும் காட்டு விலங்குகளுமான பலவற்றையும் வளர்த்தவர்கள் நாங்கள். ஆனால் இவற்றில் எதற்கும் சுபாரியைப் போல் அந்த அளவுக்கு நாங்கள் கருத்தும் கவனமும் செலுத்த வேண்டியிருக்கவில்லை.

சுபாரியின் இந்த கெட்டப் பழக்கங்களின் காரணமாய் நத்தாஷாவுக்கும் அவளுடைய தோட்டப் பள்ளி ஆசிரியைக்கும் சர்ச்சை ஏற்பட்டு வந்தது. வீட்டு விலங்குகளுக்கும் காட்டு விலங்குகளுக்குமுள்ள வேறுபாட்டைக் கூறும்படி நத்தாஷாவைக் கேட்டார் அந்த ஆசிரியை.

''வீட்டிலே வசிப்பவை வீட்டு விலங்குகள். வீட்டிலிருந்து ஓடிக் கொண்டிருப்பவை காட்டு விலங்குகள்'' என்று நத்தாஷா பதிலளித்தாள்.

''காட்டு விலங்குக்கு ஓர் உதாரணம் சொல்லு.''

''குதிரை'' என்று உடனே பதிலளித்தாள் நத்தாஷா. ''சுபாரி எந்நேரமும் வீட்டிலிருந்து ஓடிக்கொண்டிருக்கிறது'' என்று அவள் விளக்கம் கொடுத்தாள்.

''சரி, வீட்டு விலங்குகள் சிலவற்றைக் கூறு.''

''நரி, ஓநாய், இவை வீட்டிலிருந்து ஓடுவதில்லை. கிடங்கினுள்ளோ, கோழிக் கூண்டுக்குள்ளோ புகுந்து விடுமே தவிர வெளியே ஓடுவதில்லை.''

இந்த பதிலைக் கேட்டதும் அவள் ஆசிரியைக்குச் சிரிப்பு தான் வரும்.

''நத்தாஷா, பாவம் உனக்கு ஒன்றுமே தெரியவில்லை அறவே குழம்பிப் போயிருக்கிறாய்!''

நத்தாஷாவுக்கு அழுகை வந்து விடும் போலிருக்கும்.

''நான் ஒன்றும் குழம்பிப் போய் விடவில்லை. ஆண்குதிரையைப் போல் ஓட்டமெடுக்கக் கூடிய விலங்கு எதுவுமே இல்லை. எங்களுடைய நரி அலமாரிக்குள் புகுந்து சர்க்கரை திருடுவதற்கு மேல் ஒன்றும் செய்யவில்லை. நான் நன்றாய் அறிந்த உண்மை இது—எங்களுடைய நரி முழுதாய் மூன்று ஆண்டுகளுக்கு எங்களுடன் இருந்தது. ஓநாய்களுங்கூட இப்படித்தான்; இந்த விலங்குகளில் எவையும் வீட்டிலிருந்து ஓட்டமெடுக்கவில்லை.''

இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியவில்லை.

சோன்யாவுக்கும் எனக்கும் புட்டாளம்மை ஏற்பட்டு தாள்கள் வீங்கி விட்டன நாங்கள் வெளியே எங்கும் போகக் கூடாதென்று சொல்லி விட்டார்கள். ஏனையோரிடமிருந்து தனிமை செய்யப் பட்டு எங்கள் அறைக்குள் அடைக்கப் பட்டோம். 'அம்மை அறை' என்று அட்டையில் எழுதி அறைக் கதவில் மாட்டப்பட்டது.

அது வசந்த பருவம், வெயில் காய்ந்தது. கவை வால் குருவிகள் திரும்பி வந்து விட்டன, லிலாக் மலர்கள் எங்கும் பூத்திருந்தன. எங்கள் நண்பர்கள் எல்லாரும் மேதினம் கொண்டாடுவதற்காகப் புல்வெளிக்குப் புறப்பட்டார்கள்.

அவர்களுடன் சேர்ந்து யூலியாவும் நத்தாஷாவும் கிளம் பிஞர்கள். சிவப்பேறிய கன்னங்களோடும் வெயிலில் பழுத்த மேனியோடும் இருவரும் சன்னலுக்கு ஓடி வந்து முகத்தைக் கண்ணுடியில் வைத்தழுத்தி இளித்துக் கொண்டு பேசிஞர் கள். பிறகு சுபாரியைச் சன்னலருகே இட்டு வந்தார்கள். எங்கள் முகங்களது விஞேத வடிவத்தை அது சன்னல் கண் ணுடி வழியே வியப்புடன் உற்றுப் பார்த்தது.

சிறுவர் சிறுமிகளை ஏற்றிக் கொண்டு வரிசையாய் வண்டி கள் சாலையில் சென்று கொண்டிருந்தன. மிஹாய்லொவ்க்கா விலிருந்து வந்திருந்த ஆசிரியர் ஒருவர் கூடச் சென்ருர், குழந்தைக் குழுவின் ஆசிரியை கித்தாரை எடுத்துக் கொண்டு போஞர்... புகைப்படக் காமிராவை எடுத்து வந்திருந்தார் ஒருவர். கூட்டம் மேலும் மேலும் அதிகமாகிச் சென்றது.

வசந்த பருவத்தின் குதூகலமும் விறு விறுப்பும் எங்கும் நிறைந்திருந்தன.

நத்தாஷா இந்த வண்டிகளில் ஒன்றில் ஏறிக் கொண் டாள். யூலியாவும் டாக்டரின் குழந்தைகளில் இருவரும் குதிரைகளில் சென்ருர்கள். அம்மா சாலையிலே நின்று கையை வீசி வழியனுப்பியதோடு யூலியாவைப் பார்த்து ஒரு விரலை ஆட்டிக் காட்டிஞர். பிறகு எங்களுக்குத் தாடையில் மருந்து வைத்துக் கட்டுவதற்காக எங்கள் அறைக்குள் வந்தார்.

''யூலியாவைப் பார்த்து ஏன் அம்மா விரலை ஆட்டினுய்?''

''அவள் குதிரையில் சவாரி செய்கையில் எச்சரிக்கை யுடன் இருப்பதற்காக.''

வண்டியின் பின்னுல் யூலியா குதிரையில் போய்க் கொண் டிருந்தாள். அம்மா அவளை எச்சரிக்கை செய்ததை நினைவில் கொண்டிருந்தாள். ஆனுல் டாக்டரின் குழந்தைகள்—எம காரப் பிள்ளைகளாயிற்றே அவர்கள்!—அவளைச் சும்மா விட வில்லை, தைரியம் இருந்தால் போட்டிக்கு வரும்படி சவால் விட்டுக் கொண்டிருந்தார்கள்.

யூலியா என்ன செய்வாள்? ஏற்றுக் கொண்டாள்.

வண்டிகளை முன்னுல் ஓட விட்டனர். பிறகு வட்டமாய் நின்று கொண்டு போட்டியை எங்கே நடத்துவதென்று விவாதித்தனர்.

முந்திய இரவில் மழை பெய்திருந்தது. ஈரமான வெளி மலைகள் வரை விரிந்து சென்றது, பிறகு மலைக் கணவாயின் இருளுக்குள் மறைவது போல் தோன்றியது. சாலை மறைந்த இடத்தில் காய்ந்த மரம் ஒன்று நிற்பது மங்கலாகத் தெரிந் தது.

''அந்த மரம் வரை செல்வோம்.''

மூன்று வரை எண்ணிவிட்டுப் பாய்ந்தோடினுர்கள்.

''அதோ பாருங்கள், போட்டி நடத்துகிறுர்கள்!'' என்று வண்டிகளில் சென்ற சிறுவர் சிறுமியர் கத்தினர்.

சாலையின் பக்கத்தில் மூன்று பசுங் கன்றுகள் நின்று கொண்டிருந்தன. அவை குதிரைகள் ஓடி வருவதைத் திரும்பிப் பார்த்துவிட்டுக் காத்திருந்தன. பிறகு அவற்றின் வால்கள் மேல் நோக்கி எழுந்தன, மாவென்று கத்தி விட்டு அவை துள்ளிக் குதித்தோடின.

துரதிருஷ்ட வசமாக, இந்தக் கன்றுகளில் ஒன்று பின் தங்க நேர்ந்து, பிறகு திடுமெனப் பாய்ந்து சுபாரியின் தலைக் கடியில் குறுக்கே ஓடிற்று. பாய்ந்தோடி வந்த சுபாரி இடறிக் கொண்டு மண்டியிட்டு விழுந்தது.

சேண இருக்கையிலிருந்து யூலியா மேலே பறந்து சென்று தரையிலே விழுந்து உருண்டாள்.

நத்தாஷா பிற்பாடு பூரா விவரத்தையும் கூறினுள்: ''நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கே அவள் தரையில் கிடக்க தர்பூசனிப் பழத்தைப் போல் அவள் தலை உருண்டு ஓடிற்று. நான் பதைத்துப் போய் விட்டேன்! வண்டியிலிருந்து கீழே குதித்து அவளிடம் ஓடினேன், பிறகு தான் உருண்டு ஓடியது அவள் தொப்பி என்பது தெரிந்தது. கண்கள் கெட்டியாய் மூடியிருக்க யூலியா தரையிலே கிடந்தாள். உடம்பை உதறிக் கொண்டு சுபாரி அவள் பக்கத்தில் நின்றது. பிறகு அது மூக்கால் அவளைத் தள்ளிப் புரட்டப் பார்த்தது. அதற்குள் அங்கே ஓடி வந்து சேர்ந்தவர்கள் அதை அவளிடமிருந்து விலக்கி ஓட்டினர். 'சுபாரியைப் பிடியுங்கள்!' என்று நான் கூச்சலிட்டவாறு அதை விரட்டிக் கொண்டு ஓடினேன்.''

அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட ஆசிரியர்கள் சிறுமி நத்தாஷா குதிரையின் பின்னுல் ஓடக் கண்டனர்.

மிஹாய்லொவ்க்காவிலிருந்து வந்த ஆசிரியர் நத்தாஷாவை விரட்டிக் கொண்டு ஓடினுர். காணக் கண் கொளாக் காட்சியாகவே இருந்தது: குதிரை ஒன்று சாலையிலே கெச்சு நடை போட்டு ஓடிக் கொண்டிருந்தது; அதன் பின்னுல் கோட்டுப் பொத்தான்கள் கழன்றிருக்க, தொப்பியைப் பின் பக்கம் தள்ளி விட்டுக் கொண்டு கொழுக்குமுழுக்கான ஒரு சிறுமி ஓடினுள்; அவளுக்குப் பின்னுல் சற்று தொலைவில் ஆசிரியர் ஒருவர் மூக்குக் கண்ணுடியை ஒரு கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டு விழுந்தடித்து ஓடிக் கொண்டிருந்தார்.

''நத்தாஷா! நத்தாஷா! இதைக் கேள்! ஓடாதே!''

அவளை நிற்கச் சொல்லி அவர் கையை வீசிக் காட்டினுர். அவருடைய மூக்குக் கண்ணுடி கழன்று கீழே விழுந்துவிட்டது. பிறகு கேட்பானேன்! கண்களைச் சுளித்துக் கொண்டார் ஆசிரியர், எதற்கும் ஏலாதவராய் பரபரக்க விழித்தார், பிறகு

மண்டியிட்டு அமர்ந்து கொண்டு வெறிக்கப் பார்த்தவாறு துழாவினுர்.

இதற்கிடையில் நத்தாஷா மனம் தளராமல் அவளது சிறிய பொதியுறைகளில் தத்து புத்தென்று ஓடினுள். சுபாரி தன் கண்ணிலிருந்து தப்பி விடக் கூடாதென்று அவள் வேகமாய் ஓட முயற்சி செய்தாள்.

''சுபாரி! தங்கமே! ஓடாதே நீ! ஒரேயொரு கணம் நில்லேன்!''

அவள் கூறியது காதில் விழுந்தது போல் சுபாரி வேகத்தைக் குறைத்துக் கொண்டது, முடிவில் ஓடாமல் நின்றது. தலையைத் திருப்பி அந்தப் பசுங் கன்றுகளை உற்று நோக்கிற்று.

நத்தாஷா இந்த வாய்ப்பை நழுவ விட்டுவிடக் கூடாது! அவளுக்கு இடையூருக இருந்த பொதியுறைகளை அவள் கழற்றி எறிந்தாள். ஒன்று, இரண்டு—இரண்டும் இருவேறு திசைகளில் பறந்தன!

நத்தாஷா நெருங்கி வந்து விட்டாள். ஓ, சூடு பொறுக்க முடியவில்லையே! உடனே அவளது கோட்டும் தொப்பியும் பொதியுறைகளைப் பின்தொடர்ந்து காற்றிலே மிதந்து சென்றன.

''சுபாரி! தங்கம்! இங்கே பாரேன்!''

சட்டையின் அடிமுனையைத் தூக்கி, அதில் ஓட்ஸ் எடுத்து வருவது போல் பாவனை செய்தாள். குதிரை தலையைச் சாய்த்துக் கொண்டு நம்பிக்கை இல்லாதது போல் ஓரக் கண்ணுல் அவளைப் பார்த்தது. உடனே தலையை ஆட்டிவிட்டு ஒரு பக்கமாய் ஒதுங்கி ஓடிற்று. பிறகு திரும்பவும் பார்க்கலாமென்று நின்றது.

''இந்தா! இந்தா!'' என்று பதற்றத்துடன் கூப்பிட்டாள் நத்தாஷா. சட்டையில் ஓட்ஸை சேர்த்துக் கலப்பது போல் பாசாங்கு செய்தவாறு மேலும் மேலும் அதனிடம் நெருங்கிச் சென்ருள்.


சுபாரி அவளிடம் கழுத்தை நீட்டிற்று, அதன் நாசிகள் துடிக்க அவள் சட்டைக்குள் எட்டிப் பார்த்தது.

அதே தருணத்தில் நத்தாஷா லகானைப் பற்றிக் கொண்டாள். சுபாரி அகப்பட்டுக் கொண்டுவிட்டது! இனி அவள் பாசாங்கு செய்யத் தேவையில்லை, ஆகவே சட்டை அடிமுனையைக் கீழே விட்டாள். சுபாரி தான் ஏமாற்றுப் பட்டு விட்டதை ஒத்துக் கொள்ள மறுத்து தொடர்ந்து ஓட்ஸை தேட முற்பட்டது. நத்தாஷாவின் முகத்திலே மூச்சை விட்டுச் சீறி முகர்ந்து பார்த்தது, அவள் சட்டை அடிமுனையைப் பற்களால் கடித்து இழுத்தது. அவள் வயிற்றிலுங்கூட உதட்டால் மெல்லக் கடித்து அவளை முட்டிற்று. பொறுக்க மாட்டாமல் நத்தாஷா முடிவில் அதன் பளபளப்பான தாடையில் ஓர் அறை கொடுத்தாள்.

''அசடே, தலையைக் குனிந்தால் என்னவாம்? நான் லகானை உன் தலை வழியே மாட்டி இழுக்க வேண்டும்!''

யாவற்றையும் சரி செய்து விட்டாள் அவள். இனி அதன் மேல் ஏறி உட்கார்ந்தாக வேண்டும். ஆனால் இது எளிய காரியம் அல்ல. ஏனெனில் அங்கவடிகள் அவள் தலைக்கு மேல் அல்லவா இருந்தன. நத்தாஷா சுற்றிலும் திரும்பிப் பார்த்தாள்.

சாலைக்கு அருகில் ஒரு பெரிய பாறைக் கல் கிடந்தது. சுபாரியை அவள் அதனிடம் அழைத்துச் சென்று, சேண இருக்கையின் மீது ஏறி அமர்ந்து கொண்டாள். குதிரையை அவள் திருப்பி ஓட்டிச் சென்றாள், அவள் கன்னங்கள் சிவந்திருந்தன. சாலையில் ஆசிரியரை அவள் சந்தித்தாள். அவளுடைய கோட்டையும் தொப்பியையும் பொதியுறைகளையும் எடுத்து வைத்துக் கொண்டு, இவை எல்லாம் எப்படி இங்கே வந்திருக்க முடியுமென்று புரியாமல் திகைத்தவாறு வந்து கொண்டிருந்தார் அவர். மூக்குக் கண்ணாடி அவருக்குக் கிடைக்கவில்லை. கண்களைச் சுளித்துக் கொண்டு நத்தாஷாவை உற்றுப் பார்த்தார்.



நத்தாஷா தன் மீது கோபப்பட்டுக் கொண்டுதான் ஆசிரியர் பேசாமல் போகிறுர் என்று நினைத்தாள். லகானை இழுத்துச் சுபாரியை நிறுத்திவிட்டு அவள் இறுமிக் கொண்டாள்.

ஆசிரியர் எதையும் கவனிக்கவில்லை.

''என்னுடைய பொதியுறைகளைத் திருப்பிக் கொடுங்களேன்'' என்றுள் நத்தாஷா. ''அதற்குள் வீட்டுக்கா திரும்புகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஓகோ, நீயா அது? குதிரை மீது சவாரி செய்து வரும் உன்னை நான் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. எங்கே ஓடிஞய் நீ? சுபாரி தாஞகவே வீட்டுக்குப் போய்ச் சேராதா?''

''அது போய்ச் சேர்ந்து விடும் என்று தானே பயந்தேன். அதைக் கண்டதும் வீட்டில் எல்லோரும் பதறிப் போய் விடுவார்களே! யூலியா விபத்தில் சிக்கி உயிரிழந்து விட்டாள் என்றல்லவா வீட்டில் அம்மா நினைத்துக் கொள்வார்? அதஞல்தானே அதை வீட்டுக்குப் போக விடாமல் விரட்டிச் சென்று பிடித்தேன்.''

''ஓ, கெட்டிக்காரப் பெண்ணாய் இருக்கிறாயே நீ! இந்த எண்ணம் என் தலையில் உதிக்கவே இல்லை. நீ ஓடிச் சென்று சாலையிலே அதை மடக்கிப் பிடித்தாயா?''

குதிரையின் பக்கத்தில் ஆசிரியர் நடந்து வந்தார். சுபாரியைத் தான் ஏமாற்றிப் பிடித்தது பற்றி நத்தாஷா அவரிடம் சொன்னாள். அதை உருக்கமாகக் கேட்டவாறு ஆசிரியர் அந்தச் சிறுமியின் களங்கமற்ற முகத்தை உற்று நோக்கினார். முடிவில் தலையைப் பின்பக்கம் சாய்த்துக் கொண்டு மகிழ்ச்சி பொங்கச் சிரித்தார்.

''நீ பலே கெட்டிக்காரி! ஆனால் நான் மூக்குக் கண்ணாடியைத் தொலைத்து விட்டு என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடுகிறேன்!''

''எங்கே தொலைத்தீர்கள்?''

''அவ்விடத்துக்கு அருகில்தான், எங்கோ விழுந்தது அது.''

''நான் தேடிப் பார்க்கிறேன். நீங்கள் சுபாரியைப் பிடித்துக் கொள்ளுங்கள்.'' என்று சொல்லி நத்தாஷா கீழே இறங்கினாள். பிறகு குனிந்து தலையைக் கவிழ்த்துக் கொண்டு சாலையில் அப்படியும் இப்படியும் நடந்து சென்று தேடினாள்.

''இதோ இருக்கிறதே!'' என்று கூவி சேறு படிந்த மூக்குக் கண்ணாடியைக் கையில் எடுத்தாள்.

''அப்பாடா போன உயிர் திரும்பி வருகிறது எனக்கு'' என்றார் ஆசிரியர். அவர் குரலே இப்போது வேறு விதமாய் ஒலித்தது. கைக் குட்டையால் மூக்குக் கண்ணாடியை நன்றாய்த் துடைத்துப் போட்டுக் கொண்டு நத்தாஷாவைக் கேட்டார் அவர்: ''இனி நாம் எங்கே போகிறோம்? வீட்டுக்கா? அல்லது யூலியாவிடமா?''

''வீட்டுக்குப் போய் என்ன செய்வது? இங்கு நடைபெற்றதை நீங்கள் வீட்டிலே யாரிடமும் சொல்ல வேண்டாம். வீணில் யூலியாவைத் திட்டுவார்கள், அதோடு சுபாரியையும் எங்களிடமிருந்து வாங்கிக் கொண்டு விடுவார்கள். நாம்

யூலியாவிடம் போகலாம். நீங்களும் என் பின்னுல் குதிரையில் ஏறிக் கொள்ளுங்களேன்... இல்லே, அப்படி ஏறக் கூடாது! இடது பக்கத்திலிருந்து ஏற வேண்டும்!''

நத்தாஷாவின் கண்டிப்பான உத்தரவுகளைக் கேட்டுச் சிரித்துக் கொண்டு ஆசிரியர் அவளுக்குப் பின்னுல் ஏற முற்பட்டார். சுபாரி தலையைத் திருப்பி ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தது. இந்த ஆளுக்குக் குதிரையில் ஏறிப் பழக்கம் இல்லை என்பதை புரிந்து கொண்டது அது. அவர் காலைத் தூக்கியதும், வாய்ப்பைத் தவற விடக் கூடாதென்று சட்டென அவர் தொடையில் அது கடித்தது, ஆசிரியர் எப்படியோ மேலே ஏறிச் சேண இருக்கையின் பின்பக்கத்தில் உட்கார்ந்து, தொடையைத் தடவிக் கொண்டார். பிறகு மூக்குக் கண்ணுடியைச் சரி செய்து கொண்டார்.

''லகானை நீயே பிடித்துக் கொள் எனக்கு ஓட்டத் தெரியாது'' என்று சங்கடப் பட்டுக் கொண்டு கூறினுர் அவர்.

இப்போது நத்தாஷாவும் தலையைத் திருப்பி ஆச்சரியத்தோடு அந்த விநோதமான பெரியவரைப் பார்த்தாள்.

யூலியாவின் தலையில் பட்ட காயம் ஆறிற்று; வாழ்க்கை திரும்பவும் பழையபடி நடைபெற ஆரம்பித்தது. ஆனுல் சிறிது காலத்துக்கு எல்லாம் அவளுக்கு அடிக்கடி தலைவலி வரத் தொடங்கிற்று.

''முன்பு அடிபட்டபோது ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாய் இருந்தாலும் இருக்கும்'' என்றுர் டாக்டர்.

பிறகு குளிர் காலத்தில் சோன்யா கையை முறித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

ஒரு நாள் மாலையில் அவள் கிராமத்துக் கால்நடை குடிநீர் தொட்டி இருந்த இடத்தின் வழியே குதிரையில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள்.

அங்கே பெண்குதிரைகள் சில இருந்தன. அவற்றுக்கு முன்னுல் சுபாரி தன் அருந் திறலைக் காட்ட விரும்பி பனிக்

கட்டித் தரையில் நடனமாட ஆரம்பித்தது, வழுக்கியடித்து விழுந்தது.

கீழே விழுந்த சோன்யா கையை முறித்துக் கொண்டு விட்டாள். மணிக் கட்டிலும் முன்கையிலுமாக இரு இடங்களில் எலும்பு முறிந்து போயிற்று. பிற்பாடு இதைப் பற்றி சோன்யா எங்களிடம் சொன்னாள்: ''வலி தாங்கமுடியாமல் போய் என் வாயில் இனிப்பான உணர்ச்சி உண்டாயிற்று, புதிய விண்மீன்கள் மின்னிப் பளிச்சிடக் கண்டேன்.''

எங்களுக்குத் தெரிந்தவர் ஒருவர் அங்கே சென்று கொண்டிருந்தார். அவர் ஓடி வந்து சுபாரியும் சோன்யாவும் எழுந்து நிற்க உதவினார்.

''வலிக்கிறதா?''

''ஆமாம்'' என்று இறுக மூடிய பற்களுக்கு இடையிலிருந்து அவள் முணுமுணுத்தாள். ''ஐயோ! கையைத் தொடவேண்டாம்! வீட்டுக்குப் போய்ச் சேருவோம், புறப்படுங்கள்!''

அம்மாவும் நானும் சிக்கல் பிரித்து நூலைச் சுற்றிக் கொண்டிருந்தோம். திடீரென்று கதவு திறக்கப்பட்டு ஆவித் திரள் அறைக்குள் புகுந்தது. பிறகு சோன்யா எச்சரிக்கையோடு கையை ஏந்திப் பிடித்துக் கொண்டு அறைக்குள் வந்தாள். எங்களுக்குத் தெரிந்த அந்த நண்பர், இன்னொரு பக்கத்தில் அவளைத் தாங்கிப் பிடித்திருந்தார்.

சோன்யாவின் தொப்பியைக் காணவில்லை, அவள் முடிகள் கலைந்திருந்தன. புருவங்களில் ஒன்று முடியைத் தொடும் அளவுக்கு உயர்ந்து எழுந்திருந்தது, அம்மாவுக்குரிய ஒரு பழக்கம் அப்படியே மகளிடம் இருக்கக் கண்டோம்.

''அம்மா, கவலைப் படாதே நீ'' என்றாள் அவள். ''கையை முறித்துக் கொண்டு விட்டேன், அவ்வளவுதான். குற்றம் சுபாரியினுடையது அல்ல, வழுக்கி விழுந்ததில் அதற்கும் அடிபட்டு விட்டது.''

அம்மாவின் கண்கள் பீதியால் விரிந்தன. ''ஒரு பாதி

உயிர் ஏற்கெனவே போய் விட்டது எனக்கு'' என்று அம்மா முனகிக் கொண்டார். ''உங்களையும் உங்கள் சுபாரியையும் பற்றிய கவலையிலே பாதி உயிர் போய் விட்டது எனக்கு.... என்ன செய்வதென்று தெரியவில்லை!''

அதன் பிறகு வீட்டில் ஏற்பட்ட அமளியை என்னென்பது! உதவியாய் இருக்க முயன்று எல்லோரும் அங்கும் இங்கும் ஓடினோம். சோன்யாவின் ஆட்டுத் தோல் கோட்டைக் கழற்ற அம்மா முயற்சி செய்தார். ஆனால் கோட்டுக் கையை அவர் தொட்டதுமே சோன்யா வீறிட்டுக் கத்தினாள். முடிவில் அம்மா அந்த கோட்டின் கையைக் கத்தரித்து எடுக்க வேண்டியிருந்தது. சோன்யாவின் கை வீங்கிப் போய் மரக்கட்டை போல் தடித்திருந்தது. அந்தக் கையை அவள் வெந்நீரில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று யாரோ சொல்லவே, உடனே அவ்வாறே செய்யப் பட்டது. பிறகு அது பற்றி வாக்குவாதம் எழுந்தது.

''எதற்காக வெந்நீர்? குளிர்ந்த நீரில் அல்லவா வைத்துக் கொள்ள வேண்டும்?''

அதே போல் குளிர்ந்த நீரில் கையை விடும்படி அவளிடம் சொன்னார்கள். வலி தாங்கமாட்டாமல் அவள் நீல மேனியளாகி வந்தாள். முடிந்த வரை சப்தம் போடாமல் இருந்து பார்த்து விட்டு, முடிவில் வாய் விட்டு அழுதாள்:

''ஐயோ! வலி பொறுக்க முடியவில்லையே!''

அப்போது அப்பாவும் எங்களது பருத்த டாக்டரும் ஓடி வந்து சேர்ந்தனர். டாக்டர் குனிந்து சோன்யாவைப் பார்த்து விட்டு, இப்படியா செய்வார்கள் என்று கண்டனம் செய்தார். உடனே தண்ணீர் தூர எடுத்துச் செல்லப் பட்டது. கட்டுத் துணிகளையும் சிறு குச்சிகளையும் சுண்ணத்தைப் போல் வெள்ளையாய் இருந்த ஏதோ ஒன்றையும் தமது கைப் பையிலிருந்து வெளியே எடுத்தார்.

கோட்டைக் கழற்றி விட்டு சட்டைக் கைகளை மடக்கி விட்டுக் கொண்டார் அவர். டாக்டர் பிறகு சோன்யாவின்

மீது குனிந்து கொண்டு வேலை செய்ய, அம்மாவும் அப்பாவும் அவளை அசையாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டார்கள்.

''ஆ-ஆ!'' என்று உச்சக் குரலில் கத்திய சோன்யா காலால் டாக்டருடைய வயிற்றில் உதைத்தாள். டாக்டர் ரப்பர் பந்து போல் அறையின் குறுக்கே உருண்டார்.

''ஒரேயொரு கணம்தான்! நீ அமைதியாக இருக்க வேண்டும்!''

வலிதாங்காமல் சோன்யா மூர்ச்சித்து விட்டாள்.

அவள் கரத்தைச் சிம்புகளில் வைத்துக் கட்டினார்கள். பிறகு மருந்து கொடுத்து அவளைப் படுக்க வைத்தார்கள். ஆனால் அவளால் படுத்திருக்க முடியவில்லை. கை கடுமையாக வலித்தது, இரவு முழுவதும் அறையில் மேலும் கீழுமாய் நடந்து கொண்டிருந்தாள். அவ்வப்போது நான் விழித்தெழுந்து பார்த்தேன், கட்டு போடப்பட்ட கையை ஏந்திப் பிடித்துக் கொண்டு அவள் அப்படியும் இப்படியுமாய் நடந்தவாறு முனகினாள்:

''ஐயோ! ஐயோ!''

சுபாரி எங்களது மெய் நண்பனாய் இருந்து வந்தது. எந்த அளவுக்கு நாங்கள் அதைச் சார்ந்திருந்தோமோ, அதே அளவுக்கு அதுவும் எங்களைச் சார்ந்திருந்தது.

''சுபாரி ஒரு போதும் நம்மை நட்டாற்றில் விட்டு விடாது'' என்று நாங்கள் அடிக்கடி கூறிக் கொள்வது வழக்கம்.

மெய்தான், சுபாரி எங்களை ஒரு போதும் அப்படி விடவில்லை.

நாங்கள் அதனுடன் அவ்வளவு நேரம் செலவிட்டு வந்ததும், அதற்குச் செல்லம் கொடுத்து வந்ததும் காரணமாக இருக்கலாம்; அல்லது அது அவ்வளவு கெட்டிக்காரக் குதிரையாய் இருந்ததென்பது காரணமாக இருக்கலாம். எப்போதுமே அது எங்களைப் பிழையின்றி புரிந்து கொண்டது.

அடிக்கடி நாங்கள் அதனுடன் பேசினோம், எங்கள் குரலின் தொனியிலிருந்து அது எங்களது மன நிலையைப் புரிந்து கொண்டுவிடும் அளவுக்கு நுண்ணுணர்வு கொண்டிருந்தது.

ஒரு நாள் நத்தாஷாவையும் என்னையும் வேலையாய் நகரத்துக்கு அனுப்பினார்கள். நான் கீழே இறங்கி சந்தையில் சாமான்கள் வாங்கச் சென்றேன். சுபாரியின் மீது இருந்த நத்தாஷா, அதை ஒரு ஓரத்துக்கு ஓட்டிச் சென்று நான் திரும்பி வருவதற்காகக் காத்திருந்தாள்.

சிறிது நேரத்துக்குப் பிற்பாடு நான் திரும்பிப் பார்த்த போது, சில ஆட்கள் நத்தாஷாவுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு சுபாரியைத் தட்டிக் கொடுத்து விட்டுச் சிரித் ததைக் கண்டேன்.

வேண்டியவை யாவற்றையும் நான் வாங்கி முடித்ததும் நாங்கள் நிழலில் உட்கார்ந்து கொண்டோம். சுபாரிக்குக் கொஞ்சம் குளோவர் புல் கொடுத்து விட்டு, எவ்வளவு பணம் செலவிட்டிருந்தேன் என்று கணக்கிட்டுச் சரி பார்த் தேன். வெயில் அடங்குவதற்காக நாங்கள் அங்கே காத்திருந்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டோம்.

அப்போது நான் மிதியடி தயாரிப்பாளரிடம் போய் வர வேண்டுமென்று திடுமென எனக்கு நினைவு வந்தது. நான் வாங்கியவற்றையும் சுபாரியையும் பார்த்துக் கொள்ளும்படி நத்தாஷாவை விட்டு வைத்துவிட்டு நகரின் குறுக்கே விரைந்து சென்றேன்.

நான் திரும்பி வருவதற்குள் இருட்டி விட்டது.

சில ஆட்கள் அவளிடம் திரும்பவும் வந்ததாகவும், அவள் எங்கே வசித்தாளென விசாரித்ததாகவும் நத்தாஷா கூறினாள்.

''ஏரிக் கரையிலே வசிக்கிறோம் என்று சொன்னேன். அவர்களுடைய குதிரையை நீ பார்த்திருக்கவேண்டும், பிர மாதமாய் இருந்தது!''

அந்த ஆட்களைப் பற்றி எனக்குக் கொஞ்சம் கவலை யாகவே இருந்தது. எங்களது அண்டை வீட்டுக்காரர்களது

குதிரைகள் இரண்டைத் திருடர்கள் கடத்திச் சென்று விட்டதாய் அதற்கு முந்திய நாளன்றுதான் கூறக் கேட்டிருந்தேன் நான்.

''சீக்கிரம், நத்தாஷா! நாம் உடனே புறப்பட்டாக வேண்டும். வழியில் சுபாரிக்கு எதுவும் நேர்ந்து விடக் கூடாது'' என்றேன் நான்.

அவசரமாய் சாமான்களை மூட்டை கட்டினோம். யாவற்றையும் சேண இருக்கையின் பையினுள் வைத்துவிட்டு, தண்ணீர் காட்டுவதற்காகச் சுபாரியை நாங்கள் கிணற்றுக்கு அழைத்துச் சென்ற போது நன்றாகவே இருட்டி விட்டது.

இருபக்கத்திலும் மரங்களைக் கொண்ட இருண்ட சாலையில் நாங்கள் மலை இடுக்குக்குச் சென்றாக வேண்டும். பிறகு செங்குத்தான பாதையில் குன்றின் மீது ஏறிச் சென்றபின் திறந்த வெளியைக் கடந்து ஏரியை அடைந்தாக வேண்டும்.

மரச்சாலை வழியே நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். சுபாரி அதற்குரிய வேகத்தில் பாய்ந்தோடிற்று.

என் இடுப்பைப் பிடித்துக் கொண்டு என் பின்னால் அமர்ந்திருந்தாள் நத்தாஷா. சேண இருக்கை இல்லை.

இரண்டு மைல் தூரம் சென்றதும் எங்களை யாரோ பின் தொடர்ந்து வருவது சந்தேகத்து இடமின்றி எனக்குத் தெரிந்தது.

''நத்தாஷா, நீ முன்பக்கத்துக்கு வந்துவிடு'' என்று சொல்லிச் சுபாரியை நிறுத்தி, அவள் என்னைக் கடந்து வருவதற்குப் படியாய் அமையும் பொருட்டு எனது வெறும் காலை நீட்டினேன்.

''நான் ஏன் முன்பக்கம் வர வேண்டுமென்கிறாய்?''

''நாம் அதி வேகமாய்ச் செல்லப் போகிறோம், நீ என்னையும் இழுத்துக் கொண்டு கீழே விழுந்தால் என்ன ஆவது? ஆனால் முன்பக்கத்தில் உட்கார்ந்தாயானால் சுபாரியின் பிடரி முடிகளை நீ பிடித்துக் கொண்டிருக்கலாம்.''

நத்தாஷா என்னைத் தாண்டிக் கொண்டு முன்புறத்துக்கு வந்தாள்.

''சுபாரி, புறப்படுவோம்!''

சுபாரி இருளுக்குள் பறந்தோடிற்று. என்றுமே அது அவ்வளவு அசுர வேகத்தில் பாய்ந்தோடியதில்லை.

காற்று வீசிற்று, நாங்கள் பறந்து சென்ற போது மரங்கள் பின்னேக்கிச் சாய்வது போல் தோன்றின.

விரைவில் மலை இடுக்குக்குப் போய்ச் சேர்ந்து விட்டோமானல், அங்கே அரவை ஆலையாளரான எங்கள் நண்பர் வீட்டில் இரவைக் கழிக்கலாம் என்று நினைத்தேன்.

காற்று என் முதுகிலே வீசிற்று. புதிதாய் வந்து மோதிய காற்றுடன் கூட குளம்புகளின் தடதடப்பு மேலும் மேலும் எங்களை நெருங்கி வருவது தெரிந்தது.

எங்களை விரட்டி வருவோரிடமிருந்து தப்ப முடியாது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அபாயகரமான ஒரு தந்திரம் செய்து பார்ப்பதென முடிவு செய்தேன்: ஒளிந்து கொண்டு நின்று அவர்கள் எங்களைக் கடந்து சென்றுவிடும் படி விடுவதெனத் தீர்மானித்தேன்.


சாலையிலிருந்து கீழே இறங்கிச்சென்று கிளைகள் விரிந்து நின்ற ஒரு மரத்துக்குப் பின்னல் நாங்கள் ஒளிந்து கொண்டோம்.

குளம்புகளின் தடதடப்பு அருகாமையில் வந்து விட்டது. சுபாரியின் காதுகள் விறைத்து நின்றன.

திடுமென எனக்கு உள்ளுக்குள் பகீரென்றது. அவர்களுடைய குதிரை பெண் குதிரையாக இருந்தால் என்னுவது? சுபாரி நிச்சயம் கனைக்குமே.

''நாம் ஏன் ஒளிந்து கொண்டிருக்கிறோம்?'' என்று நத்தாஷா என் காதுக்குள் கேட்டாள்.

''நத்தாஷா நீ பேசாதே சப்தமின்றி இருந்தாக வேண்டும் நாம்! சுபாரி, நீயும் அமைதியாய் இரு!'' என்று கவலை



தோய்ந்த குரலில் நான் முணுமுணுத்துக் கூறியவாறு அதன் சூடான கழுத்தைத் தடவிக் கொடுத்தேன்.

நிலாவொளியில் ஒரு நிழல் சென்றது.

சுபாரியின் காதுக்குள் நத்தாஷா ஏதோ சொன்னாள். நாங்கள் இருவரும் இலைகளைப் போல் நடுங்கிக் கொண்டிருந் தோம்.

எங்களை விரட்டி வந்த பெண் குதிரை சாலையின் திருப் பத்துக்குள் மறைந்தது.

''போய் விட்டனர், இல்லையா?''

''இரு! இன்னும் சற்று நேரம் நாம் காத்திருக்க வேண்டும்.''

அப்போது சுபாரி தலையை உயர்த்திக் கவனமாய்க் காது கொடுத்துக் கேட்டுவிட்டு பலமாய்க் கனைத்தது.

நாங்கள் இரு வரும் துணுக்குற்றுப் போனோம்.

ஒன்று, இரண்டு, பிறகு மூன்ருவதுமாய், மூன்று குதிரைகள் பதிலுக்குக் கனைத்தன. சாலையிலே சில வண்டிகள் வந்தது தெரிந்தது. அவை ஏரியை நோக்கிச் செல்வதாய் நினைத்த நான் பெரு மகிழ்ச்சி கொண்டேன். இனி நாங்கள் அரவை ஆலையாளரிடம் செல்ல வேண்டியதில்லை, அச்சமின்றி இந்த வண்டிகளுடன் சேர்ந்து வீட்டுக்குப் போய்விடலாம்.

நாங்கள் அரவை ஆலையையும் மலைப்பிளவையும் கடந்து சாலை இரு கிளைகளாகப் பிரியும் இடத்துக்கு வந்து சேர்ந்தோம். திடுமென வண்டிகள் இடப் பக்கம் திரும்பின. மீண்டும் நாங்கள் தனியே விடப்பட்டோம்.

முழு நிலவு ஒளிர்ந்தது. எங்கள்முன்னுல் சாலை நேராய் வெள்ளை வெளேரென்று தெரிந்தது.

"சுபாரி! ஓடு பார்ப்போம்!" கடைசி வண்டி பார்வையிலிருந்து மறைந்ததும் குளம்புகளின் அந்தப் பழைய தடதடப்பு எங்களுக்குப் பின்னுல் திரும்பவும் ஒலித்தது.

சுபாரியின் பிடரியை நத்தாஷா கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். நான் எனது முழங்கால்களைக் குதிரையின் விலாவுடன் வைத்து அழுத்திக் கொண்டு சுபாரியை அதன் விருப்பம் போல் ஓடும்படி விட்டேன்.

நிலாவொளி வீசிய சாலையில் ஒரு கரு நிழல் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

"சுபாரி, உன்னையேதான் நம்பியிருக்கிறேம்!"

சுபாரி அதி வேகமாய் பறக்கலாயிற்று. எங்களது கவலையும் அச்சமும் இப்போது எங்களிடமிருந்து அதற்கு மாறிச் சென்று விட்டன. ஆவேசப் போட்டாப் போட்டி நடந்தேறியது.

விரைவில் கிராமத்தின் விளக்குகள் கண்ணுக்குத் தெரியலாயின நாங்கள் எங்கள் தெரு வழியே பறந்து மூலையில் திரும்பி எங்களது வேலிக் கதவுக்கு எதிரே இருந்த புல் பரப்பை அடைந்ததும்தான் எங்களுக்கு சுய நினைவு திரும்பிற்று.

சுபாரி வெடுக்கென நிற்கவே நாங்கள் அதன் தலேக்கு நழுவிச் சென்றுவிட்டோம்.

ஓடி வரும் பாதங்களின் ஓசை கேட்டது, லாந்தரை எடுத்துக் கொண்டு வேலிக் கதவருகே யாரோ வரக் கண்டோம்.

''ஆம், அவர்கள் வரும் சப்தம் கேட்டது எனக்கு! சுபாரி தலே தெறிக்க ஓடி வந்து வேலிக்கதவின் முன்னுல் நிற்கும் ஓசை காதில் விழுந்தது.'' சோன்யாவின் குரல் அது.

சுபாரி கனேத்துக் கொண்டது.

''காதில் விழுகிறதா? சுபாரிதான்! திரும்பி வந்துவிட்டார்கள்?''

''நிச்சயம்தானு?'' என்று வாயில் முகப்பிலிருந்து அம்மா கேட்டது காதில் விழுந்தது.

''நாங்கள்தான்! கதவைத் திறவுங்கள்!'' நடுங்கும் குரலில் நான் கத்தினேன்.

''இன்னும் கதவைத் திறக்கக் காணேமே!''

லகானேப் பிடித்து சுபாரியை வெளி முற்றத்துக்குள் அழைத்துச் சென்ருேம்.

''தங்கம்! கண்ணு! பலே கெட்டிக்காரன் நீ!'' என்று நத்தாஷா அதன் காதுக்குள் சொன்னுள்.

''நத்தாஷா, யாரிடமும் ஒரு வார்த்தை சொல்லிவிடாதே நீ!''

ஆனுல் எங்களது வீரசாகசத்தை வெளியே சொல்லாமல் இரகசியமாய் வைத்துக் கொள்ளமுடியாது என்பதைக் கண்டோம். சோன்யாவும் யூலியாவும் சுபாரியைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து ஆத்திரக் கூச்சல் எழுப்பினர்.

''அதை என்ன பாடு படுத்தியிருக்கிறீர்கள்? போய்ப் பாருங்கள்! மேலெல்லாம் வியர்த்து வழிகிறது. மூச்சு விட முடியாமல் திணறுகிறது.''

''இப்படியா செய்வார்கள்? இனி ஒருபோதும் அந்தக் குதிரை மீது உங்களே அனுப்பக் கூடாது.''

''நாங்கள் ஒன்றும் அதை விரட்ட வில்லை'' என்று நத்தாஷா கலங்கிக் குழம்பிப் போய்ப் எங்களைப் பார்த்தவாறே பதிலளித்தாள். ''மெல்லத்தான் ஓட்டி வந்தோம்.''

''மெல்ல ஓட்டி வந்தார்களாமே! புளுகவேண்டாம்! ஒரு தரம் அதைப் பார்த்தாலே உண்மை தெரிகிறதே!''

''அது சரிதான். நத்தாஷா, உண்மையை நீ ஏன் மறைக்க வேண்டும்? வழி நெடுக நாங்கள் பறந்தோடி வந்தோம்!''

''பிறகு ஏன் நீ ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாது என்றாய்?''

''எதைப் பற்றி ஒரு வார்த்தை?'' என்று அம்மா அவளைக் கேட்டார்.

''அவர்கள் கையில் அகப்படாமல் தப்புவதற்காக நாங்கள் பறந்தோடி வந்தோம்'' என்றாள் நத்தாஷா.

இரகசியம் வெளியாகி விட்டது, முழுக் கதையையும் தொடக்கத்திலிருந்து நான் சொல்ல வேண்டியதாயிற்று.

எங்களிடம் இருந்தவை யாவற்றையும் நாங்கள் சுபாரியுடன் பகிர்ந்து கொள்வது வழக்கம். நாங்கள் எதைச் சாப்பிட்டாலும் அதில் சுபாரிக்கும் கொஞ்சம் கொடுத்துத் தின்னச் சொல்லி வந்தோம். ஒரு நாள் யூலியா இறைச்சி உருண்டை தின்று கொண்டிருந்தாள். சுபாரி ஆவலோடு மூச்சை இழுத்து முகர்ந்து கொண்டு நின்றது. ஆகவே அதனிடம் அவள் பாதி உருண்டையைக் கொடுத்தாள். அதை அது சுவைத்துத் தின்று விட்டு, மேலும் தின்பதற்குத் தயாராய் நின்றது. இன்னொரு சமயம் நாங்கள் உல்லாச உலாவிருந்து உண்ணச் சென்றிருந்தோம். சாப்பிட்டு முடித்தபின் வீட்டுக்குத் திரும்புவதற்குத் தயார் செய்தோம். எஞ்சிய உணவை வீட்டுக்கு எடுத்து வர விரும்பாமல் அங்கேயே யாவற்றையும் தின்று தீர்த்துவிட முயன்றோம். முக்க முக்கத் தின்றுங்கூட கொஞ்சம் ரொட்டியும் ஒரு புட்டி பாலும் மீந்திருந்தன.

ரொட்டியை நாங்கள் நாயிடம் தந்தோம். பிறகு வேடிக்கை யாய் பாலை யூலியாவின் தோல் தொப்பியில் ஊற்றி சுபாரி யிடம் தந்தோம்.

அவ்வளவு பாலையும் குடித்து விட்டு, அதற்கு மேல் கொஞ்சம் ரொட்டியும் தின்றது அது.

குதிரைகள் இறைச்சி உருண்டை தின்னும், பாலும் குடிக்கும் என்று நாங்கள் கூறியதைப் பெரியவர்கள் கேட்ட தும் வியப்புடன் எங்களை அவர்கள் உற்று நோக்குவார்கள்.

''உங்களுக்கு இதைச் சொன்னது யார்?''

''ஏன், சுபாரி இவற்றைச் சுவைத்துச் சாப்பிடுகிறதே. நாங்கள் அதற்குக் கொடுத்துச் சாப்பிடச் சொல்லுகிறோமே'' என்று பதிலளிப்போம்.

அடர்ந்த காடுகளினுள்ளும் நாங்கள் அச்சமின்றி சுபாரி யின் மீது செல்வோம். எப்படியும் அது எங்களை வீட்டுக்குத் திருப்பி அழைத்து வந்து விடுமென்று எங்களுக்குத் தெரியும். சில சமயம் எங்களுக்குப் பாதை தவறி விடுவது உண்டு. அப்போது நாங்கள் லகானை அதன் மீது போட்டு விட்டு அமர்ந்திருப்போம், அது வழியைக் கண்டுபிடித்து எங்களை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்து விடும்.

உருளைக் கிழங்கு எடுத்து வருவதற்காக ஒரு நாள் நாங் கள் மிஹாய்லொவ்க்கா கிராமத்துக்குப் போயிருந்தோம். செங்குத்தான ஒரு குன்றின் உச்சியில் அந்த கிராமம் இருந் தது. அதற்கு முன்தினம் வெண்பனியும் மழையுமாய்ப் பெய் திருந்தது. பிறகு கடுங்குளிர் ஏற்பட்டு சாலை முழுதும் பனிக் கட்டியாக இறுகிவிட்டது. எங்களுக்கு முன்னால் மூன்று சறுக்கு வண்டிகள் சென்றன. ஆனால் அவை குன்றின் அடி வாரத்தி லேயே நின்றுவிட்டன. அவற்றின் குதிரைகள் அதற்குமேல் போக மறுத்தன. அவை சில தப்படிகள் எடுத்து வைத்து மேலே சென்று பார்த்து விட்டு பிறகு திரும்பி வந்து விட்டன.

நாங்கள் இந்த வண்டிகளைத் தாண்டிச் சென்றோம்.

''சுபாரி, நாம் மேலே போவோம்!'' சுபாரி எங்களுக்குப் பணிந்து தனது சக்தியைப் பிரயோகித்து வண்டியை மேலே இழுத்துச் செல்வதைக் கண்டு பெருமிதமடைய விரும்பினோம்.

நாங்கள் மேலே ஏறிச் சென்றோம்.

நூறு தப்படி மேலே ஏறிச் சென்ற பிறகுதான் இது எவ்வளவு பைத்தியக்காரச் செயல் என்பதை உணர முற்பட்டோம்.

முந்திய நாளன்று சிறு அருவிகளாய் ஓடி வந்த நீர் உறைந்து பனிக் கட்டிப் படலமாகியிருந்தது. சுபாரி வழுக்கி வழுக்கிச் சரிந்து கொண்டிருந்தது. குன்றுச் சரிவுக்கும் குன்று இடுக்குக்கும் இடையில் அமைந்த அந்தச் சாலை மிகக் குறுகலானது. கீழே திரும்பிவர வழியில்லை. தொடர்ந்து மேலே செல்வதைத் தவிர இனி நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை. கீழே இருந்தவர்கள் எங்களைப் பார்த்து ஏதோ கத்தினார்கள். ஆனால் அவர்கள் கூறியது எங்களுக்குப் புரியவில்லை. அச்சத்துடன் நாங்கள் சுபாரியைக் கவனித்துக் கொண்டிருந்தோம்.


தடுமாறி முன்னே அடி வைத்துச் சென்று, பிறகு வழுக்கி விழுந்தது அது. திரும்பவும் முயற்சி செய்து முன்னே சென்றது. ஆனால் அது வேகமாகப் பலமிழந்து வந்தது தெரிந்தது. ஏற்றப் பாதையின் முடிவு கண்ணுக்குத் தெரிந்தது குன்றின் உச்சியில் பல பேர் வந்து நின்றார்கள்.

பிறகு சுபாரி வழுக்கிக் கொண்டு மண்டியிட்டு விட்டது.

''சுபாரி, முடிவை வந்தடைகிறோம்! மெல்ல எழுந்து செல்!'' என்று சோன்யா வண்டியின் சட்டத்தைப் பிடித்து அழுத்தியவாறு வேண்டினாள்.

மண்டியிட்டவாறே சுபாரி ஊர்ந்து மேலே நகர்ந்தது. அதற்கு மூச்சு திணறிற்று.

மேலே இருந்தவர்கள் எங்களுக்கு உதவுவதற்காக கீழே இறங்கி வந்தார்கள். ஒருவர் லகானைப் பற்றிக் கொண்டார்,



மற்ருெருவர் ஏர்க்காலேப் பிடித்திழுத்தார், மூன்ருவது ஒருவர் பின்னுலிருந்து வண்டியைத் தள்ளினுர்.

''ஒய்யா,—ஒய்யா!'' என்று எல்லோருமாய்க் கத்தினுர் கள். ''இன்னும் ஒரேயொரு மூச்சு! மேலே போய்ச் சேர்ந்து விடலாம்!''

நாங்கள் உச்சியை வந்தடைந்தோம், கலங்கிப் போய் அங்கே நின்ருேம்.

''குதிரை என்ருல் இது அல்லவா குதிரை!'' என்று எல்லோரும் புகழ்ந்தார்கள். ''அருமையான குதிரை! நட்டாற்றில் விட்டுவிடாது! ஊர்ந்தே செல்வதானுலும் உங்களே அழைத்துச் சென்று சேர்க்கும்!''

பிறகுதான் எங்களுக்கு சுய உணர்வு திரும்பிற்று நன்றியுடன் நாங்கள் சுபாரியின் பக்கம் திரும்பிப் பார்த்தோம்.

சுபாரியைச் சுற்றிலும் சிறு கூட்டம் கூடிவிட்டது. நடுங்கும் முன்னங்காலே முன்னுல் நீட்டி, அதன் மேல் அது வியர்வை

வழிந்த தனது ஓய்ந்து போன தலையைச் சாய்த்துக் கொண்டு விட்டது. அதன் விலாப்புறங்கள் விம்மியெழுந்து தணிந்தன. எனக்கு நெஞ்சு குறுகுறுத்தது.

''மூச்சுத் திணறுகிறது. நாம் குற்றமிழைத்து விட்டோம். நெஞ்சில் ஈரமில்லாமல் அதைத் திணறடித்து விட்டோம்.''

இதன்பின் சிறிது காலத்துக்கு எல்லாம் சுபாரி நலமிழந்து விட்டது.

ஒருநாள் நாங்கள் கொட்டிலுக்குள் சென்றபோது அது படுத்துக் கிடக்கக் கண்டோம். கவணையில் உலர்புல் அப்படியே இருந்தது, அதை அது தொடவே இல்லை.

''சுபாரி, கண்ணே! என்ன ஆயிற்று உனக்கு? உடம்பு சுகமில்லையா?''

எங்களுக்குக் கவலையாக இருந்தது. நண்பகல் வரை காத்திருந்து பார்க்கலாம் என்று முடிவு செய்தோம்.

வீட்டில் ஏதோ சிறு தகராறு, சுபாரியைப் பற்றி சோன்யா பேச்செடுத்ததும் எங்கள் பெற்றோர் கூறினார்கள்:

''இப்போது எங்களுக்கு நேரமில்லை. பிற்பாடு உங்களுடன் பேசுகிறோம்.''

மாலை வரை சுபாரி கொட்டிலில் அப்படியே படுத்துக் கிடந்தது.

குதிரைக் கம்பளத்தை எடுத்து வந்து, இரவில் குளிராமலிருப்பதற்காக அதன் மேல் போர்த்தினோம். குடிப்பதற்கு வெது வெதுப்பான நீர் கொண்டு வந்து தந்தோம். உலர் புல்லை அதன் அருகே எடுத்துப் போட்டோம்.

அது ஆவலோடு நீரைக் குடித்தது. அந்தியில் நாங்கள் எங்களுக்குள் கலந்து ஆலோசனை புரிந்தோம்.

பொழுது புலர்ந்ததும் சோன்யாவும் நானும் நகருக்குப் புறப்பட்டோம். அப்பாவின் நண்பரான விலங்கின மருத்துவரை அழைத்து வருவதென்று கிளம்பினோம்.

குளிர் கடுமையாக இருந்தது. எங்கள் முகங்கள் சிவந்து பழுத்து விட்டன, கண்ணிமை முடிகளில் உறைபனி மூடியிருந்தது. விரல் நுனிகள் மரத்து விட்டன. ஆனால் குளிரையோ களைப் பையோ நாங்கள் உணருகிற நிலையில் இல்லை. காலுக் கடியில் உறைபனியின் சல சலப்பைக் கேட்டவாறு நடந்து கொண்டிருந்தோம். எங்கள் நினைப்பு எல்லாம் உடல் நல மின்றி படுத்துவிட்ட சுபாரியிடமே இருந்தது. டாக்டர் வீட்டில்தான் இருந்தார். மேசையின் பக்கத்தில் அமர்ந் திருந்தார். அவருக்கு முன்னால் சமவாரும், தட்டு நிறைய அப்பங்களும், பாலேடும் இருந்தன. அவர் உற்சாகமாய்க் காணப்பட்டார்.

''ஆகா, வீராங்கனைகள் வந்திருக்கிறார்கள்!'' என்று ஆனந்தமாய்க் கூவினார் அவர். ''உட்காருங்கள், அப்பம் சாப்பிடுங்கள்.''

''நன்றி, எங்களுக்கு அப்பம் வேண்டாம். அவசரக் காரியமாய் நாங்கள் வந்திருக்கிறோம்.''

கவலை தோய்ந்த முகத்துடன் கதவருகே நின்றோம்.

கதகதப்பான அறை என்னை நடுங்கச் செய்தது. சோன் யாவின் கண்களும் மூக்கும் பித்தளைச் சமவாரைக் காட்டி லும் பளபளப்பாய் இருந்தன.

''ஏதோ நன்றாயில்லை. விஷயத்தைச் சொல்லுங்கள். உங்கள் பெற்றோர் நல்லபடியாக இருக்கிறார்கள் அல்லவா?''

''சுபாரிக்கு உடம்பு நன்றாயில்லை.''

''அப்படியா? என்ன ஆயிற்று?''

நோய்க் குறிகளை நாங்கள் அவரிடம் சொன்னோம். அது எழுந்திருக்கவில்லை. எதுவும் தின்னவும் இல்லை என்றோம். நீண்ட காலமாகவே அது முழு நலமுடன் இருக்கவில்லை. பனியாற்றுக் கணவாயில் அது சிக்கிக் கொண்டது, அது முதல் அதற்கு ஒரு நுரையீரல்தான் நன்றாய் இருந்தது என்று கூறினோம்.

''நல்லது, உடனே நீங்கள் என்னிடம் வந்தது நல்லது தான். தக்கதருணத்தில் நாம் அதற்கு ஆவன செய்ய முடியும். பிற்பாடு நான் அங்கே வந்து சேருகிறேன், அந்திக்குள் வந்து சேருகிறேன்.''

''அந்திக்குள்ளா? ஆனால் அதற்குள்.... இப்போது வர முடியாதா உங்களால்?''

சோன்யா என்னிடம் கையை நீட்டினாள். என்னிடம் கைக்குட்டை இருக்கும் என்று நினைத்தாள்.

நான் கோட்டுப் பைக்குள் பார்த்தேன். என்னிடமும் இல்லை. கன்னத்திலிருந்து கண்ணீர்த்துளியைத் தட்டி விட்டுக் கொண்டாள்.

''இங்கே ஈ அதிகமாய் இருக்கிறது.''

டாக்டர் அவளைப் பார்த்து விட்டுச் சிரித்துக் கொண் டார்.

''அழத் தேவையில்லை!''

உடனே எங்களுக்கு ஊக்கம் பிறந்தது. டாக்டர் எங் களுடன் புறப்பட்டு விடுவார் என்பது தெரிந்தது.

''நமது விருந்தினர்கள் தேநீர் அருந்தட்டும். நான் போய் எனது பூட்சையும் மருத்தவப்பையையும் எடுத்து வருகிறேன்.''

நாங்கள் தேநீர் அருந்துவதற்காக உட்கார்ந்தோம். டாக்டர் தமக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்தவாறு எங்களுடன் வேடிக்கையாகப் பேசினார்.

''சரி, நான் தயாராகி விட்டேன். நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள். குதிரையிலா? சறுக்குவண்டியிலா?''

''சும்மாதான் வந்தோம். அதிகாலையிலேயே புறப்பட் டோம். ஐந்து மணி இருக்கும், எல்லோரும் தூங்கிக் கொண் டிருந்தார்கள்.''

''ஏரியிலிருந்து இவ்வளவு தொலைவும் நடந்தே வந்தீர் கள் என்றா சொல்கிறீர்கள்?''

''ஆம்.''

''வீராங்கனைகளே தான். முன்னிலும் அதிகமாய் உங்களைப் பாராட்டுகிறேன்'' என்றார் அந்த அருமையான டாக்டர். இதைச் சொல்லி விட்டு அவர் சிரித்துக் கொண்டார் அவரும் அவர் மனைவியும் எங்களைப் போற்றும் முறையில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு அவர் தமது குதிரையை வண்டியில் பூட்டுவதற்காக வெளியே சென்றார்.

நாங்கள் தேநீர் அருந்தியதும் டாக்டரின் மனைவிக்கு நன்றி தெரிவித்து விட்டு டாக்டரைப் பின்தொடர்ந்து வெளியே சென்றோம். அவர் எத்தனைக் குதிரைகளைக் குணப்படுத்தி யிருப்பார் என்று வருகிற வழியில் அவரை நாங்கள் கேட்டோம். மிகப் பெரும்பாலான குதிரைகளை அவர் நலமடையச் செய்தவர் என்பது தெரிந்ததும் எங்களுக்குப் புதுத் தெம்பு உண்டாயிற்று.

விரைவில் எங்கள் கிராமம் கண்ணுக்குத் தெரிந்தது. எங்கள் வேலிக் கதவுக்கு முன்னால் வந்து நின்றோம்.

நாங்கள் வந்து நின்றதுதான் தாமதம், உடனே கதவு திறக்கப் பட்டது. யூலியாவும் நத்தாஷாவும் காத்துக் கொண்டிருந்தார்கள்; சப்தம் கேட்டதும், வந்தது நாங்கள்தானா என்று பார்ப்பதற்காக வெளியே ஓடி வந்தார்கள். எங்களைப் பார்த்ததும் உடனே தாழ்ப்பாளைத் திறந்தார்கள், கதவு விரியத் திறந்து கொண்டது.

நேரே நாங்கள் கொட்டிலுக்குள் சென்றோம்.

சுபாரி இன்னும் விலாப்புறமாகவே படுத்துக் கிடந்தது. டாக்டர் அதைக் கவனமாகப் பரிசீலனை செய்து பார்த்தார். அவர் அதைத் தூக்கி நிறுத்த முயற்சி செய்தார், ஆனால் சுபாரியின் கால்கள் செயல்பட மறுத்தன. அது தரைமீது சாய்ந்து விழுந்து முனகிற்று. நத்தாஷாவுக்கு அழுகை வந்து விட்டது. கண்களில் அச்சம் தெரிய நாங்கள் டாக்டரை உற்றுப் பார்த்தோம்.

''நிலைமை மோசமாக இருக்கிறது. பெண்களே, மிகவும் மோசமான நிலைமை. சுபாரிக்கு முடக்குவாதம் கண்டிருக்கிறது. யாராலும் அதற்கு இனி ஒன்றும் செய்வதற்கில்லை. இன்னும் இரண்டு நாட்களுக்கு மேல் அது பிழைத்திருக்க முடியாது. அதன் துன்பத்துக்கு முடிவு கட்டுவதுதான் இனி நாம் அதற்குச் செய்யக் கூடிய உதவி. ஒரேயொரு விஞடிதான் ஆகும். அப்பா எங்கே இருக்கிருர்?''

வீட்டுக்குள் சென்ருர் டாக்டர். நாங்கள் ஒருவரையொருவர் பார்க்கத் துணியாமல் சுபாரியைச் சுற்றிநின்றிருந்தோம். முடிவில் நான் தலையைத் தூக்கிப் பார்த்தேன். எங்கள் ஒவ்வொருவருடைய முகத்திலும் இம்மாதிரியான சோகம் குடிகொண்டிருக்க இதன்முன் என்றுமே நான் கண்டதில்லை.

அந்தி நெருங்கி வந்தது. சுபாரியின் நிலை மேலும் மேலும் மோசமாகிச் சென்றது. அது முனகிக் கொண்டு உடம்பை அப்படியும் இப்படியுமாய் ஆட்டி உலுக்கிக் கொண்டிருந்தது. ஒன்றும் செய்ய இயலாதவர்களாய் அதன் அருகே ஒடுங்கிக் கொண்டிருந்தோம்.

மறு நாள் காலையில் சோன்யாவும் நானும் அப்பாவிடம் சென்ருேம்.

''சுபாரி பெரிதும் துன்புறுகிறது'' என்று அடைபட்டு போன என் தொண்டையிலிருந்து சொற்களைச் சிரமப்பட்டு வெளியே வரச் செய்து நான் கூறினேன்.

''சரி, எனக்குத் தெரியும். டாக்டர் என்னிடம் கூறிச் சென்ருர்'' என்ருர் அப்பா. ''பெண்களே, நீங்கள் வருத்தப்படக் கூடாது. ஒரேயொரு விஞடிதான் ஆகும்.''

இழுப்பறையை இழுத்து அவர் தமது ரிவால்வரை வெளியே எடுத்தார்.

நாங்கள் ஓடிச் சென்று வீட்டுககுள் ஒருமூலையில் ஒளிந்து கொண்டோம். அதன்பிறகு நாங்கள் மீண்டும் சுபாரியைப் பார்க்கவேயில்லை.

அன்று இரவு நாங்கள் நெடுநேரம் தூங்கவில்லை. சிறுமிகளான நாங்கள் துயரம் நெஞ்சை அடைக்கச் சுபாரியின் காலிக் கொட்டிலிலிருந்து வாயை மூடிக் கொண்டு வெளியே வந்ததைப் பெரியவர்கள் யாரும் பார்த்திருக்க முடியாது.

